ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ப்ரபந்நஜநாக்ரேஸரரான

ஸ்ரீ அழகியமணவாளப்பெருமாள் ஜீயர்

திருவாய்மலர்ந்தருளிய

ஆசார்யஹ்ருதயம்.

இதற்கு

விஶதவாக்சிகாமணியான

ஸ்ரீ மணவாளமாமுனிகள்

அருளிச்செய்த

வ்யாக்யாநம்

இவை

ஸ்ரீ வால்மீகிராமாயணத்தை ப்ரகரண தாத்பர்

விஶேஷார்த்த ஸஹிதமாக அச்சிட்டுவரும்

திருநீர்மலை, அழகர்திருமலை மாடபூஷி

ஸ்ரீ. உ. ஸ்ரீநிவாஸ ராகவாசார்யரால்

அநேகதாளபத்ர ஸ்ரீ கோஶங்களைக்கொண்டு

யதாமதி பரிசோதிக்கப்பட்டு

ப்ரதிபதம், அரும்பதம், ப்ரமாணத்திரட்டு

இவைகளுடன்



சென்னை:

கலாரத்நாகரம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

ஆழ்வார் திருவவதாராதி ௫௦௦௮ பராபவஹூ தநுர்ரவி.

இதன்விலை ரூ. 2—8—0.

1906.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆசாரியஹ்ருதயம்.

தநியன்கள்.

ఆచార్యస్యాన్తవక్తార మభిరామవరాభిధమ్ ।
శ్రీకృష్ణతనయం వన్దే జగద్గురువరానుజమ్ ॥

ஆசார்யஸ்வாந்தவக்தாரமபிராமவராபிதம்|
ஸ்ரீக்ருஷ்ணதநயம் வந்தே ஜகத்குருவராநுஜம்||

மணவாளரவணைப்பள்ளிபயில்பவர்க்கெவ்வுயிரும்
குணபோகமென்றுகுருகைக்கதிபனுரைத்ததுய்ய
உணர்பாவிநுட்பொருளென்றுமறியாவுலகறிய
மணவாளன்மாறன்மனமுரைத்தான்வண்முடும்பைவந்தே.

மாதவத்தோன்மாறன்மனம்கூறும்மணவாளன்
தோதவத்தித்தூய்மறையோரானபெற்றார்—நீதியினா
லாங்கவர்தாள்சேர்பெற்றாராய்மணவாளமுனிப்
பூங்கமலத்தாள்கள்நெஞ்சேபோற்று.

பெரிய ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஆசாரியஹ்ருதய வ்யாக்யாநத்தின்

அவதாரிகை.

ஸ்ரீய꞉பதியாய் ஸர்வஸ்வாமியான ஸர்வேஶ்வரன், நிரதிஶயாநந்தமயமான ஸ்ரீவைகுண்டத்திலே, நித்ய நிர்மலஜ்ஞாநாதிகுணகராய் ஸ்வச்சந்தாநுவ்ருத்திஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்திபேதரான நித்யஸூரிகளாலே, அநவரதபரிசர்யமாணசரண நளிநனாய்க்கொண்டு எழுந்தருளியிராநிற்க, லீலா விபூதியிலுள்ளார், அவர்களோபாதி, தன்னை யநுபவிக்க ப்ராப்தியுண்டாயிருக்க, இழந்துகிடக்கிறபடியைக்கண்டு, அதிவ்யாகுலனாய், இவர்களை யுஜ்ஜீவிப்பிக்கையிலுண்டான (௧) நஸையாலே, (௨) "[illegible]" "அசிதவிஶேஷிதாந் ப்ரளயஸீமநி ஸம்ஸரத꞉ கரணகளேபரைர் கடயிதும் தயமாநமநா꞉" என்கிறபடியே, கரணகளேபர விதுரராய், அசிதவிஶேஷிதராய், அத ஏவ போகமோக்ஷ ஶூந்யராய், கிடக்கிற தஶையிலே, தயமாநமநாவாய்க்கொண்டு, ஸ்வசரணகமல ஸமாஶ்ரயணோபகரணமான கரணகளேபரங்களைக்கொடுத்து ஜ்ஞாநவிகாஸத்தையும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ஶக்தியையுமுண்டாக்கி, இந்த ஜ்ஞாநகாரியமான த்யாஜ்யோபாதேய விவேகபரிகரமாக (௩) "[illegible]" "மாநம்ப்ரதீபமிவ காருணிகோ ததாதி" என்கிறபடியே, வேதப்ரதாநத்தைப்பண்ணி, அநந்தரம் மந்வாதிகளுக்கந்தர்யாமியாய் நின்று, சேதநருடைய (௪) விஶிஷ்டவேஷவிஷயமான ஶாஸ்த்ரத்தை வெளியிட்டருளி, அந்த ஶாஸ்த்ராப்யாஸம் அநேக யோக்யதாஸாபேக்ஷமாய், சிரகாலஸாத்யமுமாயிருக்கையாலே, துஷ்கரமாயிருக்கிறபடியைத் திருவுள்ளம்பற்றி, தாத்ருஶபோக்யதா நிரபேக்ஷத்வாதிகளாலே ஸுகரமுமாய் சேதந (௫) நிஷ்க்ருஷ்டவேஷ விஷயமான திருவஷ்டாக்ஷரப்ரும்ஹவித்யையை, ஸ்வயமேவ வெளிப்படுத்தினவளவிலும், கார்யகரமாகாமையாலே (௬) ஓலைப்புறத்திற்செல்லாத ராஜ்யத்தை (௭) எடுத்துவிட்டுச் செலுத்துக்கொள்ளும் ராஜாக்களைப்போலே நாமேசென்று திருத்தக்கடவோமென்று ராமக்ருஷ்ணாத்யவதாரமுகேந இவர்களிருக்கிறவிடத்திலே தான்வந்து திருத்தப்பார்த்தவிடத்திலும், ஒருவரும் திருந்தக் காணாமையாலே விஜாதீயரான நம்மாலொருபடியாலும் இவர்களைத் திருத்தப்போகாததாயிருந்தது, இனி, (௮) இணக்குப்பார்வைவிட்டு ம்ருகம்பிடிப்பாரைப்போலே ஸஜாதீயரைக்கொண்டே காரியங்கொள்ளுவோமென்று அறுதியிட்டு அதுக்கு, ஆமுதல்வரையுண்டாக்குகைக்காக ஸர்வபூத ஸுஹ்ருத்தான தன்னு

---

(௧) நஸையாலே - ஆசையாலே. (௨) ஸ்ரீரங்-ஸ்[illegible] (௩) ஸ்ரீ[illegible]-ஸ்த. உ. [illegible]. (௪) விஶிஷ்டவேஷ. விஷயமான — தேஹாத்தோ[illegible]த்மாவைக்குறிக்கும்தான. (௫) நிஷ்க்ருஷ்டவேஷ விஷயமான ? [illegible]த்தாத்மாவின் ஸ்வரூபத்தைக் குறிக்குமதான. (௬) ஓலைப்புறம்[illegible]க. (௭) எடுத்துவிட்டு - படையெடுத்துச்சென்று. (௮) இணக்கு[illegible]குறிவைத்து.

ளுடைய நிர்ஹேதுக ப்ரஸாதத்தாலே, எங்கும்பார்த்து இலக்குக்காணு மல் வாராநிற்க, அந்தப்பார்வை தனக்குப்பள்ளமுடையான தென்திசை யிலே யானவளவிலே, (க) "மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து" என்கிறப டியே, ஜந்ம பரம்பரைகளிலே தோள்மாறி நித்யஸம்ஸாரியாய்ப்போரு கிற விவர்மேலேபட, அந்த நிர்ஹேதுக கடாக்ஷ விசேஷலப்த திவ்ய ஜ்ஞாநபக்திகரானவாழ்வார், 'தத்ஸ்வரூப ரூபகுணவிபூதிகளை விசத விசததர விசததமமாக அநுபவித்து அவ்வ[illegible]ரூபேண பேசுகிற பாசுரமானது சோகவேக ஜ[illegible] (உ) "[illegible]" "மாநிஷாதேத்யாதி" ச்லோகம், ப்ரும்ஹாவின் ப்ரஸாதத்தாலே லக்ஷ ணோபேதமானாப்போலே, பகவத்ப்ரஸாதமடியாக ஸர்வலக்ஷணோபேத மான ப்ரபந்தமாய்த் தலைக்கட்டிற்று. இதுதானும், த்ராவிடவேததயா விஸ்தீர்ணமாய் அநேகார்த்த ப்ரதிபாதகமாயிருக்கையாலே, இதில் தாத்பர்யார்த்தம் ஸர்வர்க்கும் ப்ரதிபத்தி விஷயமாகை யரிதென்று பார்த்து, இதிலர்த்த விசேஷங்களையும், இதில் ஆழ்வார் திருவுள் ளக்கருத்தின் ப்ரகாரத்தையும் இவ்வாசார்ய ருசிபரிக்ருஹீதமான வர்த் தமே யெல்லார்க்கும் தஞ்ஜமென்றுமத்தையும், இவர் தம்முடைய பரம க்ருபையினாலே ப்ரகாசிப்பியா நின்றுகொண்டு ஆசார்ய பரம்பராப் ராப்தமான இவ்வர்த்தங்கள், எல்லார்க்கும் ப்ரதிபத்தியோக்யமாம்படி அதிஸங்க்ரஹ விஸ்தாரமாக, இவ்வாசார்யஹ்ருதய ப்ரபந்தமு கேன அருளிச்செய்கிறார். (ங) "[illegible]" "ஆத்யஸ்ய நஃ குல பதே:" என்கிறபடியே, வைதிகஸந்தாநத்துக்கு ப்ரதமாசார்யரான ஆழ்வாரருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களில் அவருடைய திருவுள்ளக் கருத்துகளைச் சொல்லுகையாலேயிறே, இப்ரபந்தத்துக்கு ஆசார்யஹ் ருதயமென்று நிருபகமாய்த்து. இப்ரபந்தத்தில், இவரருளிச் செய்கிற வாக்யங்களெல்லாம், அருளிச்செயல் சந்தைகளைச் சேர்த்தருளிச் செய் கிறது" ; மயர்வற மதிநல மருளப்பெத்தவர்கள் பேசின திவ்யஸூக் திகளாகையாலே ஆப்ததமமுமாயத்யந்த போக்யமுமாயிருக்கிற விது வே 'தமக்கு அநவரதாபிமதமாகையாலும், முகமறிந்தவன் கோர்த்த முத்துப் பெருவிலே யனுமாப்போலே சந்தைகளைத்தாம் சேர்த்தசாது ரியாலே அருளிச்செயலில் ரஸஜ்ஞர்க்கு இதிலர்த்தத்திலும் காட்டில் சப்தந்தானே மிகவு மினிதாயிருக்குமென்று மபிப்ராயத்தாலும்; ஆ கையாலிப்ரபந்தம் சப்தார்த்தங்களிரண்டின் ரஸத்தாலும் விசேஜ்ஞ ஜநமநோஹரமாயிருக்கும். இதில் முதல் சூர்ணையாலே (ச) "[illegible]" "ஹார்தும் தமஸ் ஸதஸதீ சவிவேக்துமீசோ மாநம்ப்ரதீபமிவ காருணிகோ ததாதி" என் கிறபடியே, ஆகஸ்மிகக்ருபாவானான ஸர்வேச்வரன் அஜ்ஞரான ஸம் ஸாரிசேதநர்க்கு ஸதஸத் விவேகபரிகரமான சாஸ்த்ரப்ரதாநத்தைப் பண்ணி யருளினபடியை அருளிச்செய்கிறார்.

(க) தி-வா. உ. ௬. அ. (உ) ஸ்ரீரா. உ. ௪௪. (ங) ஆ-ஸ்தோ. ௫. (ச) ஸ்ரீர-ஸ்த. உ. க.

மூலம்—(க) காருணிகனை ஸர்வேஶ்வரன் அறிவிலாமனிஶர் உணர்வெனும் ஶுடர்விளக்கேற்றி பிறங்கிருள் நீங்கி மேலிருந்தநந்தா வேதவிளக்கைக் கண்டு நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை நீர்மையினு லருள்செய்தான்.

அர்த்தம்.—க்ருபாவிசிஷ்டனை ஸர்வேஶ்வரன் ஜ்ஞாநஹீநரான மனுஷ்யர் ஜ்ஞாநமென்கிற உஜ்வல தீபத்தை தரித்துக்கொண்டிருந்த வஜ்ஞாநாந்தகாரம்போய் வேதாந்த ப்ரதிபாதகனுயிருந்த ஸத்யமாய் வேதைக ஸமதிகம்யமான தீபத்தைக்கண்டு பகவத்விஷயம் நல்லதென்றும் ஸம்ஸாரம் தீதென்றும் அறிகைக்கு வேதமாய் விஸ்தரித்த சலனமில்லாத தீபம்போன்ற அகாரத்திலே அதில் நின்றும் ஸமுத்பன்னமான ப்ரீதீபம் போன்ற வேதஶாஸ்த்ரங்களை கிருபாவிசிஷ்ட ஸ்பாவத்தாலே ப்ரஸாதித்தருளினன்.

வ்யாக்யாநம். (க) (காருணிகனை ஸர்வேஶ்வரன்) க்ருபா விசிஷ்டஸ்வதந்த்ர னென்றபடி, க்ருபாவானுனலும் ஸ்வதந்த்ரநன்ருகில் தான் நினைத்தபடி கார்யம் செய்யப்போகாது, கேவல ஸ்வதந்த்ர நானலும் ஸம்ஸார மோக்ஷங்க ளிரண்டுக்கும் பொதுவான ஸ்வாதந்த்ரியம் சேதநோஜ்ஜீவனர்த்தமானக்ருஷிக்கு உறுப்பாகமாட்டாது; ஆனபின்பு க்ருபா விசிஷ்டமான ஸ்வாதந்த்ரியமேயிறே ஸம்ஸாரிசேதநோஜ்ஜீவன விஷயமாக அவன்பண்ணும் க்ருஷிக்கு ஹேதுவாவது; அதவா, ஸர்வேஶ்வரனென்று ஈஶேஶிதவ்யஸம்பந்தத்தைச் சொல்லுகிறதாகவும்மாம். (க) "𑌕𑍃𑌪𑌾𑌯𑍋𑌗𑌾𑌚𑍍𑌚 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌾𑌤𑍍" "க்ருபாயோகாச்ச ஶாஶ்வதாத்" என்றவநந்தரம். (உ) "𑌈𑌶𑍇𑌶𑌿𑌤𑌵𑍍𑌯𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌾 𑌦𑌨𑌿𑌦𑌂𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌦𑌪𑌿" "ஈஶேஶிதவ்யஸம்பந்தாத நிதம் ப்ரதமாதபி" என்கையாலே க்ருபாயோகமும், ஸம்பந்தமும், இரண்டும் ஸம்ஸாரி சேதந ஸம்ரக்ஷணர்த்த ப்ரவ்ருத்திஹேது விறே. க்ருபாயோகத்துக்கு மேலே ஸம்பந்த முக்த மாகையாலே ஸம்பந்த ப்ராதாந்யம் சொல்லித்தாகிறது, இத்தாலிவை நம்முடையவையன்றோ வென்கிற வபிமாநத்தோடே பரதுக்காஸஹிஷ்ணுத்வரூபையான க்ருபையும் கூடுகையாலே உத்தரோத்தரம் சேதனுஜ்ஜீவனத்துக்கு க்ருஷிபண்ணிப் போருமவனென்றதாய்த்து. (ங) "அறிவிலா மனிஶர்" (ச) அறிவிலா மனிஶரெல்லாம், என்கிறபடியே அஜ்ஞான தமோயுக்தரான சேதநர், (ரு) "𑌅𑌨𑍍𑌧𑌂𑌤𑌮 𑌇𑌵𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍" "அந்தம்தம இவாஜ்ஞாநம்" என்னக்கடவதிறே. "ஹார்தம்தம:" என்றஜ்ஞாநத்தை, தமஶ்ஶப்தத்தாலே அருளிச்செய்தாரிறே. இத்தாலநாத்யஜ்ஞாநாந்தகாரத்தாலே அபிபூதராய்,

---

(க) லக்ஷ்மீதந்த்ரே. (உ) ஷை. (ங) தி-மா-கங. (ச) ஷை. (ரு)

ரு—(உ) விவேகபலம் வீடுபெற்று.

(அ) ஶாஸ்த்ரஜ்ஞாந விவேகத்துக்கு பலம் த்யாஜ்யங்களை விடுகையும் உபாதேயங்களைப்பற்றுகையும்.

அத்தாலே ப்ரக்ருத்யாத்ம விவேகம் முதலானவொரு விவேகமுமின்றிக்கே இருக்கிற ஸம்ஸாரி சேதநரென்கை "உணர்வெனும் சுடர்கொள் விளக்கேற்றி," (க) "உணர்வென்று மொளிகொள் விளக்கேற்றி" என்றும், (உ) ஜ்ஞானச் சுடர்விளக்கேற்றினேன், என்றும் சொல்லுகிறபடியே, தைலவர்த்திகளாலுண்டான வழுக்கன்றிக்கே திணுங்கின தேஜஸ்ஸாயிருக்கிற ஜ்ஞாநமாகிற உஜ்வலதீபப்ரகாஶத்தை உடையதாய்; ஜ்ஞாநத்தை விளக்கென்கிறது, ஸ்வபர ப்ரகாஶத்வமாகிற ஸ்வபாவஸாம்யத்தாலே, (ங) "பிறங்கிருள் நீங்கி பிறங்கிருள் நிறங்கெட" என்றும், (ச) "பின்னுவ்வுலகினில் பேரிருள்நீங்க" என்னும் சொல்லுகிறபடியே, மிகுந்த வஜ்ஞாநாந்தகாரம்போய் மேலிருந்த நந்தாவேதவிளக்கைக்கண்டு (ரு) "வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கென்றும் (சு) "நந்தாவிளக்கென்றும்" (எ) "வேதவிளக்கினையென்றும்" ஶொல்லுகிறபடியே, வேதாந்தங்களில் ஸர்வஸ்மாத் பரனுகப்ரகாசியா நிற்பானுமாய்: நித்யமாய், ஸ்வயம் ப்ரகாஶமுமான ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாக உடையனுமாய், வேதைக ஸமதிகம் யனுமானதன்னை, (அ) "என்தக்கஜ்ஞானகக்கண்களாலேகண்டு" என்கிறபடியே, ஜ்ஞாநசக்ஷுஸ்ஸாலே தர்சித்து, நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு (கூ) "இவையன்றே நல்ல, இவையன்றே தீய" என்கிறபடியே, ஸதஸத் விவேகம் பண்ணுகைக்கு, "ஸதஸதீச விவேக்தும்" என்றுறிறே. நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு, என்கிறவிது, ஸாமாந்யேந, விலக்ஷணவிலக்ஷணவிவேகத்தைக் காட்டுமேயாகிலும், இவ்விடத்தில் பகவத்விஷயம் நன்று. ஸம்ஸாரம் தீதென்று விவேகிக்கையைக் காட்டுகிறது. (நந்தாவேத விளக்கைக்கண்டு நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு) என்கையாலும், விவேக பலமானத்யாக ஸ்வீகாரவிஷயங்கள் ஸம்ஸார மோக்ஷங்களாகவே மேல்ஶொல்லுகையாலும், பகவத் விஷயத்தைக் கண்டபின்பு, ஸதஸத் விவேகம் பண்ணுகையாவதென்னென்னில்? ப்ரதிகோடி கண்டாலொழிய அதின்தோஷம் யதாவாகத் தோற்றுமையாலும், இத்தைப்பற்ற இது நன்று, தீதென்றும்போது, உபயகோடியும், கண்டுகொள்ள வேண்டுகையாலும் சொல்லித்து, (மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை) (க0) "மறையாய் விரிந்த விளைக்கையென்றும்", "துளக்கமில் விளக்கென்றும்" ஶொல்லுகிறபடியே,

(க) தி-அ. ங. கூச. (உ) தி-அ. உ. க. (ங) பெ-மொ. ரு. எ. ங. (ச) பெ-க. கூ. க0. (ரு) பெ-ச. ங. கக. (சு) தி-மொ-ங. அ. க. (எ) தி-வா-ச. எ. க0. (அ) ஷை. (கூ) பெ-அ. ங. (க0) தி-மொ. அ. கூ. ச.

மூ—(கூ) த்யாஜ்யோபாதேயங்கள் ஸுகதுக்கங்கள்.

(அ) துக்கம் த்யாஜ்யமும் ஸுகம் உபாதேய மென்கை.

(க) "अकारो वै सर्वावाक्" "அகாரோவை ஸர்வாவாக்" என்கையாலே வேதரூபேண விஸ்த்ருதமாய்த்தது தானென்னும்படி ஸகலவேத காரணமாய், தனக்கொரு காரண மில்லாமையாலே சலநமின்றிக்கே, ஸகலார்த்த ப்ரகாஶகமாயிருக்கிற அகாரத்தினின்று முத்பன்னமாய், தீபாதுத்பந்ந ப்ரதீபம்போலே (உ) "मानं प्रदीपमिव" "மாநம்ப்ரதீபமிவ" என்கிறபடியே, த்யாஜ்யோபாதேயார்த்தங்களை ஸ்புடதரமாக ப்ரகாசிப்பியா னின்றுள்ள, (ஙு) "பன்னுலக நால்வேதமென்றும்" (ச) "கலைகளும் வேதமு மித்யாதியாலும்" சொல்லப்படுகிற ஶ்ருதியும், ததுப ப்ரும்ஹணங்களுமான ஶாஸ்திரங்களை, மறையாய் விரிந்த விளக்கை துளக்கமில் விளக்குமாயென்றும், அகாரத்தை, ஈஶ்வரனோடே ஸமாநாதிகரித்தது. (ரு) "अ इति ब्रह्म" "அஇதிப்ருமஹ்ம" என்கிறபடியே, வாச்யவாசக ஸம்பந்தத்தாலே (நீர்மையினு லருள்செய்தான்) நீர்மை ஸ்வபாவம். தன்ஸ்வபாவத்தாலே கொடுத்தானென்கை. அதாவது, தன் ஶேஷித்வஸ்வபாவத்தாலே யென்னுல், காருணிகனுன தன்க்ருபையாகிற ஸ்வபாவத்தாலே என்னுதல், ஸமுச்சயமாதல். பூர்வயோஜனை, நீர்மையினு லென்கிறதற்கு, பூர்வர்களிட்ட வ்யாக்யாநத்திற்கும், இந்த உதிரத்தெறிப்பு, த்ரைகுண்ய விஷயமானவைத்துக்கு ப்ரகாஶகம் என்றிவர்தாம் மேலருளிச் செய்கிறதற்கும் சேரும். நடுவில் யோஜனை, காருணிகனுன வென்றிவர் ப்ரதமத்திலே யெடுத்ததுக்கும் (சு) "कारुणिकोददाति" "காருணிகோததாதி" என்று பட்டரருளிச் செய்ததற்கும் சேரும், மூன்ரும்யோஜனை, காருணிகனுன ஸர்வேஶ்வரனென்கிற விடத்தில், சொன்ன விரண்டாம் யோஜனைக்குச்சேரும். ஆக இச்சூர்ணையால் அஜ்ஞான ஸம்ஸாரி சேதனர் ஜ்ஞாந ப்ரகாஶத்தையுடையராய் அந்தவஜ்ஞாநம் நீங்கி தன்னைக்கண்டு ஸத ஸத்வி வேகம் பண்ணுகைக்கு உறுப்பாக ஈஶ்வரன் ஶாஸ்த்ர ப்ரதாநம்பண்ணினபடியை தந்நிதாநத்தோடே அருளிச்செய்தராய்த்து.

வ்யா. (உ) இவ்விவேகத்திற்கு பலமேதென்ன? சொல்லுகிறது; விவேகேத்யாதி:—அதாவதப்படியவன் கொடுத்த ஶாஸ்த்ர ஜந்ய ஜ்ஞாநத்தாலே நல்லதும் தீயதும் விவேகிக்கைக்குபலம், த்யாஜ்யத்தை விடுகையும், உபாதேயத்தைப் பற்றுகையு மென்கை. த்யாக ஸ்வீகாரமென்னுதே விடுபற்றென்கையாலேக (எ) "வீடுமின்முற்றவும்" அற்றிரைபற்றே" என்ருழ் வார்பாசுரத்தை யுட்கொண்டருளிச் செய்தமை தோற்றுகிறது.

வ்யா. (ஙு) த்யாஜ்யோ பாதேயந்தா னெவையென்ன? சொல்லுகிறது - த்யாஜ்யேத்யாதி அதாவது:— "सुखं हेयम्" "ஸுகீபவேயம்"

(க) ஶ்ருதி. (உ) ஸ்ரீர - ஸ்த. உ - க. (ஙு) தி - மொ - எ. அ. உ. (ச) தி - மொ. உ. அ. ரு. (ரு) ஶ்ருதி. (சு) ஸ்ரீர-ஸ்த. உ - க. (எ) தி-வா. க. உ. க.

மூ—(௪) இவைத்துக்கெல்லை இன்புதன்பளி ப்பன்மாமாயத் தழுந்து கையும் களிப்பும் கவர்வு மற்று பேரின்பத் தின்புறுகையும்.

மூ—(௫) அநந்தக்லேஶ நிரதிஶயாநந்தஹேது மறந்தே நரியகிலாதே உணர்விலே னேணிலே னயர்த்தென்னும் உய்யும்வகை நின்

(அ) இந்த ஸுகதுக்கங்களுக்கு பரமாவதி ஸுகதுக்கங்களை யுண்டாக்க வற்றாய் பலவகைப்பட்ட வாஶ்சர்யங்களான ஶப்தாதி விஷயங்களிலேயழுந்துகையும் கர்வ க்லேஶங்கள் கழிந்து மஹாநந்தகரமான பரமபதத்திலே ஆநந்திக்கப் பெறுகையும்.

(அ) அநந்தக்லேஶமான ஸம்ஸாரத்துக்கும் நிரதிஶயாநந்த மோக்ஷத்துக்கும் காரணம் பரஸ்வரூபத்தையும் மறந்து ஸ்வஸ்வரூபமுமறியாதே விரோதிஸ்வரூபத்தையுமறியாதே உபா

"𑌦𑍁𑌃𑌖𑍀 𑌮𑌾 𑌭𑍂𑌵𑌂" "துக்கீமாபூவம்" என்றுஸர்வர்க்கும் துக்கமநிஷ்டமாய் ஸுகமிஷ்டமாகையாலே, துக்கம் த்யாஜ்யம், ஸுகமுபாதேய மென்கை.

வ்யா. (௪) இவைதான் கர்மாநுகுணமாக நின்ற நின்ற நிலைகளிலே யுண்டாகையாலே, இவைத்தின் பரமாவதியைச் சொல்லுகிறது. இவைத்துக் கித்யாதி, அதாவது:—துக்கத்துக்குப் பரமாவதி (௧) "இன்புதன்பளி" என்றுதுடங்கி ஸுகதுக்காவஹங்களாய், அநாதியாய் துஸ்தரமாயிருந்துள்ள ப்ரக்ருதி ஸம்பந்த நிபந்தநமான ஜந்மங்களினின்று மொருக்காலும் நீங்காமைக் குறுப்பானவையாய், பலவகைப்பட்டிருப்பனவாய், அகப்பட்டால் தப்பவரிதா மவையாய். (௨) "இன்னமுதெனத்தோன்றி" எத்தனையேனு மறிவுடையானாயும், கலங்கப்பண்ணுகையாலே, ஆஶ்சர்யங்களா யிருந்துள்ள ஶப்தாதி விஷயங்களிலே துக்கப்பட்டு, "அழுந்து" மென்கிறபடியே, அநந்த க்லேஶபாஜநமான ஸம்ஸாரத்திலே அழுந்துகை. ஸுகத்துக்குப்பரமாவதி (௩) "களிப்புங் கவர்வு மற்று" என்று துடங்கிச் சொல்லுகிற வல்பாஸ்திரத்வாதி தோஷ துஷ்டமான விஷயலாபத்தாலே வரும் கர்வமும், தத்லாபத்தாலே வரும் க்லேஶமும், கழிந்து, (௪) ஷட்பாவ விகாரங்களும் நீங்கி, ஶுத்த ஸத்வதயா ப்ரகாஶகமா யிருக்கிற வப்ராக்ருத விக்ரகத்தைப் பெற்று (௫) "அந்தமில் பேரின்ப" மென்கிறபடியே, அபரிமிதாநந்தமய மான பரமபதத்திலே. (௬) "அடியார்கள் குழாங்களை யுடன்கூடி" (௭) சூழ்பட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளத் தின்புற்று "என்கிறபடியே" அநவரதபகவ தநுபவத்தாலே, ஆநந்த நிர்ப்பரனா யிருக்கை என்கை.

வ்யா. (௫) ஏவம்பூத துக்கமும் ஸுகமுமிவனுக்குண்டாகுகைக்கு ஹேது வேதென்னச்சொல்லுகிறது - அனந்தேத்யாதி அதாவது:—

---

(௧) திருவாசிரியம் - ௬. (௨) தி-வா. ௭. ௧. அ. (௩) தி-வா. ௨. ௩. ௧௦. (௪) இருத்தல், உண்டாதல், பெருத்தல், சூழ்தல், குறைதல், மாளுதல். (௫) தி-வா. ௧௦. ௬. ௧௦. (௬) தி-வா. ௨. ௩. ௧௦. (௭) தி-வா. அ. ௧௦. ௫.

௵. றவொன்றை நன்கறிந்தன னுணர்வினுள்ளே ஆம்பரிசென்றும் சொல்லுகிற ஜ்ஞாதவ்ய பஞ்சக ஜ்ஞாந ஜ்ஞானங்கள்.

யஸ்வரூபமும் அறியாதே புருஷார்த்த ஜ்ஞானமுமின்றிக்கே இப்படியாகவும் உஜ்ஜீவநஹேதுவான பரஸ்வரூப ஜ்ஞாநமும் ஆத்மஸ்வரூபஜ்ஞாநமும்.

(க) "సంసారసాగరం ఘోరం అనంతక్లేశభాజనమ్" ஸம்ஸாரஸாகரம்கோரம்; "அநந்தக்லேஶ பாஜநம்" என்கிற ஸம்ஸார ப்ரயுக்தானந்த துக்கஹேது (உ) "மறந்தேனுன்னை முன்னம்" என்கிற பரவிஷயாஜ்ஞாநமும், (௩) "என்னையறியகிலாதே" என்கிற, ஆத்மவிஷயாஜ்ஞாநமும், (௪) "ஓடியுமுழன்றுமுயிர்களே கொன்றேன் உணர்விலேன்" என்கிற விரோதிவிஷயா ஜ்ஞானமும் (௫) "பிறவி நோயறுப்பான் ஏணிலேனிருந்தேன்" என்கிற உபாயவிஷயாஜ்ஞாநமும், (௬) "ஆழியங்கையம்மானை யேத்தாதயர்த்து" என்கிற புருஷார்த்த விஷயாஜ்ஞாநமுமாகிற ஜ்ஞாதவ்யார்த்த பஞ்சகஜ்ஞாநாபாவம். (௭) "నిరస్తాతిశయాహ్లాద సుఖభావైకలక్షణా" "நிரஸ்தாதிஶய ஆஹ்லாத ஸுகபாவைக லக்ஷணா" என்கிற பகவத்ப்ராப்திரூபமோக்ஷ ப்ரயுக்த நிரதிஶயஸுகஹேது, (௮) நின்னை நெஞ்சிலுய்யும்வகை யுணர்ந்தேன் என்கிற பரவிஷயஜ்ஞானமும் (௯) "நின்றவொன்றையுணர்ந்தேன்" என்கிற ஆத்ம விஷயஜ்ஞானமும், (௰) "அகற்ற நீவைத்த மாயவல்லைம்புலன்களா மவைநன்கறிந்தனன்" என்கிற விரோதி விஷயஜ்ஞானமும், (௧௧) "அவனதருளாலுறற்பொருட்டென் னுணர்வினுள்ளே இருத்தினேன்" என்கிற, உபாயவிஷயஜ்ஞானமும், (௧௨) "ஆம்பரிசறிந்து கொண்டு" என்கிற, புருஷார்த்தவிஷய ஜ்ஞானமுமாகிற ஜ்ஞாதவ்யார்த்த பஞ்சக ஜ்ஞானமென்கை. இத்தால், "ஜ்ஞாநாந்மோக்ஷ: அஜ்ஞாநாத்ஸம்ஸாரம்" என்கையாலே (௧௩) "ప్రాప్యస్య బ్రహ్మణో రూపం ప్రాప్తుశ్చ ప్రత్యగాత్మనః । ప్రాప్త్యుపాయం ఫలం ప్రాప్తేస్తథా ప్రాప్తి విరోధి చ ॥ వదన్తి సకలా వేదాః సేతిహాస పురాణకాః । మునయశ్చ మహాత్మానో వేదవేదార్థ వేదినః ॥" "ப்ராப்யஸ்ய ப்ருஹ்மணோரூபம் ப்ராப்துஶ்ச ப்ரத்யகாத்மந: । ப்ராப்த்யுபாயம்பலம் ப்ராப்தேஸ்ததாப்ராப்தி விரோதிச ॥ வதந்திஸகலாவேதாஸ்ஸேதிஹாஸ புராணகா: । முநயஶ்ச மஹாத்மாநோ வேதவேதார்த்தவேதிந: ॥" என்கிறபடியே, ஸகல ஶாஸ்த்ரதாத்பர்யமாய் ஆத்மோஜ்ஜீவநத்துக்கவஶ்யம் ஜ்ஞாதவ்யமான, அர்த்தபஞ்சகத்தையும் அறியாமையும் அறிகையுமே ஸம்ஸார மோக்ஷங்களுக்கு, ஹேது வென்றதாய்த்து.

(க) ஜிதந்தா. ௪. (உ) தி-மொ. ௬. உ. உ. (௩) தி-வா. உ. ௯. ௯. (௪) தி-மொ. க. ௬. ௬. (௫) தி-மொ. க. ௬. க.; (௬) பெ-அ. அஉ. (௭) வி-பு. ௬. ௫. ௫௯. (௮) தி-மொ. ௬. ௩. ௬. (௯) தி-வா. அ. அ. ௪. (௰) தி-வா ௫. ௭. அ. (௧௧) தி-வா. அ. அ. ௩. (௧௨) தி-மா. ௩அ. (௧௩) ஹாரீதஸ்ம்ருதள.

மூ—(௬) இவைத்துக்கு க்காரணம் இரண்டிலொன்றிலொன்றுகைகள்.

மூ—(௭) ஸத்வாஸத்வ நிதாநம் இருள்தரும மலங்களாக வென்றும் ஜந்ம ஜாயமாநகால கடாக்ஷங்கள்.

(அ) விரோதிஸ்வரூப ஜ்ஞாநமும் உபாயஸ்வரூபஜ்ஞாநமும் புருஷார்த்தஸ்வரூப ஜ்ஞாநமும் இப்படியாகவும் ஓதப்படுகிற முமுக்ஷுவுக்கறியத்தக்க அர்த்த பஞ்சகத்தினுடைய ஜ்ஞாநமும் அஜ்ஞாநமும் அர்த்த பஞ்சகமறிகை மோக்ஷத்துக்கும் அறியாமை ஸம்ஸார ஸம்பந்தத்துக்கும் ஹேதுவென்றபடி

(அ) இவ்வர்த்த பஞ்சகஜ்ஞாநா ஜ்ஞாநங்களுக்கு ஹேது ராஜஸ தாமஸங்களிரண்டிலும் ஸாத்விகமொன்றிலும் ஒன்றொன்று.

(அ) * ஸத்வகுணத்துக்கும் ஸத்வேதரங்களான ராஜஸ தாமஸங்களுக்கும் காரணம் அஜ்ஞாநத்தை யுண்டாக்கும் நிர்மலமாகும்படி கடாக்ஷிக்குமென்கிற பிறவியும் ஜந்மகாலத்தில் பகவந்நிர்ஹேதுக கடாக்ஷமும்.

வ்-யா. (௬) இவ்வஜ்ஞாநாதிகள் தனக்கு அடியே தென்னச்சொல்லுகிறது (இவைத்துக்குக் காரணமித்யாதி) அதாவது:— இவ்வர்த்த பஞ்சகாஜ்ஞாநத்துக்குக்காரணம் (௧) "முத்திரத்துவாணியத்திரண்டிலொன்றுகை." ஆகிற ரஜஸ்தமஃ ப்ரசுரதை. இவ்வர்த்தபஞ்சகஜ்ஞாநத்துக்குக் காரணம் (௨) "முக்குணத்திரண்ட வையகற்றி" ஒன்றினி லொன்றுகை" யாகிற ஸத்வப்ரசுரதையென்கை. ரஜஸ்தமஸ்ஸுக்கள் அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாந ஹேதுவாய், ஸத்வம், யதாஜ்ஞாநஹேதுவாயிறே யிருப்பது. *

வ்யா. (௭) இவைத்துக்கு நிதானமேதென்னச்சொல்லுகிறது (ஸத்வேத்யாதி), அதாவது:— ஸத்வேதரங்களான ரஜஸ்தமஸ்ஸுக்களுக்கு நிதாநம் (௩) "இருள்தருமாஞானத் துளினிப்பிறவி" என்கிற, அஜ்ஞாநாவஹமான ஸம்ஸாரத்தில் ஜந்மம். ஸத்வத்துக்கு நிதாநம் (௪) "జాయమానం హి పురుషం యం పశ్యేన్మధుసూదనః । సాత్త్వికస్స తు విజ్ఞేయస్స వై మోక్షార్థచింతకః ॥" "ஜாயமாநம்ஹி புருஷம் யம்பஶ்யேந்மதுஸூதநஃ। ஸாத்விகஸ்ஸது விஜ்ஞேயஸ்ஸவைமோக்ஷார்த்த சிந்தகஃ" என்கிறபடியே, ஜாயமானகாலத்தில் அவன்கண்களாலே (௫) "அமலங்களாகவிழிக்கும்" என்கிற, நிர்மலத்வகரமான பகவத்கடாக்ஷமென்கை. *

---

* ஸத்வாஸத்வங்களுக்குக் காரணம், பகவத்கடாக்ஷமும், பிறவியுமென்கை.

(௧) திருச்சந்த-வி-ம். ௬௮. (௨) திருவெழுகூற்றிருக்கை. (௩) தி-வா. ௪0. ௩. ௧. (௪) ஸ்ரீபாரதம்-மோ. ௩௪௨. ௭௨. (௫) தி-வா. ௧, ௯. ௯.

உ

மூ—(அ) இவைத்துக்கு மூலம் இருவல்லருள் நல்வினைகள்.

மூ—(கூ) கர்மக்ருபா பீஜம் பொய்நின்ற வருள்புரிந்த வென்கிறவவித்யாஸௌஹார்தங்கள் (க0) ஏதந்நிமித்தம்

(அ) இஜ்ஜன்ம பகவத் கடாக்ஷங்களுக்கு காரணம் புண்யபாபங்களும்பகவத்க்ருபையாகிறஸுக்ருதமும். இருவல்வினை அருள் நல்வினை என்றந்வயித்து இரண்டாய் பலிஷ்டங்களான புண்ய பாபங்களும் பகவத்க்ருபையாகிற ஸுக்ருதமுமென்று பொருள்.

(அ) கர்மக்ருபைகளுக்கு மூலம் தேஹாத்மப்ரமம் க்ருபாவிசிஷ்ட சிந்தனை என்று சொல்லப்படுகிற அஜ்ஞாநமும் ஸ்வாபாவிக ஸுஹ்ருத்வமும். (க0) இவ்வவித்யாஸுஹ்ருத்வங்களுக்கு ஹேது

வ்யா. (அ) இவைதனக்கு மூலமேதென்னச்சொல்லுகிறது, (இவைத்துக்குமூலமித்யாதி) அதாவது:—இஜ்ஜந்மத்துக்கு மூலம் (க) "சார்ந்தவிருவல்வினை" என்று ஆத்மாவோடு பிரிக்க ஒண்ணாதபடி பொருந்திக்கிடக்கிற ப்ரபலங்களான புண்ய பாபங்கள். இக்கடாக்ஷத்துக்கு மூலம் (உ) "தொல்லருள் நல்வினை" என்கிறவவனுடைய ஸ்வாபாவிகக்ருபையாகிற ஸுக்ருதமென்கை. இருவல்லருள் நல்வினைகளென்னது, இருள் வல்வினையும், அருள் நல்வினையுமென்றபடி. *

வ்யா. (கூ) இவைதனக் கடியேதென்னச் சொல்லுகிறது (கர்மேத்யாதி) அதாவது :—கர்மத்துக்குபீஜம் (ங) "பொய்நின்ற ஞானம்" என்கிறவவித்யை. க்ருபைக்கு பீஜம் (ச) "அருள்புரிந்த சிந்தை" என்கிற ஸௌஹார்தமென்கை (ரு) "𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌸𑍌𑌹𑌾𑌰𑍍𑌦𑌂" "யீஶ்வரஸ்யச ஸௌஹார்தம்" என்றிவ்வாத்மோஜ்ஜீவநத்துக்கு அவன் க்ருஷி பண்ணுகையில் இழிகைக்கு மூலகாரணமாக, ஸௌஹார்த்தத்தைச் சொல்லிற்றிறே. இஸ்ஸௌஹார்த மடியாகவாய்த்து, இவ்வாத்ம விஷயமாக அவன் திருவுள்ளத்தில் இரக்கம் பிறப்பது.

வ்யா. (க0) இந்த வவித்யாஸௌஹார்தங்கள் தனக்கு அடியேதென்னச் சொல்லுகிறது (ஏதந்நிமித்தமித்யாதி) ஏதச்சப்தத்தாலே இரண்டையும் பராமர்சிக்கிறது. அதாவது:— அவித்யைக்கு நிமித்தம் (சு) "மூதாவியில் தடுமாறு முயிர்முன்னமே" என்கிறவநாதியான வசித்ஸம்பந்தம். ஸௌஹார்தத்துக்கு நிமித்தம் (எ) "அடியேனடைந்தேன் முதல் முன்னமே" என்கிற, வநாதியான வயனஸம்பந்தமென்கை. அயனசப்தத்தாலே, ஈஶ்வரனைச்சொல்லுகிறது. நாராயண

(க) தி-வா. க. ரு. க0. (உ) தி-வா. ரு. கூ. க0. (ங) திருவிருத்தம். க.
(ச) தி-அ. உ. ருகூ. (ரு) (சு) திருவிருத்தம். கரு. (எ) தி-வா. உ. ங. சு.

ஸூ. முன்னமே முதல் முன்னமேயான வசித்யநாநாதி ஸம்பந்தங்கள்.

மூ—(கக) இவை கிட்டமும் வேட்டுவேளானும்போலே ஒண்பொருள் பொருளல்லாதவை யென்னுதே நானிலாத யானும் உளனுவனென்கிற ஸாம்யம் பெற

(அ) அநாதியாயுண்டானதாகச் சொல்லப்படுகிற அநாதியான வசித்ஸம்பந்தமும் அயனஸம்பந்தமும்.

(அ) இவ்வசித்யன ஸம்பந்தங்கள் மண்டூரமும் ப்ரமரமும்போலே ப்ரலாக்யமானவஸ்து அஸத்கல்பவஸ்து என்றிதின்மேன்மைதண்மைகள்பாராதே நானிலேன் நானுளனுனேன் என்னும்படியான ஸாஜாத்யம்பெறும்படி

னிறே. ஆக வநாத்யசித்ஸம்பந்த மடியாக அவித்யையாய், அதடியாக புண்யபாபரூப கர்மமாய், அதடியாக வஜ்ஞானஹேதுவான ஜன்மமாய், அதடியாக ரஜஸ்தமோ விருத்தியாய், அத்தாலே அர்த்தபஞ்சக ஜ்ஞாநாபாவமாய், அதடியாக "அஜ்ஞாநாத்ஸம்ஸாரம்" என்கிறபடியே ஸம்ஸார துக்கம் வரும். அநாத்யயன ஸம்பந்தமடியாக பகவத்ஸௌஹார்த முண்டாய், அதடியாகக்ருபையுண்டாய், அதடியாக விஶேஷ கடாக்ஷமுண்டாய், அதடியாக ஸத்வவ்ருத்தியுண்டாய், அதடியாக அர்த்தபஞ்சக ஜ்ஞாநமுண்டாய், அதடியாக "ஜ்ஞாநாந்மோக்ஷ:" என்கிறபடியே மோக்ஷ ஸுகமுண்டா மென்றதாய்த்து.*

வ்யா. (கக) இவ்வுபய ஸம்பந்தமும் ஆத்மவஸ்துவுக்குச்செய்யுமவைத்தைச் சொல்லுகிறதுமேல் (இவையென்றுதொடங்கி) அதாவது:— அசித் ஸம்பந்தம் தன்னோடு சேர்ந்த மாணிக்கத்தை ஒளியறத்தின்று உருவழித்து, தன்னைப்போலேயாக்கும் கிட்டம்போலே (க) "அங்கலத்தொண்பொருள்" என்கிற விலக்ஷண ஜ்ஞாநகுணகமாய் ஸ்வயம் ப்ரகாஶமானவஸ்து என்று இதின் சீர்மைபாராதே (உ) "இல்லது" என்றும் (ங) "அஸந்நேவ" "யந்நாஸ்தி" என்றும் சொல்லுகிற தன்னோடே (ச) "நானிலாத" என்கிற ஸாம்யம் பெறும்படியாக ஜ்ஞாநலேஶமறத்தின்று (ரு) "அந்தமும் வாழ்வும்" என்கிறவைத்தில் அந்தமாகிற ஹானியையுண்டாக்கும். (சூ) "అసన్నేవ స భవతి" "அஸந்நேவ ஸபவதி" என்கிறபடியே, ஸத்தாஹானியைப்பண்ணுமென்கை" அயநஸம்பந்தம், (எ) "కీటః పేశకృతారుద్ధః కుడ్యాన్తరమచిన్తయన్ । సంరమ్భభయయోగేన విన్దతే తత్స్వరూపతామ్ ।" "கீட: பேஶக்ருதாருத்த: குட்யாந்தரமசிந்தயந் । ஸம்ரம்பபயயோகேநவிந்ததே தத்ஸரூபதாம்" என்கிறபடியே, ஏதேனுமொரு கீடத்தைக் கொண்டுவந்து வைத்துதிஸ்வஸாம்யாபந்நமாக்

(க) தி-வா. க. உ. க0. (உ) தி-வா. க. உ. ச. (ங) வி-பு. உ. கஉ. ஙஎ. (ச) திருச்சந்தம். வி-ம். சூடு. (ரு) பெ-மொ. ரு. எ. உ. (சூ) தை-உ. ஆ-சு. க. (எ)

மூ—த்தின் றாதி அந்தமும் வாழ்வுமாகிற ஹாநிஸத்தைகளை யுண்டாக்கும்.

மூ—(கஉ) ஒன்று கூடினதாய் பற்றறுக்க மீண்டொழிகையாலே பழய வடியேனென்று மதொன்றுமே ஒழிக்க ஒழியாதது.

(அ) அழித்து த்வநித்து ஸ்வரூபநாஶமும் ஸ்வரூபாவிர்ப்பாவமுமாகிற விநாஶ ஸத்பாவங்களை ஜநிப்பிக்கும்.

(அ) அசித்ஸம்பந்தமானதொன்று வந்தேறியாய் ஈஶ்வரன் தத்ஸம்பந்தத்தைநிவ்ருத்திப்பிக்க நிவ்ருத்தமாய்ப்போருகையாலே அநாதியான பகவச் சேஷத்வஸம்பந்தமொன்றுமே நிவ்ருத்திப்பிக்க ப்போகாதது.

கும் வேட்டுவேளானைப்போலே (க) "பொருளல்லாதவென்னை" என்கிறபடியே, ஜ்ஞாநாபாவத்தாலே அவஸ்துவாச்யமாய்க் கிடக்கிறவிதின்சீர்மைபாராதே ஸ்வரூபேண விபுவானதன்னோடு, (உ) "परमं साम्यमुपैति" "பரமம் ஸாம்யமுபைதி" என்கிறபடியே, (ங) "உள்ள உலகளவும் யானுமுளனுவன்" என்று ஜ்ஞாநத்வாராவரும் விபுத்வஸாம்யம் பெறும்படி தன்னிறமாக ஊதி வாழ்வாகிற ஸத்தையை யுண்டாக்குமென்கை. (ச) "सन्तमेनं ततो विदुः" "ஸந்தமேநம் ததோ விது:" என்று பகவத்ஜ்ஞாநாநந்தரம் ஆத்மஸத்தாஸித்தியாகச் சொல்லிற்றிறே. ✳

வ்யா. (கஉ) இப்படி அநாதியாகச்சொன்ன உபயஸம்பந்தமும் ஆத்மாவுக்கு நித்யமாயிருக்குமோவென்கிற ஶங்கையிலே சொல்லுகிறது. (ஒன்றித்யாதி) அதாவது:— அசித்ஸம்பந்தம் (ரு) "பெருந்துயரிடும்பையில் பிறந்து கூடினேன்" என்கையாலே, ஆத்மாவுக்கு ஸ்வரூபமன்றிக்கே வந்தேறியாய் (சு) "வினைபற்றறுக்கும்" என்றொரு ஸர்வஶக்திஸவாஸநமாகப்போக்க, (எ) "அடைந்த வருவினையோடல்லல் நோய்பாவம் மிடந்தவை மீண்டொழிய" என்கிறபடியே, நிவ்ருத்தமாய் விடுகையாலே (அ) "திருமாலே நானுமுனக்குப்பழவடியேன்" என்னும்படி அநாதியாயிருக்கிற ஶேஷஶேஷி பாவருப பகவத்ஸம்பந்தமொன்றுமே (கூ) "உறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது" என்கிறபடியே ஈஶ்வரனாலும் சேதநனாலும் கழிக்கப்பார்த்தாலும் கழிக்கபோகாததென்கை. இத்தால் அசித்ஸம்பந்தமாகந்துகமாய், கர்மோபாதிகமாகையாலே அநித்யமாயிருக்கும். அபநஸம்பந்தமநாதியாய், நிருபாதிகமாகையாலே நித்யமா யிருக்குமென்றதாய்த்து. ஆனால், ஆகந்துகமானவித்தை அநாதி யென்பானென்னென்னில்? வந்தேறின காலத்துக்கடிதெறியாமையாலே அநாதியென்று ப்ரமாணங்கள் சொல்லுகையாலே ஒருநாள்வரையிலே பகவத்ப்ரஸாதத்தாலே கழியக்காண்கையாலே வந்தேறி என்னுமிடம் நிஶ்சிதமிறே. ✳

(க) ரு. எ. ங. (உ) மு-ட. ங. உ. (ங) பெ-அ. எசு. (ச) தை-உ. ஆசு. ச. (ரு) பெ-மொ. க. க. க. (சு) பெ-மொ-கக. ச. கூ. (எ) தி அ. க. ருசு. (அ) திருப்பல்லாண்டு-கக. (கூ) திருப்பாவை. உஅ.

மூ—(கரு) இந்த வுதிரத்தெறிப்பு த்ரைகுண்யவிஷயமானவற்றுக்கு ப்ரகாசகம். (கசு) வத்ஸலையானமாதா பிள்ளைபெகணியாமல். மண்தின்றவிட்டு ப்ரத்யௌஷதமிடுமாப்போலே எவ்வுயிற்கும் தாயிருக்கும் வண்ணமான விவனும் ருசிக்கீடாகப்பந்தமும் பந்தமறுப்பதோர்மருந்தும் காட்டுமிறே.

(அ) இந்த நாராயணத்வப்ரயுக்த பிதா புத்ர ஸம்பந்தம் த்ரைகுண்ய விசிஷ்ட சேதந விஷயமான வேதாதிகளைக் கொடுக்கைக்கு ப்ரதானஹேது. (கசு) வாத்ஸல்யயுக்தையான தாயானவள் சிசுவானது முகவைவர்ண்யமடையாமல் மண்ணைத்தின்றவநுமதிபண்ணி தத்தோஷநிவ்ருத்யௌஷதமிடுமாப்போலே ஸர்வாத்மாக்களுக்கும் மாத்ருவத்வத்ஸலநான விஸ்வரனும் சேதநருச்யநுகுணமாக பந்தமும் பந்தச்சேதகமானதோரௌஷதத்தையும் தர்சிப்பிக்குமிறே.

வ்யா. (கரு) இவ்வயநஸம்பந்தமே கீழ்ச்சொன்ன ஶாஸ்த்ரப்ரதாநத்துக்கு ஹேதுவென்கிறார்மேல், (இந்த இத்யாதி) அதாவது:—இந்தநாராயணத்வ ப்ரயுக்தமான குடல்துடக்கு(க) "𑌤𑍍𑌰𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌾 𑌵𑍇𑌦𑌾𑌃." "த்ரைகுண்ய விஷயாவேதா:" என்கிறபடியே ஸத்வரஜஸ்தமோரூப குணத்ரயவஶ்யரான சேதநரை விஷயமாகவுடைய வேதங்களை ப்ரகாசிப்பிக்கைக்கு ஹேதுவென்றபடி. தம:ப்ரசுரராயும் ரஜ:ப்ரசுரராயும் ஸத்வப்ரசுரராயுமிருக்கும் சேதநருடைய ருச்யநுகுணமான புருஷார்த்த தத்ஸாதநங்களையிறே பூர்வபாகத்தில் பரக்கச்சொல்லுவது, ஆகையால் த்ரைகுண்ய விஷயமானவை என்கிறது. இந்தால் நீர்மையினாலருள் செய்தானென்று, கீழ்ச்சொன்ன ஶாஸ்த்ரப்ரதாநத்துக்கு ப்ரதானஹேது, ஸம்பந்த மென்றதாய்த்து. *

வ்யா. (கசு) இப்படி ஸம்பந்தமடியாகச்செய்தானாகில் மோக்ஷஹேதுவான ஶாஸ்த்ரங்களையே காட்டாதே, ஐஹிகபார லௌகிக போகஸாதநவிதாயகதயா பந்தஹேதுவான ஶாஸ்த்ரங்களையும் காட்டுவானென் னென்னச்சொல்லுகிறது. (வத்ஸலையித்தாதி) அதாவது:—வாத்ஸல்யயுக்தையான பெற்றதாயானவள், மண்ணையாசைப்பட்ட பிள்ளையை, பெகணியாமல் முந்தரமண்ணைத் தின்றவிட்டு, பின்னையதுக்கு, மாற்று மருந்திடுமாப் போலே, (உ) "எவ்வுயிர்க்கும் தாயோன்" என்றும், (௩) " தாயிருக்கும் வண்ணமே" என்றும், ஶொல்லுகிறபடியே, ஸகலாத்மாக்களளவிலும், மாத்ருவத் வத்ஸலனானவிவனும், சேதநருடையருசிக்கீடாக பந்தங்களையும் தர்சிப்பித்து, பின்னை பந்த நிவர்தக பேஷஜமானத்தையும் தர்சிப்பிக்குமிறேயென்கை. இத்தாலிப்படிசெய்தது, ஸம்பந்தப்ரயுக்த வாத்ஸல்ய கார்யமாகையாலே, ஸம்பந்தக்கொற்றை வாராதென்றதாயிற்று. *

(க) ஶ்ரீப-தை. உ. சடு. (உ)தி-வா. க. ரு [illegible] (௩) பெ-மொ. கக. சு. சு.

மூ—(கரு) அதுதானும் ஆஸ்திக்யம் விவேகம் அந்யசேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யநிவ்ருத்தி பாரதந்த்ர்யங்களை யுண்டாக்கினவழி.

(அ) பந்தகசாஸ்த்ரத்தையும்காட்டினதுதானும் ச்யேநவிதியாலே சாஸ்த்ரவிச்வாஸமும், ஜ்யோதிஷ்டோமாதியாலே ப்ரக்ருத்யாத்மவிவேகம், ஆத்மஜ்ஞானத்தாலந்யசேஷத்வ நிவ்ருத்தியும், பகவதுபாஸநபக்தியோகத்தாலே ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியும், ஸ்வயத்நநிவ்ருத்திரூப ப்ரபத்தியாலே பாரதந்த்ர்யத்தையும், உண்டாக்குகைக்காக நிர்மிதமான மார்க்கம்.

வ்யா. (கரு) இப்படி வாத்ஸல்யத்தாலே செய்தானாகிலும், குணத்ரய வச்யரான சேதநருக்கு, ருச்யநுகுணமாக பலஸாதநங்களை விதிக்கிற பந்தகசாஸ்த்ரத்தையும் தர்சிப்பித்தால், அவர்கள் ஸம்ஸரித்தே போகைக்குடலாகாதோவென்ன? அதுவும் க்ரமேண, அவர்களீடேறுகைக்கு, இட்டவழியென்கிறார்மேல், (அதுதானுமித்யாதி) அதாவது:— மோசக சாஸ்த்ரமார்க்கத்தை தர்சிப்பியாதே, ச்யேநவிதி முதலான பந்தகசாஸ்த்ரங்களையும், தர்சிப்பித்ததுதானும், தமஃப்ரசுரராய் அர்த்தார்ஜநத்துக்காக பரஹிம்ஸாசீலராய்த் திரிகிற நாஸ்திகரைக்குறித்து, மோக்ஷத்தை விதித்தால், அவர்களுக்கது ருசியாமையாலே, அந்த பரஹிம்ஸாரூபமான வபிசாரகர்மத்தை (க) "శ్యేనేనాభిచరన్ యజేత" "ச்யேநேநாபி சரந்யஜேத" என்று விதித்து தத்பலஸித்தியாலே, அவனுக்கு சாஸ்த்ரமுண்டு, என்கிற வாஸ்திக்யத்தை யுண்டாக்கி, ஆஸ்திகனானபின்பு (உ) "జ్యోతిష్టోమేన స్వర్గకామో యజేత" "ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத" இத்யாதிகளாலே, ஸ்வர்க்காதி புருஷார்த்த தத்ஸாதநங்களை விதித்து, அவ்வழியாலே ப்ரக்ருத்யாத்ம விவேகத்தை யுண்டாக்கியும், இப்படி ப்ருக்ருத்யாத்ம விவேகம் பிறந்தபின்பு, ஆத்மபோகத்துக்கு வழிகாட்டி, அவ்வழியாலே அந்யசேஷத்வ நிவ்ருத்தியை யுண்டாக்கி, அநந்தரம் பரமாத்ம போகவைலக்ஷண்யத்தையும், தத்ப்ராப்தி ஸாதநபக்தியையும்காட்டி, அவ்வழியாலே ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியை யுண்டாக்கியும், அநந்தரமுபாயாந்தர துஷ்கரத்வாதிகளாலே, தளருமளவில், ஸ்வயத்ந நிவ்ருத்தி ரூபப்ரபத்தியிலேமூட்டி, ஸ்வரூப யாதாத்ம்ய வேஷமான பாரதந்த்ரியத்தை யுண்டாக்கியும், இப்படி க்ரமத்திலே, ஈடேறுகைக்கு, இட்டவழியிறே யென்றபடி. இவைகிட்டமும் வேட்டுவேளாநும்போலே, என்றுதுடங்கி, இவ்வளவாக, ஸம்ஸார மோக்ஷகாரண பரம்பரைகளில், சரமாவதிகளான வசிதயநஸம்பந்தங்கள், ஆத்மவஸ்துவுக்குச் செய்யுமவைகளும்; அதிலசித்ஸம்பந்தமநித்யம், அயநஸம்பந்தமே நித்யமென்றும், அந்த ஸம்பந்தம் கீழ்ச்சொன்ன சாஸ்த்ர ப்ரதாநத்துக்கு ஹேதுவென்றும், அதில் மோசக சாஸ்த்ரமாத்ர மன்றிக்கே பந்தகசாஸ்த்ரத்தையும், தர்சிப்பித்தது,

---

(க) (உ) ஆபஸ்[illegible]ஸூத்ரம் - ஸ்ரௌதம். அ. உ.

மூ—(கசு) சதுர்விதமான தேஹ வர்ண ஶ்ரமா திகார பல மோக்ஷ ஸாதனகதி யுக தர்ம வ்யூஹ ரூப க்ரியாதிகளை அறிவிக்கிற பாட்டுப்பறப்புக்கு பெரியதிவினி லொன்பதாங்கூறும் மானிடப்பிறவியு மாக்கைநிலையு மீரிரண்டிலொன்று மிளமையு மிசைவு முண்டாய் புகுவரேலு மென்கிறதற்குள்ளே விக்நமற நின்றவாநில்லா ப்ரமாதியைக்கொண்டறக்கற்கை அறிதென்றிறே வேதஸாரோபநிஷத் ஸாரதாராநுவாக ஸார

(அ) நாலுவகைப்பட்ட தேவ திர்யங் மனுஷ்ய ஸ்தாவர சரீரங்களும் ப்ரும்ஹ க்ஷத்ர வைஶ்ய ஶூத்ரவர்ணங்களும் ப்ரும்ஹசர்ய கார்ஹஸ்த்ய வாநப்ரஸ்த்த ஸந்யாஸாஶ்ரமங்களும் ஆர்த ஜிஜ்ஞா ஸ்வர்த்தார்த்தி ஜ்ஞாநித்வங்களாகிற வதிகாரங்களும் தர்மார்த்த காம மோக்ஷ பலங்களும் ஸாலோக்ய ஸாமீப்ய ஸாரூப்ய ஸாயுஜ்யரூப மோக்ஷங்களும் கர்ம ஜ்ஞாந பக்தி ப்ரபத்திரூப ஸாதநங்களும் கர்ப்ப யாம்ய தூமாத்யர்சிராதிகளாகிற கதிகளும் க்ருத த்ரேத த்வாபர கலியுகங்களும் த்யாநயஜ்ஞார்சந ஸங்கீர்தநங்களென்றும் தர்மங்களும் வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்நா நிருத்தர்களாகிற வ்யூஹங்களும் ஶ்வேத பீத ஶ்யாம நீலரூபங்களும் ஸ்ருஷ்டி ஸ்த்திதி ஸம்ஹார மோக்ஷப்ரதத்வங்களாகிற க்ருத்யங்களும் இவை முதலானவைகளை ப்ரகாசிப்பிக்கிற பாட்டுமுறைமையுமென்கிறபாட்டிலுள்ள ஶாஸ்த்ர விஸ்தாரத்துக்கு விஸ்தாரமான ஜம்பூத்வீபத்தில் நவமகண்டமான பாரதவர்ஷமும், மநுஷ்ய ஜந்மமும் ஶரீரஸ்த் தைர்யமும் நான்கிலொன்றான ப்ராம்

வத்ஸலனுகையாலே சேதந ருச்யநுகுணமாகவென்றும், அதுதானும் க்ரமத்திலே அவர்களை யுஜ்ஜீவிப்பிக்கைக் கிட்டவழியென்றும் சொல்லித்தாய்த்து. ✻

வ்யா. (கசு) இனிமேல் ஶாஸ்த்ர ப்ரதிபாத்யார்த்த விஶேஷங்களை, ஸங்க்ரஹேண ப்ரதிபாதித்துக்கொண்டு, ஏவம்பூத ஶாஸ்த்ராப்யாஸம் அநேகயோக்யதா ஸாபேக்ஷதயா துஷ்கரமென்று தானே திருவுள்ளம்பற்றி, ஈத்ருஶாநேக யோக்யதா நிரபேக்ஷத் வேநஸுகரமாய், ஶாஸ்த்ரதாத்பர்யமுமான திருமந்த்ரத்தை, ஈஶ்வரன் வெளியிட்டருளினபடியை, அருளிச்செய்கிறார். (சதுர்வித) இத்யாதி சூர்ணையாலே, சதுர்விதமான வென்கி[illegible] மேற்சொல்லுகிறவை யெல்லாத்திலு மநுவர்த்திக்கிறது. அதா[illegible]- தேவமநுஷ்ய திர்யக்ஸ்த்தாவராகாரேண நான்குவகைப்[illegible]ம், ப்ராம்ஹண, க்ஷத்ரிய, வைஶ்ய ஶூத்ரரூபேண நா[illegible]வர்ணம், ப்ரும்ஹசர்ய கார்ஹஸ்த்ய

மூ. தமகாயத்ரியில் முதலோதுகிற பொருள்முடிவான சுருக்கை தைவவண்டா யங்கமா யமுதங்கொண்டவன் ஶாகைகளிலு மோதம்போல் இளர்நால்வேதக்கடலிலும் தேனும்பாலு மமுதுமாகவெடுத்து பெருவிசும்பருளும் பேரருளாலே சிங்காமை விரித்தது.

(அ) ஹணவர்ணமும் பால்யமும் இச்சையும் இருந்ததாய் நூறுவர்ஷமாயுஸ்ஸையடைந்தார்களேயாகிலும் விக்நங்களின்றி நின்றவிடத்தில் நில்லாமலடர்த்தும் நெஞ்ஜைக்கொண்டு நன்றாக வதிகரிக்கை துர்லபமென்று திருவுள்ளம் பற்றியிறே வேதஸாரமான உபநிஷத்பாகத்தில் ஸாரதரமான நாராயணாநுவாகத்திலே ஸாரதமமான விஷ்ணு காயத்ரியில் முதலிலே ஶொல்லப்படுகிற வேதாந்த தாத்பர்யமான ஸகலவேத ஸங்க்ரஹமான திருமந்த்ரத்தை தேவதாப்ரமரமாய் ஹம்ஸரூபியாய் அம்ருதத்தை க்ரஹித்த ஸர்வேஶ்வரன் வேதஶாகைகளாகிற ஶாகைகளிலும் கிளராநின்றுள்ள வேதநீரிலும் நான்குவேதங்களாகிற கடலிலும் ஶாகைகளில் தேனாகவும் நீரில் பாலாகவும் கடலிலம்ருதமாகவும் உத்தரித்து பரமாகாஶமான பரமபதத்தைக்ருபைஶெய்யும் மஹாக்ருபையாலே ஸங்குசிதமாகாமல் விஸ்த்ருதமாம்படி பண்ணிற்று.

வாநப்ரஸ்த்த ஸந்யாஸாத்மகதயா நாலுவகைப்பட்ட வாஶ்ரமம் (க) "𑌆𑌰𑍍𑌤𑍋 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍁𑌰𑌰𑍍𑌥𑌾𑌰𑍍𑌥𑍀 𑌜𑍍𑌞𑌾𑌨𑍀" "ஆர்த்தோஜிஜ் ஞாஸுரர்த்தார்த்தீஜ்ஞாநீ" என்கிற நாலுவகைப்பட்ட வதிகாரம், தர்மார்த்த காம மோக்ஷங்களென்கிற, நாலுவகைப்பட்டபலம், ஸாலோக்ய ஸாமீப்ய ஸாரூப்ய ஸாயுஜ்யங்கள் என்கிற நாலுவகைப்பட்ட மோக்ஷம், கர்மஜ்ஞாநபக்தி ப்ரபத்திகள்என்கிற நாலுவகைப்பட்டஸாதநம், பஞ்சாக்நிவித்யோக்த ப்ரகாரேணவரும், கர்பகதி யாம்யகதி தூமாதிகத்யர்சாதிகதி யென்கிற நாலுவகைப்பட்டகதி, க்ருதத்ரேதத்வாபரகலிகளென்கிற நாலுவகைப்பட்டயுகம் (உ) "𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍 𑌕𑍃𑌤𑍇 𑌯𑌜𑌨𑍍 𑌯𑌜𑍍𑌞𑍈𑌸𑍍 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇𑌽𑌰𑍍𑌚𑌯𑌨𑍍 । 𑌯𑌦𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌤𑌦𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌲𑍌 𑌸𑌙𑍍𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯 𑌕𑍇𑌶𑌵𑌮𑍍" த்யாயந் க்ருதேயஜந்யஜ்ஞைஸ்த்ரேதாயாம் த்வாபரேர்சயந்! யதாப்நோதிததாப்நோதிகலௌஸங்கீர்த்யகேஶவம்" என்றுஶொன்ன த்யாநய ஜநார்சந ஸங்கீர்த்தநங்களாகிற நாலுவகைப்பட்ட யுகதர்மம், வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்நா நிருத்தர்களாகிற நாலுவகைப்பட்ட வ்யூஹம், க்ருதாதியுகங்களில் (ங) "ஶ்பாலிநீர்மை" இத்யாதி[...]யே, சொல்லுகிற வஸிதபீதஶ்யாமநீலதயா நாலுவகைப்பட்டரூப[...]ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார மோக்ஷப்ரதத்வங்களென்கிற நாலுவ[...] க்ரியை, ஆதிஶப்தத்

(க) ஸ்ரீபகவத்கீதை. எ. கசு. (உ) வி-பு[...]) திருச்சந்த-வி-ம்-சச.

தாலே மற்றும் சதுர்விதமானப்ரமேயவிசேஷங்களைச்சொல்லுகிறது. வாஸுதேவாதுத்பன்னரான கேசவ நாராயண மாதவர்கள். ஸங்கர்ஷணாதுத்பன்னரான கோவிந்த விஷ்ணு மதுஸூதநர்கள். ப்ரத்யும்நாதுத்பன்னரான த்ருவிக்ரம வாமந ஸ்ரீதரர்கள். அநிருத்தாதுத்பன்னரான ஹ்ருஷீகேச பத்மநாப தாமோதரர்கள். என்கிற, நாலுவகைப்பட்ட வ்யூஹாந்தரம். ஆமோத ப்ரமோத ஸம்மோத வைகுண்டரூபேண நாலுவகைப்பட்ட வ்யூஹஸ்தாநம்முதலானவை பலவுமுண்டிறே. ஆகவிப்படி சதுர்விதமான வர்த்தவிசேஷங்களை ப்ரகாசிப்பிக்கிற (க) "பாட்டுமுறையும்" என்கிறபாட்டில் சொல்லுகிற, சாஸ்த்ரவிஸ்தரத்துக்கு (பெரியதீவினில்) இத்யாதி, (உ) "நாவலம்பெரியதீவு", என்கிற, போகமோக்ஷஸாதநாநுஷ்டாந பூமியாகையாலே, த்வீபாந்தரங்களிலுத்க்ருஷ்டமான ஜம்பூத்வீபத்தில், நவகண்டத்திலும் வைத்துக்கொண்டு, வர்ஷாந்தரங்களைப்போலே, பௌமமான ஸ்வர்க்கமென்னலாம்படி போகபூமியாயிராதே, ஸ்வர்க்கமோக்ஷரூபமான பலங்களுக்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகைக்கிடானஸ்தலமாய் (ங) "గాయన్తిదేవాః కిలగీతకాని ధన్యాస్తుయేభారత భూమిభాగే । స్వర్గాపవర్గాస్పదమార్గభూతే భవంతిభూయః పురుషాస్సురత్వాత్॥" "காயந்திதேவா: கிலகீதகாநிதந்யாஸ்துயே பாரதபூமிபாகே। ஸ்வர்காபவர்காஸ்பதமார்கபூதே பவந்திபூய: புருஷாஸ்ஸுரத்வாத்॥" என்று, தேவர்களும், ச்லாகிக்கும்படியான நவமகண்டமான பாரதவர்ஷமும் (ச) "దుర్లభోమానుషోదేహః" "துர்லபோ மாநுஷோதேஹ:" என்றும் (ரு) "అత్రజన్మసహస్రాణాం సహస్రైరపిసత్తమ కదాచిల్లభతేజన్తు ర్మానుష్యంపుణ్యసఞ్చయాత్॥" "அத்ரஜந்மஸஹஸ்ராணாம் ஸஹஸ்ரைரபிஸத்தமகதாசில்லப்பதே ஜந்துர்மாநுஷ்யம் புண்யஸஞ்சயாத்॥" என்றும், சொல்லுகிறபடியே (சு) "மானிடப்பிறவியந்தோ" வென்று துர்லபமாகச்சொன்ன மனுஷ்யஜந்மமும் (எ) "మానుషోదేహోదేహినాంక్షణభంగురః" "மாநுஷோ தேஹோ தேஹிநாம்க்ஷணபங்குர:" என்கிறபடியே (அ) "மின்னின்னிலையில மன்னுயிராக்கைகள்" என்றஸ்திரமாகச்சொன்ன, சரீரத்திலுடையஸ்தைர்யமும், சாஸ்த்ரஜ்ஞாநவர்ணயோக்யங்களில் ப்ரதமகண்யமாய் (கூ) "குலங்களாய வீரிரண்டிலொன்று" என்கிற, பிராம்ஹணஜந்மமும், (க0) "తస్మాద్బాల్యేవివేకాత్మాయతేతశ్రేయసేసదా" "தஸ்மாத்பால்யேவிவேகாத்மாயதேதச்ரேயஸேஸதா" என்கிறபடியே, புத்திகொழுந்துவிட்டு, அப்யஸிக்கைக்குறுப்பான (கக) "கி[illegible]ளியிளமை" என்கிறபால்யமும் (கஉ) "யாவுமென்னெஞ்சு[illegible]தொழிந்தோம்" என்கிறபடியே, யெல்லாத்

(க) நா - அ[illegible] பெ - தி. ங. சு. க. (ங) வி - பு. உ. ங. உங. (ச) ஸ்ரீபாக-ம் [illegible] (ரு) வி - பு. உ. ங. உஉ. (சு) திருக்குறுந்தாண்டகம்-அ. (எ) [illegible] உஅ. (அ) தி-வா. க. உ. உ. (கூ) திருச்சந்த-விம்-கூ0. ([illegible] (கக) தி - வா. உ. க0. க. (கஉ) பெ - அ. உசு.

துக்குமிசைவு வேண்டுகையாலே, இதில் மூளுகைக்குறுப்பான விச்சையுமுண்டாய் (க) "வேதநூற் பிராயநூறு மனிசர்தாம் புகுவரேலும்" என்றும் (உ) "𑌶𑌤𑌾𑌯𑍁𑌰𑍍𑌵𑍈 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃" "ஶதாயுர்வை புருஷ:" என்றும், வேதஶாஸ்த்ரோக்தமான வயஸ்ஸு நூறும், மநுஷ்யர் தாங்கள் புகுந்தார்களாகிலு மென்கிற விவ்வாயுஸ்ஸுக்குள்ளே (ங) "𑌅𑌨𑌨𑍍𑌤𑌪𑌾𑌰𑌂 𑌬𑌹𑍁 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑌲𑍍𑌪𑌶𑍍𑌚 𑌕𑌾𑌲𑍋 𑌬𑌹𑌵𑌶𑍍𑌚 𑌵𑌿𑌘𑍍𑌨𑌾𑌃" "அநந்தபாரம் பஹுவேதிதவ்யமல்பஶ்சகாலோபஹவஶ்சவிக்நா:" என்றும் (ச) "𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌂𑌸𑌿 𑌬𑌹𑍁𑌵𑌿𑌘𑍍𑌨𑌾𑌨𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌤𑌾𑌮𑌪𑌿" "ஶ்ரேயாம்ஸிபஹுவிக்நாநிபவந்திமஹதாமபி" என்றுஞ் சொல்லுகிறபடியே, ஶாஸ்த்ராப்யாஸம் பண்ணவொண்ணாதபடி வரும் விக்நங்களுமற்று, (ரு) "நின்றவாநில்லாநெஞ்சு" என்றும் (சு) "𑌚𑌞𑍍𑌚𑌲𑌂 𑌹𑌿 𑌮𑌨𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑌿 𑌬𑌲𑌵𑌦𑍍𑌦𑍃𑌢𑌮𑍍" "சஞ்சலம்ஹிமந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத்த்ருடம்" என்றுஞ் சொல்லுகிறபடியே, ஒரு விஷயத்திலரைக்ஷணமும் நில்லாதே, இவனையடர்த்து, தன் வழியேயிழுக்கும் மநஸ்ஸைக்கொண்டு (எ) "கலையறக்கற்றமாந்தர்" என்கிறபடியே, ஶ்ருதி ஸ்ம்ருத்யாதி ஶாஸ்த்ரங்களை, தாத்பர்யம் கைப்படும்படியதிகரிக்கை. "ஆமாறறிவுடையராவ தறிதன்றே" என்று, தாத்பர்யத்திலேயுற்றுநிற்க யுக்தமாம்படி, "அறிவுடையராகையறிதன்றே" என்கிறபடியே, அறிதென்று திருவுள்ளம்பற்றியிறே (வேதஸாரோபநிஷத்) இத்யாதி (அ) "𑌅𑌸𑌾𑌰𑌮𑌲𑍍𑌪𑌸𑌾𑌰𑌂 𑌚 𑌸𑌾𑌰𑌂 𑌸𑌾𑌰𑌤𑌰𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 । 𑌭𑌜𑍇𑌤𑍍𑌸𑌾𑌰𑌤𑌮𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌰𑌤𑍍𑌨𑌾𑌕𑌰𑌇𑌵𑌾𑌮𑍃𑌤𑌂" "அஸாரமல்பஸாரஞ்சஸாரம் ஸாரதரம்த்யஜேத்। பஜேத்ஸாரதமம்ஶாஸ்த்ரம் ரத்நாகரயிவாம்ருதம்"॥ என்று ஸாரதமமான ஶாஸ்த்ரத்தை பஜிப்பானென்கையாலே, வக்ஷ்யமாணத்தின் ஸாரதமத்வத்தை தர்சிப்பிக்கிறார். (வேதஸாரோபநிஷத்) என்றது, பூர்வபாகத்தில் ஸாரமானவேதாந்தமென்றபடி, அயதார்த்த ப்ரதிபாதகமாகையாலே, அஸாரமான பாஹ்யஶாஸ்த்ரங்கள்போலன்றிக்கே, யதாபூதவாதியா யிருந்ததேயாகிலும், ஶ்யேநவிதி முதலாக ஜ்யோதிஷ்டோமாதிகளீராக ஐஹிகபாரலௌகிகபுருஷார்த்த ஸாதநங்களை ப்ரதிபாதிக்கிறபூர்வபாகம், க்ஷுத்ரபுருஷார்த்த தத்ஸாதந ப்ரதிபாதகமாகையாலும், ஶாஸ்த்ராஸ்திக்யம், ப்ரக்ருத்யாத்மவிவேகம், இவைத்தைப்பிறப்பிக்கும்மாத்ரமாகையாலுமல்பஸாரமாயிருக்கும். இங்கனன்றிக்கே, அநந்தஸ்த்திரபலப்ரத ப்ரம்ஹஸ்வரூபாதிகளையும், தத்ப்ராப்தி ஸாதநத்தையும், ப்ரதிபாதிக்கையாலே, உபநிஷத்பாகம் ஸாரமாயிருக்கும், அதுதன்னிலும், அவ்வுபநிஷத்துக்களில் சொல்லு[illegible]ம, பரம்ப்ரம்ஹ பரந்தத்வ பரஞ்ஜ்யோதி பரமாத்மாதிஸாமாந்யவாசி[illegible]தங்களாலும், விஶேஷவாசியான ஶம்புசிவாதிஶப்தங்களாலும், [illegible]ாதிக்கப்படுகிறான்,

---

(க) திருமாலை-ங. (உ) [illegible] (ங) [illegible]ா)

(ரு) தி-மொ. க. க. ரு. (சு) ஸ்ரீபக - தை. சு. [illegible]மாலை-எ.

(அ) வைகுண்டதீக்ஷிதீயே.

நாராயணனே, என்று, பகவத்பரதத்வத்தை ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபா
திக்கிறவசுஸ்யபரமான நாராயணுநுவாகம்ஸாரதரமாயிருக்கும், அதுதன்
னிலும்காட்டில், ஸர்வஸ்மாத்பரத்வத்துக்கு ப்ரதான லிங்கமான வவ
னுடைய ஸர்வாந்தராத்மத்வத்தை ப்ரகாசிப்பிப்பதாய், அவ்யாபகமான
ஸகலபகவன் மந்த்ரங்களிலும் ஶ்ரேஷ்டமாயிருக்கிற வ்யாபக மந்த்ரத்
ரயத்தையும்ப்ரதிபாதிக்கிறவிஷ்ணுகாயத்ரி, ஸாரதமமாயிருக்கும். இப்
படியிருந்துள்ளகாயத்ரியிலே, வ்யாப்யாத்யாஹாராதிஸாபேக்ஷமான வ்
யாபகாந்தரங்களில் வ்யாவ்ருத்த மாகையாலே(க)“నారాయణాయవిద్మహే”
“நாராயணாயவித்மஹே” என்ராதரம்தோற்ற, ப்ரதமத்திலே ஓதப்படு
கிற, (உ) “ஓத்தின்பொருள்முடிவுமித்தனையேமாதவன்பேர்சொல்லுவ
தேஓத்தின்சுருக்கு”என்கிறபடியே,வேதாந்த தாத்பர்யமாய் (ங)“ఋచో
యజూంషి సామాని తథైవాథర్వణానిచ। సర్వమష్టాక్షరాన్తస్థం” “ருசோயஜூம்ஷி
ஸாமாநிததைவாதர்வணாநிச।ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்த்தம்”என்கிறப
டியே, ஸகலவேதஸங்க்ரஹமுமான திருமந்த்ரத்தை (தெய்வவண்டாய்)
இத்யாதி,வேதஸாரமாய்,(ச)“தேனும்பாலு மமுதுமாய திருமால் திருநா
மம்”என்றும்படி,இருக்கிறவித்தை,வேதத்தினின்றுமவன்க்ரஹிக்கிறபோ
து,க்ரஹிக்கிறப்ரகாரத்தை த்ருப்ரகாரமாக வர்ணித்தருளிச்செய்கிறார்.
அதாவது:—(ரு)“தூவியம்புள்ளுடைத்தெய்வவண்டாகையாலே” ஷட்
பதமானது,ஶாகாஸஞ்சாரம்பண்ணி,மதுவை யெடுக்குமாப்போலே, ஸா
ரபூதஸமஸ்தார்த்த போதகதயா, ஸர்வரஸமான தேன்போலே இருக்
கிறவித்தை, வேதஶாகைகளிலே, தேனைக்ரஹிக்குமாப்போலே, க்ர
ஹித்தபடியும் (சு) “அந்நமயான்றங்கறுமறைபயந்தான்” என்கிறபடி
யே, ஹம்ஸரூபியானவனுகையாலே, அன்னமானது, நீரிலேகலந்துக்கிட
க்கிறபாலை விவேகித்தெடுக்குமாப்போலே, “நானும் சொன்னேன் நமரு
முறைமின்” என்றும்படி, இருக்கையாலே, ஸர்வாதிகாரமானபால்
போலேயிருக்கிறவித்தை, ஓதம்போல் கிளர்வேதநீரிலே, பாலைக்ரஹிக்
குமாப்போலே க்ரஹித்தபடியும் (எ) “அமுதம்கொண்டபெருமான்”
என்கிறபடியே, அஸுரபயபீதராய் அமரத்வஸாபேக்ஷரான தேவர்களு
டைய ரக்ஷணார்த்தமாக, க்ஷீராப்தியை மதித்தம்ருதத்தை வாங்கினுப்
போலே, ஸம்ஸாரபீதராய் அம்ருதத்வாபிகாமரானவர்களுடைய ரக்ஷ
ணார்த்தமாக விலக்ஷணபோக்யமாய், விநாஶஹாரமு மாகையாலே, அம்
ருதம்போலே யிருக்கிறவித்தை, நால்வேதக்கடலிலே அம்ருதத்தை க்ர
ஹிக்குமாப்போலே க்ரஹித்தபடியையும்ஶொல்லுகிறது. ஆக இப்படி
வேதஸாரமான வித்தை ஸ்வயமேவயெடுத்து, (அ) “அமரர்பெருவிசு
ம்பருளும் பேரருளாளன் வதரியாச்சிராமத்துள்ளானே” என்கிறபடி

(க) புருஷஸூக்தம். (உ) தி-அ. உ. ௩௧. (ங) ஸ்ரீபாஞ்சராத்ரம்.(ச) தி-மோ.
சு. ௧0. கூ. (ரு) தி-வா. கூ. ௬. ச. (சு) தி-மொ. ரு. எ. ௩. (எ) தி-மொ. சு. ௧0. ௩.
(அ) தி-மொ. க. ச. ச.

மூ—(கஎ) முநிவரையிடுக்கியும் முந்நீர்வண்ணனையும் வெளியிட்டஶாஸ்த்ர தாத்பர்யங்களுக்கு * விசிஷ்டநிஷ்க்ருஷ்ட வேஷங்கள் விஷயம்.

(அ) வ்யாஸாதிகளைக்கொண்டும் ஸமுத்ரவர்ணனை தான் ஸ்வேந ரூபேணவும் ப்ரகாசிப்பித்த ஶாஸ்த்ரத்துக்கும் அதின் தாத்பர்யமான திருமந்த்ரத்துக்கும் தேஹவிசிஷ்டாத்மவேஷமும் தேஹாதிரிக்தாத்மவேஷமும் லக்ஷ்யம்.

யே, நித்யஸூரிகளுக்கு போக்யமாய், பரமாகாஶஶப்தவாச்யமான பரமபதத்தைக்கொடுப்பதானநிர்ஹேதுகக்ருபையாலே (க) "நரநாரணனாயுலகத்தறநூல் சிங்காமைவிரித்தவன்" என்கிறபடியே, ஸ்ரீபதரிகாஶ்ரமத்திலேநரநாராயணரூபேணவவதரித்து, தானேசிஷ்யனுமாயாசார்யனுமாய்நின்றுஸ்வரூபஶாஸ்த்ரம்ஸங்குசிதமாகாமல் உபதேஶாநுஷ்டாநங்களாலேவிஸ்த்ருதமாம்படிபண்ணித்த; அறக்கற்கை யறிதென்றிறே, யென்றத்தோடே யந்வயிக்கிறது. *

வ்யா. (கஎ) ஆகஸர்வேஶ்வரன் தன் க்ருபையாலே, ஸம்ஸாரி சேதநரையுஜ்ஜீவிப்பிக்கைக்காக ஶாஸ்த்ரத்தையும், ஶாஸ்த்ரதாத்பர்யமான திருமந்த்ரத்தையும் வெளியிட்டானென்று நின்றதுகீழ்; இவையிரண்டையும் வெளியிட்ட ப்ரகாரமென்? அவைத்துக்கு விஷயமெது? என்றுமாகாண்கைக்ஷயிலேதத்ப்ரகாரங்களையும்தோற்றுவித்துக்கொண்டு விஷயங்களையும் சொல்லுகிறது, (முநிவரையித்யாதி) அதாவது:— (உ) "இருள்கள் கடியும் முநிவர்" என்கிற ஸ்மர்தாக்களான வ்யாஸாதிருஷிகளை (ங) "కృష్ణద్వైపాయనంవ్యాసం విద్ధినారాయణంప్రభుం । కోహ్యన్యః పుణ్డరీకాక్షాన్మహాభారతకృద్భవేత్ ॥" கிருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்திநாராயணுத்பரம்| கோஹ்யந்ய: புண்டரீகாக்ஷாந் மஹாபாரதக்ருத்பவேத்" என்கிறபடியே, தானாகச்சொல்லலாம் படியந்தர்யாமியாய், அடுத்துப்பிடித்துநின்று, தந்மூகேந வெளியிட்ட ஶாஸ்த்ரத்துக்கு சேதநருடைய தேஹவிசிஷ்டவேஷம்விஷயம் (ச) "வதரியாச்சிரமத்துள்ளானை, கருங்கடல்முன் னீர்வண்ணனை" என்கிறபடியே, ஸ்ரீபதரிகாஶ்ரமத்திலே ஸ்வேநரூபேண நின்று வெளியிட்ட ஶாஸ்த்ரதாத்பர்யமான திருமந்த்ரத்துக்கு சேதநருடைய நிஷ்க்ருஷ்டவேஷம் விஷயமென்கை. இத்தால் ஶாஸ்த்ரத்துக்கு தேஹத்திலே நோக்கு, தாத்பரியத்துக்கு ஸ்வரூபத்திலே நோக்கென்றதாய்த்து. *

---

* விசிஷ்ட நிஷ்க்ருஷ்ட வேஷங்களாவன, தேஹத்தோடுசேர்ந்த ஆத்மாவின் ஸ்வரூபத்தைச் சொல்லுமது விசிஷ்டவேஷம். நிஷ்க்ருஷ்டவேஷமாவது; தேஹமற்ற ஶுத்தாத்மாவின் ஸ்வரூபத்தைச் சொல்லுமதென்கை.

(க) தி-மொ. க0. ரு. க. (உ) தி-வா. க0. எ. எ. (ங) ஸ்ரீபார-ம். (ச) பெ-மொ. க. ச. க0.

மூ—(கஅ) தோல்புரையேபோமதுக்கு பழுதிலாயோக்யதைவேணும்மனமுடையீரென்கிற ஶ்ரத்தையே அமைந்த மர்மஸ்பர்சிக்கு நானும் நமருமென்றும்படி ஸர்வருமதிகாரிகள்.

மூ—(கசு) ஶாஸ்திரிகள் தெப்பக்கையரைப்போலே

(அ) தேஹமாத்ரத்திலேநோக்கானஶாஸ்த்ரத்துக்கு ஜந்மாசாராதிகளில் குற்றமற்றயோக்யதைவேணும் நண்ணுகையிலபேக்ஷாமாத்ரமே போரும்படியானதாய் ஸ்வரூப ஸ்பர்சியான தாத்பர்யத்துக்கு நானும்நம்முடையவர்களுமென்றும்படியாக ஸகலருமதிகாரிகள்.

(அ) ஶாஸ்த்ரநிஷ்டரான உபாஸகர் தெப்பமொருகையில்கொண்டொருகையால் துழாவுவாரைப்போலே

வ்யா. (கஅ) ஏவம்பூதமானவிவையிரண்டும் ஸர்வாதிகாரமோ? அதிக்ருதாதிகாரமோ? யென்னச்சொல்லுகிறது. ('தோல்புரையித்யாதி') அதாவது:—விசிஷ்ட விஷயமாகையாலே, ஆந்தரமானஸ்வரூபத்திலூற்றமின்றிக்கே, மேலெழ தேகத்திலே நோக்காய்நடக்கிற ஶாஸ்த்ரத்துக்கு (க) "பழுதிலாவொழுகலாற்று" என்கிறபடியே, கெடுகப்போகிற வம்ஶப்ரவாகத்தி லுத்பத்தியிலேயாதல், ஆசாரத்திலேயாதல், ஒருபழுதற்றிருக்கையாகிறயோக்யதைவேணும் (உ) "கண்ணன் கழலிணைநண்ணும்மனமுடையீர்" என்றும் (௩) "శ్రద్ధైవ కారణం పుంసా మష్టాక్షరపరిగ్రహే" "ஶ்ரத்தைவகாரணம்பும்ஸாமஷ்டாக்ஷரபரிக்ரஹே" என்றும் சொல்லுகிறபடியே, சிரத்தாமாத்ரமே யமைந்த ஸ்வரூபஸ்பர்சியான தாத்பர்யத்துக்கு (ச) "நானுஞ்சொன்னேன் நமருமுரைமின்நமோநாராயணமே" என்றுஞ் சொல்லும்படி, யோக்யாயோக்ய விபாகமற ஸர்வருமதிகாரிகளென்கை. இத்தால்ஶாஸ்த்ரதாத்பர்யங்களின், அதிக்ருதாதிகாரத்வ ஸர்வாதிகாரத்வங்களை, தத்தேது ஸஹிதமாகச் சொல்லித்தாய்த்து. *

வ்யா. (கசு) இனிமேலிந்தஶாஸ்த்ரநிஷ்டராயும்தாத்பர்ய நிஷ்டராயுமிருக்குமுமுக்ஷுக்கள்படிகளைச்சொல்லுகிறது (ஶாஸ்த்ரிகளித்யாதி) அதாவது (ரு) "ఆత్మా వా అరే ద్రష్టవ్యః శ్రోతవ్యో మన్తవ్యో నిదిధ్యాసితవ్యః, (சு) ఆత్మేత్యేవోపాసీత, (எ) ఓమిత్యేవ ధ్యానం ధ్యాయాత" "ஆத்மா வா

(க) திருமாலை-சஉ. (உ) தி-வா. க0. ரு. க. (௩)
(ச) தி-மொ. சு. க0. சு. (ரு) ப்ரு-உ. சு. ரு. ரு. (சு) ப்ரு. உ. ௩. ச. சு.
(எ) மு. உ. உ. ரு.

மூ. இரண்டையுமிடுக்கி பிறவிக்கடலேநீந்த ஸாரஜ்ஞர் விட்டத்தி லிருப்பாரைப்போலே இருகையும்விட்டு கரைகுறுகுங்கால மென்னுவர்கள்.

அ. ஸ்வயத்நமும்பகவத்க்ருபையுமாகிறவிரண்டையுமவலம்பித்து ஸம்ஸாரஸாகரத்தைக்கடக்கத்தேட திருமந்த்ரநிஷ்டரான ப்ரபன்னர் ஓடத்தின்விட்டத்திலே நிர்ப்பரராயிருப்பாரைப்போலே ஸ்வயத்நதத்ஸாத்யபகவத்க்ருபைகளைவிட்டு பகவத்ப்ராப்தியாகிறகரையைக்கிட்டுங்காலமெண்ணு நிற்பர்கள்.

ரேத்ரஷ்டவ்யஶ்ரோதவ்யோமந்தவ்யோநிதித்யாஸிதவ்ய:, ஆத்மேத்யேவோபாஸீத,ஓமித்யாத்மாநம்த்யாயீத" என்றும், ஸம்ஸாரநிவ்ருத்தி பூர்வகபகவத்ப்ராப்திஸாதநமாகபகவதுபாஸநத்தைவிதித்து "அம்ருதஸ்யைஷ ஸேது:" "அம்ருதஸ்யைஷஸேது:, (க) "ఫలమత ఉపపత్తే:" "பலமத உபபத்தே:" என்று பகவானே யதுக்கு பலப்ரதனுகவும் சொல்லும் ஶாஸ்த்ரத்திலே நிஷ்டரானவர்கள், ஆறு நீஞ்ஜுவார் தெப்பத்தை யொருகையிலேயிடுக்கி தாங்களுமொருகைதுழாவுமாப்போலே, ஸ்வயத்நமும் தத்ஸாத்ய பகவத் க்ருபையுமாகிற வுபயத்தையு மவலம்பித்துக்கொண்டு (உ) "பிறவிக்கடல் நீந்துவார்க்கே" என்கிறபடியே, ஸம்ஸார ஸமுத்ரத்தைக் கடக்கத் தேட, ஸ்வயத்ந நிஷேத பூர்வகமாக ஆத்மாவின் பகவதேகோபாயத்வத்தை ப்ரதிபாதிக்கிற ஶாஸ்த்ரஸாரமான திருமந்த்ரஜ்ஞரானவர்கள், ஓடமேறினவர்கள், தீரகமநார்த்தமான ஸ்வயத்நத்தையும் தெப்பத்தையும் கைவிட்டு, கரைகுறுகுவதெப்போதென்று பார்த்துக்கொண்டு, அதின்விட்டத்திலே யிருக்குமாப்போலே † "విష్ణుపోతం" "விஷ்ணுபோதம்" என்கிறபடியே, அக்கரையு மிக்கரையுமூடுருவநின்று ஸம்ஸாரஸமுத்ரத்தைக்கடத்தும் வைகுந்தனென்கிற தோணியை, ஸம்ஸார நிஸ்தாரகமாகப்பற்றி, தத்ஜ்ஞாந ஶக்த்யாத்யநுஸந்தாநத்தாலும், ஸ்வபாரதந்த்ர்யாநுஸந்தாநத்தாலும், நிர்பரராகையாலே, இரண்டு கையும் விடுமாப்போலே ஸ்வயத்நரூபோபாஸநாதியையும் தத்ஸாத்யபகவத்க்ருபையையு மவலம்பிக்கையைவிட்டு, கேவலபகவத்க்ருபையேயுத்தாரகமென்றத்யவஸித்து (ங) "கூவிக்கொள்ளுங்காலமின்னும்குறுகாதோ" என்றும் (ச) "ஆக்கைவிடும்பொழுதெண்ணே" என்றுஞ் சொல்லுகிறபடியே, பகவத்ப்ராப்தியாகிற கரையைக்குறுகைக்கீடான காலசிந்தனைப்பண்ணு நிற்பர்களென்கை. இத்தால், ஶாஸ்த்ரஜ்ஞருடையவும், ஸாரஜ்ஞருடையவும், ப்ரதிபத்தி க்ரமஞ் சொல்லித்தாய்த்து.

(க) உத்தரமீமாஸையில், ங. உ. அ. (உ) தி-வா. உ. அ. க. (ங) தி-வா. ச. கூ. க. (ச) தி-வா. க. உ. கூ. † வைஷ்ணவதர்மம். அ. க.

ஸூ--(உ0) இவை ஸ்வரூபத்தை உணர்ந்துணர்ந்துணர்வும் உணர்வை ப்பெறவூர மிகவுணர்வு முண்டாம்.

(அ) ஸ்வயத்நதந்நிவ்ர்த்திகள் ஆத்மஸ்வரூபத்தை ஶ்ரவணமநநங்களால் தேஹாதிவிலக்ஷணத்வ ஜ்ஞாத்ருத்வ போக்த்ருத்வ விசிஷ்டமாகஸாக்ஷாத்கரிக்கவும் பகவத்வ்யதிரிக்தமானஸர்வமும்ஹேயமென்றும்படிஊன்றிநடத்த ஆத்மஸ்வரூபயாதாத்ம்ய பாரதந்த்ர்ய போக்யதையையறிகவும் உத்பந்நமாம்.

வ்யா. (உ0) இவர்களுக்கிவ் வாகாரங்களுண்டாகைக்கடி இன்னதென்கிறது. (இவையித்யாதி) அதாவது:—ஶாஸ்திரிகளானவர்களுக்கு, (க) "உணர்ந்துணர்ந்திழிந்தகன்றுயர்ந்துருவியந்த விந்நிலைமை யுணர்ந்துணர்ந்துணரிலும்" என்கிறபடியே, ஆத்ம ஸ்வரூபத்தை, ஜ்ஞப்திமாத்ரமன்றிக்கே, நித்யஜ்ஞாநகுணகமாய், அந்த ஜ்ஞாநத்தாலே, எங்குமொக்கவ்யாபித்து, தேஹத்தில்காட்டில் வேறுபட்டிருக்குமதாய், அநதஜ்ஞாத்ருத்வபலாயாதகர்த்ருத்வ போக்த்ருத்வஸஹிதமாய், பகவச்சேஷமாயிருக்குமென்று ஶ்ரவண மநநங்களாலே ஸாக்ஷாத்கரிக்கவே, ஸ்வயத்நத்தாலே ஸம்ஸாரநிஸ்தரணம் பண்ணத்தேடுகையாகிறவிதுண்டாம். ஸாரஜ்ஞரானவர்களுக்கு, ஆத்மஸ்வரூபவைலக்ஷயத்தை, தர்சிப்பிக்கைக்குடலாக, (உ) "உணர்வு முயிருமுடம்பும்மற்றுலப்பிலனவும் பழுதேயாமுணர்வைப்பெறவூர்ந்து" என்கிறபடியே, வைஷயிகஜ்ஞாநமும், ப்ராணனும் ஶரீரமும், மற்றுமபரிச்சேத்யமான ப்ரக்ருதிவிகாரங்களும், ப்ருக்ருதியும்ஹேயமென்று மறிவைப்பெறும்படி, நிர்ஹேதுகமாக வீஶ்வரன்நடத்த, (௩) "மெய்ம்மையை மிக உணர்ந்து" என்கிறபடியே, ஆத்ம ஸ்வரூபத்தை, தெஹாதிகளில் விலக்ஷணமாய், ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமாய், ஜ்ஞாத்ருத்வாதிகுணகமாய், ததீயஶேஷத்வபர்யந்த தச்சேஷத்வயுக்தமாய், தத்காஷ்டையான பாரதந்த்ரைகபோக்யதைகவேஷமாயிருக்குமென்றுணரவே, ஸ்வபரத்தையவன்மேலே பொகட்டு ஸ்வயத்ந ரஹிதராயிருக்கை யாகிறவிதுண்டாமென்க. இத்தாலிவர்களுடைய ஸ்வரூபஜ்ஞாந தாரதம்யமே கீழ்ச்சொன்னவாகாரங்கள், இவர்களுக்குண்டாகைக்குஹேதுவென்றதாய்த்து. ஆக முனிவரையிடுக்கியும் என்று தொடங்கி, இவ்வளவாக ஶாஸ்த்ர தாத்பர்யங்களின் விஷயபேதமும், அவ்வதிகாரிகள் ப்ரதிபத்திபேதமும், அதுக்கடியானஜ்ஞாந தாரதம்யமும், சொல்லப்பட்டது. *

(க) தி-வா. க. ௩. ௬. (உ) தி-வா. அ. அ. ௩. (௩) திருமாலை - ௩அ.

மூ—(உக) ஶேஷத்வ போக்த்ர்த்வங்கள்போலன்றே பாரதந்த்ர்யபோக்யதைகள்.

(அ) ப்ரணவத்தி லகார மகாரங்களால் சொல்லப்படுகிற ஶேஷத்வ போக்த்ருத்வங்கள்போலன்றே நம:பத ஆயபத ப்ரதிபாதிதங்களான பாரதந்த்ர்யபோக்யதைகள்.

வ்யா. (உக) ஸ்வரூபஜ்ஞாநமென்றும், ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநமென்றும், ஆத்மவிஷயஜ்ஞாநத்திலே தாரதம்யமுண்டிறே. அதில் (க) "[illegible]" "பதிம்விஶ்வஸ்ய" (உ) "[illegible]" "யஸ்யாஸ்மி" என்றும், (ஙு) "[illegible]" "நஹிவிஜ்ஞாதுர் விஜ்ஞாதெர்விபரிலோபோ வித்யதே" (ச) "[illegible]" "ஜாநாத்யேவாயம்புருஷ:" என்றும், ஆத்மாவுக்கு பகவச்சேஷத்வத்தையும், ஜ்ஞாத்ருத்வத்தையும் ஶொல்லி, அந்த ஜ்ஞாத்ருத்வ காரியமான, போக்த்ருவத்ப்ரயோஜநமாக, (ரு) "[illegible]" "ஶோஶ்நுதே ஸர்வாந்கா மாந்ஸஹப்ரும்ஹணா விபஶ்சிதா" என்று பகவதநுபவத்தையும் ஶொல்லுகிற ஶாஸ்த்ரமுகத்தாலே, ஸ்வரூபத்தையறியுமளவில், பகவச்சேஷத்வமும், பகவதநுபவ போக்த்ருத்வமிறே, ப்ரகாஶிப்பது. அந்த ஶாஸ்த்ர தாத்பர்யமான திருமந்த்ரத்தி லுட்புக்காலிறே, பாரதந்த்ர்யபோக்யதாரூபமான ஸ்வரூப யாதாத்ம்யம்ப்ரகாஶிப்பது. இதுவே, ஸ்வரூப யாதாத்ம்யமென்றுமிடத்தை யறிவிக்கிறார் மேல் (ஶேஷத்வ) இத்தியாதியால், ஶேஷத்வமாவது:— இஷ்ட விநியோகார்ஹ தாமாத்ரம், பாரதந்த்ர்யமாவது:— ஶேஷிக்கிஷ்டமான்படியே விநியோகப்படுகை. கட்டிப்பொன்போலே ஶேஷத்வம், பணிப்பொன்போலே பாரதந்த்ர்யம், என்னக்கடவதிறே. ஆகையால், ஶேஷவஸ்துவை ஶேஷிக்கிஷ்டமானபடியே விநியோகப்படுத்துமதுபாரதந்த்ர்யம். போக்த்ருத்வமாவது:— ஜ்ஞாத்ருத்வபலத்தாலே, போகதஶையிலே விளைகிற ரஸங்களுக்குத் தான் போக்தாவாகை. போக்யதையாவது:—பதார்த்தகதமான ரஸவர்ணாதிகள், போக்தாவுக்கே போக்யமாயிருக்குமாப்போலே, ஆத்மகதமான ஜ்ஞாநாதிகளு மீஶ்வரனுக்கே போக்யமாயிருக்கை. ஆகையால், இஷ்ட விநியோகார்ஹதமாத்ரமான ஶேஷத்வம்போலன்றே, இவ்வஸ்துவைஶேஷிக்கிஷ்டமானபடி விநியோகப்படுத்திக்குடுக்கிறபாரதந்த்ர்யம். போகத்தில் ஸ்வார்த்ததாபுத்தி ஹேதுவான போக்த்ருவ்ம்போலன்றே, அந்தபோக்த்ருத்வத்வதை ஶேஷியுடைய ப்ரியோபயோகியாக்கிக் குடுக்கிற்போக்யதை யென்றபடி. *

(க) புருஷஸூக்தம். (உ) அச்சித்ரம். (ஙு) ப்ரு - உ. சு. ஙு. உக. (ச) ப்ரு-உ. (ரு) தை - உ. ஆ - உ. க. க.

ஸூ.—(உஉ) ஜ்ஞாநசதுர்த்திகளின் மேலேயிறே ஆநந்த ஷஷ்டிகளுக்குதயம்.

(அ) போக்த்ருத்வப்ரகாஶகமாயிருக்கிறஜ்ஞாநத்தின் மேலேயும் ஶேஷத்வவாசிலுப்தசதுர்த்தியின்மேலேயுமிறே க்ரமமாக போக்யதாப்ரகாஶகவ்யக்தசதுர்த்தியிலாநந்தத்துக்கும் பாரதந்த்ர்யப்ரகாஶகமானநமஸ்ஸுக்கும் உத்பத்தி.

வ்யா. (உஉ) இவ்வர்த்தத்தை, ஸ்வரூபயாதாத்ம்ய ப்ரகாஶகமான திருமந்த்ரத்திலே தர்சிப்பிக்கிறார். (ஜ்ஞாநேத்யாதியாலே) அதாவது:—ஆத்மவாசியானமகாரத்தில், "மந்ஜ்ஞாநே" "மந-ஜ்ஞாநே" என்கிறதாதுவிலே யுதிதமாய்போக்ருத்வப்ரகாஶகமாயிருக்கிறஜ்ஞாநத்தின்மேலேயிறே, அந்த மகாரவிவரணரூபமாய் போக்யதாப்ரகாஶகமான சதுர்த்தியிலாநந்துக்குதயம். ப்ரதமாக்ஷரத்தில் ஶேஷத்வ வாசியான சதுர்த்தியின்மேலேயிறே பாரதந்த்ர்யப்ரகாஶகமான நமஸ்ஸுக்குதயமென்கை. இத்தாலாத்மஸ்வரூபத்தினுடைய ஶேஷத்வ போக்த்ருத்வங்களுதித்திருக்கச்செய்தே அதின்மேலேஸ்வரூபயாதாத்ம்யவேஷமாகவுதித்தவையாகையாலே, ஶேஷத்வபோக்த்ருத்வங்களில், பாரதந்த்ரயபோக்யதைகளுக்குநெடுவாசியுண்டென்றதாய்த்து. இந்தயோஜனைக்கு, அல்ப மறுபபத்தியுண்டு, ஷஷ்டியென்கிறவிது, முக்யவ்ருத்தியாலே யாதல், கௌணவ்ருத்தியாலேயாதல், நமஸ்ஸைக்காட்டாமையாலே; ஷஷ்ட்யந்த பதமென்கிறத்தை, ஷஷ்டியென்று சொல்லித்தகாதோவென்றில், அது சேராது, நமஸ்ஸு இரண்டுபதமாகையாலும், அதிலுத்தரபதமே ஷஷ்ட்யந்தபதமாகையாலும்; ஆனல் செய்யவெடுப்பதென்னென்னில்? இன்னமுமொரு யோஜனை சொல்லப்படுகிறது. அதாவது:—த்ருதீயாக்ஷரத்தில் "மந-ஜ்ஞாநே" என்கிறதாதுவிலே யுதிதமாய், போக்த்ருத்வ ப்ரகாஶகமான ஜ்ஞாநத்தின்மேலேயிறெ, மகாரவிவரணமானசதுர்த்தியில் சொல்லப்படுகிற போகத்திலே, * காகாக்ஷிந்யாயத்தாலே, நமஶ்ஶப்தத்தால்கழிக்கப்படுகிறஸ்வப்ரயோஜநத்வப்ரயுக்தமானவாநந்தத்துக்குதயம், ப்ரதமாக்ஷரத்தில், ஶேஷத்வவாசியானசதுர்த்தியின்மேலேயிறே, நஞாலேவிஶேஷிக்கப்படுகிறஸ்வரக்ஷணேஸ்வப்ரவ்ருத்திஹேதுபூதஸ்வாதந்த்ர்யப்ரகாசிகையானஷஷ்டிக்குதயமென்கை. இத்தால் ஶேஷத்வ ப்ரகாசகமான சதுர்த்தியின்மேலே, ஸ்வரக்ஷணஹேதுபூதஸ்வாதந்த்ர்யவாசியானஷஷ்டியுதிக்கையாலும், போக்த்ருத்வப்ரகாசகமானஜ்ஞாநத்தின்மேலே, போகஸ்வார்த்ததாபுத்தி மூலமானவாநந்தமுதிக்கையாலும், ஶேஷத்வபோக்த்ருத்வங்கள் ஸ்வரூபவிரோத்யுதயஸஹங்களாயிருக்கும். நமஸ்ஸிலேபாரதந்த்ர்யமுதித்தபின்பு, ஸ்வரக்ஷணே ஸ்வயத்நம் நிவ்ருத்தமாகையாலும், நமஶ்ஶப்தாநுக்ருஹீதையானசரம சதுர்த்தியிலே ஈஶ்வரனுக்கு போக்யமாயி

* காகாக்ஷிந்யாயமாவது:— காக்கைக்கிக்கண்ணென்றாகவிருக்கச்செய்தேயும், அதின்விழி, மேலும் கீழும் புறண்டு, இருபுறத்திலுமிருக்குமதைக்கிரஹிக்குமது.

மூ—(௨௩) முளைத் தெழுந்த ஸூர்ய துல்ய யாதாத்ம்ய சரமம் விதியில் காணும் ப்ரதமமத்யதஶைகளை பகல்விளக்கும் மின்மினியு மாக்கும்.

(அ) உதித்து கிளம்பின ஆதித்யனுக்கு ஸமமான ஸ்வரூபத்தினுடைய யதார்த்தாவஸ்திதிகளான பாரதந்த்ர்ய போக்யதைகளாகிற சரமதஶைகள் ஶாஸ்த்ரவிதி ப்ரகாரேண காணப்படும் ப்ரதமமத்யதஶைகளான ஶேஷத்வபோக்த்ருத்வதங்களை . பகல்பட்ட விளக்காகவும் கத்யோதமாகவும் பண்ணும்.

ருக்கையே, ஆத்மாவுக்கு வேஷமென்றும்தோற்றினபின்பு, ஸ்வப்ரயோஜநம்நிவ்ருத்தமாகையாலும்,பாரதந்த்ர்யபோக்யதைகள், ஸ்வரூபவிரோத்யுதயஸஹங்களன்று. ஆகையால், ஸ்வரூபவிரோத்யுதயஸஹங்களான ஶேஷத்வபோக்த்ருத்வங்கள்போலன்றே, அத்தைஸஹியாதபடியிருக்கும் பாரதந்த்ர்யபோக்யதைகளென்றதாய்த்து. *

(அ) ம்லேச்சனும் - ம்லேச்சஜாதீயனுயுள்ளவனும், பக்தனுனல் - பக்தியுடையனுனல், சதுர்வேதிகள் - (உத்க்ருஷ்டவர்ணரான) சதுர்வேதிகள், அநுவர்திக்க - (அபிஜாத்யபிமான தூஷிதஸ்வஸ்வரூபஸித்யர்த்தமாக) அநுஸரணம்பண்ண, அறிவுகொடுத்து - (அவர்களுக்குஜ்ஞாநாபேக்ஷையுண்டாகில்) ஜ்ஞாநப்ரதாநம்பண்ணி, குலதெய்வத்தோடொக்க - குலதெய்வமாகச்சொல்லப்படுகிற ஸர்வேச்வரனேடு ஸத்ருசமாக, பூஜைகொண்டு - ஆராதித்து, பாவந- (அபிஜாத்யஹங்கார தூஷிதரும்) பரிசுத்தராகும்படியான, தீர்த்தப்ரஸாதனும் - ஸ்ரீபாததீர்த்தமும் தளிகைப்ரஸாதமுமுடையவனும், என்கிற - என்னும்படியான,

என்றுஞ்சொல்லுகிறபடியே, உத்தரிக்கைக்காக, (க) "கேழலாய்க்கீழ்புக்கு" என்கிறபடியே, பாதாளத்திலேதாழவிழிந்தவராஹரூபியைப்போலவும், குலந்தாங்கு மஹா மஹா மபிமாநத்தாலே, ஸம்ஸாரத்திலேநிமக்நரானவர்களை அன்னிலையில்நின்றும்பேதித்து, (உ) "அபிமானதுங்கன்" என்னுமுயற்தியையுடையராக்குகைக்காகஅஹங்காரஹேதுவானவர்ணங்கள் அநர்த்தகரமென்னுதோற்றும்படி, தத்ரஹிதமான சதுர்த்தவர்ணத்திலே தாழவிழிந்தாரென்கை. இத்தால், நாமுத்க்ருஷ்டவர்ணரென்னுமபிமானத்தாலே ஸம்ஸாரத்திலேயமுந்துகிறவர்கள் அதுஹேயமென்றறிந்து அவ்வபிமாநமற்று கரையேறுகைக்காக அவர்கள் உத்க்ருஷ்டமாகநினைத்திருக்கும் வர்ணங்களைஹேயமென்றுவிட்டு, நிக்ருஷ்டவர்ணத்திலே தாழவிழிந்தாறென்றதாயிற்று. ஆக "விட்டின்ப" மென்றுதுடங்கி இவ்வளவும்மந்தமதிகளுடைய ஶங்காநிராகரணார்த்தமாக ஆழ்வாருடைய உத்பத்திநிரூபணத்தில்வரும் ப்ரத்யவாயமும், வ்யாஸாதிகளைப்பற்ற இவரவதாரவைலக்ஷண்யமும் அவதாரம்பரார்த்தமென்னுமிடமும் மஹாப்ரபாவரானவிவர்தாழவவதரிக்கைக்கு நிதாநமுமருளிச்செய்தாராய்நின்றார். *

வ்யா. (அரு) இன்னமுமாழ்வாருடைய வைபவத்துக்குறுப்பாக ஸாமாந்யேன பாகவத்வைபவத்தை பலவுதாஹரணங்களாலும் ப்ரகாசிப்பியாநின்றுகொண்டு இவ்வாகாரங்களறிந்தாற்கிறே ஜந்மத்திலுத்க்ர்ஷாபகர்ஷம் தெரி[illegible]ன்கிறுர் மேலொரு சூர்ணையாலே, (ம்லேச்சனும் பக்தனுனல் [illegible] ర్వాత్సల్యం పూజాయాఞ్చానుమోదనమ్ । స్వయ మభ్యర్చనఞ్చ [illegible] మత్కథాశ్రవణే భక్తిః స్వరనేత్రాఙ్గవిక్రియా । మ

(க) தி - [illegible] கக. (௩)

ரூ. திருமுகப்படியும் விஶ்வாமித்ர விஷ்ணுசித்த துளஸீப்ருத்யரோடே யுள்கலந்து தொழுகுலமானவன் நிலையார்பாடலாலே ப்ராம்ஹணவேள்விக்குறைமுடித்தமையும் கீழ்மகன்றலைமகனுக்கு ஸமஸகாவாய் தம்பிக்குமுன்பிறந்து வேலும்வில்லுங்கொண்டு பின்பிறந்தாரைச்சோதித்து தமயனுக்கிளையோன் ஸத்பாவம்

திருமுகப்படியும் - பகவதுக்தியையும் அத்தோடுஸத்ருஶமானவாழ்வார் பாசுரப்படியையும், விஶ்வாமித்ர - கௌசிகபகவானோடும், விஷ்ணுசித்த - பெரியாழ்வாரோடும், துளஸீப்ருத்யரோடே - தொண்டரடிப்பொடியாழ்வாரோடும், (ஸகோத்ரியாய்) உள்கலந்து - (அநந்யப்ரயோஜநவ்ருத்தியிலே அந்விதனாய்) உள்கலந்து, தொழுகுலமானவன், (விஶேஷ ஞராதரிக்கும்படி ஜந்மவஸித்தநைச்யரானபாகவதர், நிலையார்பாடலாலே நிலையார்பாடலான கைசிகப்பண்ணாலே, ப்ராம்ஹண - (சோமசர்மாவென்கிற) ப்ராம்ஹணனுடைய, வேழ்விக்குறை - யாகவைகல்யதோஷத்தால்வந்த ப்ரம்ஹரக்ஷஸ்த்வத்தைப்போக்கி, முடித்தமையும் - (யாகத்தைத்) தலைக்கட்டினப்ரகாரத்தையும், கீழ்மகன் - (நிஷாதகுலோத்பவராகையாலே) தண்ணியரான (ஸ்ரீகுஹப்பெருமாள்) தலைமகனுக்கு - (நித்யமுக்தபரிஷந்நிர்வாஹகனை) சக்ரவர்த்தித்திருமகனுக்கு, ஸமஸகாவாய் - ஸமானஸகாவாய், தம்பிக்கு - திருத்தம்பியான இளையபெருமாளுக்கு, முன்பிறந்து - முன்னவதரித்து, வேலும்வில்லுங்கொண்டு-பல்லமும்தநுஸ்ஸையுங்கொண்டு, பின்பிறந்தாரை - திருத்தம்பியானவிளையபெருமாளை, சோதித்து - ஆராய்ந்து, தமையனுக்கு - (தமையனை) ஸ்ரீபரதாழ்வானுக்கு, இளையோன் - (தம்பியான) இளையபெருமாளுடைய, ஸத்பாவம் - (ப்ரேமபாரதந்த்ர்யங்களைநிரூபகமான) ஸ்வபாவத்தை,

---

మానుస్మరణంనిత్యం యచ్చమాంనోపజీవతి । భక్తిరష్టవిధా హ్యేషా యస్మిన్మ్లేచ్ఛేపి వర్తతే”

“மத்பக்தஜநவாத்ஸல்யம் பூஜாயாஞ்சாநுமோதநம் । ஸ்வயமப்யர்சநஞ்சைவமதர்த்தேடம்பவர்ஜநம் । மத்கதாஶ்ரவணே பக்திஸ்வரநேத்ராங்கவிக்ரியா । மமாநுஸ்மரணம் நித்யம்யச்சமாம்நோபஜீவதி । பக்திரஷ்டவிதாஹ்யேஷாயஸ்மிந் ம்லேச்சேபிவர்த்ததே” என்கிறபடியே, ம்லேச்சஜாதியனாயுள்ளவனும், என்னுடைய பக்தஜந[...]ல் வாத்ஸல்யமும் என்னுடைய ஆர்தநத்திலுகப்[...]திக்கையும், என்பக்கல்டம்பமற்றிருக்கையும், என்க[...]ற்றில் பக்தியும், பக்திகார்யமான ஸ்வர[...], என்னை

ஶூ. சொல்லும்படி யேககுலமானமையும் தூதுமொழிந்து நடந்துவந்தவர்களுடைய ஸம்யக் ஸகுண ஸஹபோஜநமும் ஒருபிறவியிலே இருபிறவியானிருவர்க்கு தர்மஸூநுஸ்வாமிகள் அக்ரபூஜைகொடுத்தமையும் ஐவரில் நால்வரில் மூவரில் முற்பட்டவர்கள் ஸங்தேஹியாமல்

வர்ணிக்கும்படி, ஏககுலமானமையும்- (இக்ஷ்வாகுவம்ஶ்யரோடு) ஏககுலமானமையும், தூதுமொழிந்து - ஸந்தேஶம் திருவடிவாயிலே சொல்லிவிட்ட சக்கரவர்த்தித்திருமகன், நடந்து - பாண்டவர்களுக்காகத்தூதுபோன ஸ்ரீக்ருஷ்ணன், வந்தவர்களுடைய-பிராட்டியை ஸேவித்துமீண்டுவந்ததிருவடி இவர்களுடைய, ஸம்யக் ஸகுண ஸஹபோஜநமும் ஸம்யக்போஜந ஸகுணபோஜந ஸஹபோஜநங்களும், ஒரு பிறவியிலே - யது ப்ருகு வம்சங்களிலவதரித்தவிடத்திலேதானே, இருபிறவியானர் - (நந்தகுலத்திலும் திருவாளன் திருவம்சத்திலும் வளர்ந்தருளுகையாலே) இருபிறவிகளையுடையரான, இருவர்க்கு-கண்ணபிரானுக்கும் திருமழிசைப்பிரானுக்கும், தர்மஸூநுஸ்வாமிகள் - தர்மபுத்ரனும் பெரும்புலியூரடிகளும், அக்ரபூஜைகொடுத்தமையும்- அக்ரபூஜைகளைக்கொடுத்த ப்ரகாரங்களையும், ஐவரில் - பாண்டவர்களைவரிலும், நால்வரில் - தாசரதிகள் நால்வரிலும், மூவரில் - (பெரியநம்பி திருக்கோட்டியூர்நம்பி பெரியதிருமலைநம்பியிவர்கள்) மூவரிலும், முற்பட்டவர்கள் - ப்ரதாநரான தர்மபுத்ர ஸ்ரீராம பெரியநம்பிகள், ஸங்தேஹியாமல்-(திருவவதரித்தஜாதியைக்கண்டு) ஸங்தேஹியாமலும்

யெப்போதும் நினைக்கையும், என்னைப்ரயோஜநாந்தரங்கொள்ளாதொழிகையும், என்றஷ்டவிதையாகவருளிச்செய்த பக்தியையுடையனுனல், (சதுர்வேதிகளநுவர்திக்க வறிவுகொடுத்து) (௧) "[illegible] [illegible] । [illegible]" "ஸவிப்ரேந்த்ரோமுநிஸ்ரீமாந்ஸயதிஸ்ஸகலபண்டித꞉ । தஸ்மைதேயம் ததோக்ராஹ்யம்" என்றும், (௨) "பழுதிலா ஒழுகலாற்றுப் பலசதுப்பேதிமார்கள் இழிகுலத்தவர்களேலுமெம்மடியார்களாகில் தொழுமினீர் கொடுமின்கொள்மின்" என்றுஞ்சொல்லுகிறபடியே, ஸர்வோத்க்ருஷ்டனாய், உத்க்ருஷ்டவர்ணரான சதுர்வேதிகள், அபிஜநாத்யபிமான தூஷிதமான ஸ்வஸ்வரூபஸூத்யர்த்தமாகவநுவர்த்திக்கைக்குவிஷயமாய்,அவர்களுக்குஜ்ஞாநாபேக்ஷையுண்டாகில், ஜ்ஞாநப்ரதாநம்பண்ணி குலதெய்வத்தோடொக்கபூஜைகொண்டு, (௩) "[illegible]" "ஸசபூஜ்யோயதாஹ்யஹம்" (௪) "நின்னோடொக்கவழிபடவருளினாய்போல்" என்கிறபடியே, (௫) "[illegible]

---

(௧) (௨) தி-மா-௪௨. (௩) (௪) தி-மா-௪௨. (௫)

மூ. ஸஹஜரோடே புரோடாசமாகச்செய்த புத்ரக்ருத்யமும் புஷ்பத்யாக போகமண்டபங்களில் பணிப்பூவும் ஆலவட்டமும்வீணையுங்கையுமான வந்தரங்கரை

ஸஹஜரோடே - ஸோதரரான விளைப்பெருமாள்பாடேயிருக்கச்செய்தேயும், புரோடாசமாக - திருமேனியை தேவாம்ருதமாகநினைத்தும், செய்த - (ஸ்ரீவிதுரர் பெரிய உடையார் மாறனேறிநம்பி இவர்கள்விஷயத்தில்) அநுஷ்டித்த, புத்ரக்ருத்யமும் - புத்ரர்களநுஷ்டிக்கத்தக்க (பாரலௌகிக) க்ரியைகளையும், புஷ்ப த்யாக போக மண்டபங்களில் - புஷ்பமண்டபமான திருமலையிலும், த்யாகமண்டபமான பெருமாள்கோயிலிலும் போகமண்டபமான திருவரங்கம் திருப்பதியிலும், பணிப்பூவும்-(அநங்கார்ஹமாக) புஷ்பங்களைத் திருவடிகளில் ஸமர்ப்பிக்குமவராயும், ஆலவட்டமும் (புஷ்பஹாஸஸுகுமாரமானதிருமேனிக்கநுகுணமாக) திருவாலவட்டம் பரிமாருமவராயும், வீணையுங்கையுமான-கமலாகாமுகனைகாநத்தாலுகப்பிக்குமவருமான, அந்தரங்கரை - (திருவுள்ளமறிந்துபரிமாருகிற) வந்தரங்கரான (குரும்புறுத்தநம்பி திருக்கச்சிநம்பி திருப்பாணாழ்வார்

𑌕𑍁𑌲𑌦𑍈𑌵𑌤𑌮𑍍” “மமநாதம்மமகுலதைவதம்” என்று, குலதெய்வமாகச் சொல்லப்படுகிற ஸர்வேஶ்வரனோடொக்க, (க) “அவரெங்கள்குலதெய்வம்” என்கிறபடியே, குலதெய்வமாயவர்களை பூஜைகொண்டு (பாவநதீர்த்தப்ரஸாதனென்கிற) திருமுகப்படியும், (உ) “𑌤𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌮𑍍𑌬𑍍𑌵𑌤𑍁𑌲𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌤𑌦𑍁𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌂 𑌸𑍁𑌪𑌾𑌵𑌨𑌮𑍍” “தத்பாதாம்ப்வதுலம் தீர்த்தம்ததுச்சிஷ்டம் ஸுபாவநம்” என்று, அவன்திருவடிகள்விளக்கின ஜலம் அநுபமான தீர்த்தம், அவனமுதுசெய்தஶேஷம் பரமபாவநமென்கையாலே, அஹங்காரமஹாபாகமதமத்தரானவஸுத்தரும், இந்ததீர்த்த ப்ரஸாதாங்வயத்தாலே, ஶுத்தஸ்வரூபராம்படி, பாவநதீர்த்தப்ரஸாதனென் றருளிச்செய்த பகவதுக்தியானதிருமுகமும், அதின்படியெடுப்பான ஆழ்வார்பாசுரமும், (விஶ்வாமித்ரவிஷ்ணுசித்ததுளஸீப்ருத்யரோடே உள்கலந்து) தொழுகுலமானவன் அபரராத்ரியிலேசென்றுபாடி நம்பியைத்திருப்பள்ளியுணர்த்துகையாலே, (ங) “𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾 𑌸𑍁𑌪𑍍𑌰𑌜𑌾 𑌰𑌾𑌮 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । 𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌨𑌰𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌦𑍈𑌵𑌮𑌾𑌹𑍍𑌨𑌿𑌕𑌮𑍍” “கௌஸல்யாஸுப்ரஜாராம பூர்வாஸந்த்யாப்ரவர்த்ததே। உத்திஷ்டநரஶார்தூலகர்தவ்யம்தைவமாஹ்நிகம்” என்றும், (ச) “அரவணையாயாயரேறே அம்மமுண்ணத்துயிலெழாயே, என்றும், (ரு) “அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே” என்றும்

(க) இ-மொ. உ. கூ. ச. (உ) (ங) ஸ்ரீரா - பா - உங. உ.
(ச) பெரியா - தி-உ. உ. க. (ரு) திருப்பள்ளி - சி - ௧.

மூ. முடிமன்னனும் வைதிகோத்தமரும் மஹாமுனியும் அநுவர்த்தித்தக்ரமமும் யாகாநுயாகோத்தரவீதிகளில் காயாங்க ஸ்த்தல சுத்திபண்ணின வ்ருத்தாசாரமறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவது.

இவர்களை) முடிமன்னனும் - அபிஷிக்தக்ஷத்ரியாக்ர்யரான தொண்டைமான்சக்ரவர்த்தியும், வைதிகோத்தமரும் - வைதிகாக்ரகண்யரான உடையவரும், மஹாமுநியும் - ஸ்ரீலோகஸாரங்கமஹாமுனிகளும், அநுவர்த்தித்தக்ரமமும்- அநுவர்த்தித்தப்ரகாரத்தையும்,யாக-திருவாராதநத்திலும், அநுயாக - (பரமாத்மஸமாராதநஸமாப்திரூபமான) ப்ரஸாதஸ்வீகாரத்திலும், உத்தரவீதிகளில்-உத்தரவீதிகுடிபுகுறுகிறபோதும், காயாங்கஸ்தலசுத்தி - பிள்ளையுரங்காவில்லிதாஸராலே காயசுத்தியையும், பிள்ளையேறு திருவுடையார்தாஸராலே அங்கசுத்தியையும், பிள்ளைவான மாமலைதாஸர் ஸ்ரீபாதஸஞ்சரணத்தாலே ஸ்தலசுத்தியையும், பண்ணின - ஆசரித்த, வ்ருத்த - (உடையவர் நம்பிள்ளை நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர் இவர்களாகிறஜ்ஞாந) வ்ருத்தர்களுடைய,ஆசாரம்-அநுஷ்டாநங்களை, அறிவாற்கிறே- தெரிந்தவர்களுக்கிறே, ஜந்ம-ஜந்மத்தினுடைய, உத்கர்ஷாபகர்ஷங்கள் ஔத்க்ரிஷ்ட்யநைக்ருஷ்ட்யங்கள் தெரிவது - விசதமமாகத்தோன்றுவது.

திருப்பள்ளியுணர்த்தினவிஶ்வாமித்ரன் பெரியவாழ்வார் துளபத்தொண்டாய ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வாராகிற விவர்களோடே ஸகோத்ரியாய், (க) "வலந்தாங்குசக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்றுள்கலந்தார்" என்கிறபடியே, பகவச்சேஷத்வஜ்ஞாநபூர்வகமாக அநந்யப்ரயோஜநவ்ருத்தியிலே அந்விதனாய் உள்கலந்து (உ) "என்தொழுகுலம்" என்று, விஶேஜ்ஞராதரிக்குமேற்றத்தையடைந்த ஜந்மவஸித்தநைச்யனானபாகவதன், (நிலையார்பாடலாலே ப்ராம்ஹணவேள்விக்குறை முடித்தமையும்) சரககுலோத்பவனான ஸோமசர்மாவென்கிறப்ராம்ஹணன், உபக்ரமித்தயாகத்தை யதாக்ரமமநுஷ்டியாமையாலும், அதுஸமாப்திக்குமுன்னே, மரிக்கையாலும், ப்ரம்ஹராக்ஷஸனாய்பிறந்துதிரியாநிற்கச்செய்தே, (ங) "త్వం వై గీతప్రభావేన నిస్తారయితుమర్హసి" ఏవముక్త్వా తు చండాలం రాక్షసశ్శరణం గతః" "த்வம்வைகீதப்ரபாவேநநிஸ்தாரயிதுமர்ஹஸி। ஏவமுக்த்வாதசண்டாலம்ராக்ஷஸஶ்ஶரணங்கத꞉" என்கிறபடியே, நீயுன்னுடைய கீதப்ரபாவத்தாலே என்னையிப்பாபத்தினின்றும் கரையேற்றவேணுமென்று ஶரணம்புக, (ச) "యస్య యాదృశ్యం గీతం

(க) தி - வா - ங. எ. கூ. (உ) ஷை ஷை ஷை - அ. (ங) கைசிகமாஹாத்மயம் - எஅ. (ச) ஷை - அஅ.

స్వరం త్వైశికముత్తమమ్ । ఫలేనతస్య భద్రన్తే మోక్షయిష్యసి కిల్బిషాత్" "யந்மயாபஶ்சிமம்கீதம்ஸ்வரம்கைசிகமுத்தமம் । பலேநதஸ்யபத்ரந்தேமோக்ஷயிஷ்யஸிகில்பிஷாத்" என்று, நம்பிஸன்னிதியில்பின்புபாடின நிலையார்பாடலானகைசிகப்பண்ணாலே (க) "ఏవంతత్రవరం కృత్వా రాక్షసో బ్రహ్మసంజ్ఞికః । యజ్ఞశాపాద్వినిర్ముక్తస్సోమశర్మా మహాయశాః" "ஏவம்தத்ரவரம்க்ருஹ்யராக்ஷஸோப்ரம்ஹஸம்ஜ்ஞிகஃ । யஜ்ஞஶாபாத்விநிர்முக்தஸ்ஸோமஶர்மாமஹாயஶாஃ" என்னும்படியாக, வைகல்யதோஷத்தால் வந்தராக்ஷஸத்வத்தைப் போக்கி உஜ்ஜீவிப்பிக்கையாலே அந்தப்ராம்ஹணனுடைய யாகத்தில் குறையைத்தலைக்கட்டினபடியும், (கீழ்மகன் தலைமகனுக்குஸமஸகாவாய்) நிஷாதவம்ஶஜராகையாலே, (உ) "ஏழையேதலன்கீழ்மகன்" என்னும்படி, ஜந்மவ்ருத்தஜ்ஞாநங்களால் தண்ணியரான ஸ்ரீகுஹப்பெருமாள், அயோத்தியர்கோமானாகையாலே அவையெல்லாத்தாலும் உத்க்ருஷ்டனாயிருக்கிற வளவுமன்றிக்கேதர்மைக்யத்தாலேவானோர்தலைமகனாயிருக்கிறசக்ரவர்த்தித்திருமகனுக்கு,உகந்ததோழன்நீ,என்கையாலேஸமனானஸகாவாய், (தம்பிக்கு முன்பிறந்து) உம்பி யெம்பியென்கையாலே, இவர் தம்பியான இளையபெருமாளுக்கு முன்பிறந்தவராய் வேலும் வில்லுங்கொண்டு பின் பிறந்தாரைச்சோதித்து இப்படி தம்மை அங்கீகரித்தவன்றுராத்ரி பெருமாள் பள்ளிகொண்டருளாநிற்க அவருடைய ஸௌகுமார்யாநுஸந்தானத்தாலுண்டான பரிவாலே கண்ணுறக்கமற்று கையும் வில்லுமாய் காத்துக்கொண்டுநிற்கிற விளையபெருமாளை அதிஶங்கைபண்ணி (ங) "கூரணிந்தவேல்வலவன்" என்றும், (ச) "తతస్త్వహం చోత్తమచాపబాణధృక్ స్థితోఽభవం తత్ర సయత్ర లక్ష్మణః" "ததஸ்த்வஹஞ்சோத்தமசாபபாணத்ருத்ஸ்திதோ பவம்தத்ரஸயத்ரலக்ஷ்மணஃ" என்றுஞ்சொல்லுகிறபடியே, ஸாயுதராய்க்கொண்டு அவர்மேலே கண்ணாய்நின்றவர் நினைவுசோதித்து, (தமையனுக்கிளையோன்ஸத்பாவம் சொல்லும்படியேகுலமானமையும்) (ரு) "ఆచచక్షేఽథ సద్భావం లక్ష్మణస్య మహాత్మనః । భరతాయాప్రమేయాయ గుహో గహనగోచరః" "ஆசசக்ஷேதஸத்பாவம் லக்ஷ்மணஸ்ய மஹாத்மநஃ । பரதாயாப்ரமேயாய குஹோகஹநகோசரஃ" என்கிறபடியே, ராமவிரஹக்லிஷ்டனாய், திருச்சித்திரகூடத் தேறப்போவதாக வந்த தமையனான ஸ்ரீபரதனாழ்வானுக்குதம்பியான இளையபெருமாளுடைய, (சு) "బాల్యాత్ప్రభృతి సుస్నిగ్ధః" "பால்யாத்ப்ரப்ருதிஸுஸ்நிக்தஃ" என்றும், (எ) "పరవానస్మి" "பரவாநஸ்மி" என்றும் சொல்லுகிறபடியே, பெருமாள் பக்கல் ப்ரேமபாரதந்த்ர்யங்களை நிரூபகமாம்படியிருக்கையாகிற ஸத்தையோடேவ்யாப்தமான ஸ்வபாவத்தைச் சொல்லும்படி, இக்ஷ்வாகுவம்ஶ்யரோடேகுலமானபடியும், (தாது

(க) கைசிகமாஹாத்மயம்-கூக. (உ) தி-மொ. ரு. அ. க. (ங) தி-மொ. ச. ச. கO. (ச) ஸ்ரீரா - அ. அஎ. உங. (ரு) ஷெ அசு. க. (சு) ஸ்ரீபா. கஅ. உஎ. (எ) ஸ்ரீ - ராஜ. ஸ்தோ - கரு. எ.

மொழிந்தித்யாதி) (க) "முன்னோர் தூதுவாநரத்தின் வாயில்மொழிந்து" என்று, பிராட்டிக்கு தூதவாக்யத்தை திருவடிவாயிலே சொல்லிவிட்ட சக்கரவர்த்தித்திருமகன், (உ) "శబర్యా పూజితస్సమ్యగ్రామో దశరథాత్మజః" "ஶபர்யாபூஜிதஸ்ஸம்யக்ராமோதஶரதாத்மஜ:" என்கிறபடியே, ஸ்ரீஶபரிகையால் பண்ணினஸம்யக்போஜநமும், (ந) "குடைமன்னரிடைநடந்ததூதா" என்னும்படி பாண்டவர்களுக்காக தூதுபோனக்ருஷ்ணன் பீஷ்மத்ரோணாதிக்ருஹங்களைவிட்டு (ச) "విదురాన్నాని బుభుజే శుచీని గుణవన్తి చ" "விதுராந்நாநிபுபுஜேஶுசீநிகுணவந்திச" என்கிறபடியே பாவநத்வ போக்யத்வங்கள் கண்டுகந்து, ஸ்ரீவிதுரர் திருமாளிகையில் பண்ணினஸகுணபோஜநமும், (ரு) "தூதுவந்தகுரங்கு" என்கிறதிருவடி (சு) "దృష్టా దేవీ" "த்ருஷ்டாதேவி" என்றப்ரீதியாலே, (எ) "ఉపకారాయ సుగ్రీవో రాజ్యకాంక్షీ విభీషణః। నిష్కారణాయ హనుమాం స్తత్తుల్యం సహభోజనమ్" "உபகாராயஸுக்ரீவோ ராஜ்யகாங்க்ஷீவிபீஷண: நிஷ்காரணாயஹநுமான் தத்துல்யம்ஸஹபோஜநம்" என்று, திருவுள்ளம்பற்றி (அ) "கோதில்வாய்மையினாயொடுமுடனே உண்பனான்" என்ற பெருமாளோடே பண்ணினஸஹபோஜநமும், (ஒருபிறவியிலேத்யாதி) யதுகுலத்திலே பிறந்து கோபகுலத்திலே ஸஜாதீயத்வேநவளருகையாலே, ஒருபிறவியிலே இருபிறவியான க்ருஷ்ணனுக்கு தர்மபுத்ரர் தம்முடையயாகத்திலே அக்ரபூஜைகொடுத்தமையும், ருஷி புத்ரராய்ப் பிறந்து * பொருந்தரிடத்திலே தஜ்ஜாதியராய் வளருகையாலே ஒரு பிறவியிலே இருபிறவியான திருமழிசைப்பிரானுக்கு பெரும்புலியூரடிகள் தம்முடைய யாகத்திலே அக்ரபூஜைகொடுத்தமையும் (ஐவரிலித்யாதி) பாண்டவர்களைவரில் ப்ரதமரான தர்மபுத்ரர், ஸ்ரீவிதுரர்க்குஜ்ஞாநாதிக்யத்தையும் அஶரீரிவாக்யத்தையுங்கொண்டு ஸந்தேஹியாமல்செய்தபுத்ரக்ருத்யமும், தஶரதாத்மஜரில் நால்வரில் ப்ரதமரான பெருமாள் (கூ) "సౌమిత్రే హర కాష్ఠాని నిర్మథిష్యామి పావకమ్। గృధ్రరాజం దిధక్షామి మత్కృతే నిధనం గతమ్" "ஸௌமித்ரேஹரகாஷ்டாநி நிர்மதிஷ்யாமிபாவகம். க்ருத்ரராஜம் திதக்ஷாமிமத் க்ருதேநிதநம்கதம்" என்று, ஸஹஜரான இளையபெருமாளுங் கூடநிற்கச்செய்தே அவர் கையிலுங்காட்டாமல் (க0) "ఏవముక్త్వా చితాం దీప్తా మారోప్య పతగేశ్వరమ్। దదాహ రామో ధర్మాత్మా స్వబన్ధుమివ దుఃఖితః" "ஏவமுக்த்வாசிதாம்தீப்தாமா ரோப்யபதகேஶ்வரம். ததாஹராமோதர்மாத்மாஸ்வபந்து மிவதுக்கித:" என்கிறபடியே பெரிய உடையாருக்குச்செய்த புத்ரக்ருத்யமும், பெரியநம்பி திருக்கோட்டியூர் நம்பி பெரியதிருமலைநம்பி என்று ஸப்ரம்ஹசாரிகளாய்க்கொண்டு ஆள

(க) தி-மொ-உ. உ. ந. (உ) ஸ்ரீ-ரா-பா-க. ருஎ. (ந) தி-மொ-கூ. உ. கூ. (ச) ஸ்ரீபா-ம். (ரு) தி-மொ-க0. உ. சு. (சு) ஸ்ரீ-ரா-ஸு-சுச-உஅ. (எ) (அ) தி-மொ-ரு. அ. உ. (கூ) ஸ்ரீ-ரா-ஆ-சுஅ. உகூ. (க0) ஷெ-ஷெ-நஉ.

* பொருந்தர் மேதரவர்.

லந்தார் திருவடிகளை ஸேவிக்கையாலும், உடையவர்க்காசார்யர்களா கையாலும் ப்ரஸித்தர்களானநம்பிகள் மூவரிலும் ப்ரதாநரான பெரிய நம்பி மாறனேறிநம்பிக்கு * புரோடாசத்தை நாய்க்கிடாதேகொள்ளும், என்றருளிச்செய்து போனபடியே புரோடாசமாக நினைத்துச்செய்த புத்ரக்ருத்யமும், (புஷ்பத்யாகேத்யாதி) (க) "சிந்துபூமகிழும் திருவேங்கடம்" என்கிறபடியே, புஷ்பமண்டபமான திருமலையிலே பணிப்பூவுங் கையுமாய் திருவுள்ளமறிய ப்பரிமாருகையாலே திருவேங்கடமுடையானுக்கு அந்தரங்கரான குறும்பறுத்த நம்பியை (உ) "துளங்குநீண்முடியரசர் தம்குரிசில்தொண்டைமன்னவன்" என்கிற அபிஷிக்தக்ஷத்ரியாக்ர்யரான தொண்டைமான் சக்கரவர்த்தி அநுவர்த்தித்தக்ரமமும், (ங) "వేగవత్యుత్తరే తీరే పుణ్యకోట్యాం హరిస్స్వయం । వరదస్సర్వ భూతానా మద్యాపి పరిదృశ్యతే" "வேகவத்யுத்தரே தீரே புண்யகோட்யாம் ஹரிஸ்வயம் । வரதஸ்ஸர்வபூதாநாமத்யாபிபரித்ருஶ்யதே" என்கிறபடியே, த்யாகமண்டபமான பெருமாள்கோயிலில் திருவாலவட்டமும் கையுமாய் பெருமாளுக்கந்தரங்கராய் நின்ற திருக்கச்சிநம்பியை வைதிகோத்தமரான உடையவர் அநுவர்த்தித்த க்ரமமும், (ச) "தெண்ணீர்பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளிகொள்ளும்"என்கிறபடியே, போகமண்டபமான கோயிலில் வீணையுங்கையுமாய் பெரியபெருமாளுக்கு அந்தரங்கராய் வர்த்தித்த திருப்பாணாழ்வாரை லோகஸாரங்கமஹாமுனிகள் அநுவர்த்தித்த க்ரமமும், (யாகாநுயாகேத்யாதி) "யஜ தேவபூஜாயாம்" என்கையாலே, யாகஶப்தவாச்யமான திருவாராதநத்தில் (பிள்ளையுறங்கா வில்லிதாஸர்) ஸ்பர்ஶத்தாலே காயஶுத்திபண்ணின உடையவரும், பகவதாராதநாநந்தரம் தத்ஸமாப்திரூபேணபண்ணப்படுமதாகையாலே அநுயாக ஶப்தவாச்யமான ப்ரஸாதஸ்வீகாரத்தில் (பிள்ளையேறு திருவுடையார் தாஸர்) கரஸ்பர்ஶத்தாலே அங்கஶுத்திபண்ணின நம்பிள்ளையும், உத்தரவீதிகுடிபுகுகிறபோது (பிள்ளைவாநமாமலைதாஸர்) ஸஞ்சரணத்தாலே ஸ்தலஶுத்திபண்ணினநடுவில் திருவீதிப்பிள்ளைபட்டருமாகிற ஜ்ஞாநவ்ருத்தர்களுடைய ஆசாரமும் அறிவார்க்கிறே ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள்தெரிவது. இப்படி கீழ்ச்சொன்னவிவையெல்லா மறிவார்க்கிறே இன்னஜந்மமுத்க்ர்ஷ்டம் இன்னஜந்மம பக்ருஷ்டம் என்று ஜந்மத்தினுடைய உத்கர்ஷமும்மபகர்ஷமும் தோன்றுவதென்னபடி. இத்தால் ஜந்மாத்யபக்ர்ஷ்டர்கள் பகவத் பக்தராணர்களாகில் உத்க்ருஷ்டவர்ணராலநுவர்தநீயராயவர்களுக்கு ஜ்ஞாநப்ரதராய்

(க) தி - வா - ங. ங. உ. (உ) தி-மொ - ரு. அ. க. (ங) ஸ்ரீகாஞ்சிமாஹாத்ம்யம் (ச) பெரு - தி - க. க.

* புரோடாசத்தை நாய்க்கிடாதே கொள்ளுமென்றவிடத்தில் புரோடாசமாவது? ஆளவந்தாரபிமானித்தருளின தம்திருமேனி, நாய்க்கிடாதே கொள்ளுமென்றது, ஸ்வரூபாபாவத்தால் மிசத்தண்ணியர்களான ஸ்வபந்துக்கள் கையில்காட்டித்தரவேண்டாமென்றபடி.

மூ—(அகூ) அஜ்ஞர்ப்ரமிக்கிறவர்ணாஶ்ரமவித்யாவ்ருத்தங்களை கர்த்தப ஜந்மம் ஶ்வபசாதமம் சில்பநைபுணம் பஸ்மாஹூதிஶவ விதவாலங்காரமென்று கழிப்பர்கள்.

இத்யாசார்யஹ்ருதயே ப்ரதமப்ரகரணம்ஸமாப்தம்.

அழகியமணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்.

(அ) அஜ்ஞர் - (ஹேயோபாதேயவிபாகார்ஹ) ஜ்ஞாநமில்லாதவர்கள், ப்ரமிக்கிற - (பகவதந்வயரஹிததயாபக்ருஷ்டமாயிருக்க வுத்க்ருஷ்டமாக (ப்ரமிக்கிற) வர்ண - (ப்ராம்ஹணாதி வர்ணத்தையும், ஆஶ்ரம - (ப்ரம்ஹசர்யாதி) ஆஶ்ரமத்தையும், வித்யா - ஸத்வித்யையும், வ்ருத்தங்களை - ஸத்வ்ருத்தங்களையும், (க்ரமமாக) கர்தபஜந்மம் - குங்குமம் சுமந்தகழுதையோபாதியென்றும், ஶ்வபசாதமம்-ஶ்வபசனிற்காட்டில் தண்ணிதென்றும்,சில்பநைபுணம்-செருப்புக்குத்தக்கற்றவோபாதியென்றும், பஸ்மாஹுதி - பஸ்மாஹூதிவந் நிஷ்ப்ரயோஜநமென்றும், ஶவ விதவாலங்காரமென்று - ஶவத்துக்கும் விதவைக்கும் பண்ணின வலங்காரங்களோடொற்ற தென்றும், கழிப்பர்கள் - (ஜ்ஞாநிகள்) இகழ்வர்கள்.

ஈஶ்வரனோபாதியவர்களுக்கு பூஜ்யராய் ஸ்வதீர்த்த ப்ரஸாதங்களாலே ஸர்வர்களையும் ஶூத்தராக்குமவர்களாம்படியையும் பாபமக்நரான உத்க்ருஷ்டவர்ணர்க்கும் ஸ்வஸம்பந்தத்தாலே உத்தாரகராம்படியையும், அவர்களளவில் பகவத்ததியர்களுடைய வாதராநுவர்த்நப்ரகாரங்களையும், அவர்களுடைய ஸ்பர்ஶமே பரமபாவநமென்னு மத்தையும், ப்ரமேயபூதனை வீஶ்வரானுடையவும் ப்ரமாத்ருபூதரான ததியருடையவும் வசநாநுஷ்டாநங்களாலே மந்தமதிகளுமறியும்படி ப்ரகாசிப்பித்தாராயிற்று. *

வ்யா. (அகூ) ஜந்மோத்கர்ஷாபகர்ஷங்கள் தெரிவதென்னவிடத்தில், தது த்கர்ஷாபகர்ஷங்களுக்குடலாக விவக்ஷிதமானவற்றை மேலிரண்டுவாக்யத்தாலே வெளியிடுகிறார். அதில் ப்ரதமத்தில் அபக்ருஷ்டஜந்மமின்னதென்று தோற்றும்படி, பகவத்ஜ்ஞாநரஹிதமான வர்ணாதிகளின் ஹேயத்வத்தை ஸப்ரமாணமாக தர்சிப்பிக்கிறார். (அஜ்ஞரென்றுதுடங்கி) அதாவது :— பகவத்தாஸ்யமே ஆத்மாவுக்கு நிரூபகமென்று நிஷ்கர்ஷித்து ததநுகுணமாக ஹேயோபாதேயவிபாகம் பண்ணத்தக்க ஜ்ஞாநமில்லாதவர்கள் பகவதந்வயரஹிததயா அபக்ருஷ்டமாயிருக்க உத்தமவர்ணம் உத்தமாஶ்ரமம் ஸத்வித்யை ஸத்வ்ருத்தமென்று உத்க்ருஷ்டமாக ப்ரமிக்கிற வர்ணாதியானவற்றை, (க) "చతుర్వేద ధరో విప్రో వాసుదేవం నవిన్దతి। వేదభార భరాక్రాన్తః స వై బ్రాహ్మణ గార్దభః" "சதுர்வேததரோவிப்ரோ வாஸுதேவம் நவிந்ததி| வேதபாரபராக்ராந்த ஸ்ஸவைப்ராம்ஹணகார்தப:" என்று நாலுவேதங்களையு மதிகரித்து

வைத்தே (க) "సర్వే వేదా యత్పదమామనన్తి" (உ) "వేదైశ్చ సర్వైరహమేవ వేద్యః" "ஸர்வேவேதாயத்பதமாமநந்தி" "வேதைஶ்சஸர்வைரஹமேவவேத்ய:" என்கிறபடியே, ஸகலவேதப்ரதிபாத்யனானஸர்வேஶ்வரனை யறியாதவன் குங்குமஞ்சுமந்த கழுதைபோலேதான்பரித்துக்கொண்டுதிரிகிற வேதத்தின்பரிமளமறியாத ப்ராம்ஹணக்கழுதையென்றும் (ங) "శ్వపచోఽపి మహీపాల విష్ణుభక్తో ద్విజాధికః । విష్ణుభక్తివిహీనస్తు యతిశ్చ శ్వపచాధమః" "ஶ்வபசோபிமஹீபாலவிஷ்ணுபக்தோத்விஜாதிக:। விஷ்ணுபக்தி விஹீநஸ்துயதிஶ்ச ஶ்வபசாதம:" என்று, சரமாஶ்ரமியாகிலும்பகவத்பக்திஹீநனானவன்ஶ்வபசனில் காட்டில் தண்ணியனென்றும், (ச) "తత్కర్మ యన్న బన్ధాయ సా విద్యా యా విముక్తయే । ఆయాసాయాపరం కర్మ విద్యాన్యా శిల్పనైపుణమ్" "தக்கர்மயந்நபந்தாயஸாவித்யாயாவிமுக்தயே। ஆயாஸாயாபரங்கர்மவித்யாந்யாசில்பநைபுணம்" என்று, பகவத்பரதயா மோக்ஷார்த்தையானதுவே வித்யை; அல்லாதது செருப்புக்குத்தக்கற்றவோபாதியென்றும், (ரு) "ఆమ్నాయాభ్యసనాన్యరణ్యరుదితం వేదవ్రతాన్యన్వహం మేదశ్ఛేదఫలాని పూర్తవిధయస్సర్వే హుతం భస్మని । తీర్థానామవగాహనాని చ గజస్నానం వినా యత్పదద్వన్ద్వాంభోరుహసంస్మృతిర్విజయతే దేవస్స నారాయణః" "ஆம்நாயாப்யஸநாந்யரண்யருதிதம் வேதவ்ருதாந்யந்வஹம்மேதச்சேதபலாநிபூர்தவிதயஸ்ஸர்வேஹுதம் பஸ்மநி தீர்த்தாநா மவகாஹநாநிச கஜஸ்நாநம்விநாயத்பதத்வந்த்வாம்போருஹஸம்ஸ்ம்ருதிர்விஜயதே தேவ ஸ்ஸநாராயண:" என்று, பகவத்ஸ்ம்ருதியில்லாதவர்களுடைய கர்மாநுஷ்டாநம் பஸ்மாஹுதிவந்நிஷ்ப்ரயோஜநமென்றும் (சு) "యస్యాఖిలామీవహభిస్సుమఙ్గలైర్వాచో విమిశ్రా గుణకర్మజన్మభిః । ప్రాణన్తి శుంభన్తి పునన్తి వై జగద్యాస్తద్విముక్తాశ్శవశోభనా మతాః" "யஸ்யாகிலா மீவஹபிஸ்ஸு மங்களைர்வாசோ விமிஶ்ராகுணகர்மஜந்மபி: ப்ராணந்திஶும்பந்தி புநந்திவைஜகத் யாஸ்தத்விமுக்தாஶ்ஶவஶோபநாமதா:॥ (எ) "విష్ణుభక్తివిహీనస్య వేదశాస్త్రం జపస్తపః । అప్రాణస్యేవ దేహస్య మణ్డనం లోకరఞ్జనమ్" "விஷ்ணுபக்திவிஹீநஸ்ய வேதஶாஸ்த்ரம் ஜபஸ்தப:। அப்ராணஸ்யே வதேஹஸ்யமண்டநம் லோகரஞ்ஜநம்" என்றும், பகவதந்வயரஹிதோக்திகளும் பகவத்பக்திஹீநனுடைய வித்யாவ்ருத்தங்களும்ஶவாலங்காரகல்பமென்றும், (அ) "ప్రాదుర్భావైస్సురనరసమో దేవదేవస్తదీయా జాత్యావృత్తైరపి చ గుణతస్తాదృశో నాత్ర గర్హా । కిన్తు శ్రీమద్భువనభవనత్రాణతోఽన్యేషు విద్యావృత్తప్రాయో భవతి విధవాకల్పకల్పః ప్రకర్షః" "ப்ராதுர்பாவைஸ்ஸுரநரஸமோ தேவதேவ ஸ்ததீயாஜாத்யா வ்ருத்தைரபிசகுணதஸ்தாத்ருஶோநாத்ரகர்ஹா। கிந்து ஸ்ரீமத்புவநபவநத்ரணதோந் யேஷுவித்யாவ்ருத்தப்ராயோபவதிவிதவாகல்ப கல்ப: ப்ரகர்ஷ:" என்றும், பகவதநந்விதருடைய வித்யாவ்ருத்தபாஹுள்யமாகிற வுத்கர்ஷம் பகவத்ஸம்பந்தஜ்ஞாநரூபஸௌமங்கல்யாபாவத்தாலே விதவாலங்கார ஸமமென்றும் ஜ்ஞாநிகளானவர்க ளிகழ்வர்களென்கை. ஆக விப்படி பகவத்விஷயஸம்பந்தமற்ற வர்ணாஶ்ரமங்களும் ஜ்ஞாந வ்ருத்தங்களும் ஹேயமென்கையாலே கீழபக்ருஷ்டஜந்மதயாவிவக்ஷிதமான தின்னதென்னு மிடமறிவித்தாராயிற்று.

இத்யாசார்யஹ்ருதயவ்யாக்யாநே - ப்ரதமப்ரகரணம்ஸமாப்தம்.

பெரியஜீயர் திருவடிகளே ஶரணம்.

(க) (உ) ப - கீ. (ங) (ச) ஸ்ரீ - வி - க. கக.
சா0. (ரு) மு - கோ உரு. (சு) (எ) (அ)

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

ஆசாரியஹ்ருதயவ்யாக்யாநம்.

த்விதீயப்ரகரணம்.

மூ—(க) அணையவூரப்புனைய,

(அ) அணைய (நித்யவிபூதியில் ஸ்ரீயஃபதிகண்வளர்ந்தருளுகைக்கு பாங்காயிருக்கும்) திருவரவணையாயும், ஊர - (அவன்பலகாலும்மேற் கொண்டு) நடத்துகைக்கு (வாஹநமானகருளப்புள்ளாயும்), புனைய - அவனுதரித்துச் சாத்துகைக்கர்ஹமான திருத்துழாயாயும்,

---

வ்யா. (க) இனிமேல், ஆத்மநிரூபகசேஷத்வாநுகூல ஜந்மமே உத்க்ருஷ்ட ஜந்மமென்னுமத்தை அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரும் முமுக்ஷுக்களுமான மஹாத்மாக்களாதரமுகேநப்ரகாசிப்பிக்கிறார். (அணைய வென்றுதுடங்கி) அதாவது:— (க) "அணைவதரவணைமேல் பூம்பாவையாகும் புணர்வது) என்று, பிராட்டி திருமேனி ஸ்பர்சத்தோடொக்க விகற்பிக்கலாம்படி அத்யந்தஸுகஸ்பர்ஶமாய், ஶைத்யமார்தவ ஸௌரப்யங்களை ப்ரக்ருதியாகவுடைத்தாய்க்கொண்டு ஸ்ரீயஃபதியானவன் கண்வளர்ந்தருளுகைக்குப் பாங்காயிருக்கும் திருவரவணையாயும், (உ) "ஊரும்புள்" என்கிறபடியே, ஆர்த்தரக்ஷணத்துக்கும் அநுகூலரை யநுபவிப்பிக்கைக்கும் தன்னுகப்புதனக்குமாக அவன்பலகாலும் மேற்கொண்டு நடத்துகைக்கு வாஹநமான கருளப்புள்ளாயும், (ங) "தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாய்" என்கிறபடியே, அவனுதரித்துச் சாத்துகைக்கர்ஹமான திருத்துழாயாயுமிருக்கும் திர்யக்ஸ்தாவர ஜந்மங்களை (ச) "பெருமக்களுள்ளவர்" என்கிறபடியே, அஹ்ருத ஸஹஜதாஸ்யராகையாலே (ரு) "அஸந்நேவ" என்பது, (சு) "ஸந்தமேநம்" என்பதாக வேண்டாதபடி, என்று மொக்கவுளராயிருக்கிற மஹாத்மாக்களான நித்யஸூரிகள் பகவத்கைங்கர்யேச்சையாலே பரிக்ரஹித்தார்கள். (எ) "పత్యుః ప్రజానామైశ్వర్యం పశూనాం వా న కామయే। అహం కదంబో భూయాసం కస్తూరీవా యమునాతటే" "பத்யுஃப்ரஜாநாமைஶ்வர்யம் பஶூநாம் வா நகாமயே। அஹம்கதம்போபூயாஸம்குந்தோவாயமுநாதடே" என்று, ப்ரஜாபதி பஶுபதிகளுடைய வைஶ்வர்யத்தையும்வேண்டேன்

(க) தி - வா - உ. அ. க. (உ) ஷை - க0. உ. ங. (ங) ஷை - க. கூ. எ. (ச) ஷை - ங. எ. ரு. (ரு) தை - உ - ஆ - உ. சு. க. (சு) ஷை ஷை எ. (எ)

மூ. அடியும்பொடியும்பட பர்வதபவநங்களிலே ஏதேனுமாக ஜநிக்கப்பெறுகிறதிர்யக் ஸ்தாவரஜந்மங்களை,

அடியும் - (ஸ்ரீப்ருந்தாவநத்தில் ப்ராப்தசேஷியானவவன்) திருவடியும், பொடியும் - (ததீயருடைய) ஸ்ரீபாததூளியும், பட - படும்படியும், பர்வத - (அவனுகந்தருளி வர்த்திக்கும் திருமலையாழ்வாரிலும், பவநங்களிலே - (ததீயரான ஸ்ரீவைஷ்ணவர்கள் நித்யவாஸம்பண்ணியருளுகிற) திருமாளிகைகளிலேயும், ஏதேனுமாக - ஏதேனுமொன்றாக, ஜநிக்கப்பெறுகிற - திருவவதரிக்கப்பெறுகிற, திர்யக்ஸ்தாவரஜந்மங்களை,—(உத்பத்தி விநாஶங்களிரண்டுமங்கேயாம்படியான) இஜ்ஜந்மங்களை,

(க)"பூத்த நீள்கடம்பேறி" என்றும், (உ) பூங்குருந்தேறியிருத்தி" என்றுஞ் சொல்லுகிறபடியே, யமுனைக்கரையிலவன் திருவடிகளால் மிதித்தேறின கடம்பாதல், குருந்தாதல், ஆவேனாக வேணுமென்றும், (ங) ఆసామహో చరణరేణు జుషామహం స్యాం బృన్దావనే కిమపి గుల్మలతౌషధీనామ్। యా దుస్త్యజం స్వజనమార్యపథం చ హిత్వా భేజుర్ముకున్దపదవీం శ్రుతిభిర్విమృగ్యామ్" ஆஸாமஹோ சரணரேணுஜுஷாமஹம் ஸ்யாம்ப்ருந்தாவநேகிமபிகுல்மலதௌஷதீநாம்| யாதுஸ்த்யஜம்ஸ்வஜநமார்யபதஞ்சஹித்வாபேஜுர்முகுந்தபதவீம் ஶ்ருதிபிர்விம்ருக்யாம்" என்று, ஶ்ருதிகளாலே தேடப்படுமதான க்ருஷ்ணன்போனவழியை ஸ்வஜநாதிகளையுமதிக்ரமித்து யாவர் சிலர் பெண்கள் பின்துடர்ந்தார்கள், அவர்களுடைய பாதரேணுவை பஜித்திருப்பனவாய் ப்ருந்தாவநத்தில் நிற்கும் சிறுசெடிகள் கொடிகள் ஓஷதிகளில் வைத்துக்கொண்டேதேனுமொன்றாவேனாகவேணுமென்றும் (ச) "கோனேரிவாழும் குருகாய்ப்பிறப்பேனே" (ரு) "மீனாய்ப்பிறக்கும்விதியுடையேனாவேனே" (சூ) செண்பகமாய்நிற்கும் திருவுடையனாவேனே" (எ) "தம்பகமாய்நிற்கும் தவமுடையேனாவேனே"(அ) "எம்பெருமான்பொன்மலைமேலே தேனுமாவேனே" என்று, திருமலையாழ் வாரோட்டை ஸம்பந்தமுடைய (திர்யக் ஸ்தாவரஜந்மங்களிலேதேனு மொன்றாகப்பெறுவேனாகவேணுமென்றும், (கூ) "తవదాస్యసుఖైకసఙ్గినాం భవనేష్వస్త్వపి కీటజన్మ మే" "தவதாஸ்யஸுகைகஸங்கி நாம் பவநேஷ்வஸ்த்வபிகீட ஜந்மமே" என்று, தேவரீருடைய தாஸ்யஸுகமொன்றிலுமேஸங்கத்தையுடையரான ஸ்ரீவைஷ்ணவர் திருமாளிகைகளிலே உத்பத்திவிநாஶங்களிரண்டுமங்கேயாம்படியானகீடஜந்மமேயெனக்குண்டாகவேணுமென்றும், இப்படியவனடிப்படவும் அவனையடைந்தார்களடியில் பொடிபடவும் அவனுகந்தருளினநிலத்திலேயாதல் அவனடியாரபிமானமுள்ள நிலத்திலேயாதல் வர்த்திக்கையுமீட்கவும் ஜநிக்கப்பெறுகிற திர்யக்ஸ்தாவரஜந்மங்களை "பேராளன்பேரோதும்பெரியோரான ஸ்ரீஶுகப்பிரம்ஹர்ரிஷி உத்தவர்

(க) நா - தி. க. க. ச. (உ) (ங) (ச) பெருமாள் - தி - க. ச. க. (ரு) ஷை ஷை - உ. (சூ) ஷை ஷை - ச. (எ) ஷை ஷை - ரு. (அ) ஷை ஷை - கo. (கூ) ஆ - ஸ்தோ - ருச. (கo)

மூ. பெருமக்களும் பெரியோரும் பரிக்ரஹித்து ப்ரார்த்திப்பர்கள்.

மூ—(உ) ஶேஷத்வபஹிர்ப்பூதஜ்ஞாநாநந்தமயனையும்

பெருமக்களும், (ஸஹஜதாஸ்யரான) நித்யஸூரிகளும், பெரியோரும் - (பகவத்கல்யாணகுணாநுபவ போகரான (ஸ்ரீஶுகப்ரம்ஹர்ஷி உத்தவர் ஸ்ரீகுலசேகரப்பெருமாள் பெரியமுதலியார்முதலான) முமுக்ஷுக்களும், பரிக்ரஹித்து - லபித்து, ப்ரார்த்திப்பர்கள் - (ஜநிக்கவும்) அபிலஷிப்பர்கள்.

(அ) ஶேஷத்வபஹிர்ப்பூத - ப்ராப்த ஶேஷியுடைய ஶேஷத்வத்துக்கு புறம்பான, ஜ்ஞாநாநந்தமயனையும் - ஜ்ஞாநாநந்த மயத்வத்தாலே ஶ்லாக்யமாயிருக்கு மாத்மாவையும்,

---

ஸ்ரீகுலசேகரப்பெருமாள் பெரியமுதலியார் முதலான முமுக்ஷுக்கள் பிரார்த்தித்தார்களென்னபடி. இத்தால் (க) "वाचिकैः पक्षिमृगतां मानसैरन्त्यजातिताम्। शरीरजैः कर्मदोषैर्याति स्थावरतां नरः" "வாசிகை꞉ பக்ஷிம்ருகதாம் மாநஸைரந்த்யஜாதிதாம் । ஶரீரஜை꞉ கர்மதோஷைர்யாதிஸ்தாவரதாம்நர꞉" என்றிந்தவிபூதியில் திர்யக் ஸ்தாவரஜந்மங்கள், வாசிககாயிக பாபபலங்களாக ஶாஸ்த்ரம்சொல்லாநிற்க, அப்படியன்றிக்கே பகவத்விநியோகார்ஹமாகவிந்த ஜந்மங்களை நித்யஸூரிகள் ஸ்வேச்சையாலேயேறிட்டுக்கொள்ளுவர்களென்றும், தாஸ்யரஸஜ்ஞரானமுமுக்ஷுக்கள் தத்ஸம்பந்த ததீயஸம்பந்தமுள்ள திர்யக் ஸ்தாவரஜந்மங்களை ப்ரார்த்திப்பர்களென்றுஞ் சொல்லுகையாலே தாஸ்யாநுகுணஜந்மமே உத்க்ருஷ்டமென்னதாயிற்று. *

வ்யா. (உ) பகவத்விநியோகார்கமாகையாலே நித்யஸூரிகள் திர்யக் ஸ்தாவரஜங்கமங்களை பரிக்ரஹிக்கைப்ராப்தம். அங்கனன்றிக்கேமுமுக்ஷுக்களானவிவர்கள், பகவத்பாகவதஶேஷத்வவாஞ்சையாலே திர்யக்ஸ்தாவரஜந்மங்களைப்ரார்த்தித்தார்களாகிலும்உத்க்ருஷ்டதயாஶாஸ்த்ர ஸித்தமானவர்ணத்தை யிப்படிகழிக்கிறதென்னென்ன? அருளிச்செய்கிறார். (ஶேஷத்வேத்யாதி) அதாவது:—(உ) "न देहं न प्राणान्न च सुखमशेषाभिलषितं न चात्मानं नान्यत्किमपि तव शेषत्वविभवात् । बहिर्भूतं नाथ क्षणमपि सहे यातु शतधा विनाशं तत्सत्यं मधुमथन विज्ञापनमिदम्" "நதேஹம் நப்ராணாந்நசஸுகமஶேஷாபிலஷிதம் நசாத்மாநம்நாந்யத்கி மபிதவஶேத்வவிபவாத் । பஹிர்ப்பூதம்நாதக்ஷண மபிஸஹேயாதுஶததாவிநாஶம் தத்ஸத்யம்மதுமதநவிஜ்ஞாபநமிதம்" என்றுதேவரீருடையஶேஷத்வத்துக்குப்புறம்பானதேஹாதிகளொன்றையும் க்ஷணமும்ஸஹியேன். அவ்வளவன்றியே, ஜ்ஞாநாநந்தமயமான ஆத்மவஸ்துவையும் ஸஹியேன். அதுஶததாவாகவிநாஶத்தையடைவதாகவும். இந்தவிண்ணப்பம் அஹ

(க) மநுஸ்ம்ருதி - கஉ. கூ. (உ) ஆ - ஸ்தோ. ருகூ.

சூ. ஸஹியாதார்த்யாஜ்யோபாதியையாதரியார்களே.

மூ—(ரு) இதின் ஔபாதிகத்வம் ஒருராஜா தன்னை மறைமுனிவனாக்கினவன் நீசனாக்கிவைத்த ராஜாவை வாரே

ஸஹியாதார் - ஸகியாதவர்கள், த்யாஜ்யோபாதியை - த்யாஜ்யமாயௌபாதிகமானவர்ணத்தை - ஆதரியார்களே - விரும்பமாட்டார்களே.

(அ) இதின் - இவ்வர்ணத்தினுடைய, ஔபாதிகத்வம் - உபாதித்வாராவந்தமை, ஒருராஜா - (விஶ்வாமித்ரனாகிறான்) ஒருராஜா, தன்னை மறைமுனிவனாக்கினவன் - தன்னைப்ரம்ஹர்ஷியாக்கினவஸிஷ்டன், நீசனாக்கிவைத்த (ஸ்வபுத்ரராலேயஜ்ஞோபவீதம்வாராம்படி) சண்டாளனாக்கிவைத்த, ராஜாவை - த்ருசங்குவென்கிற ராஜாவை வாரே - அந்தவார்தானே,

---

ருதயமன்று. ஸத்யம். திருமுன்பேபொய் ஶொன்னேனாகில் தேவரீர்க்கு பொய்யனானமதுபட்டதுபடுகிறேனென்கையாலே, ஶேஷத்வத்துக்குப்புறம்பானபோது (க) "𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾" "ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா" என்று, ஜ்ஞாநாநந்தமயத்வத்தாலே ஶ்லாக்யமாயிருக்குமாத்மாவையும் ஸஹியாதவர்கள், ஶேஷத்வவிரோதி பூதாஹங்காரஹேது வாகையாலே, த்யாஜ்யமாய், கர்மநிபந்தநமாகையாலே ஔபாதிகமுமாயிருக்கிறவர்ணத்தை ஆதரிப்பர்களோவென்கை. ஔபாதிகமானவித்தை உபாதியென்னது கார்யேகாரணோபசாரம். *

வ்யா. (ரு) வர்ணத்தினுடைய ஔபாதிகத்வந்தன்னை உதாஹரணமுகேன தெளிவிக்கிறார்மேல், (இதின் ஔபாதிகத்வம் ஒருராஜா வென்று துடங்கி) அதாவது:— இவ்வர்ணத்தினுடைய ஔபாதிகத்வம் குசிகவம்ஶ்யனாய் ராஜாவான விஶ்வாமித்ரன் ப்ரம்ஹர்ஷித்வகாமனாகையாலே நெடுங்காலம் தபஸ்ஸு பண்ணினதன்னை (உ) "மந்திரங்கொள் மறைமுனிவன்" என்னும்படி, ப்ரம்ஹர்ஷியாக்கின ஶக்திமானான வஸிஷ்டன் தன்வார்த்தைகேளாமல் தன்னை யவமதிபண்ணிப்போனது கொண்டு ஸ்வபுத்ரர்கள் பண்ணினஶாபத்தாலே மார்விலிட்ட யஜ்ஞோபவீதமே வாராம்படி சண்டாளனாக்கிவைத்த இக்ஷ்வாகுவம்ஶ்யனாயிருந்துள்ள த்ருஶங்குவாகிற ராஜாவை அந்தவார்தானே யஜ்ஞாங்கமான உறுப்புத்தோலாகக்கொண்டு தன்னுடைய தபோபலத்தாலே யஜிப்பித்து ஸ்வர்க்காரோஹணம் பண்ணுவித்தபோதே ஸுஸ்பஷ்டமென்கை. இத்தால், ஒருக்ஷத்ரியன் ஸுக்ருதவிஶேஷத்தாலே அந்தஶரீரந்தன்னோடே ப்ரம்ஹர்ஷியாகையாலும், ஒருக்ஷத்ரியன் துஷ்க்ருதவிஶேஷத்தாலே அந்த ஶரீரந்தன்னோடே சண்டாளனாகையாலும் க்ஷத்ரியத்வம்போய் ப்ரம்ஹர்ஷியானவன், தான் ப்ரம்ஹர்ஷியாவதர்க்கு முன்னே க்ஷத்ரியவேஷம்போய் சண்டாளவேஷமாய்நிர்க்கிறவிவனை

(க) (உ) பெருமாள் - தி - க. கO. உ.

மூ. உறுப்பாக யஜிப்பித்துஸ்வர்க்கமேற்றினபோதேதெரியும்.
மூ—(ச) மாவுருவில் கள்ளவேடம் திருந்த வேதமலமான மானிடம்
பாடல் ஸர்வவர்ணசூத்ரத்வம் காடுவாழ்சாதியில் கடல்
வண்ணன்வேடம் தென்னுரையில் ஹரிகீர்த்தி ஶ்வபசரில்

உறுப்பாக - உறுப்புத்தோலாக, யஜிப்பித்து - யஜ்ஞம் செய்வித்து, ஸ்வர்க்கமேற்றினபோதே - ஸ்வர்க்காரோஹணம் பண்ணிவைத்தபோதே, தெரியும் - ஸுஸ்பஷ்டமாகும்.

(அ) மாவுருவில் - (அப்ராக்ருதமாகையாலே ஶ்லாக்யமாயிருந்துள்ள பகவதவதார விக்ரஹங்களில், கள்ள்வேடம் - (வைதிகருசியை குலைக்கைக்காக) புத்தமுனியான விக்ரஹமும், திருந்த - (பகவத்ஸ்வரூபாதியாதாத்ம்ய ப்ரதிபாதகமாகையாலே) கட்டளைப்பட்டிருந்துள்ள, வேத - வேதத்தில், மலமான - மலாம்ஶமான, மானிடம்பாடல் - க்ஷேத்ரஜ்ஞரைப்ரஶம்ஸிக்கிறவாக்யங்களும், ஸர்வவர்ண - ஸகலவர்ணங்களிலும், ஶூத்ரத்வம் - (பகவத்பக்தரல்லாதார்) ஶூத்ரரென்னுமதும், காடுவாழ்சாதியில் - (பசுக்களுக்கு புல்லும் தண்ணீருமுள்ள) காடுகளில் வர்த்திக்குமிடைஜ்ஜாதியில், கடல்வண்ணன்வேடம் - க்ருஷ்ணனுடைய பசுமேய்த்துவருகிற போதை யலங்காரமுடைய விக்ரஹமும், தென்னுரையில் - த்ராவிடபாஷையானப்ரபந்தங்களில், ஹரிகீர்த்தி - பகவத்ப்ரதிபாதகமானவையும், ஶ்வபசரில் - ஶ்வபாகரில்,

அந்த வேஷந்தன்னோடே யஜிப்பித்து ஸ்வர்கத்திலே யேற்றுகையாலும், வர்ணத்தின் கர்மோபாதிகத்வமெல்லார்க்கும் தோன்றுமென்னதாயிற்று. ❋

வ்யா. (ச) இனிமேல் ப்ராகரணிகமாய்வருகிற ப்ரமாத்ருவைபவஸ்தாபநத்துக்குறுப்பாக ப்ரமாணப்ரமேயங்களையுங் கூட்டிக்கொண்டு மூன்றிலும் த்யாஜ்யோபாதேயாம்ஶங்களுண்டென்று மிடத்தைவிபஜித்துச்சொல்லி, இவ்விஶேஷமறிவார் பெறும்பேற்றையும், இதறியாமல் பரகவதஜந்ம நிரூபணம்பண்ணுவார் அதஃபதிக்கும்படியையுமறிவிக்கிறார். (மாவுருவிலித்யாதி) அதாவது :— (க) “எம்மாவுருவும்வேண்டு மாற்றூலாவா” என்கிறபடியே, எல்லாரூபமும அப்ராக்ருதமாகையாலே ஶ்லாக்யமுமாய், இச்சாக்ரிஹீதமுமாயிருக்கும். பகவதவதார விக்ரஹங்களில் வைத்துக்கொண்டு வேதாப்ராமாண்யத்தை வுபபாதித்து வைதிகருசியை குலைக்கைக்காக (உ) “యథాహిచోరస్సతథాహిబుద్ధః” “யதாஹிசோரஸ்ஸததாஹிபுத்தஃ” என்கிறபடியே, (ங) “கள்ளவேடத்தைக்கொண்டு” என்னும்படி, பரிக்ரஹித்த, புத்தமுனியானவிக்ரஹமும், பகவத்ஸ்வரூபாதிகளையதாவாகப்ரதிபாதிக்கையாலே, கட்டளைப்பட்டிருந்துள்ள வேதத்தில் (ச) “నస్మృర్వసోఽవదిశేత వేదబాహ్యేష్వవస్థితే

(க) தி - வா - ஞ. அ. உ. (உ) ஸ்ரீ - ரா. அ. க0௬. ௩௩. (ங) தி - வா - ஞ. க0. ௪. (ச)

மூ. பத்திபாசநுமு மறிவாராராரமரரென்னவேற அறியாதார்,

பத்திபாசநமும் - பகவத்பக்தியாகிறதநமுடைத்தாயிருக்கையும், அறிவார் - இப்படிப்ரமாண ப்ரமேயப்ரமாத்ருகளில் பரித்யாஜ்யபரிக்ராஹ்யாம்ஶங்களான விவ்விபாகங்களறிவார், ஆரார் - ஏதேனும் ஜந்மவ்ருத்தங்களையுடையரேயாகிலும், அமரரென்ன - நித்யஸூரிஸம ரென்னும்படி ஶ்லாக்யராய், ஏற-பரமபதத்தைப்ராபிக்க, அறியாதார்-இப்ரமேயாதித்ரயத்திலும் வாசியறியாதார்,

---

ஙஃ" "நஸ்மர்தவ்யோவிஶேஷேணவேதமந்த்ரோப்யவைஷ்ணவ꞉" என்கிறபடியே, ஸ்மறிக்கவுமாகாதபடி, மலாம்ஶமான, (க) "மானிடம் பாடலென்னுவது" என்கிறபடியே, க்ஷேத்ரஜ்ஞரைப்ரஶம்ஸிக்கிறவாக்யங்களும் (உ) "నశూద్రా భగవద్భక్తా విప్రా భాగవతాః స్మృతాః సర్వవర్ణేషు తేశూద్రా యే హ్యభక్తా జనార్దనే" "நஶூத்ராபகவத்பக்தாவிப்ரா பாகவதாஸ்ம்ருதா꞉। ஸர்வவர்ணேஷு-தேஶூத்ராயே ஹ்யபக்தாஜநார்தநே" என்றெல்லாவர்ணங்களிலும் பகவத்பக்தரல்லாதார் ஶூத்ரத்வமுமாகிற ப்ரமேயத்திலும் ப்ரமாணத்திலும் ப்ரமாதாக்களிலுமுண்டான த்யாஜ்யாம்ஶங்களும், (ங) "காடுவாழ் சாதியுமாகப்பெற்றான்" என்றூர்மனையில் வஸியாமல் பசுக்களுக்கு புல்லும் தண்ணீருமுள்ள காடுகளிலே வர்த்திக்கையாலே காடுவாழ் சாதியென்கிற கோபஜாதியில் ஸஜாதீயனாய்வந்தவதரித்து நிற்கிற கிருஷ்ணனுடைய (ச) "காலிப்பின்னே வருகின்றகடல்வண்ணன் வேடத்தைவந்து காணீர் "என்று தானுமனுபவித்து பிறற்குமழைத்துக் காட்டும்படி பசுமேய்த்துவருகிறபோதை அலங்காரத்தோடேகூடியிருக்கிறவிக்ரஹமும், (ரு) "தென்னுரையில்கேட்டறிவதுண்டு" என்கிறபடியே, தக்ஷிணதிக்வர்தியானதுகொண்டு தென்னுரையென்று சொல்லப்படுகிற த்ராவிடபாஷையானப்ரபந்தங்களில் (சு) ஹரிகீர்திம்விநைவாந்யத்" இத்யாதிப்படியே, பகவத்ப்ரதிபாதகமானவையும் (எ) "శ్వపచోపి మహీపాల విష్ణుభక్తో ద్విజాధికః" "ஶ்வபசோபிமஹீபால விஷ்ணுபக்தோத்விஜாதிக꞉" என்கிறபடியே, பெறற்கரிய நின்றபாதபத்தியானபாசநம் என்று, ஸ்வயத்நத்தால் பெறுதற்கரியதாயிருந்துள்ளபகவத்பாதகமல பக்தியாகிற தநமுடையவர்களுமாகிற ப்ரமேயாதித்ரயத்திலுமுபாதேயாம்ஶங்களுமான இவ்விபாகமறிவார். (அ) "ஆராரமரர்" என்கிறபடியே, ஏதேனுமொருஜன்ம வ்ருத்தங்களுடையரேயாகிலும், ஸூரிஸமரென்னும்படி, ஶ்லாக்யராய், (கூ) இலங்குவான் யாவருமேறுவர்" என்கிறபடியே, அத்யுஜ்வலமான பரமபதத்தைப்ராபிக்க இப்ரமேயாதித்ரயத்திலும் கீழ்ச்சொன்னவாசி யறியாதாராய்க்கொண்டு பாகவதஜந்ம

(க) தி-வா-ங. கூ. ங. (உ) ஸ்ரீபாரதம் (ங) நா-தி-கஉ. அ. (ச) பெரியாதி-ங. ங. க. (ரு) பெரிய-தி-ல். (சு) மாத்ஸ்யே. (எ)
(அ) தி-வா-கO. ரு. அ. (கூ) ஷி-ங. அ. கக.

மூ. சாதியந்தணர்களேலும் தகரவிழுவர்.

மூ—(ரு) தமிழ் மாமுனிதிக்குச்சரண்ய மென்றவர்களாலே க்வசித்க்வசித்தென்று,

---

ஶாதியந்தணர்களேலும் - உத்க்ருஷ்டஜந்மாக்களுமாய் ஸகலயோக்ய ஸம்பூர்ணராயிருந்தார்களேயாகிலும், தகரவிழுவர் - ஈஶ்வரன் திருவடி ஸம்பந்தைகநிரூபகரான ஶ்ரீவைஷ்ணவர்களைநிந்திப்பராகில் ஒருகாலமும்கரையேறயோக்யதையில்லாத கர்மசண்டாளராயத: பதிப்பர்கள்.

(அ) தமிழ்மாமுனிதிக்கு - த்ராவிடஶாஸ்த்ர ப்ரவர்தகனான வகஸ்த்யனிருக்கிறதிக்கு, ஶரண்ய மென்றவர்களாலே - (ஸர்வர்க்கும்) புகலிடமென்றுசொன்ன (ருஷிகளாலே) க்வசித்க்வசித்தென்று - ஜ்ஞாதாக்கள்வந்தாவிற்பவிக்கும் ஸ்தலவிஶேஷங்களைச் சொல்லுகிறவளவில்,

---

நிரூபணம்பண்ணுவார் (க) "அமரவோரங்கமாறும்" என்கிறபாட்டில், ஸாங்கமாக ஸகலவேதங்களையும் அத்யயனம்பண்ணி ததீயஶ்ரேஷ்டருமாய் உத்கிருஷ்ட ஜந்மாக்களுமாயிருந்தார்களேயாகிலும், தேவரீர் திருவடிகளில் ஸம்பதைக நிரூபகரான ஶ்ரீவைஷ்ணவர்களை ஜந்மாதிகளையிட்டு நிந்திப்பர்களாகில் காலாந்தரே தேஶாந்தரேயன்றிக்கே அப்போதே அவ்விடம் தன்னிலே அவர்கள் தாங்கள் சண்டாளரானவர்களென்கிறபடியே, உத்கிருஷ்டஜந்மாக்களேயாகிலும் கர்மசண்டாளராய், இனியொருகாலமும் கரையேறயோக்யதை யில்லையென்னும்படி, அத: பதிப்பர்களென்கை (உ) " [illegible] । [illegible] " "அநாசாராந்துராசாராநஜ்ஞாத்ருந்ஹீநஜந்மந: । மத்பக்தாந் ஶ்ரோத்ரியோ நிந்தந்ஸத்யஶ் சண்டாலதாம் வ்ரஜேத்" என்னக்கடவதிறே. ஆக "வீட்டின்ப" மித்யாதிவாக்யந்துடங்கி நிமக்நரையுயர்த்த தாழவிழிந்தாரென்னுமளவும் । ஆழ்வாருடைய வைபவத்தை ப்ரதிபாதித்து தத்ஸ்த்தாபநார்த்தமாக ம்லேச்சனும் பக்தனானென்றுதுடங்கிமேலெல்லாம் ஸாமாந்யேநபாகவத வைபவத்தைவிஸ்தரேண ப்ரகாசிப்பிற்று உபக்ர மவாக்யத்தில்போலே ப்ரமாண ப்ரமேயங்களுடனே சேர்த்து ப்ரமாத்ருவைபவத்தை நிகமித்தாராயிற்று. *

வ்யா. (ரு) இப்படி, பாகவதஸாமாந்ய ப்ரயுக்தவைபவமாத்ரமன்றிக்கே (ஜநகதஶரதேத்யாதி) வாக்யந்துடங்கி மூன்றுவாக்யத்தாலே கீழ்ச்சொன்னவைபவ விஶேஷத்யோதகமான ப்ரமாணமேதென்னுமாகாண்க்ஷையிலே அருளிச்செய்கிறார். (தமிழ்மாமுனி) என்று துடங்கி, அதாவது :—(தமிழ்மாமுனிதிக்குச் சரண்யமென்னவர்களாலே) (ரு) "[illegible]" "தக்ஷிணதிக்ருதாயேந

(க) தி-லே-சாஈ. (உ) (ஈ)

சூ. இவரா விர்ப்பாவங் கலியுங்கெடும்போலேஸூசிதம்.

இவராவிர்ப்பாவம் - இவ்வாழ்வாருடைய ஆவிர்ப்பாவம், கலியுங்கெடும் போலே - (திருமங்கையாழ்வார் உடையவர் போல்வார் திருவவதரித்து) கலிஸ்வபாவங்கழியுமென்று மேல்வருமம்சத்தை தாம் கடாக்ஷித்தருளிச்செய்தாப்போலே, ஸூசிதம் - ஸூசிப்பிக்கப்பட்டது.

சரண்யாபுண்யகர்மணு" என்று, (க) "வண்டமிழ்மாமுனி" என்கிறபடியே, த்ராவிட சாஸ்த்ரப்ரவர்தகனை அகஸ்த்யனிருக்கிறதிக்கு ஸர்வர்க்கும் புகலிடமென்னருஷிகளாகில இப்போதிதுசொல்லிற்று. வைதிகரானரிஷிகள், த்ராவிடப்ரபந்தவக்தாவான இவரை, இப்படி பஹுமதிபண்ணி சொல்லக்கூடுமோவென்று சங்கிப்பார்க்கு, ஒரு த்ராவிடஜ்ஞனாலே தக்ஷிணதிக்குக்கு நன்மைசொன்னவர்கள் த்ராவிட ப்ரபந்தமுகேந லோகோஜ்ஜீவனகரரான இவரையுமிப்படிபஹுமாநம் பண்ணி சொல்லக்குறையில்லையென்று தோற்றுகைக்காகக்வசித்க்வசித் தென்றி வராவிற்பாவம் (உ) "కృతాదిషు ప్రజా రాజన్ కలావిచ్ఛన్తి సమ్భవమ్। కలౌ ఖలు భవిష్యన్తి నారాయణపరాయణాః। క్వచిత్క్వచిన్మహారాజ ద్రావిడేషు చ భూయశః। తామ్రపర్ణీ నదీ యత్ర కృతమాలా పయస్వినీ॥ కావేరీ చ మహాభాగా ప్రతీచీ చ మహానదీ। యే పిబన్తి జలం తాసాం మనుజా మనుజేశ్వర। తేషాం నారాయణే భక్తిర్భూయసీ నిరుపద్రవా" "க்ருதாதிஷு-ப்ரஜாராஜந் கலாவிச்சந்திஸம்பவம்। கலௌகலுபவிஷ்யந்தி நாராயணபராயணாஃ॥ க்வசித்க்வசிந்மஹாராஜ த்ராவிடேஷுசபூயசஃ। தாம்ப்ரபர்ணீ நதீயத்ரக்ருதமாலாபயஸ்விநீ॥ காவேரீசமஹாபாகா ப்ரதீசீசமஹாநதீ॥ யேபிபந்திஜலம் தாஸாம் மநுஜாம் மநுஜேச்வர। தேஷாம்நாராயணேபக்திர்பூயஸீ நிருபத்ரவா" என்று, ஜ்ஞாதாக்கள் வந்தாவிர்ப்பவிக்கும் ஸ்தலவிசேஷங்களை தத்தந்நதிவிசேஷங்களாலே ப்ரகாசிப்பிற்று அந்தநதி விசேஷங்களில் ஜலத்தைபாநம் பண்ணுமவர்களுக்கு பகவத்பக்தியதிசயிக்கும்படியுஞ் சொல்லுகிறவளவில் ப்ரதமத்திலே "தாம்ரபர்ணீநதீயத்ர" என்று, இவரா விர்ப்பாவஸ்தலத்தைச்சொல்லுகையாலே இவ்வாழ்வாருடைய ஆவிர்ப்பாவமானது கலியுங்கெடும்போலே ஸூசிதம். இவர்தாம்மயர்வறமதிநல மருளப்பெற்றவராகையாலே கலியுங்கெடுமென்று திருமங்கையாழ்வார் உடையவர் போல்வாரவதரித்து கலியுகஸ்வபாவமுங்கழியுமென்று மேல்வருமம்சத்தை தர்சித்தருளிச்செய்தாப்போலே த்ருகாலஜ்ஞரான ஸ்ரீசுகாதிகளாலே ஸூசிப்பிக்கப்பட்டதென்கை (௩) "క్రూరే కలియుగే ప్రాప్తే నాస్తికైః కలుషీకృతే। విష్ణోరంశాంశసంభూతో వేదవేదార్థతత్త్వవిత్॥ స్తోత్రం వేదమయం కర్తుం ద్రావిడ్యాపి చ భాషయా॥ జనిష్యతి సతాం శ్రేష్ఠో లోకానాం హితకామ్యయా" "க்ரூரேகலியுகேப்ராப்தே நாஸ்திகைஃ கலுஷீக்ருதே। விஷ்ணோரம் சாசிஸம்பூதோ வேதவேதார்த்ததத்வவித்" ஸ்தோத்ரம் வேதமயம் கர்த்தும்

(க) பெருமாள் - தி. ௪0. ரு. (உ) ஸ்ரீபாரதம். (௩)

'மூ—(சூ) அத்ரிஜமதக்நி பங்திரத வஸுநந்தஸூநுவானவனுடைய
யுகவர்ணக்ர மாவதாரமோ வ்யாஸாதிவதாவேஶமோ,

(அ) அத்ரிஜமதக்னி - (ப்ராம்ஹணோத்தமரான) அத்ரி ஜமதக்நி மஹர்ஷிகளுக்கும், பங்திரத - க்ஷத்ரியரான தஶரதசக்ரவர்த்திக்கும், வஸு - (ராஜ்யாநர்ஹராகையாலேவைஶ்யப்ராயரான) வஸுதேவர்க்கும், நந்த - (கோரக்ஷணதர்மத்தால் ஸாக்ஷாத்வைஶ்யரான) ஸ்ரீநந்தகோபர்க்கும், ஸூநுவானவனுடைய - புத்ரனயவதரித்த ஸர்வேஶ்வரனுடைய, யுகவர்ணக்ரம-யுகக்ரமத்திலே வர்ணக்ரமமாகவந்த, அவதாரமோ - அவதரணமோ, வ்யாஸாதிவத் - வ்யாஸாதிகள் பக்கல்போலே, ஆவேஶமோ - இவர்பக்கலும் பகவதாவேஶமோ,

த்ராவிட யாபிசபாஷயா || ஜநிஷ்யதிஸதாம் ஶ்ரேஷ்டோலோகாநாம் ஹிதகாம்யயா" இத்யாதிவசனங்களு மிவராவிர்ப்பாவஸூசகங்களாகையாலே இவ்விடத்திலே விவக்ஷிதங்கள். கேவலஜந்மவாசக ஶப்தங்களிலொன்றைச் சொல்லாதே அவதார ஶப்தபர்யாயமான ஆவிர்ப்பாவ ஶப்தத்தைசொல்லிற்று. இவர்பிறப்பும் ஈஶ்வரன்பிறப்போ பாதிப ரார்த்தமென்று தோற்றுகைக்காக. இத்தாலிவரோரவதாரவிஶேஷமென்னதாயிற்று. *

வ்யா. (சூ) இப்படி யவதரித்த விவர்தாமாரென்று மாகாங்க்ஷயிலே பேரளவுடையாரு மிவரை யின்னரென்றளவிடமாட்டாமை யதிஶங்கை பண்ணும்படியை யருளிச்செய்கிறார். மேல் (அத்ரியென்று துடங்கி) அதாவது :— க்ருதயுகத்திலே அத்ரியும் ஜமதக்நியுமாகிற ப்ராம்ஹணோத்தமர்களுக்குப்பிள்ளையாய்க்கொண்டு, தத்தாத்ரேயனும் பரசுராமனுமாய், த்ரேதாயுகத்திலே க்ஷத்ரியரான தஶரதசக்ரவர்திக்குப்பிள்ளையாய், த்வாபரயுகத்திலே யயாதிஶாபத்தாலே அபிஷேகப்ராப்தியற்ற யது குலோத்பவராகையாலே க்ஷத்ரியரில் தண்ணியராய் வைஶ்யப்ராயராயிருக்கிற வஸுதேவர்க்கும் (க) "[illegible]" "க்ருஷிகோரக்ஷவாணிஜ்யம் வைஶ்யகர்மஸ்வபாவஜம்" என்கிறபடியே, கோரக்ஷணாதி தர்மத்தையுடைய ஸாக்ஷாத்வைஶ்யரான ஸ்ரீநந்தகோபர்க்கும்புத்ரனய், இப்படி க்ருதாதி யுகக்ரமத்திலே ப்ராம்ஹணாதி வர்ணக்ரமேண அவதரித்து வந்த ஸர்வேஶ்வரன், சதுர்த்தமான கலியுகத்திலே சதுர்த்தவர்ணத்திலே வந்தவதரித்தபடியாலென்கை. பூர்வயுகத்ரயத்திலுமடைவே வர்ணத்ரயத்திலுமவதரித்து வருகையாலும் (உ) "[illegible]" "கலௌபுநஃ பாபரதாபிபூதே ஸவுத்பபூவாபரிதவத்ஸலத்வாத் | பக்தாத்மநாஸர்வஜநாந் ஸுகோப்தும்விஶ்வாதிகோ விஶ்வமயோஹி விஷ்ணுஃ" என்று, கலியுகத்திலே, ஸர்வேஶ்வரன் பக்தரூபேண அவத

(க) (உ)

மூ. மூதுவர் கரை கண்டோர் சீரியரிலே யொருவரோ முன்னம்நோற்ற,

மூதுவர் - (பரமபதத்துக்கு நிலத்தாளிகளான நித்யஸூரிகள்) கரைகண்டோர்-ஸம்ஸாரத்தைக் கடந்தக் கரைப்பட்ட முக்தர், சீரியர் - ஸ்வேதத்வீபவாஸிகள், (ஆகிறவிவர்களிலே) ஒருவரோ - ஒருத்தரோ, முன்னம்நோற்ற - ஜந்மாந்தர ஸஹஸ்ரஸஞ்சிதமான,

ரித்தானென்று ரிஷிகள் சொல்லுகையாலும், இவர்வைபவங்கண்டவர்களுக்கு, இப்படி ஶங்கிக்கயோக்யதையுண்டிறே. (வ்யாஸாதிவதாவேசமோ) அதாவது (க) "க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும்" "க்ருஷ்ணத்வைபாய நம்வ்யாஸம் வித்திநாராயணம்ப்ரபும்" (உ) "ஸோயம் நாராயணஸ்ஸாக்ஷாத் வ்யாஸரூபீ மஹாமுநி:" "ஸோயம் நாராயணஸ்ஸாக்ஷாத்வ்யாஸரூபீமஹாமுநி:" என்னும் சொல்லுகிறபடியே, வேதங்களை வ்யஸிக்கை முதலான கார்யங்களை நிர்வஹிக்கைக்காக வ்யாஸாதிகள் பக்கலாவேசித்தாப்போலே, இவரைக்கொண்டு த்ராவிடவேதத்தை ப்ரவர்த்திப்பிக்கைக்காக இவர் பக்கலாவேசித்தானோவென்கை. இவரைக்கொண்டு லோகத்தைத் திருத்துகைக்காக இவர்பக்கலிலே ஆவேசித்துநிற்கவும் கூடுமாகையாலே, இப்படியும் ஶங்கிக்கலாமிறே. (மூதுவர் கரைகண்டோர் சீரியரிலேயொருவரோ) அதாவது :—(ங) "விண்ணாட்டவர்மூதுவர்", என்று, பரமபதத்துக்கு நிலத்தாளிகளான நித்யஸூரிகளிலே, இவ்விபூதியைத்திருத்துகைக்காக, ஈஶ்வரநியோகத்தாலே அவதரித்தாரொருவரோ? அன்றிக்கே (ச) "கரைகண்டோர்" என்று,ஸம்ஸாரத்தைக் கடந்தக்கரைப்பட்டிருக்கிற முக்தரிலேஸம்ஸாரிகளைத்திருத்துவதாக பகவந்நிர்தேஶத்தாலவதரித்தாரொருவரோ? அன்றிக்கே (ரு) "முக்தாநாம் லக்ஷணம் ஹ்யேதத் ஶ்வேதத்வீபநிவாஸிநாம்" "முக்தாநாம் லக்ஷணம் ஹ்யேதத்ச்வேதத்வீபநிவாஸிநாம்" என்கிறபடியே, முக்தப்ராயராய், (சு) "பாற்கடல்பாம்பணைமேல் பள்ளிகொண்டருளும் சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும்சீரியர்" என்கிறஶ்வேதத்வீபவாஸிகளிலே இவ்வருகுள்ளாரைதிருத்துகைக்காக, ஈஶ்வரேச்சையாலே அவதரித்தாரொருவரோவென்கை. இவருடையவைபவம்பார்க்கில் எல்லாப்படியாலும் சொல்லலாம்படியிருக்கையாலே இப்படியும் தனித்தனியேஶங்கிப்பார்க்கு ஶங்கிக்கலாமிறே. (எ) "பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள்கொல்" என்கிறபடியே, பிராட்டிமாரோடு சேர்த்து பார்க்கும்போதும் தனித்தனியே ஶங்கிக்கலாம்படியிறேயிருப்பது. மற்றுள்ளததீயருடன் பின்னைசொல்லவேண்டாவிறே. (முன்னம் நோற்றவநந்தன்மேல் புண்ணியங்கள் பலித்தவரோ) அதாவது:—

(க) வி - பு. (உ) ஸ்ரீ - பார. (ங) தி - வி - உ.
(ச) தி - வா - அ. ங. கo. (ரு) (சு) தி-வி. எக. (எ) தி-வா. சு. ரு. கo.

ரூ. வநந்தன் மேற்புண்ணியங்கள் பலித்தவரோ வென்றும் சங்கிப்பர்கள்.

மூ—(எ) இதுக்குமூலம் யான் நீயென்று மறுதலைத்து வானத்து மண்மிசை மாறும் நிகருமின்றி நிலையிடந்தெரியாதே

அநந்தன்மேல் புண்ணியங்கள்-சேஷசாயியுடைய திருவடிகளில் பண்ணின ஸுக்ருதங்கள், பலித்தவரோ - பலமாகக்கொண்டிப்படி திருந்திநாரொருவரோ, என்று - இப்புடைகளிலே, சங்கிப்பர்கள் - (பேரளவுடையாரும்) சங்கியாநிற்பர்கள்.

(அ) இதுக்கு - இவரின்னாரென்று நிர்ணயிக்கமாட்டாமைக்கு, மூலம் - காரணம், யான் - விபூதிமானையுடையநானோ, நீ - விபூதியையுடையநீயோ, பெரியன் - என்று - இப்படியாக, மறுதலைத்து - (ஈச்வரனோடே) மாறாடி, வானத்து - நித்யவிபூதியிலும், மண்மிசை - லீலாவிபூதியிலும், மாறும் ஒப்பாவாரும், நிகரும்,-ஸத்ருசராவாரும், இன்றி-இல்லாமல், நிலையிடம் - உபயவிபூதியிலு மடங்காமையாலே வாஸஸ்தலமின்னதென்று, தெரியாதே - நிச்சயிக்கக் கூடாததாய்,

கீழ்ச்சொன்னவர்களொருவருமன்றிக்கே ஸம்ஸாரிகள் தன்னிலே (க) "முன்னம் நோற்றவிதிகொலோ" என்கிறபடியே, ஜந்மாந்தரஸஹஸ்ர ஸஞ்சிதமான தம்முடைய ஸுக்ருதபலமாகக்கொண்டிப்படி திருந்தினாரொருவரோ? அன்றிக்கே, (உ) "அநந்தன்மேல்கிடந்தவெம்புண்ணியா" என்று நிர்ஹேதுக கடாக்ஷ விசேஷத்தாலே நித்யஸம்ஸாரியை நித்யஸூரிகல்பமாக்கவல்ல அநந்தசாயியான ஸநாதநபுண்ணியம் முழுநோக்காக பலித்தபடி திருந்தினாரொருவரோ வென்கை. என்று சங்கிப்பர்கள். அதாவது, இப்படி கீழ்ச்சொன்ன வகைகளாலே இவரையின்னாரென்று நிச்சயிக்கமாட்டாமல் பேரளவுடையாரும் சங்கியாநிற்பர்களென்றபடி. ❋

வ்யா. (எ) இப்படி, இவரைஜ்ஞாநிகளானவர்கள் சங்கிக்கைக்கு ஹேதுவேதென்னு மபேக்ஷையிலே, இதுக்கு மூல மிவருடைய ப்ரபாவமென்கிறார்மேல். (இதுக்குமூலம்) அதாவது :— இவரைக்கண்ட ஜ்ஞாநாதிகரிவரின்னாரென்று நிர்ணயிக்கமாட்டாமை யிங்கன்சங்கிக்கைக்கு ஹேது யான் நீ யென்றுமறுதலைத்து(ங) "புவியுமிருவிசும்பும்" என்று துடங்கி உபயவிபூதியு முன்ஸங்கல்பத்திலே கிடக்கின்றன. ஏவம்பூதனான நீ என்னுடைய ச்ரோத்ரேந்திரியத்வாராபுகுந்து விச்சேதமின்றிக்கே என்ஹ்ருதயத்திலே யுளையாகாநின்றாய். இப்படியானபின்பு, விபூதியையுடைய, நீயோ? விபூதிமானையுடையநானோ? பெரியாராரென்றறிவாரார்? அப்ரதிஹதசக்திகனான நீதா னித்தை நிரூபித்தறிந்து காணென்று உபயவிபூதியுக்தனோடே மறுதலைக்கிறவைபவத்தையுடைய

(க) தி-வா. கூ. ரு. எ. (உ) திருச்சந்த-ம். சரு. (ங) பெ. அ. எரு.

மூ. தெய்வத்தின மொருவகைக்கொப்பாக இனத்தலைவனந்தா மத்தன்புசெய்யச் சேர்ந்தமைக்கடையாளமுளவாக உகந் துகந்து

தெய்வத்தினம் - நித்யஸூரிகளெல்லாருமாக, ஒருவகைக்கொப்பாக - தமக்கொருவகைக் கொப்பாம்படியாய், இனத்தலைவன் - நித்யஸூரிபரிஷந்நிர்வாஹகனான வீச்வரன், அந்தாமத்தன்பு செய்ய - பரமபதத்தில் பண்ணும் வ்யாமோஹத்தை தம்மிடத்திலொரு மடைசெய்ய, சேர்ந்தமைக்கு - பகவத்விஷயீகாரம் பெற்றமைக்கு, அடையாளம் - லாஞ்சநங்கள், உளவாக - உண்டாய்ச்செல்ல, உகந்துகந்து - பகவத் ஸௌந்தர்ய சீலாத்யநுஸந்தாநஜநிதஹர்ஷத்தால் சிதிலராவது,

ராய், (வாநத்துமண்மிசைமாறும் நிகருமின்றி) (க) "யாவர்நிகரகல்வானத்தே" என்றும், (உ) "மாறுளதோவிம்மண்ணின்மிசையே" என்றும், அவனுடைய உபயவிபூதியோகத்துக்கும், ஸௌகுமார்யத்துக்கும் தகுதியாம்படியாகவும், ஸர்வேச்வரனாய் அவாப்தஸமஸ்தகாமனாய் ஒன்றுக்கும் விக்ருதனாகாதவன், தம்முடைய உக்திச்ரவணஹர்ஷப்ரகர்ஷத்தாலே கொண்டாடும்படியாகவும், திருவாய்மொழிபாடுகிற நாவீறுடைமையாலே உபயவிபூதியிலும் உபமானரஹிதராய் நிலையிடந்தெரியாதே கலவியும் பிரிவுங்கலசிநடக்கையாலே, கலவியால் வந்தரஸமேயாய்ச் செல்லுமங்குள்ளார்படியுமன்றி, பகவத்குணைகதாரகதையாலே அந்நபாநாதிகளாலே தரிக்குமிங்குள்ளார்படியுமின்றி, இப்படியுபய விபூதியிலுமடங்காமையாலே (ங) "வைகுந்தமோ வையமோநும் நிலையிடம்" என்று, வாஸஸ்தலம்தெரியாதபடியாய், (தைவத்தினமொருவகைக் கொப்பாக) (ச) "தைவத்தினமோரனையீர்களாய்" என்று, ஒருவரிருவரன்றிக்கே நித்யஸூரிகளெல்லாருங்கூடினாலும் தமக்கொருவகைக் கொப்பாம்படியாய், (இனத்தலைவனந்தாமத்தன்புசெய்ய) (ரு) "வானோரினத்தலைவன்" என்று, அந்தஸூரிஸங்க நிர்வாஹகனானஸர்வேச்வரன், (சு) "அந்தாமத்தன்புசெய்து" என்றழகியதாமமான பரமபதத்திற்பண்ணும் வ்யாமோஹத்தையடைய தம்பக்கலிலே ஒருமடைகொள்ளப்பண்ண (சேர்ந்தமைக்கடையாளமுளவாக) (எ) "திருவருள்களும் சேர்ந்தமைக்கடையாளம் திருந்தவுள" என்று, மென்மேலுமவன், விஷயீகாரங்களைப்பெற்றமைக்கு ஸுவ்யக்தலாஞ்சநமானராகம் வாய்க்கரையிலேதோன்றுகைமுதலான கலவிக்குறிகளுண்டாய்ச்செல்ல, (உகந்துகந்துதிமிர் கொண்டாலொத்து) (அ) "உகந்துகந்துள்மகிழ்ந்துகுழையும்" என்றும், (கூ) "திமிர்கொண்டாலொத்து நிற்கும், என்றும், அவன்ஸௌந்தர்ய சீலாதிகளை யநுஸந்தித்து, உத்தரோத்தரம் விளை

(க) தி - வா - ச. ரு. அ. (உ) ஷை - சு. ச. கூ. (ங) தி - வி - எரு.
(ச) ஷை உங.
(ரு) பெ - அ. உரு. (சு) தி - வா உ. ரு. க.
(எ) ஷை - அ. கூ. சு. (அ) ஷை - சு. ரு. ச. (கூ) ஷை ஷை - ஷை - உ.

மூ. திமிர்கொண்டாலொத்து நாட்டியல்வொழிந்துசடரையோட்டி மதாவலிப்தர்க்கங்குஶமிட்டு நடாவியகூற்றமாய் தீயனமருங்குவாராமல்

திமிர்கொண்டாலொத்து - பரப்ரும்ஹஸாக்ஷத்காரம் பிறந்தாரைப் போலே ஸ்தப்தராவதாய், நாட்டியல்வொழிந்து - லௌகிகரோடன்வயமற்று, ஶடரை - பாஹ்யகுத்ரிஷ்டிகளாகிறசடரை, ஒட்டி-(வேதாந்த தாத்பர்யார்த்த ப்ரகாஶகங்களாலே) துரத்தி, மத - (அபிஜநவித்யாவ்ருத்த மதத்தாலே) அவலிப்தர்க்கு-கர்விஷ்டரானவர்களுக்கு, அங்குஶமிட்டு - (ஹிதோபதேஶரூப) அங்குசமிட்டு, நடாவிய கூற்றமாய் - தன் கடாக்ஷத்திலகப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள்ஸம்ஸாரத்திர்க்கு ம்ருத்யுவாய், தீயன-ஸாம்ஸாரிகதுக்கஹேது பாபாதிகள், மருங்குவாராமல் - அருகும் வாராதபடியாய்,

---

கிற, பாஹ்யாப்யந்தரஹர்ஷத்தாலே சிதிலராவது, (க) "స్తబ్ధోஉస్యుత తమాదేశమప్రాక్ష్యః" "ஸ்தப்தோஸ்யுததமாதேஶமப்ராக்ஷ்ய꞉" என்கிறபடியே, ஸர்வநியாமகபரப்ரும்ஹ ஸாக்ஷாத்காரம்பிறந்தாரைப்போலே ஸ்திமிதராவதாய், (நாட்டியல்வொழிந்து) (உ) "நாட்டாரோடியல்வொழிந்து" என்றும், (ங) "உண்டியே யுடையேயுகந்தோடி" (ச) "யானேயென்றனதே" என்று, அஹங்கார மமகாரவஶ்யராயிருக்கிற லௌகிகரோடுஸம்பந்தமற்று,(ஶடரையோட்டி)ஶடகோபரரகையாலே,(ரு) "వేదశాస్త్రావిరోధినా" "வேதஶாஸ்த்ராவிரோதிநா" என்கிறபடியே, ப்ரமாணாநுகூல தர்க்கங்களாலே மத்யஸ்தமாக வர்த்தத்தைஸாதிக்க யன்றிக்கே, ஸ்வபுத்யாகல்பித ஶுஷ்க தர்க்கங்களாலே ஸ்வஸ்வமதஸ்தாபநம்பண்ணும்பாஹ்ய குத்ருஷ்டிகளாகிறசடரை ஶ்ருத்யந்த தாத்பர்யமான ஸ்வோக்திவிசேஷங்களாலே, ஸ்வஸந்நிதானத்தில் நில்லாதபடித்துரத்தி, (மதாவலிப்தர்க்கங்குசமிட்டு)பராங்குசராகையாலே, (சு) "విద్యామదో ధనమద స్తృతీయోஉభిజనో మదః । ఏతే మదావలిప్తానాం" "வித்யாமதோதநமதஸ்த்ருதியோபிஜநோமத꞉ । யேதேமதாவலிப்தாநாம்" என்று, மதஹஸ்திபோலே அபிஜநவித்யாதிமதத்ரயாவலிப்தராய்த் திரியுமவர்களுக்கு நிர்மதராய்த் தலைவணங்கும்படி, உபதேஶ ரூபாங்குஶமிட்டு, (நடாவியகூற்றமாய்) (எ) "பறவையின்பாகன் மதநசெங்கோல் நடாவியகூற்றம்" என்று வேதவேத்யத்வத்யோதகமாம்படிவேதமயகருடவாகனனை ஸர்வேஶ்வரன் விஷயத்திலே "நிந்தன்வேழ்க்கை யெழுவிப்பன்" என்று, எல்லார்க்கும் பக்தியையுண்டாக்கி நடத்தாநின்றுகொண்டு தம்தர் ஶநத்திலகப்பட்டவர்கள் ஸம்ஸாரத்துக்கு ம்ருத்யுவாய், (தீயனமருங்குவாராமல்) (அ) "கொன்றுயிருண்ணும்விசாதிப்பகைபசிதீயனவெல்லாம்" என்று, ஶரீரத்தை முடித்து ப்ராணனை யபகரிக்கக் கடவதான வ்யாதி ஶாத்ரவ க்ஷுத்தாதி தோஷங்களும், ஸாம்

(க) (உ) தி - வா - க0. சு. உ. (ங) பெருமாள் - தி. ங. ச.
(ச) தி-வா. உ. க. க. (ரு) (சு) தி - வி - சு. (எ) தி - வி. சு.
(அ) தி-வா. ரு. உ. சு.

மூ. கலியுகம்நீங்கிக்கிதயுகம்பற்றி பட்டெழுபோதறியாதிருந்த ப்ரபாவம்.

கலியுகம் நீங்கி - (பகவத்ருசி விரோதியான) கலியுகம் நிவர்த்தித்து, கிதயுகம்பற்றி - (கேவல வைஷ்ணவ தர்மமே நடக்குமதான) க்ருதயுகம் ப்ரவேசிக்கும்படியாய், பட்டெழுபோதறியாது - திவாராத்ரவிபாகமுமறியாதே, இருந்தப்ரபாவம் - பகவதநுபவைகபரராயிருந்தப்ரபாவம்.

ஸாரிக ஸகலதுக்கஹேதுவான பாபங்களும், (க) "வன்துயரை மருங்கும் கண்டிலமால்" என்னும்படி அருகும் வாராதபடியாய், (உ) (கலியுகம்நீங்கிக் கிதயுகம்பற்றி) (௩) "திரியும் கலியுகம் நீங்கி" என்று, (ச) "భవిష్యత్యధరోత్తరః" "பவிஷ்யத்யதரோத்தரம்"என்கிறபடியே, பதார்த்தஸ்வபாவங்கள் மாறுடும்படி,பணணுவதாய், (ரு) "కలౌ జగత్పతిం విష్ణుం సర్వస్రష్టారమీశ్వరమ్ । నార్చయిష్యన్తి మైత్రేయ పాషణ్డోపహతా జనాః" "கலௌ ஜகத்பதிம்விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீஶ்வரம். நார்சயிஷ்யந்திமைத்ரேயபாஷண்டோபஹதாஜநா꞉" என்கிறபடியே, பகவத்ருசி விரோதியான கலியுகம்போய், (சு) "பெரியகிதயுகம்பற்றி" என்கிறபடியே, கேவலவைஷ்ணவதர்மமே நடக்குமதாய், யுகாந்தரவ்யவதாநமின்றிக்கே, ஒருபேர்கியாக கிதயுகம் ப்ரவேசிக்கும்படியாக, (பட்டெழுபோதறியாதிருந்த ப்ரபாவம்) (எ) "பட்டபோதெழுபோதறியாள் விரைமட்டலர்தண்டுழாய்" என்று பகவத்விஷயத்தில் போக்யதாநுஸந்தாநத்தாலே, (அ) "నన్దన్త్యుదిత ఆదిత్యే నన్దన్త్యస్తమితే రవౌ" "நந்தந்த்யுதித ஆதித்யேநந்தந்த்யஸ்தமிதேரவௌ" என்று,ஆதித்யோதயத்திலேவந்தவாறே, த்ரவ்யார்ஜநகாலம் வந்ததென்றுகளிப்பர்கள். அவனஸ்தமித்தவாறே அபிமத விஷயங்களோடே ரமிக்கைக்கு காலம்வந்ததென்றுகப்பர்களென்றும் (கூ) "ప్రాతర్మూత్రపురీషాభ్యాం మధ్యాహ్నే క్షుత్పిపాసయా । సాయం కామేన బాధ్యన్తే జన్తవో నిశి నిద్రయా" "ப்ராதர்மூத்ரபுரீஷாப்யாம் மத்யாந்ஹே க்ஷுத் பிபாஸயா । ஸாயங்காமேநபாத்யந்தே ஜந்தவோ நிசிநித்ரயா" என்றுஞ் சொல்லுகிறபடியே, நாட்டார்க்குப் புறம்பே காலக்ஷேபத்துக்குடலாய்ச் செல்லுகிறதிவாராத்ர விபாகமுமறியாதே, அகாலகால்யமான தேஶத்தில் போலே, பகவதநுபவைகபரராயிருந்த ப்ரபாவம். இதுக்கு மூலமிப்படியிருந்த ப்ரபாவமென்று வாக்ய ஸம்பந்தம். இத்தால் கீழ்ச்சொன்ன ஶங்கைக்குக் காரணமின்னதென் றெல்லாருமறியும்படி யருளிச்செய்தாராயிற்று. *

(க) பெ-அ. ருச. (உ) தி-வா-ரு. உ. ௩. (௩) ஷை-ஷை-ஷை-ஷை (ச) (ரு) வி-பு-சு. க. சக. (சு) தி-வா-ரு. உ. ௩. (எ) தி-வா. உ. ச. க. (அ) ஸ்ரீரா-ம். அ. (கூ) வி-பு-க. கஎ. சுஉ.

*மூ—(அ) இதுக்குஹேது ஊழிதோறும் சோம்பாதொன்றிப் பொருளென்றளிமகிழ்ந்து

(அ) இதுக்கு - (இவ்வாழ்வாருடைய) இந்தப்ரபாவத்துக்கு, ஹேது - காரணம், ஊழிதோறும் - கல்பம்தோறும், சோம்பாது - சோம்பிக் கைவாங்காதே, ஒன்றி - ஒருப்பட்டு, பொருளென்று-ப்ரயோஜநப் படுமென்று, அளிமகிழ்ந்து - க்ருஷியையுகந்து,

வ்யா. (அ) இவர்க்கிந்த ப்ரபாவத்திற்கடியேதென்று மாகாண்க்ஷையிலே இதற்குஹேது பகவந்நிர்ஹேதுக்கடாக்ஷமென்கிறார் மேல், இப்படி, கடாக்ஷித்தது தானிந்தலோகத்தை யிவரைக்கொண்டு திருத்துகைக்காகவென்னு மத்தையும், இவர்தம்முடைய பூர்வாவஸ்த்தையையும், இவரைக்கடாக்ஷித்த ப்ரகாரத்தையும், விஶதமாகச்சொல்லுகிறதிச்சூர்ணையாலே (இதுக்குஹேது) இவருடைய இந்தப்ரபாவத்துக்கு ஹேது, (ஊழிதோறுஞ் சோம்பாதொன்றிப்பொருளென்றளி மகிழ்ந்து) (க) "ஊழிதோறும்தன்னுள்ளேபடைத்து" என்றும், (உ) "சோம்பாதிப்பல்லுருவையெல்லாம் படர்வித்த" என்றும், (ந) "ஒன்றியொன்றியுலகம்படைத்தான்" என்றும், (ச) "பொருளென்றிவ்வுலகம்படைத்த" என்றும், (ரு) "அளிமகிழ்ந்துலகமெல்லாம் படைத்த" என்றும், சொல்லுகிறபடியே, பண்ணின க்ருஷிகள்தப்பினாலும் சோம்பிக் கைவாங்காதே பின்னையும் க்ருஷி தன்னையே பண்ணுங்கர்ஷகனைப்போலே கல்பந்தோறும் ஸ்ருஷ்டிக்கச் செய்தேஸபலமாகாதிருக்க, முசியாதே மிகவுமொருப்பட்டு, என்னேனுமொருநாள் ப்ரயோஜநப்படுமென்று க்ருஷியையுகந்து ஜகத்ஸ்ருஷ்டியைப்பண்ணி, (முற்றுமாய்நின்று) (சு) "நிலநீரெரிகால் விண்ணுயிரென்றிவைதான் முதலாமுற்றுமாய் நின்ற" என்று, (எ) "తత్సృష్ట్వా తదేవానుప్రావిశత్" "தத்ஸ்ருஷ்ட்வா ததேவா நுப்ராவிஶத்" இத்யாதிப்படியே, ஸ்ருஷ்டமானஜகத்திலே, இவற்றினுடைய வஸ்துத்வ நாமபாக்த்வங்களுக்கும் ப்ரவ்ருத்திநிவ்ருத்தி ஶக்திகளுக்குமாக அநுப்ரவேசித்து, அவற்றைச்சொல்லும் வாசகஶப்தம் தன்னளவிலேபர்யவஸிக்கும்படி ப்ரகாரியாய் நின்று (நாலுரைத்து) (அ) "அன்னமதாயிருந்தங்கற நாலுரைத்தவன்" என்கிறபடியே, கேழ்ப்பாருபஸத்திபண்ணமாட்டாமையாலே, இழக்கவேண்டாதபடி, திர்யக்ரூபேணதன்னைத்தாழவிட்டு நின்று, ஜ்ஞாதவ்யதர்மப்ரகாஶகமான ஶாஸ்த்ரத்தையுபதேசித்து, (யோகுபுணர்ந்து,) (கூ) "குறைவில் தடங்கடல் கோளரவேறித்தன்கோலச் செந்தாமரைக் கண்ணுறைபவன்போலவோர்யோகு புணர்ந்தவொளி மணிவண்ணன்" என்

"மைந்நிலமலராள் மணவாளனே" என்றும், "ஸ்ரீய:பதித்வம் ப்ரதிபாதிதமாயிற்று. இரண்டாம்பத்தால் "எம்பெருமான் நாரணர்க்கு" என்றும், "எம்பிரானெம்மான் நாராயணனாலே" என்றும், "நாரணன்முழுவேழுலகுக்கும்நாதன்" என்றும் "நாராயணத்வம் ப்ரதிபாதிதமாயிற்று. மூன்றாம்பத்தால் "நாண்மலராமடித்தாமரை" என்றும், "அங்கதிரடியன்" என்றும், "அவன்பாதபங்கயம்" என்றும் "அன்றுதேர்கடவியபெருமான்கனைகழல்" என்றும், "மூவுலகம்தொழுதேற்றும் சீரடியான்" என்றும், நாராயணனுடைய ஸர்வலோக ஶரண்யமான சரணாரவிந்தயுகளம் ப்ரதிபாதிதமாயிற்று. நாலாம்பத்தால்: — "இலங்கைநகரம்பெரியுய்த்தவர்" என்றும், "வல்வினைதீர்க்கும்கண்ணனை" என்றும், "தொல்வினைதீர" என்றும், "வெய்யநோய்கள்முழுதும் வியன்ஞாலத்துவீயவே"என்றும், "மேவிநின்று தொழுவார்வினைபோக" என்றும், "பிறந்தும்செத்தும் நின்றிடரும்பேதமை தீர்ந்தொழிந்தேன்" என்றும், "நோயேமூப்பிறப்புப் பிணியேயென்றிவையொழிய" என்றும், "வேட்கையெல்லாம்விடுத்து உன் கூட்டரிய திருவடிக்கள்கூட்டினை" என்றும், "அஃதேயுய்யப்புகுமாறு" என்றும், "உய்வுபாயம்மற்றின்மைதேறி" என்றும், அநிஷ்ட நிவ்ருத்தீஷ்டப்ராப்திகரத்வ லக்ஷணமான ப்ராபகத்வம்ப்ரதிபாதிதமாயிற்று. ஐந்தாம்பத்தால்:—"தமியேனுக்கருளாய்" என்றும், "ஆறெனக்குநின்பாதமேசரணாக" என்றும், "உன்னாலல்லால்" என்றும், "கழல்களவையே" ஶரணாகக்கொண்ட" என்றும், "நம்பெருமானடிமேல்சேமங்கொள் தென்குருகூர்ச்சடகோபன்"என்றும், நாகணைமிசைநம்பிரான்ஶரணே ஶரண்நமக்கு" என்றும், "நாடொறுமேகசிந்தயனாய்" என்றும் ப்ரார்த்தனுகர்ப்பவிஸ்ரம்பம் ப்ரதிபாதிதமாயிற்று. ஆறாம்பத்தால்: —"திருமாமகளிருந்தாம்மலிந்திருந்து" என்றும், "அடிமைசெய்வார் திருமாலுக்கே" என்றும், "ஒசிந்தவொண்மலராள்கொழுநன்" என்றும், "என்திருமார்வர்க்கு" என்றும், "கோலத்திருமாமகளோடுன்னை" என்றும், கைங்கர்யப்ரதாநார்த்தமான நித்யஸம்பந்தம் ப்ரதிபாதிதமாயிற்று. ஏழாம்பத்தால்:— "கன்னலேயமுதே" என்றும், "கொடியேன்பருகி கின்னமுதே" என்றும், "அலைகடல்கடைந்தவாரமுதே" "திருமாலின்சீரிறப்பெதிர்காலம் பருகிலுமார்வனே" என்றும், "இவ்வேழுலகையின்பமபயக்க" என்றும், கைங்கர்யப்ரதிஸம்பந்தியான ஈஶ்வரனுடைய நிரதிஶயபோக்யதை ப்ரதிபாதிதமாயிற்று. எட்டாம்பத்தால்:— "அடியனேன் பெரியவம்மானே" என்றும் "விண்ணவர் கோன்நங்கள்கோனே" என்றும், "அமர்ந்தநாதனே" என்றும், "மூவுலகாளி" என்றும், "நேர்பட்டநிறைமூவுலகுக்கும்நாயகன்" என்றும், ஸர்வஸ்வாமித்வம் ப்ரதிபாதிதமாயிற்று. ஒன்பதாம்பத்தால்:— "பண்டைநாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்கொண்டு நின்கோயில்சீய்த்து" என்றும், "நின்தீர்த்தவடிமைக்குற்றேவல்" என்றும், "துடர்ந்துகுற்றேவல் செய்து" என்றும், "கொடுவினை

மூ—(சூஉ) மூன்றில் சுருக்கியவைந்தையும் உயர்

(அ) மூன்றில் சுருக்கிய-மூன்றக்ஷரத்தில் சுருக்கின, ஐந்தையும் - ஐந்தர்த்தத்தையும், உயர் - உயர்வற,

யேனும்பிடிக்க" என்றும், "உறுவதிதுவென்றனக்காட்பட்டு "என்றும், "ஆட்கொள்வானொத்து" என்றும், நானும் மீளாவடிமைப் பணிசெய்யப் புகுந்தேன்" என்றும், நித்யகைங்கர்யம் ப்ரதிபாதிதமாயிற்று. பத்தாம்பத்தால்:—"துயர்கெடுங்கடிது" என்றும், "கெடுமிடராய" என்றும், "எழுமையுமேதஞ்சாரா" என்றும், "தீரும் நோய் வினைகளெல்லாம்" என்றும், "இப்பிறப்பறுக்கும்" என்றும், "உன்தன்திருவுள்ளமிடர் கெடுந்தோறும்' "நாங்கள் வியக்கவின்புறுதுமெம்பெண்மையாற்றேம்" என்றும், பிணியொன்றும், சாராப்பிறவிகெடுத்தாளும்" என்றும், "பிறவித்துயர் கடிந்தோம்" என்றும், "விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்" என்றும், "அமரா வினைகளே" என்றும், "கடுநரகம்புகலொழித்த" என்றும், "பிறவிகெடுத்தேன்" என்றும், "தடுமாற்றவினைகள் தவிர்த்தான்" என்றும், "அந்திதொழும்சொல்லு" என்றும், "அவாவற்றுவீடுபெற்ற" என்றும், கைங்கர்ய ப்ரதிபந்தக நிஶ்ஶேஷ நிபர்ஹணம் ப்ரதிபாதிதமாயிற்று. இப்படி, ஸ்ரீயஃபதித்வப்ரமுகங்களாய் கைங்கர்யப்ரதிபந்தக நிஶ்ஶேஷநிபர்ஹணபர்யந்தங்களாயிருந்துள்ள, உபாதேயார்த்தங்களை ப்ரதிபாதிக்கக்கடவதாயிருந்துள்ளவாக்யத்வயமும், திருவாய்மொழியும், பகவச்சரணார்த்திகளாய் அநந்யோபாயராயிருக்கு மதிகாரிகளுக்கு காலக்ஷேபஹேதுவாகவும், போகஹேதுவாகவும், ஈஶ்வரப்ரீதிஹேதுவாகவும், யாவச்சரீரபாதமநுஸந்தேயமென்றருளிச்செய்ததிப்ரபந்தம். இப்படி திருவாய்மொழியினுடைய த்வயார்த்தப்ரதிபாதகத்வத்தை விஶதமாக வாசார்யர்களருளிச்செய்து வைக்கையாலே ஸ்வப்ரபந்தத்தில் வக்தவ்யாம்ஶத்தை தத்ப்ரபந்தத்திலே தர்சிப்பித்தாராயிற்று. *

வ்யா. (சூஉ) ஆக, இப்படித்வயார்த்த ப்ரதிபாதகதயா திர்க்கஶரணாகதியாயிருக்கிற திருவாய்மொழிக்கு மற்றுமாசார்யர்களருளிச்செய்யுமர்த்த யோஜனைகளை அருளிச்செய்கிறார். (மூன்றில்சுருக்கிய) என்று துடங்கி, அதாவது:— மந்த்ர ஶ்லோகங்களில் ஸங்க்ரஹேணோக்தங்களான வர்தவிஶேஷங்களைத்வயத்திலேவிவரிக்குமாப்போலே, பூர்வப்ரபந்தத்ரயத்திலும் ஸங்ரஹேணசொல்லப்பட்ட அர்த்தபஞ்சகத்தையும், ஶ்ருதிச்சாயையாலே அந்வயரூபேணஸ்வாநுபவ முகத்தாலே பரத்வத்திலே பரத்வத்தை ப்ரதிபாதித்த (௧) "உயர்வரஉயர்நலமும்" இதிஹாஸபுராணப்ரக்ரியையாலே, அந்வயவ்யதிரேகங்களிரண்டாலும், பரோபதேஶமுகத்தாலே அவதாரத்திலே பரத்வத்தைப்ரதிபாதித்த

(௧) தி·வா. ௧. ௧. ௧.

மூ. திண் அணை யொன்று பயிலேறு கண் கருவீடு சொன்ன லொருக்கொண்ட நோற்ற நாலும் எம்மாவொழி நெடுவே யென்கிற விருபதிலே

திண் - திண்ணன்வீடு, அணை - அணைவதரவணை, ஒன்று - ஒன்றுந்தேவு, பயில் - பயிலுஞ்சுடரொளி, ஏறு - ஏறாளுமிறையோனும், கண் - கண்கள்சிவந்து, கரு - கருமாணிக்கமலை, வீடு - வீடுமின்முற்றவும், சொன்னல் - சொன்னால்விரோதம், ஒரு - ஒருநாயகம், கொண்ட - கொண்ட பெண்டிர், நோற்றநாலும் - நோற்றநோன்பு, ஆராவமுது, மானேய்நோக்கி, பிறந்தவாறு, இவைநாலும், எம்மா - எம்மாவீடு, ஒழி-ஒழிவில்காலம், நெடு - நெடுமாற்கடிமை, வேய் - வேய்மருதோளிணை, என்கிறவிருபதிலே - இவையாகிறதிருவாய்மொழிகளிருபதுகளிலும்,

(க) "திண்ணன்வீடும்" மோக்ஷப்ரதத்வகதநத்தாலே பரத்வத்தைப் ரதிபாதித்த (௨) "அணைவதரவணையும்" அர்ச்சாவதாரத்திலே பரத்வத்தை ப்ரதிபாதித்த (௩) "ஒன்றுந்தேவும்" ஆகிற, நாலுதிருவாய்மொழியாலும், பரஸ்வரூபமும், பகவச்சேஷத்வத்திலும் தத்காஷ்டையான பாகவத சேஷத்வமே ஆத்மாவுக்குத்தேசியமென்று ப்ரதிபாதித்த (௪) "பயிலும் சுடரொளியும்" சேஷத்வபஹிர்ப் பூதங்களான ஆத்மாத்மீயங்கள் த்யாஜ்யமென்கிற வ்யதிரேகத்தாலே சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமென்று ப்ரதிபாதித்த (௫) "ஏறாளுமிறையோனும்" பகவானுக்கிவ் வாத்மவஸ்து ப்ரகாரதயா சேஷமாய் ப்ரக்ருதேः பரமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாயிருக்குமென்னுமத்தைப்ரதிபாதித்த (௬) "கண்கள்சிவந்தும்" அந்யசேஷத்வ ப்ரஸங்கமு மஸஹ்யமாம்படியான அதின் அநந்யார்ஹத்வத்தைப்ரதிபாதித்த (௭) "கருமாணிக்கமலையும்" ஆகிற நாலுதிருவாய்மொழியாலும் ஸ்வஸ்வரூபமும், பகவத்வ்யதிரிக்த விஷயங்களைப்பற்றுகைக்குடலான அஹங்காரமமகாரங்கள் த்யாஜ்யமென்ற (௮) "வீடுமின்முற்றவும்" அஸேவ்யஸேவைத் த்யாஜ்யமென்ற (௯) "சொன்னால்விரோதமும்" ஐச்வர்யகைவல்யங்கள் த்யாஜ்யமென்ற (க0) ஒருநாயகமும்" சரீரஸம்பந்த நிபந்தனமாகவரும் பரிக்ரஹங்கள் த்யாஜ்யமென்ற (கக) "கொண்டபெண்டிரும்" ஆகிற நாலு திருவாய்மொழியாலும் விரோதிஸ்வரூபமும், "நோற்றநோன்பிலேன்" என்று, ஆகிஞ்சின்யபூர்வகமாக "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்ற, (க௨) 'நோற்றநோன்பும்' "களைவாய்துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்" என்று, அநந்யகதித்வபூர்வகமாக "கழல்களவையேசரணாகக்கொண்ட" என்ற (க௩) "ஆராவமுதும்"

(க) ஷை ௨. ௨. க. (௨) ஷை அ. க. (௩) ஷை ௪. க0. க. (௪) ஷை ௩. எ. க. (௫) ஷை ௪. அ. க. (௬) ஷை அ. அ. க. (எ) ஷை ௯. க. (அ) ஷை க. ௨. க. (௯) ஷை ௩. ௯. க. (க0) ஷை ௪. க. க. (கக) ஷை ௯. ௯. க. (க௨) ஷை ௫. எ. க. (க௩) ஷை ௫. அ. க.

௫. விஶதமாக்கி எண்பதிலே பரப்புகையாலே ஐந்தையுமருளினன் வீடுபெற்றவென்கையாலே ஐந்திலு மிரண்டையும் தொழுது களித்தேன்சொல்லுப்பெற்றேன் பணிசெயென்கிற .

விஶதமாக்கி - பாக்கச்சொல்லி, எண்பதிலே - எண்பது திருவாய்மொழிகளிலே, பரப்புகையாலே - விஸ்தரிப்பிக்கையாலே, ஐந்தையும் - அர்த்தபஞ்சகத்தையும், அருளினன் - க்ருபைபண்ணினன், வீடுபெற்ற - மோக்ஷத்தையடைந்த, என்கையாலே - என்றுசொல்லுகையாலே, ஐந்திலும் - அர்த்தபஞ்சகத்திலும், இரண்டையும் - உபாயோபேயங்களிரண்டையும், தொழுது - களித்தேன், சொல்லுப்பெற்றேன், பணிசெயென்கிற - இவைகளாலே சொல்லப்பட்ட,

---

"வைகலும்வினையேன்மெலிய" என்று, பக்திபாரவஶ்யம் முன்னாக "நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச்சடகோபன்" என்ற (௧) "மானேய் நோக்கும்" "எனதாவியை நின்று நின்றுருக்கியுண்கின்ற" என்று, தரித்துநின்றவன் குணங்களை யநுஸந்திக்கமாட்டாதசைநில்யம் செல்லாநிற்கிற "நாகணைமிசைநம்பிரான் சரணேசரண்நமக்கென்று நாடோறுமேகசிந்தயனாய்" என்ற, (௨) "பிறந்தவாறும்" ஆகிற நாலு திருவாய்மொழியாலும் உபாய ஸ்வரூபமும், "தனக்கேயாக" என்று, கைங்கர்யத்தில் ஸ்வார்த்ததா நிவ்ருத்தியையபேக்ஷித்த" (௩) "எம்மாவீடும்" ஸர்வகாலாதி விசிஷ்டமான ஸகலஶேஷவ்ருத்திகளையும் பண்ணவேணுமென்று ப்ரார்த்தித்த (௪) "ஒழிவில்காலமும்" அதுதான் பாகவதகைங்கர்யபர்யந்தமாகவேணுமென்று மநோரதித்த" (௫) "நெடுமால்கடிமையும்" அது தன்னில், பரஸம்ருத்யேக ப்ரயோஜனத்வத்தைச் சொன்ன (௬) "வேய்மருதோளிணையும்" ஆகிற, நாலு திருவாய்மொழியாலும் பலஸ்வரூபமாகக்கொண்டு இருபது திருவாய்மொழியிலே விஶதமாகப்ரதிபாதித்து, மற்றை யெண்பது திருவாய்மொழியாலும் அது தன்னையே விஸ்தரிக்கையாலே அர்த்தபஞ்சகத்தையும், இப்ரபந்தத்துக்கு ப்ரமேயமென்னும், "மயர்வறமதிநலமருளினன்" என்றுதுடங்கி (௭) "அவாவற்றுவீடுபெற்ற" என்று, தலைக்கட்டுகையாலே அவ்வைந்திலும் வைத்துக்கொண்டு ப்ரதானமான உபாயோபேயங்களிரண்டையும், இதுக்கு ப்ரமேயமென்றும், தொழுதெழென்மனனே" (௮) "விருப்பேபெற்றமுதமுண்டுகளித்தேன்' (௯) "மேலைத்தொண்டுகளித்தந்தி தொழுஞ் சொல்லுப்பெற்றேன்" என்று, சொல்லப்படுகிற, பத்தாஞ்ஜலிபுடத்வ ஹ்ருஷ்டத்வ நமயித்யேவவாதித்வங்களாகிற முக்தலக்ஷணத்தா

---

(௧) ஷ ௫. ௬. ௧. (௨) ஷ ௫. ௧௦. ௧. (௩) ஷ ௨. ௯. ௧. (௪) ஷ ௩. ௩. ௧. (௫) ஷ ௮. ௧௦. ௧. (௬) ஷ ௧௦. ௩. ௧. (௭) தி-வா. ௧௦. ௧௦. ௧௧. (௮) ஷ. ௧௦. ௬. (௯) ஷ ௭.

மூ. முக்தலக்ஷணவ்ருத்தியாலே இரண்டிலொன்றையுமிதுக்கு ப்ரமேயமென்னும்.

மூ—(௬௩) ரஹஸ்யத்துக்கோரெழுத்துமதுக்கோருருவும் போலேயா னவற்றிலே

முக்த - முக்தர்களுடைய, லக்ஷண - அடையாளமாயிருக்கிற, வ்ருத்தி யாலே - வ்யாபாரத்தாலே, இரண்டில் - உபாயோபேயங்களிரண்டிலும், ஒன்றையும் - உபேயமொன்றையுமே, இதுக்கு - இப்ரபந்தத்துக்கு, ப்ரமேயமென்னும் - ப்ரமேயமென்றுசொல்லும்,

(அ) ரஹஸ்யத்துக்கு - (திருமந்த்ரமாகிற) ரஹஸ்யத்துக்கு, ஒரெழுத்தும் - ஓ ரக்ஷரமும், அதுக்கு - அவ்வக்ஷரத்துக்கு, ஓருருவம்போலே - ப்ரக்ருதியான வகாரம்போலே, ஆனவற்றிலே - ஸங்க்ரஹமான முதற்பாட்டுக்களிலே,

லும், விபங்யவஃ? என்கிற, அவர்களைப்போலே (க) "சொற்பணிசெயாயிரம்" என்று சொல்லப்படுகிற, வாசிகவ்ருத்தியாலும், அவ்விரண்டிலும் வைத்துக்கொண்டு உபேயமொன்றையுமே இதுக்கு ப்ரமேயமென்று சொல்லுமென்கை. (இருபதிலேவிபூதமாக்கி எண்பதிலேபரப்புகையாலே ஐந்தையுமிதுக்கு ப்ரமேயமென்னும்.) என்றவிது, இப்ரபந்தங்களில் ஸூக்திகள் ப்ராப்யனான வெம்பெருமானுடைய ஸ்வரூப ப்ரதிபாதநபரமாயிருக்கும் சில, ப்ராப்தாவான ப்ரத்யகாத்ம ஸ்வரூப விஷயமாயிருக்கும்சில, ப்ராப்த்யுபாயத்தைச்சொல்லும்சில, பலத்தைச்சொல்லும் சில, ப்ராப்திவிரோதியைச்சொல்லும்சில, அவசிஷ்டமானவை இவற்றுக்குபபாதகங்களாயிருக்குமென்று ஈட்டில்யோஜித்தக்ரமம். உபாயோபேயங்களிரண்டையுமிதுக்கு ப்ரமேயமென்னுமென்றவிது இவையிரண்டுமே ப்ரதாநப்ரமேயம். இவ்வுபாயோபேயங்களுக் கதிகாரியின்னானென்கைக்காக ப்ரத்யகாத்ம ஸ்வரூபமும், உபாயபூதனும் உபேயவிஷயமும் இன்னாரென்கைக்காக பரஸ்வரூபமும், உபேயப்ரதிபந்தகமாய் உபாயநிவர்த்யமாயிருக்குமதின்னதென்கைக்காக விரோதி ஸ்வரூபமும்சொல்லுகிற வித்தனையென்று நினைத்து உபேயமொன்றுமிதுக்குப்ரமேயமென்னுமென்றவிது இவற்றிலுத்தேச்யம் பலம். ததர்த்தமாகமற்றுள்ளநாலர்த்தமுஞ்சொல்லுகிறது என்று ஈட்டில் சொன்னபடியேகைங்கர்யமே ப்ரதாநம் மற்றைநாலும் சொன்னது கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியையும் ததாச்ரயத்தையும், தத்விரோதியையும், அவ்விரோதிநிவர்த்தகத்தையும் அறிவிக்கைக்காக வாகையாலே தச்சேஷமாகச்சொன்னவித்தனை யென்றுநினைத்து. *

வ்யா. (௬௩) இனிப்ரதமசரம ப்ரபந்தங்களினுடைய ஸங்க்ரஹங்களான முதற்பாட்டுக்களில் ப்ரதிபாத்யார்த்தங்களை ஸ்பஷ்டமாகவருளிச்செய்கிறார். (ரஹஸ்யத்துக்கு) என்றுதொடங்கி, அதாவது:— ஓரெழுத்து ஓருருவென்னும்படி திருமந்த்ரமாகிற ரஹஸ்யத்துக்கு

(க) ஷி க. க0. கக.

௩. இமையோரதிபதி அடியேன்மனனேபொய் மயர்வு பிறந்த ருளினன் விண்ணப்பம் தொழு தெழன்ற பஞ்சகத்தோ டே அவித்யாதிஸ்வரூப

இமையோர் - இமையோர்தலைவா, அதிபதி - அயர்வறுமமரர்களதி பதி, அடியேன்-அடியேன், மனனே - தொழுதெழன்மனனே, பொய் - பொய்நின்றஞானம், மயர்வு - மயர்வற, பிறந்து - எந்நின்ற யோனியு மாய்ப்பிறந்தாய், அருளினன் - மதிநலமருளினன், விண்ணப்பம் - அடி யேன் செய்யும் விண்ணப்பம், தொழுதெழு - தொழுதெழு, என்ற- இவைகளாலே சொல்லப்பட்ட, பஞ்சகத்தோடே - அர்த்தபஞ்சகத் தோடே, அவித்யாதி - அவித்யை முதலானவைகளுடைய, ஸ்வரூப- ஸ்வரூபம்,

ஸங்க்ரஹமாய் "ஓமித்யேகாக்ஷரம், என்றேகாக்ஷரமாயிருக்கிறப்ரண வமும், (க) "[illegible]" "தஸ்யப்ரக்ருதிலீநஸ்ய" என்கிறப டியே, அந்தப்ரணவந்தனக்கு ஸங்க்ரஹமாயிருக்கிற அகாரமும்போ லே, திருவிருத்தம் திருவாய்மொழியாகிற ப்ரபந்தங்களுக்கு ஸங்க்ரஹ ங்களான முதற்பாட்டுக்களிலே "இமையோர்தலைவா" என்றும், "அயர் வறுமமரர்களதிபதி" என்றும், ஸூரிஸேவ்யமாய் ஸர்வாதிகமாயிருக் கும் பரஸ்வரூபத்தையும், "அடியேன்" என்றும், "என்மனனே" என் றும், ஶேஷபூதமாய் பரிஶுத்தாந்தஃகரணமாயிருக்கும் ஸ்வஸ்வரூபத் தையும், "பொய்நின்ற ஞானமும்பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும்" என்றும், "மயர்வு" என்றும், அவித்யாதிகளான விரோதிஸ்வரூபத்தை யும், "உயிரளிப்பானென்னின்ற யோனியுமாய்ப்பிறந்தாய்" என்றும் "மதிநலமருளினன்" என்றும், லோகரக்ஷணார்த்தமாக அநேகாவதாரங்க ளைப்பண்ணின ஸர்வேஶ்வரனுடைய க்ருபையே உபாயமென்று உபாய ஸ்வரூபத்தையும் "செய்யும்விண்ணப்பம்" என்றும், "தொழுதெழு" என்றும், ஶேஷிவிஷயத்தில்கரணத்ரயத்தாலும், பண்ணும்கைங்கர்யமே பரமபுருஷார்த்தமென்று பலஸ்வரூபத்தையுமாகக்கொண்டு ஸங்க்ரஹி த்துச்சொன்ன அர்த்தபஞ்சகத்தோடே "பொய்நின்றஞானம்" இத்யாதி யாலே, அவித்யாதிகளைச்சொல்லுகிற வளவில் உத்பத்திவிநாஶாதியோ கத்தாலே அஸத்யஶப்தவாச்யமான அசேதநவிஷயத்திலாத்மஜ்ஞாந மும், அந்ததேஹாத்மாபிமானமடியான ஸாம்ஸாரிகதுஷ்கர்மப்ரவ்ருத்தி யும், அக்கர்மமடியாகவரக்கடவதானமாம்ஸாஸ்ருகாதிமலரூபதேஹஸம் பந்தமுமென்றவற்றினுடையஸ்வரூபங்களும், விப்ரதிபத்திஹேதுத்வம், ஸம்ஸாரஹேதுத்வம் ஸ்வரூபதிரோதாயகத்வம் உத்தரோத்தரங்களில் பூர்வபூர்வகாரணத்வம் "இனியாமுறாமை" என்கையாலே, அவற்றினநா தித்வம், ஸோபாதிகத்வம் "மயர்வறமதிநலமருளினன்" என்கையாலே,

(க) தைத்ரீயகே - நாராயணே இப்பக்கத்திலும் ௩௦௬ - ம் பக்கத்திலுமிருக் கிற பாசுரங்கள், தி - வா. க, க. க - ம். தி - வி. க - மே.

மூ. ஸ்வபாவாத்மேஶ்வரபந்தரக்ஷண க்ரமகுணவிக்ரஹவி பூதியோக ததீயாபிமாநோபதேஶ விஷயாந்யாபதேஶ ஹேத்வாதிகளும் ஸங்க்ரஹீதம்.

மூ—(௬௪) அடிதொழுதெழென்றவிதிலே வஸ்துநிர்த்தேஶ

ஸ்வபாவ - ஸ்வபாவம் - ஆத்மேஶ்வர - ஜீவாத்மா யீஶ்வரன் இவர்களுடைய, பந்த - ஸம்பந்தம், ரக்ஷணக்ரம - ரக்ஷணத்தின்க்ரமம், குண- குணங்கள், விக்ரஹ - விக்ரஹங்கள், விபூதி - விபூதிகள், யோக - ஸம்பந்தம், ததீய - பாகவதருடைய, அபிமான - அபிமானம், (இவைகளுடைய) உபதேஶ - உபதேஶத்தை, விஷய - விஷயமாக உடைய, அந்யாபதேஶ - அந்யாபதேஶத்துக்கு, ஹேத்வாதிகளும் - ஹேது முதலானவைகளும், ஸங்க்ரஹீதம் - ஸங்க்ரஹிக்கப்பட்டவைகள்.

(அ) அடி - திருவடிகளை, தொழுது - ஸேவித்து, எழு - உஜ்ஜீவிக்கக்கடவை, என்றவிதிலே - என்கிறவிடத்திலே, வஸ்துநிர்த்தேஶ- வஸ்துநிர்த்தேஶம்,

அவற்றின் அஜ்ஞாநநிவர்த்யத்வம் முதலான ஸ்வபாவங்களும் 'இமையோர்தலைவா' அடியேன், அதிபதி அடிதொழுது" என்கையாலே ஆத்மாவுக்கு மீஶ்வரனுக்குமுண்டான ஶேஷஶேஷிபாவஸம்பந்தமும், "உயிரளிப்பானென்னின்ற யோனியுமாய்ப்பிறந்தாய்" என்றும், "மயர்வற மதிநலமருளினன்" என்றும், அநேகாவதாரங்களைப்பண்ணி ரக்ஷிக்கும் படியையும்,ஸம்ஸாரஹேதுவான அஜ்ஞாநத்தைப்போக்கிஉஜ்ஜீவநஹேதுவான ஜ்ஞாநபக்திகளைத் தன்க்ருபையாலே தந்தபடியையும்சொல்லுகையாலே ஈஶ்வரனுடைய ரக்ஷணக்ரமமும், "உயர்வறஉயர்நலம், துயரறுசுடரடி,இமையோர், அயர்வருமமரர்கள்" என்று, குணவிக்ரஹ விபூதிகளும், அந்தஸூரிகளை முன்னிடுகையாலே, ததீயாபிமாநமும், 'நின்றுகேட்டருளாய்' "தொழுதெழென்மனனே" என்று, நெஞ்சுபோலேபவ்யனை ஈஶ்வரனும் அப்படிபவ்யரானூரும் உபதேஶவிஷயமென்றும், "நலமருளினன்" என்று, பக்தியைத்தந்தானென்கையாலே அந்யாபதேஶத்துக்குஹேதுவான பக்தியும் முதலானவர்த்தங்களும், ஸங்க்ரஹேண சொல்லப்பட்டனவென்கை. (அந்யாபதேஶஹேத்வாதிகளும்) என்றவிடத்தில், ஆதிஶப்தத்தாலே, மற்றும்வேதாந்ததாத்பர்யங்களான அர்த்தங்கள் பலவுமிவற்றில் ஸங்க்ரஹீதங்களென்னுமிடமும் காட்டப்பட்டது. *

வ்யா. (௬௪) அவிக்நபரிஸமாப்தி ப்ரசயகமநார்த்தமாக ப்ரபந்தாரம்பத்திலே ஆசரிக்கப்படும் ஆசீர்நமஸ்க்ரியா வஸ்துநிர்த்தேஶங்களாகிறமங்களாசாரங்களிதிலுமுண்டோ ? என்னுமாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார். (அடிதொழுது) இத்யாதி, அதாவது:— 'துயரறுசுடரடி' என்கையாலே வஸ்துநிர்த்தேஶமும், 'தொழுது' என்கையாலே

௬௩. நமஸ்காராசீஸ்ஸுக்களும் முண்டு.

௬௩—(௬௫) ஸாதுஸநம் நண்ணுமயர்வறமாஸறுக்கும் தெருள்கொள் ளப் பத்தராவரடிமையற

நமஸ்கார - நமஸ்காரம், ஆசீஸ்ஸுக்களும்-ஆசீரூபமங்களமும், உண்டு- இருக்கின்றன.

(அ) ஸாதுசநம் - ஸாதுஸநத்தைநலியுங் கஞ்சனைச்சாதிக்கைக்குப் போல, நண்ணு - நண்ணுவசுரர் நலிவெய்தும்படி (யவதரிக்கையாலும்), மயர்வற - அஜ்ஞாநமறும்படியும் மதிநலமுண்டாம்படியும் அவனவதரிக்குமாப்போலே, மாசறுக்கும் - உள்ளத்துமாசறுக்கு மதாகையாலும், தெருள்கொள்ள - ஜ்ஞாநோத்பாதகமாகச் சொன்னதாகையாலும், பத்தராவர் - பத்தராவர் துவளின்றியே யென்று பக்திவர்த்தகமாகையாலும், அடிமையற-உனக்கடிமையறக்கொண்டாயென்று அறவடிமைகொண்டாப்போலே,

---

நமஸ்காரமும், 'எழு' என்கையாலே ஆசீஸ்ஸுமுண்டென்றபடி. இப்படிநாமொரு ப்ரபந்தம் பண்ணவேணுமென்று கருதியிருந்து இவர் செய்ததன்றிக்கே, நிரம்பினவேரி நெளிக்குமாப்போலே நிமிகிற வாய்க்கரையை மிடைந்துபுறப்பட்ட சொற்கள் இவர்பாசுரத்தாலே லோகத்தைத் திருத்தக்கோலுகிற ஸர்வேஶ்வரன் நினைவாலே ஸர்வலக்ஷணோபேதமாய்த்தலைக்கட்டின ப்ரபந்தமாகையாலே, இம்மங்களாசாரங்களும் கோல்விழுக்காட்டாலே பலித்தனவித்தனையாகையாலேயாயிற்று 'அடிதொழுதெழு' என்றதிலே இவையும்பண்ணப்பட்டன வென்னுதே உண்டென்றுவிட்டது. ❋

வ்யா. (௬௫) இனிமேலிப்பிரபந்தம் பத்துப் பத்தாகவவதரித்ததின் ப்ரயோஜநத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார். (சாதுசனம்) என்றுதுடங்கி அதாவது :— (க) "சாதுசனத்தை நலியும் கஞ்சனைச்சாதிப்பதற்கு" "பரித்ராணாய" இத்யாதிப்படியே, ஸாதுபரித்ராண துஷ்க்ருத்விநாஶார்த்தமாகவவனவதரித்தாப்போலே இதுவும், (உ)"நண்ணுவசுரர்நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த" என்றுபகவத்ப்ரதிபக்ஷபூதரான வாஸுரப்ரக்ருதிகள் மண்ணுண்ணவும் பகவத்பக்திபரரான தேவப்ரக்ருதிகள்வாழவுமவதரித்ததென்றும் "மயர்வறமதிநலமருளினன்" என்று, அவநஜ்ஞாநத்தைப்போக்கி,ஜ்ஞாநபக்திகளைக் கொடுக்குமாப்போலே, இதுவும் (௩) "ஒலிபுகழாயிரத்திப்பத்துள்ளத்துமாசறுக்கும்" என்று, மனதுக்கு மாசான அஜ்ஞாநத்தைப்போக்கி, (௪) "தெருள்தொள்ளச் சொன்ன ஓராயிரம்" என்றும், (௫) "தூயவாயிரத்திப்பத்தால் பத்தராவர்" என்றும், சொல்லுகிறபடியே,ஜ்ஞானபக்திகளைக் கொடுக்குமென்றும்,(௬)"அடிமையறக்கொண்டாய்" என்று

(க) தி-வா. ௩. ௫. ௫. (உ) ௧0. எ. ௫.(௩) ௫. உ. ௧௧. (௪) உ. ௧0. ௧௧. (௫) ௫. ௪. ௧௧. (௬) ௪. ௬. ௬.

மூ. உரியநோய்க ளறுக்குமுடைந்தேற்றரும் வானின்தாளின் கீழ் அடிக்கீழின்பக்கதிபயக்கு மூடுபுக்கு மூவுலகுமுருகா நிற்பரென்னும் ஸாம்யத்தாலேவாச்யன்

உரிய - உரியதொண்டராக்குமதாகையாலும், நோய்களறுக்கும் - நோய்களறுக்கும் மருந்தாமாப்போலே, உடைந்து - உடைந்து நோய்களை யோடுவிக்கையாலும், ஏற்றரும் - ஏற்றரும்வைகுந்தத்தை யருளுமாப்போலே, வானின் - வானின்மீதேற்றியருளுகையாலும், தாளின்கீழ்- தன்தாளின்கீழ் சேர்த்துசேமம் செய்யுமாப்போலே, அடிக்கீழ் - அருளியடிக்கீழிருத்துகையாலும், இன்பக்கதி - அவனுஶ்ரிதர்க்கு இன்பகதிசெய்யுமாப்போலே, இன்பம்பயக்கும் - எங்கனேசொல்லிலுமின்பம் பயக்குமதாகையாலும், ஊடுபுக்கு - ஊடுபுக்கெனதாவியை உருக்குமாப்போலே, மூவுலகும் - மூவுலகுமுருகும்படியானதாகையாலும், உருகாநிற்பர்-ஊற்றின்கண் நுண்மலற்போலுருகாநிற்பராகையாலும், என்னும் ஸாம்யத்தாலே - ஏவம்விதத்தாலே, வாச்யன் - வாச்யனுனவெம்பெருமானுடைய,

தனக்கநந்யார்ஹ ஶேஷமாகவவனங்கீகரிக்குமாப்போலே இதுவும், (க) "உரியதொண்டராக்குமுலக முண்டார்க்கே" என்று, ததநந்யார்ஹஶேஷமாக்கு மென்றும், (உ) "நோய்களறுக்கும்மருந்தே" என்கிறபடியே, அவன்ஸம்ஸார வ்யாதிபேஷஜமாமாப்போலே இதுவும், (௩) "உடைந்துநோய்களை ஓடுவிக்கும்" என்று, ஸாம்ஸாரிகஸகலதுரிதங்களையும் உருமாய்ந்துபோம்படி பண்ணுமென்றும் (ச) "ஏற்றரும்வைகுந்தத்தையருளும் நமக்கு" என்று, ஸ்வயத்நத்தால், ப்ராபிக்க வரிதான பரமபதத்தை அவன் கொடுக்குமாப்போலே இதுவும் (ரு) "வானின்மீதேற்றியருள்செய்து" என்று, பரமபதப்ராப்தியைப்பண்ணிவிக்குமென்றும், (சூ) "தன்தாளின்கீழ்சேர்த்து" என்கிறபடியே, அவன்பாதோபதாநம்போலத் திருவடிகளின்கீழ்சேர்த்துக்கொள்ளுமாப்போலே இதுவும், (எ) "அருளியடிக்கீழிருத்தும்" என்று, அவன்திருவடிகளின்கீழே சேர்த்துவைக்குமென்றும், (அ) "இன்பக்கதிசெய்யும்', என்கிறபடியே, அவன்தன்னோடேநவயித்தார்க்குத் தன்னுடைய அநுபவமாகிற நிரதிஶயாநந்தயுக்தமானப்ராப்யத்தைக் கொடுக்குமாப்போலே' இதுவும், (கூ) "எங்ஙனே சொல்லிலு மின்பம்பயக்கும்" என்று, ஸ்வாந்விதசேதநர்க்குபகவதநுபவாநந்தத்தையுண்டாக்குமென்றும், (க0) "ஊடுபுக்கெனதாவியையுருக்கியுண்டிடுகின்ற நின்தன்னை" என்கிறபடியே அவன்தன்னை யநுபவிக்கவிழிந்தாரைத்ரவத்ரவ்யமாம்படியுருக்குமாப்போலே இதுவும், (கக) "ஒன்பதோடொன்றுக்கு மூவுலகுமுருகும்

(க) தி-வா. சு. கூ. கக. (உ) கூ. ௩. ௩. (௩) க. எ. கக. (ச) ஷ. எ. சு. க0, (ரு) அ. ச. கக. (சு) எ. ரு. க0. (எ) அ. அ. கக. (அ) எ. ரு. கக. (கூ) எ. கூ. கக. (க0) ரு. க0. க0. (கக) கூ. ரு. கக.

மூ. பத்தினையதோற்றம்போலே தோற்றங்களாயிரத்தின்பத்து ப்பத்தான விதினுவிர்ப்பாவம்.

மூ—(௬௬). ஐந்தினொடொன்பதோ டொருபத்தென்னுமவைபோலே நூறேசொன்ன பத்துநூறு

பத்தினைய - பத்துவிதமான, தோற்றம்போலே - அவதாரங்கள்போலே, தோற்றங்களாயிரத்தின் - அவதாரவிசேஷங்களையுடைய வாயிரமென்கிற, பத்துப்பத்தான - அநேகவிதமான, இதின் - இந்தப்ரபந்தத்தினுடைய, ஆவிர்ப்பாவம் - அவதாரம்.

(அ) ஐந்தினொடு - ஐந்தினுடைந்தும்வல்லாரென்கிறது, ஒன்பதோடு - இவையொன்பதோடொன்றுக்குமென்கிறது, ஒருபத்து - இவையுமொருபத்தும்வல்லார், என்னுமவைபோலே - என்கிறவைபோலே, நூறேசொன்ன - நூறேசொன்னவென்ன, பத்து - பத்தென்ன, நூறு - நூறென்ன,

என்றும், (க) "ஊற்றின்கண் நுண்மணற்போலுருகாநிற்பர்நீராய்" என்றுஞ் சொல்லுகிறபடியே, தன்னையநுபவிக்கவிழிந்தாரைத்ரவத்ரவ்யமாக்குமென்றுமிப்படியவனோடு ஸாம்யத்தை யுடைத்தாகையாலே வாச்யனான ஸர்வேஶ்வரனுடைய (உ) "பத்தினையதோற்றம்" என்கிற, பத்தவதாரம்போலே, (௩) "தோற்றங்களாயிரம்" என்கிற இதினுடைய பத்துப்பத்தான ஆவிர்ப்பாவமென்கை. இத்தால், வாச்யனான ஈஶ்வரனோடு பலபடியாலும் ஸாம்யத்தையுடைத்தாகையாலே, அவன்தான் லோகரக்ஷணார்த்தமாக பத்தவதாரமாயவதரித்தாப்போலே, இதுவும், லோகரக்ஷணார்த்தமாக பத்துப்பத்தாக வவதரித்ததென்றதாயிற்று. *

வ்யா. (௬௬) இனியிப்பத்துக்களையும் இவற்றின் ஸமுதாயமான ப்ரபந்தத்தையும், ஆழ்வார்ஶ்லாகித்துப் பேசினபாசுரங்களில் ஸாபிப்ராயதையை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (ஐந்தினொடு) என்று தொடங்கி அதாவது:— முன்னிலைந்து பாட்டுக்கொருகருத்தும், பின்னிலைந்துபாட்டுக்கொருகருத்துமாகையிலே, (௪) "ஐந்தினொடைந்தும்வல்லார்" என்றும், ஒன்பது பாட்டுக்கொருகருத்தும், ஒரு பாட்டுக்கொருகருத்துமாகையாலே (௫) "ஒன்பதோடொன்றுக்கும்" என்றும், பத்துப்பாட்டுக்கும் சேரவொருகருத்தாகையாலே (௬) "பாடலோராயிரத்துளிவையுமொருபத்து" என்றும், சொன்னவைபோலே, (எ) "நூறேசொன்னவோராயிரம்" என்று, கிழி கிழியாகக்கொடுப்பாரைப்போலே நூறுநூறாகச்சொன்னவாயிரமென்றும், (அ) "பத்து நூற்றுளிப்பத்து" என்றும், (௯) "பத்துநூறு" என்றும், இப்படி,

(க) தி - வா. ௬. அ. ௧௧. (உ) திருச்சந்த - வி. எ௧. (௩) தி-வா. ௬. அ. ௧௧. (௪) ௧0. உ. ௧௧. (௫) ௯. ௧௧. (௬) ௩. ௪. ௧௧. (எ) ௯. ௪. ௧௧. (அ) ௬. எ. ௧௧. (௯)

மூ. ஓராயிரமென்றதும் ஸாபிப்ராயம்.

மூ—(சூஎ) பாட்டுக்குக்ரியையும் பத்துக்குக்கருத்தும்போலே நூற்று க்குபதேஶப்பத்து.

மூ—(சூஅ) பகவத் பக்தபரங்கள்

ஓராயிரம் - ஓராயிரமென்ன, என்றதும் - என்கிற விவைகளும், ஸாபிப் ராயம் - அபிப்ராயவிஶேஷத்தோடு கூடினது.

(அ) பாட்டுக்கு - பாட்டுக்களுக்கு, க்ரியையும் - க்ரியைகளும், பத்துக்கு - தஶகத்துக்கு, கருத்தும்போலே - தாத்பர்யமும்போலே, நூற்றுக்கு - நூறுபாட்டுக்களுக்கும், உபதேஶப்பத்து - பரோபதேஶ பரமான திருவாய்மொழி ப்ரதாநம்.

(அ) பகவத்பக்தபரங்கள் - பகவான்பாகவதர் இவர்கள்விஷயங் களான திருவாய்மொழிகள்,

---

பத்துக்களைப்பிரித்துச்சொன்னதும், (க) "தெரியச்சொன்னவோராயி ரம்" "மிக்கவோராயிரம்" (உ) "அவாவிலந்தாதிகளாலிவை யாயிர மும்" என்று, ஆயிரத்தையுஞ் சேரச்சொன்னதும் பத்துக்கள்தோறும் வெவ்வேறேகருத்தாயும், ஆயிரத்துக்கும் சேர ஒருகருத்தாயுமிருக்கும் படியை நினைத்தாகையாலே ஸாபிப்ராயமென்கை. *

வ்யா. (சூஎ) இனிபத்துக்கள்தோறும் உபதேஶபரமான ஒரொரு திருவாய்மொழி ப்ரதாநமாய், அவ்வோபத்துகளுக்கவ்வோ திருவாய் மொழியிலே நோக்காயிருக்கும்படியை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செ ய்கிறார். (பாட்டுக்குக்ரியையும்) இத்யாதி, அதாவது:— பாட்டானால் க்ரியையோடே தலைக்கட்டவேண்டுகையாலே, பாட்டுக்கள்தோறும் க்ரி யாபதம் ப்ரதாநமாயிருக்குமாப்போலவும், ஒரொருதிருவாய்மொழிக்கு பரத்வம், பஜநீயதை, ஸௌலப்பயம், அபராதஸஹத்வம் என்றுப்போ லே, தனித்தனியே கருத்துக்களாகையாலே பத்துப்பாட்டுக்குக்கருத் தான நிதாநம்சொல்லும்பாட்டு ப்ரதாநமாயிருக்குமாப்போலவும், நூறு பாட்டுக்குபரோபதேஶபரமான பத்துப்பாட்டு ப்ரதாநமாயிருக்குமெ ன்கை. இத்தால், பாட்டுக்குக்ரியையிலும், பத்துப்பாட்டுக்கு நிதாநம் சொல்லும்பாட்டிலும் தாத்பர்யமாயிருக்குமோ பாதி நூறுபாட்டுக்கும் பரோபதேஶபரமான பத்துப்பாட்டிலே தாத்பர்யமாயிருக்கு மென்ற தாயிற்று.

வ்யா. (சூஅ) (பிணங்கியமரர்பிதற்றும்) என்கிறபடியே, பேரள வுடையரான நித்யஸூரிகள், ஸ்வஸ்வாநுபூதகுணதாரதம்யங்களைச்சொ ல்லி ஸரஸவிவாத கோலாஹலம்பண்ணும்படியிருக்கிறவனுடையபர த்வ ஸௌலப்யப்ரயுக்தமான குணவிஶேஷங்களைத்தனித்துத்தம்மால்

(க) தி-வா. சு. கூ. கக. (உ) க0. க0. கக.

ரூ. ஆஶ்ரயணவிதிஶேஷங்கள்.

ரூ—(௩௯) பரத்வ காரணத்வ வ்யாபகத்வ நியந்த்ருத்வ காருணிகத்வ
ஶரண்யத்வ ஶக்தத்வ ஸத்யகாமத்வ ஆபத்ஸகத்வ

ஆஶ்ரயணவிதிஶேஷங்கள் - ஆஶ்ரயணவிதிக்குஶேஷங்களாயிருக்கும்.

(அ) பரத்வ - ஸர்வஸ்மாத்பரத்வம், காரணத்வ - அகிலஜெகத்காரணத்வம், வ்யாபகத்வ-நிகிலஜெகத் வ்யாபகனாயிருக்கை, நியந்த்ருத்வ - ஸர்வநியந்த்ருத்வம், காருணிகத்வ-தயாவத்வம், ஶரண்யத்வ-ஶரணவரணார்ஹனாயிருக்கை. ஶக்தத்வ - ஸர்வஶக்தித்வம், ஸத்யகாமத்வ - நித்யமாகக்கல்பித்தபத்நீபரிஜநாதிகளையுடையனாகை, ஆபத்ஸகத்வ - ப்ரளயாத்யா பத்துக்களிலே யுதவுகை,

---

புஜித்துத்தலைக்கட்ட வொண்ணாமையாலே, “அடியார்கள்குழாங்களையுடன்கூடுவதென்றுகொலோ” என்று, கூட்டரானரஸஜ்ஞரைத்தேடினவளவில் கிடையாதபடி தூரஸ்தராக ஸந்நிஹிதரான ஸம்ஸாரிகளுடைய அநாத்மகுணம்பாராதே, பகவத்குணங்களிலே மூட்டித்திருத்திக்கூட்டிக்கொள்ளுகை தேட்டமாய் உபதேஶத்திலே ஒருப்படுகையாலே அதிலே நோக்காகவேணுமிறே. இவற்றில் பகவத்பக்தபரங்களாய் வருமவற்றுக்கு தாத்பர்யமேதென்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார். (பகவத்பக்தபரங்களித்யாதி) அதாவது:— ‘பயிலும் சுடரொளி முதலான பாகவதபரங்களான திருவாய்மொழிகள் “ జ్యోతిష్టోమేన స్వర్గ కామో యజేత ” “ஜ்யோதிஷ்டோமேநஸ்வர்க்ககாமோயஜேத” என்றவிதிக்கு, ப்ரயாஜாதிவிதிகள் ஶேஷமாய், அவற்றினுடைய அநுஷ்டாநத்தோடே அதுபலபர்யந்தமாய்த் தலைக்கட்டுமாப்போலே “திருநாரணன்தாள்காலம்பெறச்சிந்தித்துய்மினோ” ‘நலமந்தமில்லதோர்நாடுபுகுவீர்’ ‘பலமுந்து சீரில்பணிமினோவாதே’ என்றுவிதிக்கிற பகவதாஶ்ரயணம் பாகவதாஶ்ரயணத்தோடொழியத் தலைக்கட்டாமையாலே, பகவதாஶ்ரயண விதிக்குஶேஷங்களென்கை. அதவா, பரோபதேஶபரமான விதில், பகவத்குணங்களையும், ஜீவகுணங்களையும் ப்ரதிபாதிக்கிறவற்றுக்கு விநியோகமேதென்னவருளிச் செய்கிறார். (பகவத்பக்தபரங்களித்யாதி) அதாவது:— பகவத் பரங்களாயும் தத்பக்தரான ஜீவபரங்களாயும், அவ்வவகுணங்களை ப்ரதிபாதிக்கிறவை ஆஶ்ரயணவிஷயத்தையும், ஆஶ்ரயணகர்த்தாவையுஞ்சொல்லுகிறதாகையாலே ஆஶ்ரயணவிதிக்கு ஶேஷங்களித்தனையென்கை. *

வ்யா. (௩௯) இப்படிப்பத்துத்தோறுமுள்ள வர்த்தங்களை பரோபதேஶத்துக்குருப்பாக ஒருங்கவிட்டு விஸ்தரேணமேல்யோஜிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, பரத்வாதிகுணவிஶிஷ்டனானஸர்வேஶ்வரன் தமக்குப்பிறப்பித்த தஶாவிஶேஷங்களைப் பத்துத்தோறும் வெளியிடுகிறாரென்றுஸங்க்ரஹேணவாக்யார்த்தமருளிச்செய்கிறார். (பரத்வேத்யாதிசூர்ணையாலே) அதாவது :— ஸர்வஸ்மாத்பரனாய் அந்த பரத்வம்

மூ. ஆர்த்தி ஹரத்வவிசிஷ்டன் மயர்வையறுக்க தத்வவேதந மறப்பற்றும் ஜ்ஞப்திபலமுக்தி தலைசேரநிஷ்கர்ஷித்துமோக்ஷபலவ்த்தி செய்யவர்த்தித்து புருஷார்த்தபலாந்யருசியொழிந்து விரக்திபலராகம்

ஆர்த்திஹரத்வ - ஆஶ்ரிதர்க்கு ஸம்ஸாரதாபார்த்தியை. ஹரிக்கை, (இவைகளோடே) விசிஷ்டன் - கூடினவனான வீஶ்வரன், மயர்வையறுக்க - அஜ்ஞானத்தைப்போக்க, தத்வ - பரதத்வத்தினுடைய, வேதந - அறிவுக்கு, மறப்பற்று - மறப்புநிவ்ருத்தமாய், ஜ்ஞப்திபல - ஜ்ஞாநபலமான, முக்தி - மோக்ஷம், தலைசேர - கைபுகுர, நிஷ்கர்ஷித்து - நிஷ்கர்ஷம்பண்ணி, மோக்ஷபல - மோக்ஷத்துக்குப்பலமான, வ்ருத்தி - கைங்கர்யத்தை, செய்யவர்த்தித்து - பண்ணவேணுமென்று யாசித்து, புருஷார்த்தபலாந்ய - வேறுபுருஷார்த்தம், வேறுபலம் (இவைகளில்) ருசியொழிந்து - ருசியெல்லாம் நிவ்ருத்தமாய், விரக்தி - வைராக்யத்துக்கு, பல - பலமான, ராகம் - ப்ரேமம்,

ப்ரகாஶமாம்படி ஸர்வகாரணபூதனாய், லோகத்தில்கார்யகாரணங்கள் போலன்றிக்கே உபாதாநகாரணமும் தானேயாகையாலே (கார்யபூத ஸமஸ்தவஸ்துக்களுக்கும் வ்யாபகனாய், அந்த வ்யாப்திதான் ஆகாஶ வ்யாப்திபோலன்றிக்கே அந்தராத்மதயாவாகையாலே ஸர்வ நியந்தாவாய், அந்த பரத்வாதிகளைக்கண்டு வெருவவேண்டாதபடி பரமகாருணிகனாய், இப்படிக்ருபாவானாகையாலே ஸர்வஶரண்யனாய்,ஶரண்யக்ருத்யமான அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திகரணத்துக்கீடாம்படி ஸர்வஶக்தியுக்தனாய், அந்த ஶக்தியாலே நித்யமாகக்கல்பித்த பத்நீபரிஜநாதிகளையுடையனாகையாலேஸத்யகாமனாய், அந்தபோகபரனாகயிருந்துவிடாதே ப்ரளயாத்யாபத்துக்களிலேயுதவி லீலாவிபூதியை ரக்ஷிக்கையாலே ஆபத்ஸகனாய், இப்படி ஆபத்ஸகனாகையாலே ஸம்ஸாரதாபார்த்தரான ஆஶ்ரிதர்க்கார்த்திஹரனாய், இப்படி பத்துப்பத்தாலும் ப்ரதிபாதிதமான பத்துகுணத்தோடும் கூடியிருக்கிறஸர்வேஶ்வரன் “மயர்வறமதிநலமருளினன்” என்கிறபடியே, பக்திரூபாபந்நஜ்ஞாந ப்ரதாநமுகேந அஜ்ஞாநத்தை ஸவாஸநமாகப்போக்க, அத்தாலே, தத்விஷயஜ்ஞாநமாகிற தத்வவேதநத்தில் (க)“மறப்பனோவினியானென்மணியை” என்கிறபடியே விஸ்ம்ருதியற்று அந்த ஜ்ஞாநபலமான மோக்ஷத்தை “நின்செம்மாபாதபற்புத்தலைசேர்த்து” என்று, ஸ்வரூபாநுரூபமாக நிஷ்கர்ஷித்து அந்தமோக்ஷத்துக்குபலமான கைங்கர்யரூப வ்ருத்யை (உ) “வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்” என்றர்த்தித்து, அந்தபுருஷார்த்தத்துக்குபலம் அந்யருசிநிவ்ருத்தியாகையாலேதத்பலமாக“ஐங்கருவிகண்டவின்பம்சித்தின்பமொழிந்தேன்” என்று அந்யபுருஷார்த்தங்களில் ருசியைத்தவிர்ந்து அந்தஇதரவிஷயவிரக்திக்கு பலமானபகவத்விஷயராகம்

(க) தி-வா. க. கO. கூ. (உ) ந. ந. க.

கழியமிக்கு ப்ரேமபலோபாயத்தேபுகுந்து ஸாதநபலோப காரக்கைம்மாறின்றி க்ருதஜ்ஞதாபலப்ரதிக்ருதமானத்தை யுணர்ந்து ஆத்மதர்ஶநபலப்ராப்தி.

கழிய - மிகவும், மிக்கு - மிகுந்து, ப்ரேமபல-ப்ரேமபலமாயிருந்துள்ள, உபாயத்தே - உபாயத்திலே, புகுந்து - கைவைத்து, ஸாதந - ஸாதநத்துக்கு, பல - பலமாயிருக்கிற, உபகார-உபகாரத்துக்கு, கைம்மாறின்றி-ப்ரத்யுபகாரமில்லாமை, க்ருதஜ்ஞதா-செய்தஉபகாரத்தையறிந்ததுக்கு, பல - பலமான, ப்ரதிக்ருதமானத்தை - ப்ரத்யுபகாரமாம்படியானத்தை, உணர்ந்து - அறிந்து, ஆத்ம-ஆத்மாவினுடைய, தர்ஶந - ஸாக்ஷாத்காரத்தை, பல - பலமாகவுடைய, ப்ராப்தி - பகவத்ப்ராப்தியை,

(க) "கழியமிக்கதோர்காதல்" என்னும்படி, அதிஶயித்து அந்தநிரதிஶயப்ரேமபலமான விளம்பாக்ஷமத்வத்தால் வந்தத்வரையாலே (உ) "அலர்மேல்மங்கையுறைமார்பா உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன்" என்று, உபாயவரணம்பண்ணி அந்தஸாதநபலமான வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக (௩) "உதவிக்கைம்மாறென்னுயிர்" என்று, ஆத்மஸமர்ப்பணம்பண்ணத்தேடி அவ்வாத்மவஸ்து ததீயமென்றறிகையாலே (ச) "அதுவுமற்றாங்கவன்றன்னது எதுவுமொன்று மில்லைசெய்வதிங்குமங்கே" என்று, ப்ரத்யுபகாரம் காணாமல் தடுமாறி அந்தக்ருதஜ்ஞதைக்கு பலமான ப்ரத்யுபகாரமாக (ரு) "தோள்களையாரத்தழுவி "என்னுயிரையறவிலைசெய்தனன்" என்று, ப்ரீதியாலேகலங்கி ஸமர்ப்பித்தவாத்ம வஸ்துவை(சு)"நின்றவொன்றையுணர்ந்தேன்"என்று, தேஹாதிகளில் விலக்ஷணமாயவனுக்கு ப்ரகாரதயாஶேஷமாய்க்கொண்டு அநந்யார்ஹமாயிருக்கு மென்றறிந்து அந்தவாத்மதர்ஶநபலமான பகவத்ப்ராப்தியை (எ) "மரணமானால் வைகுந்தம்கொடுக்கும்" என்கிறபடியே, ஶரீராவஸாநத்திலே பண்ணித்தருகிறேமென்றவன்நாளிட்டுக்கொடுக்கப்பெற்று இப்படி ப்ராப்திகாலமணித்தானதுக்குபலம் அர்ச்சிராதி மார்க்கத்தாலே தேஶவிஶேஷத் தேறப்போவதாகையாலே அவ்வர்ச்சிராதிகதிக்கு (அ) "காளமேகத்தையன்றி மற்றொன்றிலம்கதி" என்றும், (கூ) "ஆத்தன் தாமரையடியன்றிமற்றிலமரணே" என்றும், பரமாப்தனானவன் தன்னையே துணையாகக்கூட்டின தம்முடைய பேற்றைப்பிறரறிந்து வாழும்படி முதற்பத்தே துடங்கி பத்துப்பத்தாலும் ப்ரகாசிப்பித்தருளுகிறாரென்றபடி. இத்தால் பரத்வாதிகுணவிசிஷ்டனான ஈஶ்வரன், தமக்குப்பண்ணிக்கொடுத்தபேறுகளைப் பலருமறிந்து வாழவேணுமென்று பத்துப்பத்தாலும் ப்ரகாசிப்பிக்கிறாரென்று பத்துநிகமநத்துக்கு வாக்யார்த்தம் சொல்லப்பட்டதாயிற்று. இதில் முதல்பத்தாலே, ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேஶ்வரன் தன்னுடைய நிர்ஹேதுகக்ருபையாலே அஜ்ஞாநத்

(க) தி - வா. ௫. ௫. ௧0. (உ) ஷை௬. ௰. ௧0. (௩) ஷை. எ. கூ. ௧0. (ச) ஷை. (ரு) (சு) தி - வா. அ. அ. ச. (எ) ஷை. கூ. ௧0. ௫. (அ) ஷை. ௧0. ௧0. ௧. (கூ) ஷை. சு.

மூ. மாணுவதியாகப்பெற்று காலாஸக்தி பலகதிக்குத் துணை கூட்டினதம்பேற்றைப்பிறரறியப் பத்துதோறும் வெளியிடுகிறார்:—

இத்யாசார்யஹ்ருதயே த்ருதிய ப்ரகரணம் ஸமாப்தம்.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளேசரணம்.

மாணுவதியாகப்பெற்று - மாணுந்தரபாவியாகப்பெற்று, காலாஸக்தி - பகவத்ப்ராப்திகாலமணித்தானதுக்கு, பல - பலமாயிருக்கிற, கதிக்கு - அர்ச்சிராதிகதிக்கு, துணைகூட்டின - எம்பெருமானைத் துணையாகக் கூட்டிக்கொண்ட, தம்பேற்றை - தம்முடையபலத்தை, பிறறறிய - அயலாருமறியும்படி, பத்துத்தோறும் - எல்லாப்பத்திலும், வெளியிடுகிறார் - ப்ரகாசிப்பிக்கிறார்:—

தைப்போக்கி பக்திரூபாபந்நஜ்ஞாநத்தைக்கொடுத்து, இன்னுமிவர்நம்மை விஸ்மரிக்கக்கூடுமென்று தம்பக்கல் அவனுக்குண்டான ஸ்நேஹத்தாலேவிடாதே தம்முடைய ஹ்ருதயத்திலே நிரந்தரவாஸம்பண்ண, அத்தாலே ஸம்ஶய விபர்யய விஸ்ம்ருதிரஹிதமான தத்வஜ்ஞாநத்தையுடையரான ஆழ்வார், அவனுடைய குணங்களை தம்முடைய திருவுள்ளத்தோடே யநுபவித்து அவ்விஷயம் தனியநுபவிக்க வொண்ணமையாலே ஸம்ஸாரிகளையும்பார்த்து, த்யாஜ்யமானஸம்ஸாரத்தின் தோஷத்தையும், தத்யாகப்ரகாரத்தையும், உபாதேயமான பகவத்விஷயத்தின் குணத்தையும், தத்பஜநப்ரகாரத்தையும், பஜநாலம்பநமந்த்ரத்தையுமுபதேசித்து, பஜநீயனானவவனுடைய, ஸௌலப்யம், அபராதஸஹத்வம், சீலவத்தை, ஸ்வாராததை, ஆஶ்ரயணரஸ்யதை, ஆர்ஜவம், ஸாத்ம்யபோக ப்ரதத்வம், பரபக்திபாகணனேகளுக் கொக்கமுகங்காட்டும் ஸாம்யமாகிறகுணங்களை தர்சிப்பியாநின்றுகொண்டு அவ்வழியாலே பஜநத்தினுடைய ஸுகரத்வ ரஸ்யதைகளையும் பஜிக்கவே ஸர்வபலங்களும் வஸித்திக்குமென்னுமத்தையும், பஜநோபக்ரமத்திலே பஜந விரோதிகளடைய நசிக்குமென்னுமத்தையுமறிவித்து, ஆனபின்பு ஸ்ரீகீதையிலவனருளிச்செய்த பக்திமார்க்கத்திலேநின்று தேவதாந்தரங்கள்பக்கல் பரத்வஶங்காநிவ்ருத்தி பூர்வகமாக, அவன்விஷயமானஜ்ஞாநத்தைக்கொண்டு அவன்பக்கலிலே அநந்யப்ரயோஜநபக்தியைப் பண்ணுங்கோளென்று தமக்கவன் மயர்வறமதிநல மருளினுப்போலே தாமுமிவர்களுக்கு அஜ்ஞாநநிவ்ருத்திபூர்வகமாகஜ்ஞாநபக்திகளை யுபதேசத்தாலே யுண்டாக்கிபஜநத்திலே மூட்டுகிறாரென்கிறார்.

இத்யாசார்யஹ்ருதயவ்யாக்யாநே

த்ருதியப்ரகரணம் ஸமாப்தம்.

பெரியஜீய்யர் திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஆசார்யஹ்ருதயவ்யாக்யாநம்.

சதுர்த்தப்ரகரணம்.

மூ—(க) பரபரனாய் நின்றவளவேழ்வைப்பாமவனையுளும்பர்வானவ ரதிபதிமயர்வறமன்னி மனம்வைக்கத்திருத்தி

(அ) பரபரனாய் - முழுதுண்டபரபரனென்றும், நின்ற - ஆய்நின்ற பரனென்றும், வளவேழ் - வளவேழுலகின்முதலாய வானோரிறையென்றும், வைப்பாம் - வைப்பாம்மருந்தாமென்றும், அவன் - உயர்ந்துயர்ந்தப்பாலவனென்றும், அவையுள் - அவையுட்டனிமுதலென்றும், உம்பர்வானவவர் - உம்பர்வானவராதியென்றும் சொல்லப்பட்ட, அதிபதி - அயர்வறுமென்று ஸூரிநிர்வாஹகன், மயர்வற - அஜ்ஞாநமெல்லாம்வாஸனையோடே போம்படி, மன்னி - இவர் திருவுள்ளத்திலே வந்துபுகுந்து, மனம்வைக்க - தன்விஷயத்திலே ஹ்ருதயத்தைவைக்கும்படி, திருத்தி - பரிஷ்கரித்து,

வ்யா. (க) (பரபரனாய் நின்ற வளவேழ்வைப்பாமவையுளும்பர்வானவ ரதிபதி) (க) "வரன்முதலாயவைமுழுதுண்டபரபரன், ஆய்நின்ற பரன் "வளவேழுலகின் முதலாயவானோரிறை" வைப்பாம் மருந்தாம் "நலத்தாலுயர்ந்துயர்ந்தப்பாலவன், அவையுள் தனிமுதல் "உம்பர்வானவராதியஞ்சோதி" "அயர்வறுமமரர்களதிபதி" (அ) என்று, ஸகல ஜகத்ஸர்க்காதி கர்த்ருத்வத்தாலும், உபயவிபூதியோகத்தாலும், உபயவிபூதிநாதத்வத்தாலும் ப்ராப்ய ப்ராபகத்வத்தாலும், அபரிச்சேத்யாநந்தயுக்ததையாலும், ஸர்வஶரீரதயா ஸர்வஶப்தவாச்யத்வத்தாலும், நித்யஸூரிநிர்வாஹகத்வத்தாலும், நித்யாஸங்குசித ஜ்ஞாநரானவர்கள் நித்யாநுபவம் பண்ணாநின்றாலும் பரிச்சேதிக்கவொண்ணாத பெருமையையுடையனாகையாலும் ஸர்வஸ்மாத்பரனானவன் (மயர்வறமன்னி மநம்வைக்கத்திருத்தி) "மயர்வறமதிநலமருளினன்" (௧) "மயர்வற வென்மனத்தே மன்னினான்" என்று ஸ்வகேவல க்ருபையாலே, * ஜ்ஞாநாநுதய அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநரூபமான அஜ்ஞாநத்தை

(க-மு-ல்-அ-ல்) தி - வா. க - ல் - க-அ + க-கக + ரு - க + எ - உ + ௯ + ௧-க + க0-௬ + க-க + ௯ + (௬) எ-ச.

* ஜ்ஞாநாநுதயமாவது - தேஹமே ஆத்மாவென்றிருக்கை. அந்யதாஜ்ஞாநமாவது - தேவதாந்தர ஶேஷமென்றிருக்கை. விபரீத ஜ்ஞாநமாவது, ஸ்வதந்த்ரமாகவும் போக்யமாகவும் நினைத்திருக்கும் கேவலனுடைய நினைவு. கேவலனாவான்:— ஸம்ஸார தாபத்ரயாதிகளால் மிகநலிவுபட்டு, ஶாஸ்த்ரஜந்யஜ்ஞாநவிஶேஷத்தால், தேஹாத்ம விவேகம்பண்ணி, யோகமஹிமையாலே தேஹத்தைவிட்டு பகவச்சேஷபூதனான ஆத்மாவை ஸ்வதந்த்ரனாக நினைத்து "அமுதவெள்ளத்தானாம் சிறப்புவிட்டு" என்கிறபடியே, நிரதிஶயாநந்த யுக்தனான ஸர்வேஶ்வர பர்யந்தம் போகமாட்டாதே அத்யல்பமான ஆத்மாநுபவம் பண்ணிக்கொண்டிருக்குமவன்.

௯. மறக்குமென்று நல்கிவிடாதேமன்ன அயர்ப்பிலனறுத்தே னென்சொல்லி மறப்பனோவென்னும்படி தத்வஜ்ஞானவர்

மறக்குமென்று - மறக்கப்போகிறரோவென்று, நல்கி - இவர்பக்கலதிஸ்நேஹத்தைப்பண்ண, விடாதே - ஒருக்காலும்விடாதே, மன்ன-ஸ்தாவர ப்ரதிஷ்டையாயிருக்க, அயர்ப்பிலன் - அஜ்ஞாநத்தையெல்லாம் ஸவாஸநமாகப்போக்கினேன், அறுத்தேன் - மாயப்பிறவியாலுண்டான மயர்வையறுத்தேன், என்சொல்லி - எத்தைச்சொல்லி, மறப்பனோ - மறக்கக்கடவேன், என்னும்படி - என்றிவர்தாமேயருளிச்செய்யும்படி, தத்வஜ்ஞானவர் - தத்வயாதாத்ம்யஜ்ஞானவாழ்வார்,

இவர்க்குவாஸனையோடேபோக்கி, பக்திரூபா பந்நஜ்ஞாநத்தைக் கொடுத்து. இவர் திருவுள்ளத்திலே புகுந்து(க) "சார்ந்தவிருவல்வினைகளும் சரித்து மாயப்பற்றறுத்து தீர்ந்து தன்பால் மனம்வைக்கத் திருத்தி" என்கிறபடியே, பிரிக்கவொண்ணாதபடி இவரோடு பொருந்திக் கிடக்கிற ப்ரபலமான புண்யபாப ரூபகர்மங்களையும், பாஹ்யவிஷய * ருசிவாஸனைகளையும்போக்கி, அயோக்யதாநுஸந்தாநத்தாலே யகன்றவளவிலும், தன்சீலத்தைக்காட்டி இவனைமீட்டு அல்லேனென்றகலாதே தனக்கேதீர்ந்து தன்பக்கலிலே நெஞ்சுவைக்கும்படி தரிசுகிடந்தநிலத்தைச்சைகாலாகத் திருத்துவாரைப்போலே திருத்தி, (மறக்குமென்று நல்கிவிடாதே மன்ன) (உ) "மறக்குமென்று செந்தாமரைக்கண்ணொடு (ங) "நல்கியென்னைவிடான்" (ச) "மறப்பறவென்னுள்ளே மன்னினான்" என்கிறபடியே, இவரின்னமும் நம்மைவிஸ்மரிக்கக்கூடுமென்று நிரதிஶயஸ்நேகத்தைப்பண்ணி, இவரைவிடாதே அழகியதிருக்கண்களாலே குளிரநோக்கிக்கொண்டு ஒருநாளும் மறக்கவொண்ணாதபடி இவர் திருவுள்ளத்திலே ஸ்தாவர ப்ரதிஷ்டையாயிருக்க (அயர்ப்பிலனறுத்தே னென்சொல்லிமறப்பனோவென்னும்படி தத்வஜ்ஞானவர்) (ரு) "பெருநிலங்கிடந்த நல்லடிப்போதயர்ப்பிலன்" தூயவமுதைப்பருகிப்பருகி யென்மாயப்பிறவி மயர்வறுத்தேன்" (சு) "எம்பிரானையென்சொல்லிமறப்பனோ" என்று குணகுணநிரூபணம்பண்ணாதே பூமிப்பரப்பையளந்தபரமபோக்யமான திருவடிகளை யொருக்காலும் விஸ்மரியேன். நிரதிஶயபோக்யனானவனை நிரந்தரமநுபவித்தாச்சர்யமானஜந்மமடியாகவருமஜ்ஞாநத்தைப்போக்க

(க) தி - வா. க-ல் + ரு - கo. (உ) கo. கo. (ங) ஷ. க. (ச) ஷ. கo. (ரு) ங. கo. (சு) கo. க.

* ருசியாவது:— மற்றொன்றாலும் மீட்கவொண்ணாதபடி ஒன்றிலே செல்லுகிற விருப்பு. + வாஸனையாவது:— முன்புசெய்துபோந்தவற்றிலே மீளவும் மீளுகைக் குறுப்பான ஸம்ஸ்காரம்:—

மூ. ஸூடரடி எம்பிரானைவிடாது கண்டாய் நீயும்நானும் என்கிற ஸஹ்ருதயாநுபவம் ஸம்ஸாரிகளுக்குமாம்படி வீடுமினென்று த்யாஜ்யோபாதேய

ஸூடரடி - ஸூடரடிதொழுதெழு என்றும், எம்பிரானை - எம்பிரானைத்தொழாய் என்றும், விடாது - விடாது துடர் என்றும், கண்டாய் - கண்டாயே நெஞ்சே என்றும், நீயும்நானும் - நீயும்நானுமின்னேர் நிற்கில் மேல்மற்றோர் நோயும்சார்கொடான் என்றும், என்கிற - இப்படி பண்ணப்பட்ட, ஸஹ்ருதயாநுபவம் - மநஸ்ஸோடேகூடின வநுபவம், ஸம்ஸாரிகளுக்குமாம்படி - விஷயாந்தரப்ரவணரான ஸம்ஸாரிகளுக்குமுண்டாம்படி, வீடுமினென்று-வீடுமினென்கிற திருவாய்மொழியாலே, த்யாஜ்ய - விடத்தக்கதாயிருக்கிற, உபாதேய - பரிக்ரஹிக்கத்தக்கதாயிருக்கிற,

ப்பெற்றேன். எனக்குபகாரகனானவனை யெத்தைச்சொல்லி விஸ்மரிப்பதென்னும்படி ஸம்ஶய விபர்யயவிஸ்ம்ருதிகலசாத தத்வஜ்ஞாநத்தையுடையரானவர் (சுடரடியெம்பிரானைவிடாதுகண்டாய்நீயும் நானுமென்கிறஸஹ்ருதயாநுபவம் ஸம்ஸாரிகளுக்குமாம்படி) (க) "சுடரடி தொழுதெழன்மனனே" "எம்பிரானைத்தொழாய் மடநெஞ்சமே" "நெஞ்சமே நல்லநல்லை" "மலராள்மணவாளனைத் துஞ்சும்போதும்விடாது துடர்கண்டாய்" "கண்டாயே நெஞ்சே கருமங்கள்வாய்க்கின்று" "நீயும் நானு மின்னேர் நிற்கில்மேல் மற்றோர்நோயும்சார்கொடான்நெஞ்சமே சொன்னேன்" (சு) என்று நிரவதிக தேஜோரூபமானவவன்திருவடிகளிலே நித்யகைங்கர்யத்தைப்பண்ணி உஜ்ஜீவிக்கப்பாராய்யென்நெஞ்சே! எனக்கு பவ்யமானநெஞ்சே! நமக்குபகாரகனானவனை தொழப்பாராய் நெஞ்சே! நீசெய்தபடி மிகவும்நன்று. நான் அயோக்யதாநுஸந்தாநத்தாலேயகலும்போதும், ஸ்ரீயঃபதியானவனை விடாதேகிடாய் நெஞ்சே! அவனுடைய நிர்ஹேதுகவிஷயீகாரமிருந்தபடிகண்டாயே, தொழச்சொல்லலாம்படியிருக்கிற நீயும், தொழச்சொல்லுகிறநானும், அயோக்யதாநு ஸந்தானத்தாலே அகலாமலிப்படியே நிற்கப்பெறில் அநாதிகாலார்ஜித கர்மம்விஷய ப்ராவண்யம்,ப்ரயோஜநாந்தரஸ்ரத்தை, ஸாதநாந்தரஸங்கம், முதலான துரிதங்களொன்றையும் சேரவிட்டுக்கொடான். நெஞ்சே! உனக்கிப்பரமார்த்தத்தைச் சொன்னேனென்றிப்படி திருவுள்ளத்தைக் குறித்துபதேசித்து, திருஉள்ளமும் தாமும் கூடியநுபவித்தபகவதநுபவம்,தனியேயநுபவிக்கவொண்ணாமையாலும்,(எ) "ఏకస్స్వాదు నభుంజీత" "ஏகஸ்வாதுநபுஞ்ஜீத" என்கிறபடியே, தனியநுபவிக்கவல்லவரல்லாமையாலும், அவனோடுள்ளஸம்பந்தம் ஸர்வஸாதாரணமாகையாலும், பராநர்த்தம்பொருத பரமக்ருபையாலும், இவ்வநுபவம் ஸம்ஸாரிகளுக்கு மாகவேணுமென்று, ஸம்ஸாரிகளைப்பார்த்து (வீடுமினென்று த்யாஜ்யோபாதேய தோஷகுணபரித்யாக ஸமர்ப்பணக்ரமத்தை ஸாலம்பநமந்த்ரமாக உபதேசித்து) வீடுமின் முற்றத்திலே "வீடு

(க-மு-சூ-ல்) க-ப-ல் + க-க + கo-ங + ஷ-ச + ஷ + ஷ-ரு + ஷ-சு + (எ)

தோஷகுணபரித்யாக ஸமர்ப்பணக்ரமத்தை ஸாலம்பநமந்த்ரமாக உபதேசித்து எளிதாகவவதரித்துப்பிழைகளை ஸஹித்துப்புரையறக்கலந்து அல்பஸந்துஷ்டனாய்

தோஷ - தோஷத்தினுடையவும், குண - பகவத்குணங்களினுடையவும், பரித்யாக - விடுகிறத்தினுடையவும், ஸமர்ப்பண - ஆத்மஸமர்ப்பணத்தினுடையவும், க்ரமத்தை - ரீதிகளை, ஸாலம்பநமந்த்ரமாக - ஆலம்பநமந்த்ரமான திருமந்த்ரத்தோடுகூட, உபதேசித்து - உபதேசம்பண்ணி, எளிதாக - ஸுலபமாம்படி, அவதரித்து - அவதாரம்பண்ணி, பிழைகளை - அபராதங்களை, ஸஹித்து - பொறுத்து, புரையற - ஓட்டையில்லாதபடி, கலந்து - ஸம்ச்லேஷித்து, அல்ப - இவனிட்ட அல்பபதார்த்தங்களாலே, ஸந்துஷ்டனாய் - ஸந்தோஷவிசேஷயுக்தனாய்,

மின் முற்றவும்) என்று த்யாஜ்யஸ்வரூபத்தையும் (௧)"மின்னின்நிலையில மன்னுயிராக்கைகள்" என்று அதினுடைய அல்பாஸ்திரத்வாதிதோஷத்தையும் "நீர்நுமதென்றிவைவேர்முதல்மாய்த்து" என்று, அதினுடைய பரித்யாகக்ரமத்தையும் "வீடுடையான்" என்று உபாதேயமான பகவத்ஸ்வரூபத்தையும், "எல்லையிலந்நலம்" என்று, அவ்வஸ்துவினுடைய குணத்தையும், "வீடுசெய்மினோ" "இறைசேர்மின்" "இறைபற்று" "திண்கழல்சேர்" (அ)என்று, அவ்விஷயத்திலாத்மாவைஸமர்ப்பிக்கும் க்ரமத்தையும், "வண்புகழ்நாரணன்" என்று, அந்தஸமர்ப்பணரூபபஜநத்துக்கு ஆலம்பனமான திருமந்த்ரத்தோடே உபதேசித்து, (எளிதாகவவதரித்து)ஆச்ரயிப்பார் அதீந்த்ரியனென்றறியாதபடி (௯)"பலபிறப்பாயொளிவருமியல்வினன்" என்று, ராமக்ருஷ்ணாத்யவதார முகத்தாலே, அவர்களுக்கு ஸுலபனாய் பிழைகளைஸஹித்து, ஆச்ரயணதசையில் ஸுலபனாய், அபராதங்கண்டவாறே கைவிடாதே (௧0) "என்பிழைத்தாள் திருவடியின்தகவினுக்கு" என்னும்படி,அபராதஸஹனாய் (புரையறக்கலந்து,) அபராதங்கண்டு, தானிகழாதவளவன்றிக்கே அயோக்யதாநுஸந்தாநத்தாலேதாங்களேயகல்வாரையும், (௧௧) "திசைகளெல்லாம் திருவடியால் தாயோன்தானேயொருவனே" என்று, தன்குணத்தைக்காட்டி யுணுகப்பண்ணி அவர்களோடேபுரையறக்கலக்கும்சீலவானாய் (அல்பஸந்துஷ்டனாய்) ஆச்ரிதரோடொருநீராகக் கலக்குமேயாகிலுமவனுகக்கும்படிபச்சையிடப்போகாமையாலே, ஆச்ரயணமரிதென்னாதபடி இவனிட்டது கொண்டுத்ருப்தனாகவேண்டாதபடி பரிபூர்ணனாகையாலே "புரிவதுவும்புகைபூவே" என்று,இவன்பக்கல்பெற்றதுகொண்டு ஸந்தோஷிக்கும்

(௮-மு-அ-ல்) தி-வா. ௧-ல் + ௨-௨ + ௨-௩ + ௯-௧ + ௨-௪ + ௨-௧+௨-௩+ ௨-டு + ௨-௧0 + (௯) ௩. ௨. (௧0) ச. எ. (௧௧) டு. ௩.

௫. அம்ருதமேயௌஷதமாக்கி நீர்ப்புரையத்தன்னை நியமித்து போகத்தை ஸாத்மிப்பித்து பக்திகணனைகளுக்கு ஒக்க வருமவனுடைய ஸேவைக்கு எளிமையு மினிமையுமுண்டு

அம்ருதமே - தூய்வமுதான பகவத்விஷயத்தையே, ஔஷதமாக்கி - மாயப்பிறவிமயர்வறுக்கைக்கு ஔஷதமாம்படிபண்ணி, நீர்புரைய - நீரை விரஹாலேமேட்டிலே யேற்றுமாப்போலே, தன்னை - அதிஸ்வதந்த்ரனை தன்னை, நியமித்து - இவர்கள் செவ்வைக்கேடும் செவ்வையாம்படியடக்கி, போகத்தை - தன்னோடுண்டான ஆழ்வாருடைய அநுபவத்தை, ஸாத்மிப்பித்து - ஸாத்மிக்க ஸாத்மிக்க உண்டாக்கி, பக்தி - பரமபக்தி, கணனைகளுக்கு - எண்ணுகை (இவைகளுக்கு) ஒக்க - ஸமமாக, வருமவனுடைய - வந்து முகங்காட்டுமவனுடைய, ஸேவைக்கு - பஜனத்துக்கு, எளிமையும் - ஸுலபத்வமும், இனிமையும் - ரஸமாயிருக்குகையும், உண்டு - உள்ளது,

---

ஸ்வாராதனுய் (அம்ருதமே ஔஷதமாக்கி) நேரில்லையாகிலும், உள்ளது தேவையாயிருக்குமோ வென்னுதபடி, அம்ருதத்தையே ஔஷதமாக்குமாப்போலே, "தூயவமுதைப்பருகிப்பருகியென் மாயப்பிறவிமயர்வறுத்தேன்" என்று, நிரதிஶயபோக்யனை தன்னுடைய ஆஶ்ரயணமாகையாலே மிகவுமினிதாயிருக்கிறவற்றையே ஸம்ஸாரவ்யாதிபேஷஜமாக்கி (நீர்புரையத்தன்னை நியமித்து) இனிதாயிருக்குமாகிலுமவன்நினைவறிந்து பரிமாறுகையறிதென்னுதபடி இவர்களைத் தன்நினைவிலே பரிமாறுவித்துக்கொள்ளப்பாராதே (க) "நீர்புரைவண்ணன்" என்று மேட்டிலே, நீரைவிரஹாலே யேற்றுமாப்போலே இவர்கள் செவ்வைக்கேடும் செவ்வையாம்படி, தன்னைச்செவ்வியனுகநியமித்து (போகத்தை ஸாத்மிப்பிற்று) இப்படியானுலும் குளப்படியிலே கடலைமடித்தாப்போலே அஸாத்யமாகப்பரிமாறுமோ வென்னுதபடி, (உ) "என்னுடைச்சூழலுளான்" என்றுதுடங்கி "உச்சியுளானே" என்னும்படிஸாத்மிக்கத்தன்னையநுப்விப்பித்து, (பக்திகணனைகளுக் கொக்கவருமவனுடைய ஸேவைக்கு) இப்படியநுபவிக்கைக் கீடாக முகங்காட்டு மளவிலிவன் பக்கல் ப்ரேமாநுகுணமாகவோ செய்வதென்னுதபடி (ங) "கண்ணுள்ளே நிற்கும்கர் தன்மையால்தொழில் எண்ணிலும்வரும்" என்று, பரபக்திக்கும்பரிகணனைக்கு மொக்கவந்துமுகங்காட்டும் ஸ்வபாவனுனவவனுடையபஜநத்துக்கு, (எளிமையுமினிமையுமுண்டு) எளிதாயினிமையற்றிருத்தல், இனிதாயருமையாயிருத்த லன்றிக்கே கீழ்ச்சொன்ன குணவிஶேஷங்களையுடையவனுடையவாஶ்ரயணமாகையாலே எளிதுமாயினிதுமாயிருக்கும். (ச) "பத்துடையடியவர்க்கெளியவன்" (ரு) "அமுதிலுமாற்றவினியன்" என்கிற வவன்தன்னைப்போலேயாயிற்று ததாஶ்ரயணமும்,

---

(திவா-க-ல்) (௧) அ - ௪0. (௨) ௬ - ௧. (௩) ௪0 - ௨. (௪) ௩ - ௧. (௫) ௬ - ௬.

மூ. தொழுதாலரும்பயனாய தருமுத்யோகத்தே வினைகளும் மாளும் அவனுரைத்த மார்க்கத்தேநின்று இருபசைமல மறவுணர்வுகொண்டு நலம்செய்வதென்று

தொழுதால் - அவனைத்தொழுதால், அரும்பயனாய - பெறுதற்கரிய ப்ரயோஜநங்களையும், தரும் - கொடுக்கும், உத்யோகத்தே - பஜிக்கயத்நம்பண்ணும்போதே, வினைகளும் - பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தக பாபவிசேஷங்களும், மாளும்-ஸவாஸநமாகப்போம், அவனுரைத்த - (பிணக்கற வறுவகையென்றுதொடங்கி அவனாலே) அருளிச்செய்யப்பட்ட, மார்க்கத்தேநின்று - பக்திமார்க்கத்திலே நிஷ்டையுடையராய், இருபசை - (தேவதாந்தரங்கள்பக்கலுண்டான) ஸங்கமும், மலம் - (இவனோ அவரோ ஆஶ்ரயணீயரென்கிற)ஸம்ஶயமும், அற-ஸவாஸநமாகப்போக்கி, உணர்வுகொண்டு - அவனுடைய உணர்வுகொண்டு, நலம்செய்வதென்று - நன்றென நலம்செய்வதென்றுதொடங்கி அநந்யப்ரயோஜநமான பக்தியைப்பண்ணுங்களென்று,

ஏவம்பூதபஜநத்தால் பலஸித்தியிருக்கும்படி யென்னென்னில்? (தொழுதாலரும்பயனாயதரும்) (க) "அவனைத்தொழுதால் வழிநின்ற வல்வினைமாள்வித்தழிவின்றி யாக்கம்தரும்" (உ) "தருமவரும்பயனாய" என்று, அவனைபஜித்தால் ப்ராப்திப்ரதிபந்தகங்களையும் நிஶ்ஶேஷமாகப்போக்கி அழிவில்லாத பெருதற்கரிய ப்ரயோஜநங்களையுந்தரும். பஜித்தாலன்றோ தருவது, பஜநவிரோதிகளும் குவாலுண்டேயென்னில்? (உத்யோகத்தே வினைகளும்மாளும்) (௩) "நாளுநின்றடுநமபழமையங்கொடுவினை யுடனேமாளும்" என்று, நாள்தோறும் நின்றிவ்வாத்மாவை முடிக்கிற அநாதியாயதிக்ரூரமானகர்மங்கள் பஜநோபக்ரமத்திலே நசிக்கும். ஆனால், பஜநோபாயமேதென்னில்? (அவனுரைத்த மார்க்கத்தே நின்றிருபசைமலமற உணர்வுகொண்டு நலஞ்செய்வதென்று) (௪) "பிணக்கற" என்றுதுடங்கி, (ரு) "அம்பகவன்வணக்குடைத்தவநெறிவழிநின்று" என்று, வைதிகஸமயத்துக்கும், பாஹ்யஷட்ஸமயத்துக்கும்தன்னில் தானுண்டான பிணக்கறும்படி, வேதமார்க்கத்தை யதாநிரூபணம்பண்ணி யருளிச்செய்த நிரவதிக வாத்ஸல்யயுக்தனாய் ஜ்ஞாநாதிகுணபரிபூர்ணனான க்ருஷ்ணன் திருத்தேர்த்தட்டிலே அர்ஜுநவ்யாஜேந ஸ்ரீகீதாமுகத்தாலே (௬) "𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯𑌃" "பக்த்யாத்வநந்யயாஶக்ய:" என்று, (எ) "𑌮𑌨𑍍𑌮𑌨𑌾 𑌭𑌵 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑍀 𑌮𑌾𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍁। 𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑍈𑌵 𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌯𑌣𑌃" "மந்மநாபவ மத்பக்தோ மத்யாஜீமாம்நமஸ்குரு। மாமேவைஷ்யஸியுக்த்வைவமாத்மாநம் மத்பராயண:" என்றுமருளிச்செய்த பக்திமார்க்கத்திலே நின்று, (அ) "நம்மிருபசையறுத்து" என்றும், (கூ) "மனனகமலமறக்கழுவி"

(கு-ப-ல்) (க) கூ - அ. (உ) ஷெ - கூ. (௩) ௩ - அ. (௪) ௩ - ரு. (ரு) ஷெ. (௬) ஸ்ரீ - கீ - கக. ருச. (எ) கூ - ௩௪. (அ) தி-வா. க. ௩. எ. (கூ) ஷெ.- அ.

மூ. தாம்மயர்வறமதிநலமருளி பஜநத்திலே சேர்க்கிருர் முதற்பத்தில்.

மூ—(௨) சோராதமூவாவேர்முதலா

தாம் மயர்வறமதிநலமருளி - ஸர்வேஶ்வரன் தமக்கு மயர்வறமதிநலமருளினப்போலே ஸம்ஸாரிகளுக் கஜ்ஞாநத்தைப்போக்கி ஜ்ஞாநபக்திகளையுபதேசித்து, பஜநத்திலே பகவத் பக்தியிலே, சேர்க்கிருர்-மூட்டுகிருர், முதற்பத்தில் - ப்ரதமதஶகத்தில்.

(அ) சோராத - சோராதவெப்பொருட்கு மாதிஎன்று சொல்லப்பட்ட, மூவா - மூவாத்தனிமுதலாய் என்றுசொல்லப்பட்ட, வேர்முதலாய் - வேர்முதலாய் வித்தாய்என்று சொல்லப்பட்ட வைகளாகக் கொண்டு,

---

என்றும், தேவதாந்தரங்கள் பக்கல் உங்களுக்குண்டான ஸம்ஶயத்தையறுத்து இவனே அவர்களோ ஆஶ்ரயணீயரென்கிறஸம்ஶயத்தையும் மநஸ்ஸிலின்றும், ஸவாஸநமாகப்போக்கி (க) "அவனுடையுணர்வுகொண்டு" என்று, தத்விஷயஜ்ஞாநத்தைக்கொண்டு (௨) "நன்றெனநலம்செய்வது" என்று, அநந்யப்ரயோஜந பக்தியைப் பண்ணுங்கோளென்று (தாம்மயர்வறமதிநலமருளிபஜநத்திலே சேர்க்கிருர்முதற்பத்தில்) அதாவது:— ஸர்வேஶ்வரன் தமக்கு மயர்வறமதிநல மருளினப்போலே, ஸம்ஸாரிகளுக்குத் தம்முடைய க்ருபையாலே தத்வ ஹிதபுருஷார்த்தவிஷயமான வஜ்ஞாநத்தைப்போக்கி, ஜ்ஞாநபக்திகளை யுபதேசித்து பகவத் பஜநத்திலே மூட்டுகிருரென்கை. *

வ்யா. (௨) இரண்டாம்பத்தால் ஸர்வகாரணபூதனை ஸர்வேஶ்வரன் கீழில்பத்திலே தமக்கு அஜ்ஞாதஜ்ஞாபநம்பண்ண, அவனாலே தத்தஜ்ஞாநரானவிவர் அந்தஜ்ஞாநத்துக்கு பலமான மோக்ஷத்தை யப்போதேபெறவேணுமென்ருசைப்பட்டுப்பெருமையாலே அவஸந்நராக, இவருடைய அவஸாதமெல்லாம் தீரும்படி அவன்வந்து ஸம்ஶ்லேஷித்து அந்தஸம்ஶ்லேஷத்தால்வந்த ப்ரீதியையுடையனாய், அந்தப்ரீதி இவரொருவரளவில்பர்யவஸியாதே இவரோடு பரம்பரையா ஸம்பந்தமுடையாரளவும் வெள்ளமிட்டு அந்தப்ரீதியாலே பரமபுருஷார்த்தலக்ஷணமோக்ஷத்தை யிவர்க்கவன்கொடுக்கத்தேட, அந்தமோக்ஷத்தையவனுடைய ஶேஷித்வத்துக்கும் தம்முடைய ஶேஷத்வத்துக்கும் அநுகுணமாம்படி நிஷ்கர்ஷித்தவர் ஆஶ்ரயணீயனைவவனுக்கு கீழுக்தமான பரத்வத்தைநிலைபெறுத்துவனவாண லக்ஷணங்களை வெளியிட்டு ததநுகுணமான்வசந ப்ரத்யக்ஷங்களையும்தர்சிப்பித்து, ஆஶ்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக த்யாஜ்யமான ஸம்ஸாரத்தினுடைய துக்கமும் ப்ராப்யமான மோக்ஷத்தினுடைய வாநந்தமும் ஸம்ஸார நிவ்ருத்தி பூர்வக

க-ப. (க) க-௩-ரு. (௨) ௯ி.எ.

மூ. யுலகம்படைத்தவனென்கிற சிதசித்ரயத்ரிவிதகாரணமானவன் அறியாதனவறிவிக்கவுள்ளந்தேறி தூமனம்மருளிலென்னும் ஜ்ஞாநபலமான வொளிக்கொண்ட மோக்ஷந்தேடிவாட

உலகம்படைத்தவன் - பொருளென்றிவ்வுலகம்படைத்தவனென்று ஜகத்ஸ்ருஷ்டிபண்ணினவன், என்கிற - என்றுசொல்லப்பட்ட, சிதசித்ரய - மூன்றுவகைப்பட்ட சிதசித்துக்களுக்கும், த்ரிவித - மூன்றுவகைப்பட்ட, காரணமானவன் - நிமித்தோபாதாநஸஹகாரிகாரணங்களானவன், அறியாதன - அறியவரியவர்த்தங்களையெல்லாம், அறிவிக்க - அறியும்படிபண்ண, உள்ளம் - திருவுள்ளம், தேறி - அத்யவஸாயத்தோடேகூடி, தூமநம் - பரிசுத்தமான வந்தஃகரணத்தையுடையராய், மருளில் - அவன்குணவிஷயகமான வஜ்ஞாநகந்தமில்லாத, என்னும்- என்றுசொல்லப்பட்ட, ஜ்ஞாநபலமான - ஜ்ஞாநத்துக்குப்பலமான, ஒளிக்கொண்ட - நிரவதிகதேஜோரூபமான, மோக்ஷம்-மோக்ஷத்தை, தேடி- எப்போதோவென்றுதேடி, வாட - (வாடிவாடும்என்று) வாடிப்போக,

---

மோக்ஷப்ராப்திக்குறுப்பான ஸாதநத்தினுடைய ரஸமும் முன்னாகவிதிக்கிற ஸகுணப்ரும்ஹோபாஸநத்தை நிஷித்தாநுஷ்டாநங்களினுடைய த்யாகபூர்வகமாக க்ஷேத்ரவாஸாத்யங்கங்களோடே கூட்டுகிறாரென்கிறார். (சோராதமூவாவேர்முதலாயுலகம்படைத்தவனென்கிற சிதசித்ரயத்ருவித காரணமானவன்) (௧) "சோராத வெப்பொருட்கு மாதியாஞ்சோதி" (௨) "மூவாத்தனிமுதலாய்" (௩) "எப்பொருட்கும் வேர்முதலாய்வித்தாய்" (௪) "பொருளென்றிவ் வுலகம்படைத்தவன்" என்று லீலாவிபூதியில் ஸங்கல்பவிசிஷ்ட வேஷத்தாலே நிமித்தமாயும், ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்ட வேஷத்தாலே உபாதாநமாயும், ஜ்ஞாநஶக்த்யாதிகுண விசிஷ்டவேஷத்தாலே ஸஹகாரியாயும், நித்யவிபூதியில்இச்சாவிசிஷ்ட வேஷத்தாலே நிமித்தமாயும், அப்ராக்ருதாசிஜ்ஜீவவிசிஷ்டவேஷத்தாலே உபாதாநமாயும், விநியோகோபயோகிஜ்ஞாநாதிவிசிஷ்ட வேஷத்தாலே ஸஹகாரியாயும், இப்படி பத்த முக்த நித்யரூபமான சித்ரயத்துக்கும், ப்ராக்ருதாப்ராக்ருதகாலரூபமான வசித்ரயத்துக்கும் த்ருவிதகாரணமும்தானேயானஸர்வேஶ்வரன் (அறியாதனவறிவிக்கவுள்ளம்தேறி) (௫) "அறியாதனவறிவித்த" என்று, இவர்க்கஜ்ஞாதமான தத்வஹித புருஷார்த்தங்களை விஶததமமாகவறிவிக்க, (௬) "அடியையடைந்துள்ளந்தேறி" என்று, அத்தாலே இவருமவனைக்கிட்டிநெஞ்சில்தெளிவையுடையராய் (தூமனம்மருளிலென்னும்ஜ்ஞாநபலமான ஒளிக்கொண்டமோக்ஷம்தேடிவாட) (௭) "தூமனத்தனனாய்" "மருளில் வண்குருகூர்வண்சடகோபன்" என்று, மோக்ஷைகஹேதுதயா

உ-ப. (௧) ௧-௧௧. (௨) அ-௫. (௩) ஷ ௰. (௪) ஷ-௰-௧௪. (௫) ௩-௨. (௬) ௬-அ. (௭) எ-அ.

மூ. உலராமலாவிசேர்ந்து சிக்கெனப்புகுந்து ஸம்பந்திகளும் சேர்தல்மாறினரென்னவாழ்வித்து

உலராமல் - (உலர்ந்துலர்ந்துஎன்று) உலராமல், ஆவிசேர்ந்து - (அந்தாமத்தன்புசெய்து ஆழ்வாருடைய) ஆத்மாவோடேகலந்து, சிக்கென - த்ருடமாக, புகுந்து - ஆழ்வார்திருவுள்ளத்திலேப்ரவேசித்து, ஸம்பந்திகளும் - இவரோடு ஸம்பந்தமுடையாரும், சேர்தல் - நரகஸமீபகாமித்வத்தையும், மாறினரென்ன - தவிர்ந்தார்களென்னும்படி, வாழ்வித்து - எல்லாரும்வாழும்படிபண்ணி,

---

பரிசுத்தமானவந்தஃகரணத்தையுடையராய், அவனுடையகல்யாணகுணவிஷயமான அஜ்ஞானகந்தமில்லாதபடி, கீழ்ப்பத்தில்பிறந்த தம்முடையஜ்ஞாநத்துக்கு பலம் மோக்ஷமாகையாலே (க) "களிப்புங்கவர்வுமற்றுப் பிறப்புப்பிணி மூப்பிறப்பற்று ஒளிக்கொண்ட சோதியுமாய்" (உ) "அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்றுகொலோ" என்று, ப்ராக்ருதவிஷயலாபாலாபங்களால்வரும் கர்வக்லேசங்களும், ஷட்பாவவிகாரங்களும் போய் ஶுத்தஸத்வமாகையாலே நிரவதிகதேஜோரூபமான விக்ரஹத்தையுடையோமாய், நித்யஸூரிகள் திரளிலே கூடப்பெறுவதெப்போதோவென்று அந்தமோக்ஷத்தைப்பெறுகையிலாசையாலே தேடி அப்போதே கிடையாமையாலே (௩) "வாடிவாடும்" என்று, ஆஶ்ரயத்தை யிழந்த தளிர்போலேவாட, (உலராமலாவிசேர்ந்து) (௪) "உள்ளுளாவியுலர்ந்துலர்ந்து" என்கிற, தாபமாறும்படி (௫) "அந்தாமத்தன்புசெய்தென்னுவிசேரம்மானுக்கு" என்கிறபடியே, பரமபதத்தில் பண்ணும் வ்யாமோஹத்தை யிவர்பக்கலிலேசெய்து, கமர்பிளந்த தரையிலே நீர்பாச்சுவாரைப்போலே இவரோடே நிரவதிகஸம்ஶ்லேஷத்தைப்பண்ணி (சிக்கெனப்புகுந்து) (௬) "சிறிதோரிடமும் புறப்படாத் தன்னுள்ளே யுலகுகளொக்கவேவிழுங்கி சிக்கெனப் புகுந்தான்" என்று, அத்யல்பமாயிருப்பதொருபதார்த்தமும் தன்பக்கல் நின்றும் பிறிகதிர்ப்பட்டு நோவுபடாதபடி தன்ஸங்கல்பஸஹஸ்ரைகதேஶத்திலே ஸர்வலோகங்களையுமொருக்காலேவைத்து இனிப்போகாதபடிபுகுந்து (ஸம்பந்திகளும் சேர்தல் மாறின ரென்னவாழ்வித்து) (௭) "எமர் கீழ் மேலெழுபிறப்பும் விடியாவெந்நரகத்தென்றும்சேர்தல்மாறினர்" என்று, இவருடைய ஸம்பந்த ஸம்பந்திகளும் ஸம்ஸாரான்முக்தராம்படி பண்ணி அத்தாலே (௮) "எமர்கீழ்மேலெமரேழெழுபிறப்பும்கேஶவன் தமரானார்கள் மாசதிரிதுபெற்று நம்முடையவாழ்வு வாய்க்கின்றவா" என்று, என்னோடு பரம்பரையா ஸம்பந்தமுடையாரும் என்னோட்டை ஸம்பந்தமே ஹேதுவாக பகவதீயரானார்கள். நிர்ஹேதுகபகவத்க்ருபையாகிற பெருஞ்சதிரைப்பெற்று ஸ்ரீவைஷ்ணவஸந்தாநம் ஊற்றுமாறுமல் பெருகுகிறபடியே என்றிவர்தாமே ஆஶ்சர்யப்படும்படி

உ-ப. (க) ௩-௧0. (உ) ஷை (௩) ௪-௧. (௪) ௪-௭. (௫) ௫-௧. (௬) ௧-௨. (௭) ஷை ௭. (௮) ௭-௧.

மூ. உபகரிக்கிற நீந்துங்கடலிலெம்மாவீட்டையுபையாநுகுண மாக்கினவர் ஆஶ்ரயணீயனுக்கு பூர்வோக்த பரத்வத்தை ஸ்தாபிக்கிறஸகலபலப்ரதத்வ காரணத்வ ஶேஷஶாயித்வ ஶ்ரிய꞉ பதித்வஸௌலப்யாதிகளை திண்ணனைவதென்று வெளியிட்டு

உபகரிக்கிற - உபகாரம்பண்ணுகிற, நீந்தும் - நீஞ்சும்படியான துக்கமில்லாததாய், கெடலில் - அநர்த்தகந்தமில்லாத, எம்மாவீட்டை - எவ்வகையாலும் விலக்ஷணமான பரமபதத்தை, உபயாநுகுணமாக்கினவ-பரதந்த்ரமான வாத்மஸ்வரூபத்துக்கு மீஶ்வரஸ்வரூபத்துக்குமநுகுணமாம்படி, நிஷ்கர்ஷித்தவர், ஆஶ்ரயணீயனுக்கு-ஆஶ்ரயணயோக்யனான வீஶ்வரனுக்கு, பூர்வோக்த - முன்னேசொல்லபட்ட, பரத்வத்தை-பரனானபடியை, ஸ்தாபிக்கிற - நிலைநிறுத்துகிற, ஸகலபல-எல்லாபலங்களையும், ப்ரதத்வ-தருகை, காரணத்வ-ஸகலஜகத்காரணனாயிருக்கை, சேஷ - திருவநந்தாழ்வான்மேலே, ஶாயித்வ - திருக்கண்வளர்ந்தருளுகை, ஶ்ரிய꞉பதித்வ-பெரியபிராட்டியாருக்கு வல்லபனாயிருக்கை, ஸௌலப்ய - ஆஶ்ரிதஸுலபனாயிருக்கை, (இவைகளை) ஆதிகளை - முதலாகவுடையவைகளை, திண்ணனைவதென்று - திண்ணன்வீடு அணைவதரவணைமேல் என்கிற, திருவாய்மொழிகளாலே, வெளியிட்டு - ப்ரகாசிப்பித்து,

இவரைவாழ்வித்து (உபகரிக்கிறநீந்தும் கடலிலெம்மாவீட்டையுபயாநுகுணமாக்கினவர்) இப்படி தம்முடைய ஸம்பந்திபரம்பரையளவும் வெள்ளமிடுகிற தன் ப்ரீதியாலே தமக்கவனுபகரிக்கத் தேடுகிற (௧) "நீந்தும்துயரில்லாவீடு" (௨) "கெடலில்வீடு" (௩) "எம்மாவீடு" என்று துக்க கந்த ரஹிதமாய் அநர்த்தகந்தமில்லாததாய் எவ்வகையாலும் விலக்ஷணமான மோக்ஷத்தையெனக்கென்றுதரில் அந்தமோக்ஷம் அஹங்கார கர்ப்பமாகையாலே ஐஶ்வர்யாதிகளோபாதி ஸ்வரூபவிருத்தமாகையாலே அதினுடைய ப்ரஸங்கமுமெனக்கஸஹ்யம். ஆனபின்பு எனக்குமோக்ஷம்தரப்பார்த்ததாகில் (௪) "நின்செம்மாபாதபர்ப்புத்தலைசேர்த்தொல்லை" (௫) "அம்மாவடியேன் வேண்டுவதீதே" என்று, சேஷியான உன்னுடைய அகவாய்சிவந்து புறவாய் ஶ்யாமமாய் பரமபூஜ்யமாய் பரமபோக்யமான திருவடிகளை ஶேஷபூதனான வென்தலையிலே கோக்குவாயும் படுகேண்ணியும் போலே சடக்கெனச்சேர்க்க வேணும். சேஷியான உன்பக்கல் ஶேஷபூதனான நான் அபேக்ஷித்துப் பெறுவதிதுவே? என்றும், (௬) "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்றும், உபயஸ்வரூபத்துக்குமநுகுணமாக நிஷ்கர்ஷித்தவர் (ஆஶ்ரயணீயனுக்கு பூர்வோக்தபரத்வத்தை ஸ்தாபிக்கிற) ஆஶ்ரயணீயனை தனக்கு முதற்பத்தில் சொல்லப்பட்ட ஸர்வஸ்மாத்பரத்வத்தை நிலைபெறுத்துவனவான (ஸகல பலப்ரதத்வ காரணத்வ ஶேஷஶாயித்வ ஶ்ரிய꞉பதித்வ ஸௌலப்யாதிகளை திண்ணனைவதென்று வெளியிட்டு)

௨-௰. (௧) ௮-௨. (௨) ௯-௧௧. (௩) ௯-௧. (௪) ஷெ (௫) ஷெ (௬) ஷெ-௭.

ரூ. கள்வாதீர்த்த னென்று

கள்வாதீர்த்தனென்று - கள்வாவெம்மையும் தீர்த்தனுலகளந்த என்கிற பாட்டுக்களாலே,

(க) "வீடுமுதல் முழுதுமாய்" என்று, ஸகல பலப்ரதத்வம், (உ) "தேவுமெல்லாப்பொருளும் கருத்தில் வருத்தித்தமாயப்பிரான் ஆக்கினுன் தெய்வவுலகுகள்" என்று, ஸர்வகாரணத்வம், (௩) "ஆழியம்பள்ளியாரே" என்று, லக்ஷணையாலே ஶேஷஶாயித்வம் (௪) "பூமகள்தன்னை வேறன்றிவிண்டொழத்தன்னுள்வைத்து" என்று, ஸ்ரீயஃபதித்வம்,(௫) "கண்ணன்கண்" (௬) "கோபாலகோளரியேறு" என்று, அவதாரஸௌலப்யம், ஆதிஶப்தத்தாலே (எ) "தகுங்கோலத்தாமரைக் கண்ணன்" என்று, புண்டரீகாக்ஷத்வம்,(அ) "ஏழுலகங்கொள்ளும் வள்ளல்வல்வயிற்றுப்பெருமான்" என்று, அகடிதகடநாஸாமர்த்யம், என்கிற விவற்றை "திண்ணன்வீட்டிலும்" (௯) "அணைவதரவணைமேல்" என்று, ஶேஷசாயித்வம், பூம்பாவையாகம்புணர்வது" என்று, ஸ்ரீயஃபதித்வம், (௧௦) "இருவரவர்முதலுந்தானே" என்று, காரணத்வம்,(௧௧) "இணைவனுமெப்பொருட்கும்" என்று, அவதாரப்ரயுக்தஸௌலப்யம், (௧௨) "வீடுமுதலாம்" என்று, ஸகலபலப்ரதத்வம், ஆதிஶப்தத்தாலே (௧௩) "பிறவிக்கடல் நீந்துவார்க்குப்புணைவன்" என்கிற,மோக்ஷோபாயத்வம், "ஆனையிடர்கடிந்த" என்கிற, ஆபத்ஸகத்வம், (௧௪) "மூவுலகுங்காவலோன்" என்கிற, ஸர்வரக்ஷகத்வம், என்கிறவிவற்றை, (௧௫) "அணைவதரவணையிலும் ப்ரகாசிப்பித்து. அன்றிக்கே (௧௬) "வீடுமுதல் முழுதுமாய்" என்று, மோக்ஷப்ரப்ருத்யஶேஷபுருஷார்த்த ப்ரதனுயென்கையாலே ஸகலபலப்ரதத்வத்தையும், (௧எ) "மிகும்தேவுமெப்பொருளும்படைக்க" (௧அ) "கருத்தில்தேவுமெல்லாப்பொருளும் வருத்தித்த" "தன்னுந்தியுள்ளே வாய்த்ததிசைமுகனிந்திரன் வானவராக்கினுன்" என்று, காரணத்வத்தையும், திண்ணன்விட்டிலும் 'அணைவதரவணைமேல்' என்றும், "பூம்பாவையாகம் புணர்வது" என்றும், "இணைவனுமெப்பொருட்கும்" என்றும், அடைவே ஶேஷஶாயித்வ, ஸ்ரீயஃபதித்வ, ஸௌலப்யங்களையும், ஆதிஶப்தத்தாலே, "வீடுமுதலாம்" என்று, மோக்ஷப்ரதத்வத்தையும், நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்" (௧௯) "பலமுந்து சீரில்படிமின்" என்று, முமுக்ஷூபாஸ்யத்வத்தையும், "அணைவதரவணையிலும்" வெளியிட்டென்னவுமாம். இந்தயோஜனையே இதின் பட்டோலையான க்ரந்தத்திலிவரருளிச்செய்ததுக்குச்சேருமது. முற்பட்டயோஜனையில் (௨௦) "ஆழியம்பள்ளியாரே" என்று, ஶேஷஶாயித்வம், லக்ஷணையாலே கொள்ள

உ-ப. (க) உ-க. (உ) ௯-அ. (௩) ௯-௬. (௪) ௯-௩. (௫) உ-க. (௬) ௯-உ. (எ) ௯-௫. (அ) ௯ எ. (௯-மு-க௩-ல்) அ - க. (௧௪) அ-௫. (௧௫ - ௧௬) உ-க. (௧எ) உ-௫. (௧அ) உ-அ. (௧௯) அ-௪. (௨௦) உ-௬.

மூ. வசந ப்ரத்யக்ஷங்களுங் காட்டிபுலனைந்தென்று

வசநப்ரத்யக்ஷங்களும் - வசநம் ப்ரத்யக்ஷம் இவைகளையும், காட்டி - எல்லாரும் காணும்படிபண்ணி, புலனைந்து - புலனைந்துமேயுமென்கிற பாட்டாலே,

வேண்டுகையும், "வீடுமுத்லாம்" என்று, மோக்ஷத்துக்குஹேதுவாமென்கிறத்தை ப்ரகரணவிருத்தமாம்படி மோக்ஷாதிபுருஷார்த்த ப்ரதத்வமாகச்சொல்லுகையும், ஸகலபலப்ரதத்வமென்றுதுடங்கி இவரெண்ணின வடைவுக்குச்சேர இரண்டு திருவாய்மொழியிலும் சொல்லப் போகாமையுமாகிற அஸ்வாரஸ்யங்களுமுண்டு. (கள்வாதீர்த்தனென்று வசநப்ரத்யக்ஷங்களுங்காட்டி) (க) "கள்வா" என்கிறபாட்டிலே, அவதரித்து உன்னுடையபரத்வம் தெரியாதபடிநின்றாயேயாகிலும், எங்களுக்குக்காரண பூதனனசேஷி நீயே என்று தேவதாந்தரங்களில் தலைவரான ப்ரம்ஹருத்ராதிகளே, தங்களுக்குக்காக்ஷிகொடுக்கைக்குப் பெரியதிருவடியை மேற்கொண்டு புறப்பட்டால் அவனுடைய திருவடிகளிலேவிழுந்து கூப்பிடாநிற்பர்களென்று, அவனே ஸர்வஸ்மாத்பரனென்னு மிவ்வர்த்தத்துக்கு தேவதாந்தரங்கள் வசநத்தையும் (உ) "தீர்த்தனுலகளந்த" என்கிறபாட்டிலே, ஓரஸ்த்ரலாபத்துக்காக புஷ்பாதிகளுங்கொண்டு ருத்ரஸமாராதநம் பண்ணப்புகுகிறவர்ஜுனனைப் பாத்து அந்த புஷ்பங்களை நங்காலிலே பொகடு, என்றுக்ருஷ்ணனருளிச்செய்ய, அவனும் தீர்த்த பூதனனவவனுடைய திருவுலகளந்தருளின திருவடிகளிலே அப்பூவைப்பறிமாற (ங) "పార్థో విజేతా మధుసూదనస్య పాదారవిన్దార్పితచిత్రపుష్పం । తదర్హగంగాధరమౌళిమధ్యే భూయావవీరః కృతనిశ్చయార్థః" "பார்த்தோ விஜேதா மதுஸூதநஸ்ய பாதாரவிந்தார்ப்பிதசித்ரபுஷ்பம் ததர்ஶகங்காதரமௌளிமத்யேபூவவீரஃக்ருத நிஶ்சிதார்த்தஃ" என்கிறபடியே, தான்திருவடிகளில்சாத்தினபுஷ்பங்களோடு ஸஜாதீயங்களானவையன்றிக்கே அவைதன்னையேபாடே பக்கே யன்றிக்கே ருத்ரன்தலைமேலே ஆப்தவாக்யத்தாலன்றிக்கே தானேப்ரத்யக்ஷித்து (ச) "సతు పార్థో మహామనాః" "ஸதுபார்த்தோ மஹாமநாஃ" என்கிறபடியே, பேரளவுடையனனவவன் நிர்ணயித்தபரத்வம் மந்தமதிகளாலே இன்றாயும்படியாயிருந்ததோ? என்று, ப்ரத்யக்ஷங்களையுங்காட்டி, (புலனைந்தென்று) ஸம்ஸாரமோக்ஷ ஸாதநதுக்காநந்தரஸம் முன்னாகவிதிக்கிற அந்தர்க்கதகுணோபாஸநத்தை (ரு) "புலனைந்து" என்கிற, பாட்டிலே ஆஶ்ரயணத்திலிழிகிறவர்களுக்குத்யாஜ்யத்திலே ஜிஹாஸையும் ப்ராப்யத்திற்ப்ராவண்யமும், ஸாதநத்தில்ருசியும் விளையும்படி (கூ) "புலனைந்துமேயும்பொறியைந்துநீங்கி" என்று, பரிச்சிந்நவஸ்துக்ராஹகமான இந்த்ரியவஶ்யதை தவிர்ந்தென்கையாலே அல்பாஸ்திரத்

உ-ப. (க) உ-௧0. (உ) அ-கூ. (ங) (ச) ஸ்ரீ-கி. க. சகூ. (ரு) தி-வா. உ. அ. ச. (கூ) ஷை.

௯. ஸம்ஸாரமோக்ஷ ஸாதநதுக்காநந்தரஸம்முன்னாக விதிக்கிற அந்தர்க்கதகுணோபாஸநத்தை மதித்துப்பெருக்கி மூழ்கியழுந்திக் கீழ்மைவலம்சூதும் செய்து இளமை கெடாமல்

ஸம்ஸாரமோக்ஷ-ஸம்ஸாரம்மோக்ஷம் (இவைகளுக்கும்), ஸாதந - உபாயாநுஷ்டாநத்தினுடையவும், துக்காநந்த-துக்கம் ஆநந்தம், ரஸம் - ரஸவிசேஷம், (இவைகளை) முன்னாக - முதலாக, விதிக்கிற - விதிக்கிற, அந்தர்க்கதகுண - ஈச்வரனுக்குள்ளேயுண்டான கல்யாணகுணங்களுடைய, உபாஸநத்தை - தைலதாராவதவிச்சிந்நஸ்ம்ருதிஸந்தாநத்தை, மதித்து - (சதிரிளமடவார் தாழ்ச்சியை) மதித்து, பெருக்கி - பெருகும்படிபண்ணி, மூழ்கி - வல்வினையிலேமுழுகி, அழுந்து - நரகிலேயழுந்தி, கீழ்மை - கீழ்மையையும், வலம் - பலத்தையும், சூதும்-சூதையும், செய்து - பண்ணி, இளமைகெடாமல் - கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்,

வாதி தோஷதுஷ்டமான சப்தாதி போகங்களையநுபவித்திருக்கும் ஸம்ஸாரத்தினுடையதுக்கமும் "நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்" என்று நன்மைகளுக்குமுடிவில்லாத திருநாட்டிலே புகுவீரென்கையாலே மோக்ஷத்தினுடைய வாநந்தமும், "பலமுந்துசீரில்படிமின்" என்று, (க) "ஸுஸுகம் கர்த்தும்" "ஸு-ஸு-கம் கர்த்தும்" என்கிறபடியே, ஸ்மர்த்தவ்ய விஷயஸாரஸ்யத்தாலே பலதசையில்போலே ஸாதநதசையிலும் இனிதாகவிருக்கையாலே பலம் முற்பட்டிருக்கிற கல்யாணகுணங்களில் ப்ரவணராங்கோளென்கையாலே, ஸாதநத்தினுடையரஸம் முன்னாக ஸம்ஸாரநிவ்ருத்திபூர்வகமான மோக்ஷப்ராப்தி வேண்டியிருப்பார் அஸ-ர வர்க்கத்தைத் தடுமாறி முடிந்துபோம்படி செற்றவனாகையாலே ப்ரபலப்ரதிபந்தகங்களை அநாயாஸேநபோக்கவல்லவனுடைய குணங்களிலே ப்ரவணராகுங்கோளென்று விதிக்கிற (உ) "தஸ்மிந்யதந்தஸ் ததுபாஸிதவ்யம்" "தஸ்மிந்யதந்தஸ் ததுபாஸிதவ்யம்" என்று, ப்ரம்ஹஸ்வரூபாந்தர்க்கதமான அபஹதபாப்மத்வாதி குணோபாஸநத்தை (மதித்துப்பெருக்கி மூழ்கியழுந்திக்கீழ்மை வலம் சூதும்சதிரிளமைகெடாமல்) (௩)"சதிரிளமடவார் தாழ்சியைமதித்து 'திறமுடைவலத்தால்' தீவினைபெருக்கி, வல்வினைமூழ்கி 'நரகழுந்தி' 'கீழ்மைசெய்து' 'வலங்கழித்து' சூதென்று "களவும் சூதும்செய்து, (ச)கிளரொளி யிளமைக் கெடுவதன்முன்னம்" என்று, உபாஸநவிரோதியான இதர விஷயப்ராவண்யத்தைப்பண்ணி அத்தாலே பாபங்களைக்கூடுபூரித்து அவற்றிலே மறுநனைய மூழ்கித்தறைப்பட்டு தண்மையைச்செய்து பலத்தைப்பாழேபோக்கி, பச்யதோ

(க) (உ) தைத்தரீயே - நாராயணே. (௩) தி - வா. உ. ௧0, உ. (ச) ௧0. க. க.

மூ. செய்யும் க்ஷேத்ரவாஸ ஸங்கீர்த்தநாஞ் ஜலிப்ரதக்ஷிணகதி
சிந்தநாத்யங்க யுக்தமாக்குகிறுர் இரண்டாம் பத்தில்:—

மூ—(௩) முழுதுமாய்

செய்யும் - பால்யத்திலேகர்த்தவ்யமான, க்ஷேத்ரவாஸ - திவ்யதேஶவாஸம், ஸங்கீர்த்தந - திருநாமஸங்கீர்த்தநம், அஞ்சலி - கைகூப்புகை, ப்ரதக்ஷிண - ப்ரதக்ஷிணம்பண்ணுகை, கதிசிந்தந - அர்ச்சிராதிமார்க்க கமநசிந்தை, ஆதி - இவைமுதலான, அங்க - அங்கங்களோடே, யுக்த மாக்குகுறுர்-கூடினதாம்படிபண்ணுகிறுர், இரண்டாம்பத்தில் - த்விதீய தஶகத்தில்.

(அ) முழுதுமாய் - எல்லாபதார்த்தங்களும் தானேயாய்,

ஹறனுய், க்ருத்ரிமனுய் பால்யத்தைப்பாழேபோக்காதே (செய்யும் க்ஷேத்ரவாஸ ஸங்கீர்த்தநாஞ்ஜலிப்ரதக்ஷிண கதிசிந்தநாத்யங்கயுக்தமாக்கு கிறுரிரண்டாம்பத்தில்) அதாவது :— (க) "𑌬𑌾𑌲𑍍𑌯 𑌏𑌵 𑌚𑌰𑍇𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌂" "பால்யயேவசரேத்தர்மம்" என்றும், (உ) "𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌬𑌾𑌲𑍍𑌯𑍇 𑌵𑌿𑌵𑍇𑌕𑌾𑌤𑍍𑌮𑌾 𑌯𑌤𑍇𑌤 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍇 𑌸𑌦𑌾" "தஸ்மாத் பால்யேவிவேதகாத்மாயதேதஶ்ரேயஸேஸதா" என்றும் சொல்லுகிறபடியே - பால்யத்திலே கர்த்தவ்யமான "மாலிருஞ்சோலை சார்வது சதிரே" "போதவழ்மலையே புகுவதுபொருளே" என்கிற க்ஷேத்ரவாஸம், "பதியதுவேத்தி" என்கிற ஸங்கீர்தநம், "தொழக்கருதுவதே" என்கிற அஞ்சலி, "வலஞ்செய்துநாளும் மருவுதல்வழக்கே" என்கிற ப்ரதக்ஷிணம், "நெறிபடவதுவே நினைவதுநலமே" என்கிற கதிசிந்தனையாகிற விவைமுதலான உபாஸநாங்கத்தோடே சேர்க்கிறுர் இரண்டாம்பத்தி லென்கை. *

வ்யா. (௩) மூன்றும்பத்தால், (௩) "𑌤𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍" "தத்ஸ்ருஷ்டவா ததேவாநுப்ராவிஶத்" என்கிறபடியே, கார்யபூதசேதநாசேதநங்களையடைய வ்யாபித்து தத்கததோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனுயிருக்கையாலே ஸர்வவ்யாபகனுன ஸர்வேஶ்வரன், கீழில்பத்திலிவர் உபயாநுகுணமாக நிஷ்கர்ஷித்தமோக்ஷத்துக்குபலமான ஸ்வவிக்ரஹாநுபவத்தையிவருக்குப்பண்ணிவிக்க, இவருமநுபவித்துதரித்து அவ்வநுபவஜநிதப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஸர்வவிதகைங்கர்யங்களும் செய்யவேண்டும்படியான அபிநிவேஶத்தையுடையராய், தம்மபிநிவேஶாநுகுணமாக வவன்காட்டிக் கொடுத்தவவனுடைய ஸர்வாத்மபாவத்தைப் பேசி அத்தால்வந்த ப்ரீதியினுடைய களிப்பையுடையராய் அந்தப்ரீதியவனளவில்பர்யவஸியாதே பாகவதஶேஷத்வத்தினெல்லையளவும் சென்று அந்த பாகவதர்களுக்கு நிரூபகமான பகவத்வைலக்ஷண்யாநுஸந்தாநத்தாலே ஒன்றின் வ்ருத்தியை யொன்றுசைப்படும்படி சேதநஸமாதியையடைந்த கரணக்ராமமும் தாமும்தனித்தனியவநுபவிக்கவேண்டும் பெருவிடாயையுடையராய், இதாஸ்தோத்ரத்துக்கநர்ஹகரணராய்,

(க) (உ) வி - பு - க. எ. எகு. (௩) தை - உ. ஆ - சு. ௩.

மூ. யெங்கணு மொழிவற அருவாகிநின்று தோய்விலனும் ஸர்வவ்யாபகன் தீர்ந்த வடியார்களைத் தாளிணைக் கீழ்க்கொள்ளும் தன்படிக்கும்

எங்கணும்-எல்லாவிடங்களிலும், ஒழிவற-விச்சேதமில்லாமல், அருவாகிநின்று - அந்தர்யாமிதயாநின்று, தோய்விலனும் - இவற்றோடு ஸ்பர்ஶமில்லாதவனான, ஸர்வவ்யாபகன் - ஸகலவஸ்துக்களையும் வ்யாபித்திருக்குமவன், தீர்ந்த-தனக்கேயநந்யார்ஹரான, அடியார்களை - ஆஶ்ரிதரை, தாளிணைக்கீழ் - சரணயுகளத்தின்கீழே, கொள்ளும் - ஸ்வீகரிக்கிற, தன்படிக்கும் - தன்னுடைய ஸ்வபாவத்துக்கும்,

அவ்வளவன்றிக்கே பகவத்ஸ்தோத்ரத்துக்கர்ஹகரணருமாய், பகவதநுபவத்துக்கு தமக்கொரு ப்ரதிஹதிடக்கமானவையுமற்று நிரதிஶயாநந்தயுக்தரானவர், புண்டரீகாக்ஷனாய்ஸூரிஸேவ்யனானவனை நம்மாலாஶ்ரயிக்கப்போமோவென்று ஸம்ஸாரிகளஞ்சிக்கைவாங்காமல் மேல்விழுந்தாஶ்ரயிக்கும்படி கீழிரண்டுபத்தாலு முபதேசித்த அவதார ஸௌலப்யம் பரத்வஸ்தாநீயமாம்படி அர்ச்சாவதார ஸௌலப்யத்தை யுபதேசித்து அர்ச்சிராதிகதியாலே பரமபதத்தைப்ராபிக்குமவனை யொழிய இதரஸ்தோத்ரத்திலே தாழவிழுகைநிஷ்ப்ரயோஜநம், ஆனபின்புநீங்கள், ஸகலபலப்ரதநுமாய் ஸாம்யாபத்திப்ரதநுமானவவன் விஷயத்திலே வாசிகமானவடிமையைச்செய்யுங்கோளென்று நிஹீநவ்ருத்தியான இதரஸேவையை நிவர்த்திப்பித்து தம்முடைய வ்ருத்தியான வாசிககைங்கர்யத்திலே மூட்டுகிறாரென்கிறார். (முழுதுமாயெங்கணுமொழிவற வருவாகிநின்று தோய்விலனும்ஸர்வவ்யாபகன்) (௧) "முழுதுமாய் முழுதியன்றாய்" (௨) "ஏழ்ச்சிக்கேடின்றியெங்கணும் நிறைந்தவெந்தாய்" "எஞ்சான்று மெங்குமொழிவற நிறைந்துநின்ற" (௩) "அளவுடை யைம்புலன்களறியாவகையாலருவாகிநிற்கும்" (௪) "யாவையும் யாவரும் தானாயவரவர் சமயந்தோறும் தோய்விலன்" என்று, தேஶகால வஸ்துக்களால் பரிச்சேதிக்கவொண்ணாதபடி கார்யபூத ஸகலசேதநாசேதநங்களையும் வ்யாபித்து, (௫) "అనశ్నన్నన్యో అభిచాకశీతి" "அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி" என்கிறபடியே, தத்கததோஷாஸம்ஸ்ப்ருஷ்டனாயிருக்கையாலே, வ்யாபகனான ஸர்வேஶ்வரன் (தீர்ந்தவடியார்களைத் தாளிணைக்கீழ்க்கொள்ளும் தன்படிக்கும்) (௬) "தீர்ந்தவடியவர்தம்மை" என்று, ப்ராப்யப்ராபகங்களிரண்டும் தானேயாக வத்யவஸித்தவாஶ்ரிதரை (௭) "சன்மசன்மாந்தரங்காத்தடியார்களைக்கொண்டுபோய்த் தன்மைபெறுத்தித்தன் தாளிணைக்கீழ்கொள்ளுமப்பன்" என்று, ஜன்மபரம்பரைகளில் புகாதபடி ரக்ஷித்து, ஆரப்தஶரீராவஸாநத்திலே அர்ச்சிராதிமார்க்கத்தாலே

திவா. ௩-ப. (௧) ௧-அ. (௨) ௨-௪. (௩) ௧0-௧0. (௪) ௪-௧0. (௫) ருக்வேதே. (௬) ௫-௧௧. (௭) ௭-௭.

சூ. நீதந்தமாமாயப்புணர்வினைப்பிறப்பழுந்தியலமருகின்றேன் வேரறவரிந்தெந்நாளெங்குவந்து தலைப்பெய்வனென்று கழித்துப்புகுந்தும் தங்காதலுக்கும்

நீதந்த - நீயேஸ்வேச்சையாகக்கொடுத்த, மாமாய - ஆஶ்சர்யகரமான, புணர் - கட்டையுடைய, வினை-கர்மநிபந்தநமான, பிறப்பு - ஜந்ம (ஸாகரத்திலே) அழுந்தி - முழுகிமேலேகிளம்பாமல், அலமருகின்றேன் - அலமாப்புப்படாநின்றேன், வேரற-பக்கவேரோடேயறும்படி, அரிந்து-சேதித்து, எந்நாள் - எந்தநாளிலே, எங்கு - எவ்விடத்திலே, வந்து - (ஸமீபத்தில்) வந்து, தலைப்பெய்வனென்று - கிட்டக்கடவேனென்று, கழித்து - காயங்கழித்து, புகும் - சேரவேண்டிய, தங்காதலுக்கும் - ஶேஷபூதரான தம்முடையவாசைக்கும்,

தேஶவிஶேஷத்திலேகொடுபோய், ஸ்வஸ்வரூபப்ராப்தியைப் பண்ணிக்கொடுத்து பரதோபதாநத்தோபாதியாக தன்திருவடிகளின் கீழேயிட்டுக்கொள்ளும் ஶேஷியான தன்னுடைய ஔதார்யத்துக்கும் (நீதந்தமாமாயப்புணர்வினைப் பிறப்பழுந்தியலமருகின்றேன் வேரறவரிந்தென்னாளெங்குவந்து தலைப்பெய்வனென்று கழித்துபுகும் தம்காதலுக்கும்) (௧) "அந்நாள் நீ தந்தவாக்கையின்வழியுழல்வேன்" பன்மாமாயப் பல்பிறவியில்படுகின்றயான்" "பொல்லாவாக்கையின் புணர்வினை" "வினையியல்பிறப்பழுந்தி" (௪) "கொடுவினை தூத்துள்நின்றுபாவியேன்பலகாலும் வழிதிகைத்தலமருகின்றேன்" என்று, ஸ்ருஷ்டிகாலத்திலே உன்னைப் பெருகைக்குடலாக நீ தந்த ஶரீரத்தைக்கொண்டுன்னைப் பெறப்பாராதே நானதின்வழியேபோய் அநர்த்தத்தைச் சூழ்த்துக்கொண்டு குணத்ரயபேதத்தாலே பலவகைப்பட்டு துரத்யயையான ப்ரக்ருதிகார்யமான தேவாதி தேஹங்களிலே அவகாஹித்து ஹேயமான ஶரீத்துக்கடியாய் ஒன்றோடொன்று பிணைந்திருக்கிற கர்ம்மடியாக மீண்டும் பாபத்திலே கொடுபோய் மூட்டக்கடவதான ஜந்மபரம்பரைகளிலேயழுந்தி, என்னுலடியறுக்கவும் அடிகாணவுமொண்ணாதே புகுரவழிதெரியுமதொழிய புறப்பட வழிதெரியாத பாபமாகிற மிடைந்தவிந்த தூற்றிலே யகப்பட்டுநின்றுன்னை ப்ராபிக்கைக்கீடான வழிகாணாதே கூப்பிட்டலமாவாநின்றேன் (௫) "வினைகளை வேரறப்பாய்ந்து" (௬) "தொன்மாவல்வினைத்துடர்களைமுதலரிந்து" என்று, அநாதியாய் அபரிச்சேத்யமாய் ஸ்வயத்நநிவர்த்யமல்லாதபடி அதிப்ரபலமான பாபங்களினுடையவநுபந்தங்களை மறுகிளைவாராமல் வேறற்றுப்போம்படி ஊசிவேரோடேயரிந்துபொகட்டு (௭) "எந்நாள் யானுன்னையினிவந்து கூடுவன்" (௮) "எங்குவந்தணுகிற்பன்" (௯) "எங்கினித் தலைப்பெய்வன்" என்று, நானுன்னைக்கிட்டுவதொருநாளறுதியிட்டுத்

தி-வா. ௩-ப. (௧ - மு - ௪ - ல்) ௨-௧+௨-௨+௨-௩+௨-௭+௨-௯+ (௫) ௨-௧. (௬) ௨-௨. (௭) ௨-௧. (௮) ௨-௫. (௯) ௨-௯.

௬௫ ஸத்ருபமாகக்கண்டுகொள்ளென்னும் ஊனமில்மோக்ஷபலமான முடிச்சோதியிலநுபவத்தாலே நித்யவஸ்து நீடுபெற்று அவச்சேதமற்றவடிமைசெய்யவேண்டும்படி

ஸத்ருபமாக - தகுந்திருக்கும்படி, கண்டுகொள்ளென்னும் - கண்டுகொள்ளென்றுகாட்டிக்கொடுக்கிற, ஊனமில்-புநராவ்ருத்தியாகிற குறைத்தவில்லாத, மோக்ஷபலமான - மோக்ஷத்துக்குபலமான, முடிச்சோதியில் - முடிச்சோதியென்கிற திருவாய்மொழியில் சொல்லுகிற, அநுபவத்தாலே - ஆபாதசூடம்பண்ணின வநுபவத்தாலே, நித்யவஸ்து - நித்யமானவாத்மா, நீடுபெற்று - ஸத்தையைப்ராபித்து, அவச்சேதமற்ற - பரிச்சேதமின்றிக்கேயிருக்கிற, அடிமைசெய்ய - தாஸ்யஸூசகமான கைங்கர்யத்தைப்பண்ண, வேண்டும்படி - ஆசைப்பட்டபடியே,

---

தரவேணும். நானுன்னையெங்குவந்துகிட்டக்கடவேன். இனி கிட்டுகையென்றொரு பொருளுண்டோ? என்று, ஶரீரஸம்பந்தத்துக்கு நொந்து அதிலுண்டானவருசியோடே (௧) "காயங்கழித்தவன் தாளிணைக்கீழ்புகுங்காதலன்" என்று, பகவத்குணாநுபவத்தோடே காலக்ஷேபத்தைப்பண்ணி ஶரீரத்தைவிட்டவன் திருவடிகளின்கீழே புகவேணுமென்னும்படியான ஶேஷபூதரான தம்முடைய வாசைக்கும், (ஸத்ருஶமாகக்கண்டுகொள்ளென்னும்) இப்படியானவிவர்படிக்கும்தகுதியாக (௨) "வானவர்நாட்டையும் நீ கண்டுகொள்" என்று, ஈஶ்வரன் காட்டிக்கொடுக்கிற (ஊனமில்மோக்ஷபலமான முடிச்சோதியிலநுபவத்தாலே நித்யவஸ்து நீடுபெற்று) (௩) "ஊனமில்மோக்கமென்கோ" என்று, ப்ரகாரமான ஆத்மாநுபவமாத்ரத்திலன்றிக்கே ப்ரகாரியளவுஞ் செல்லவநுபவிக்கையாலே குறைவில்லாததாய், ஸ்வரூபாநுரூபமாகக்கீழில் பத்திலறுதியிட்டபரமபுருஷார்த்தலக்ஷணமோக்ஷத்துக்கு பலம், பகவதநுபவகைங்கர்யங்களாகையாலே (௪) "முடிச்சோதி" என்கிற திருவாய்மொழியிலே, அவன்வடிவழகையும் ஆபரணச்சேர்த்தியையுமநுபவித்து அவைபரிச்சேதித்தநுபவிக்கவொண்ணாமையாலே, இது கரணஸங்கோசநிபந்தநமென்று நினைத்து, இவர்படுகிற க்லேஶத்தை விஷயவைலக்ஷண்ய நிபந்தனமென்றறிவித்து, ஈஶ்வரன் நிவ்ருத்தமாக்க, அவ்வநுபவத்தாலே, (௫) "பெற்றதுநீடுயிரோ" என்று, நித்யவஸ்துஸத்தைபெற்று (அவச்சேதமற்ற வடிமைசெய்ய வேண்டும்படி) ஸத்தாகார்யமும்பலிக்கவேண்டுகையாலே, (௬) "ஒழிவில்காலமெல்லாமுடனாய் மன்னிவழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்" என்று, தேஶகாலாவஸ்தாப்ரகாரங்களையிட்டவச்சேதியாதபடிஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும், ஸர்வவிதகைங்கர்யங்களும் செய்ய

தி - வா - ௩ - ப. (௧) ௬ - ௮. (௨) ௬ - ௬. (௩) ௪-௭. (௪) ௩ - ௧. (௫) ௨ - ௧௦. (௬) ௩ - ௧.

மூ. ஸர்வாத்மபாவத்தைப்புகழ்ந்து சொல்லிப்பாடி யேத்திப் பிதற்றியெழுந்தும் பறந்தும் துள்ளிக்குனித்துத்தடுகுட் டக்கும்பிடுநட்டமிட்டுச் சிரிக்கக்குழைந்துநையும் ப்ரீதியு களத்தம் மடியாரென்ன வுடன் கூடும்ஸாத்யம்வளர

ஸர்வாத்மபாவத்தை - அவன்காட்டிக்கொடுத்த ஸர்வாந்தராத்மத்வத்தை, புகழ்ந்து - ஸ்துதித்து, சொல்லி - எம்மானைச்சொல்லி, பாடி - பண்கள்தலைக்கொள்ளப்பாடி, ஏத்தி - (முனிவின்றி) யேத்தி, பிதற்றி - (பேர்பலசொல்லிப்) பிதற்றி, எழுந்தும் - கிளம்பியும், பறந்தும்-ஆகாசத்திலே ஸஞ்சரித்தும், துள்ளி - அடிக்கடிகிளம்பி, குனித்து - ஸ்தோத்ரநமஸ்காராதிகளைப்பண்ணி, தடுகுட்ட - தலைகீழாக, கும்பிடு - கும்பிட்டு, நட்டமிட்டு - நட்டமாகநின்று, சிரிக்க - உலோகர்சிரிக்க, குழைந்து - உள்ளங்குழைந்து, நையும் - சிதிலமாம்படியான, ப்ரீதி - ப்ரீதியானது, உகள - கரைபுரள, தம்மடியாரென்ன - அவனுடைய ஸம்பந்த ஸம்பந்திகளே யெமக்குஸ்வாமிகளென்னும்படி, உடன்கூடும் - உடன் கூடுவதென்னுகொலோவென்று ப்ரார்த்திக்க வேண்டியதான, ஸாத்யம் - பலம், வளர - அவனையடியாரோடேகூடி யநுபவிக்கவாசைப்படுகையொழிய அவனடியாரோடேயடியாரையே அநுபவிக்கவேணுமென்னும்படிவளர,

---

வேண்டும்படியானஅபிநிவேசத்தாலே(ஸர்வாத்மபாவத்தைப்புகழ்ந்து) தம்முடையபாரிப்புக்கீடாகத் தம்மையடிமைகொள்ளும்படிகோலி, அவன்காட்டிக்கொடுத்த ஸர்வாத்மபாவத்தை (௧) "புகழநல்லொருவனிலே" பூதங்கள் பௌதிகங்கள் உஜ்வலமான மாணிக்யாதிகள் ரஸவத்பதார்த்தங்கள் காநாதிஶப்தராசிகள் மோக்ஷாதிபுருஷார்த்தங்கள் ஜகத்ப்ரதாநரான ப்ரும்ஹருத்ராதிகள் இவற்றுக்கடையகாரணமானப்ரக்ருதிபுருஷர்கள், இவற்றையடைய விபூதியாகவுடையனாய், இவற்றிலேஅந்தராத்மதயாவ்யாபித்து தத்ஸ்ப்ருஷ்டதோஷைரஸம் ஸ்ப்ருஷ்டனாயிருக்கிறபடியைப்பேசி, அவ்வநுபவத்தாலே ப்ரீதராய் (சொல்லிப்பாடியேத்திப்பிதற்றி எழுந்தும்பறந்தும் துள்ளிக்குனித்துத்தடுகுட்டக்கும்பிடு நட்டமிட்டுச் சிரிக்கக்குழைந்து நையும்ப்ரீதியுகள) (௨) "எம்மானைச் சொல்லிப்பாடி" "பண்கள் தலைக்கொள்ளப்பாடி" 'முனிவின்றியேத்தி, 'பேர்பலசொல்லிப்பிதற்றி' "எழுந்தும் பறந்தும் துள்ளாதார்" "எத்திக்குனிப்பார்" 'தடுகுட்டமாய்' 'கும்பிடுநட்டமிட்டாடி' 'உலோகர் சிரிக்கநின்றாடி' (௩) 'நெஞ்சம்குழைந்து நையாதே'என்று வாசிககாயிகமாநஸவ்யாபாரங்களாலே களிக்கும்படியந்த ப்ரீதிதலைமண்டை யிட்டுச் செல்ல (தம்மடியாரென்ன உடன்கூடும் ஸாத்யம் வளர) இப்படியுண்டான ப்ரீதியவனளவில் பர்யவஸியாதே (௧0) "தம்மடியாரடியார் தமக்

திவா-௩-ப. (௧) ௪-௧. (௨ - ௩ - ௬ - ௰) ௫-௧+௫-௨+௫-௪+௫-௧+௫-௬+௫-௩+௫-௩+௫-௪+௫-௪+௫-௭+ (௧0) ௭-௧0.

மூ. பைகொள்பாம்புபோலே இந்த்ரிய வ்ருத்திநியமமறப்பாட வந்த கவியன்றிக்கே படைத்தான் ஶ்லோகக்ருத்தாய்க் குறைமுட்டுப்பரிவிடர்துயர்

பைகொள்பாம்புபோலே - படத்தையுடைய திருவநந்தாழ்வானைப்போலே, இந்த்ரிய - இந்த்ரியங்களுடைய, வ்ருத்தி - வ்யாபாரத்தினுடைய, நியமமற - நியமமில்லாதபடி, பாடவந்த - மானிடம்பாடவந்த, கவியன்றிக்கே - கவியன்றியிலே, படைத்தான் - யோசித்து யோசித்துலோகங்களை ஸ்ருட்டித்தவனுடைய, ஶ்லோகக்ருத்தாய் - (நானேஶ்லோகக்ருத்தாகிறேனென்றாப்போலே) ஸ்தோத்ர க்ருத்தாய், குறை-(ஒருதேஶவிஶேஷத்தேறப்போயநுபவிக்கப் பெண்ணிலேனென்கிற) குறை, முட்டு - (இவ்வநுபவத்துக்குவரும்) ப்ரதிஹதி, பரிவு - அவனை விஷயீகரித்தபின்பு என்மனதில் விஷயாந்தரஸங்கம், இடர் - அவனைப்பற்றினவெனக்கொருதுக்கம், துயர் - மீட்சியாலே வரப்பட்டதுக்கம்,

கடியாரடியார் தம்மடியாரடியோங்களே" என்று, ததிய ஶேஷத்வத்தினெல்லையிலே நிற்கிறவர்கள் நமக்குத்தேஶ்யரென்னும்படி (க) "அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்றுகொலோ" என்று, கீழில்பத்தில் ப்ரார்த்தித்தஸாத்யம் அவர்களோடே கூடியவனை யநுபவிக்குமளவன்றிக்கே அவனடியாருடைய ஶேஷத்வத்தினெல்லை யளவுஞ் செல்லவளர, (பைகொள்பாம்புபோலே இந்த்ரியவ்ருத்திநியமமற) "பைகொள்பாம்பேறியுறைபரனே" என்று, அவனுடையஸர்வாதிகத்வப்ரகாஶகமான படுக்கையாயிருக்கும் திருவநந்தாழ்வான், (உ) "சக்ஷுஶ்ரவா:" "சக்ஷுஶ்ரவா:" என்கிறபடியே, ஒருகரணத்தாலே கரணாந்தரவ்ருத்தியையும்கொள்ளுமாப்போலே (௩) "நெஞ்சமேநீணகராக விருந்தவென் தஞ்சனே" "வாசகமேயேத்தவருள்செய்யும் வானவர்தம்நாயகனே" "கைகளாலாறத்தொழுது தொழுதுன்னை" (௪) "கண்களால் காணவருங்கொல்" இத்யாதிகளாலே, வாக்பாணி சக்ஷுஶ்ரோத்ரங்களான இந்த்ரியங்கள், மநோவாக்பாணி சக்ஷுர்வ்ருத்திகளை ஆசைப்படும்படியாகையாலே இந்த்ரியவ்ருத்தி நியமமின்றிக்கே யவனையநுபவிக்க வேண்டும்படியான பெருவிடாயையுடையராய் (பாடவந்தகவியன்றிக்கேபடைத்தான் ஶ்லோகக்ருத்தாய்) (எ) "வாய்கொண்டு மானிடம் பாடவந்தகவியேனல்லேன்" என்று, இதரஸ்தோத்ரத்துக்கநர்ஹகரணராய் (அ) "ஒன்றியொன்றி உலகம்படைத்தான் கவியாயினேற்கு" என்று, ஜகத்ஸ்ருஷ்டிமுகத்தாலே தம்முடைய உஜ்ஜீவநத்துக்குக்ருஷிபண்ணின ஸர்வேஶ்வரன் விஷயத்திலே (௯) "அஹம் ஶ்லோகக்ருத் அஹம் ஶ்லோகக்ருத்" "அஹக்குஶ்லோகக்ருதஹக்குஶ்லோகக்ருத்" என்கிற, உபநிஷத்தின்படியே கவிபாடுமவருமாய் (குறைமுட்டுப்பரிவிடர்

(க) தி-வா-உ-௩-௧0. (உ) (௩ - மு - ௬ - ல்.) தி - வா-௩-அ-உ+அ-௩+அ-௪+அ - ௫ + (எ) ௬ - ௧. (அ) ௬-௧0. (௯) தை-உ-ப்ரு-௧0-௫.

மூ. துன்பமல்லல்துக்கந்தளர்வு கேடுகளின்றி அம்ருதாநந்தமக்நரானவர் செய்யதாமரைக்கண்ணன் அமரர்குலமுதலென்றஞ்சாதபடி

துன்பம் - (தேஶவிஶேஷத்திலே போகப்பெற்றிலேனென்கிற) துக்கம், அல்லல் - (லீலாவிபூத்யந்தர்ப்பாவஜநித) துக்கம், துக்கம் - (ஆஶ்சர்யஶக்தியுக்தனைப்பற்றின வெனக்கொரு) துக்கம், தளர்வு-(அகடிதகடநாஸமர்த்தனானவனைப்பற்றின வெனக்கொரு) துக்கம், கேடுகள் - (விமுகரானதசையிலும் ரக்ஷிக்குமவனைப்பற்றின வெனக்கொரு) கேடு (இவைகள்) இன்றி - இல்லாமல், அம்ருதாநந்த மக்நரானவர் - முக்தருடைய வாநந்தஸமுத்ரத்திலே முழுகினவராய், செய்யதாமரைக்கண்ணன் - சிவந்ததாமரைபோன்ற திருக்கண்களையுடையவன், அமரர் - நித்யஸூரிகளுடைய, குலம் - திரளுக்கு, முதல் - நிர்வாஹகனாயிருக்குமவன், என்றஞ்சாதபடி - என்றுபயப்படாதபடி,

---

துயர் துன்பமல்லல் துக்கம்தளர்வுகேடுகளின்றிஅம்ருதாநந்தமக்நரானவர்)தேஶவிஶேஷத்திலேபோய் யநுபவிக்கப்பெற்றிலேனென்கிறகுறைவில்லை. இவ்வநுபவத்துக்கெனக் கொரு ப்ரதிஹதியில்லை. அவன்விஷயத்திலேயானபின்பு ஏகதேஶமும் என்மநதில் துக்கமில்லை. வகுத்தஶேஷியென்று பற்றுகையாலே எனக்கொரு துக்கமில்லை. ருசிமுன்னாக தேஶவிஶேஷப்ராப்திபண்ணுகிற வெனக்கு வைதிக புத்ரர்களைப்போலே மீளில்செய்வதென்னென்கிற துக்கமில்லை. இங்கேயவன் குணங்களை நெருங்கபுஜித்த வெனக்கு பூர்ணாநுபவம் பண்ணலாம் தேஶத்திலேபோகப் பெற்றிலேனென்கிற துக்கமில்லை. இதவனுக்குலீலாவிபூதியென்னிருந்தவெனக்கினி லீலாவிபூத்யந்வயமாகிற துக்கமில்லை. ஸ்வஸங்கல்பத்தாலே ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ண வல்லவாஶ்சர்ய ஶக்தியுக்தனானவனைப்பற்றின வெனக்கொருதுக்கமில்லை. அகடிதகடநாஸமர்த்தனானவனைப்பற்றின வெனக்கொரு தளர்த்தியில்லை. விமுகதசையில் வ்யாப்தியாலும், அபிமுகதசையில் அவதாரத்தாலும் ரக்ஷிக்குமவனைப் பற்றினவனைப்பற்றின வெனக்கொரு கேடில்லை. என்றிப்படி (௧) "சன்மம்பலவில்" பத்துப்பாட்டாலுமடைவே தாமேபேசும்படி நிரஸ்தஸமஸ்தக்லேசராய் அம்ருதரான முக்தர் பகவதநுபவத்தாலே, ஆநந்திக்குமாப்போலே, அவ்வாநந்தஸாகரமக்நரானவர் (செய்யதாமரைக் கண்ணனமரர்குல முதலென் றெஞ்சாதபடி) (௨) "செய்யதாமரைக்கண்ணனாய்" என்றுதுடங்கி (௩) "எஞ்சலிலமரர் குலமுதல்மூவர் தம்முள்ளுமாதியை யெஞ்சினீருகலத் துள்ளீர்கள்" என்று, புண்டரீகாக்ஷத்வாதிபரத்வ சிந்ஹங்களையுடையனானவன் ஜ்ஞாநஸங்கோசரஹிதரான நித்யஸூரிகள் திரளுக்கு நிர்வாஹகனன்றோ, ஸம்ஸாரிகளானநம்மாலவனை ஆஶ்ரயிக்கப்போமோ வென்றஞ்சாதபடி

---

(௧) தி-வா-௩-௧௦. (௨) ௬-௧. (௩) ௬-௬.

௱௮. எளிவருமிணைவனு மென்றவைபரத்வமாம்படி யவனுகும் ஸௌலப்யகாஷ்டையைக்காட்டிவழியைத் தருமவன்நிற்க இழியக்கருதுவதென்னுவது

எளிவரும் - எளிவருமியல்வினன், இணைவனும் - இணைவனுமெய்பொருட்கும், என்றவை - என்கிறபாட்டுக்களிலே சொல்லப்பட்டவவதாரஸௌலப்யம், பரத்வமாம்படி - பரத்வஸ்தாநீயமாம்படி, அவனுகும் ஸௌலப்யகாஷ்ட்டையை-(நெஞ்சினுல்நினைப்பான் எவனவனுகும் நீள் கடல்வண்ணனென்கிறபாட்டில் சொல்லுகிறபடியே) ஸௌலப்யத்தினுடைய சரமாவதியை, காட்டி - இவர்காணும்படிபண்ணி, வழியைத் தருமவன் - போம்வழியானவர்ச்சிராதிமார்க்கத்தைக் கொடுக்குமவன், நிற்க - அவரைப்ரதீக்ஷணுயிருக்க, இழியக்கருதுவது - முன்புநின்றநிலையிலும் தாழவிழியநினைக்கையாலே, என்னுவது - என்னப்ரயோஜநமுண்டாம்,

---

(எளிவருமிணைவனு மென்றவை பரத்வமாம்படி) (௧) "எளிவருமியல்வினன்" "இணைவனுமெய்பொருட்கும்" என்று "பத்துடையடியவரியிலும், அணைவதரவணையிலும், வெளியிட்டவவதார ஸௌலப்யம் பரத்வஸ்தாநீயமாம்படி, அவனுகும் ஸௌலப்யகாஷ்டையைக்காட்டி" (௨) "நெஞ்சினுல்நினைப்பானெவனவனுகும் நீழ்கடல்வ்ண்ணனே" என்று, மநஸ்ஸாலேயாதொன்றைதிருமேனியாகக்கோலினிகோள்அபரிச்சேத்ய மஹிமனை ஸர்வேஶ்வரன் அதையே தனக்கஸாதாரண விக்ரஹமாக விரும்புமென்று (௩) "యే యథా మాం ప్రపద్యన్తే తాంస్తథైవ భజామ్యహమ్" "అర్చ్యస్సర్వసహిష్ణురర్చకపరాధీనాఖిలాత్మస్థితిః" "யேயதாமாம்ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்" அர்ச்யஸ்ஸர்வஸஹிஷ்ணுரர்ச்சகபாராதீநாகிலாத்மஸ்திதி:" என்கிற அர்ச்சாவதாரமாகிறஸௌலப்ய காஷ்டயைக்காட்டி (வழியைத்தருமவந்நிற்க விழியக்கருதுவ தென்னுவது) (௪) "ஒழிவொன்றில்லாத" என்றுதுடங்கி (௫) "இழியக்கருதியோர் மானிடம் பாடலென்னுவதே" என்று யாவதாத்மபாவிபகவததநுபவத்தோடே வர்த்திக்கிறதேசத்தையும், அவ்வநுபவந்தானெரு சிராங்கை யென்னும்படியான அர்ச்சிராதி மார்க்கத்தையும்தருகிறவன் தன்னை யொருசொல் சொல்வாராரோ வென்று அவஸரப்ரதீக்ஷணுய் நிற்க, அவனை விட்டு புறம்பே கவிபாடுகைக்கு விஷயம்தேடிப்போய் ஒருசொல்லுக்குப்பாத்தம்போராத க்ஷுத்ரமனுஷ்யனைக்கவிபாடி முன்புநின்றநிலையிலுங்காட்டில் தாழவிழிய நினைக்கிறவித்தாலென்ன ப்ரயோஜன முண்டு

---

(௧) ௧ - ௩ - ௨. (௨) ௩ - ௬ - ௧. (௩) ஸ்ரீ - ॥ - ௧௩. (௪) ஸ்ரீரங்க - ம். (௫) தி-வா-௩-௯-௩.

மூ. வேண்டிற்றெல்லாம்தரும் தன்னாகவேகொள்ளும் கவிசொல்லவம்மினென்று முக்தைஶ்வர்யத்தைமுன்னிட்டு ஶ்வவ்ருத்தியை மாற்றிஸ்வவ்ருத்தியிலே மூட்டுகிறார் மூன்றாம்பத்தில்.

வேண்டிற்றெல்லாம் - ஸர்வாபேக்ஷிதங்களையும், தரும் - கொடுக்கஸமர்த்தனாய், தன்னாகவேகொள்ளும் - பரமஸாம்யாபத்தியைக் கொடுக்குமவன், கவிசொல்லவம்மின் - இவன்விஷயமாக ஸ்தோத்ரம்பண்ணவாருங்கள், என்று முக்தைஶ்வர்யத்தைமுன்னிட்டு - இப்புடைகளாலே முக்தருடைய வைஶ்வர்யத்தை முன்னாகக்காட்டி, ஶ்வவ்ருத்தியைமாற்றி - இதரவிஷயஸ்தோத்ரமாகிறநீசவ்ருத்தியை நிவர்த்திப்பித்து, ஸ்வவ்ருத்தியிலே மூட்டுகிறார் - ஸ்வரூபாநுரூபமானவ்ருத்தியிலே மூளும்படிபண்ணுகிறார், மூன்றாம்பத்தில் - த்ருதீயஶதகத்தில்.

அத்தால் ஸ்வரூபம்பெற்றிலிகோள், அபிமதம்பெற்றிலிகோள். (வேண்டிற்றெல்லாம்தரும்) (௧) "సకలఫలప్రదో హి విష్ణుః" "ஸகலபலப்ரதோஹி விஷ்ணு:" என்கிறபடியே ஸர்வாபேக்ஷிதங்களையும் தரும் (தன்னாகவே கொள்ளும்) (௨) "పరమం సామ్యముపైతి" "பரமம்ஸாம்யமுபைதி" என்கிறபடியே தன்னோடுஸாம்யாபத்தியைக்கொடுக்கும். (கவிசொல்லவம்மின்) என்று, இதுக்குநீங்கள்செய்யவேண்டுவதொன்றுமில்லை. இதரஸ்தோத்ரங்களைப் பண்ணி உங்கள்கரணங்களை பாழ்போக்காதே வாய்படைத்த ப்ரயோஜனம் பெறும்படி இவ்விஷயத்தில் கவிசொல்ல வாருங்கோளென்று (முக்தைஶ்வர்யத்தை முன்னிட்டு) (௩) "வழியைத்தரும் நங்கள்வானவ ரீசன்நிற்க" என்றும் (௪) "தன்னாகவேகொண்டு" என்றும்சொல்லுகையாலே இவ்விஷயத்தைக்கவிபாடினால் லபிப்பது பகவதநுபவபரமஸாம்யாபத்யாதிகளென்றுமுக்தைஶ்வர்யமான பேற்றை முன்னிட்டு (ஶ்வவ்ருத்தியைமாற்றி ஸ்வவ்ருத்தியிலே மூட்டுகிறார் மூன்றாம்பத்தில்) அதாவது:— இப்படி தம்முடைய உபதேசத்தாலே (௫) "సేవా శ్వవృత్తిరాఖ్యాతా" (௬) "ఛాయావా సత్త్వమనుగచ్ఛేత్" (௭) "సాకిమర్థం న సేవ్యతే" "ஸேவாஶ்வவ்ருத்திராக்யாதா:" சாயாவாஸத்வமநுகச்சேத் "ஸாகிமர்த்தம்நஸேவ்யதே" என்று, இவ்விஷயத்தை ஸேவிப்பானென்றும், எத்தைப்பற்ற விவ்விஷயம் ஸேவிக்கப்பெறாதொழிகிறதென்றும்விதிக்கும்படி ப்ராப்தமானவிவ்விஷயத்திலே (௮) "புகழுநல்லொருவனில்படியே," தம்முடைய வாசிகவ்ருத்தியிலே மூட்டுகிறார் மூன்றாம்பத்திலென்கை ❋

(௧) (௨) (௩) தி-வா-௩-௧-௩. (௪) ௧-௪. (௫) (௬) (௭) (௮) தி-வா-௩-௪-௧.

மூ—(ச) ஈசனேயீசன்

(அ) ஈசனே - மறுகலிலீசனே, ஈசன் - ஈசன்ஞாலமுண்டு மிழ்ந்த,

வ்யா. (ச) நாலாம்பத்தால் கீழ்ச்சொன்னவ்யாப்தி ஆகாஶவ்யாப்திபோலன்றிக்கே நிறம்பெறும்படி (க) "అన్తః ప్రవిష్టశ్శాస్తా జనానామ్" (உ) "ఆత్మానమన్తరో యమయతి" (௩) శాస్తావిష్ణురశేషస్యజగతశ్శాస్తాచరాచరస్యైకః" "அந்தஃ ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தாஜநாநாம்" "யஆத்மாநமந்தரோயமயதி, ஶாஶ்தாவிஷ்ணுரஶேஷஸ்யஜகதஃஶாஸ்தா சராசரஸ்யைகஃ" இத்யாதிகளில் சொல்லுகிறபடியே, ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களின் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் ஸ்வாதீநமாம்படி நியமித்துக்கொண்டு போருகையாலே ஸர்வ நியந்தாவாயிருக்கிறவன் 'ஒழிவில்காலத்தில் கைங்கர்யாபி நிவேஶம்போலே தேஶகாலவிப்ரக்ருஷ்டமான அபதாநங்களை தத்தத்தேஶகாலவிசிஷ்டமாகவநுபவிக்கவேணுமென்று அதிசாபலம் பண்ணினவிவர்க்கு காலோபாதியைக்கழித்து ஸமகாலமாக்கி யநுபவிப்பித்திவருடைய விழவைத்தீர்த்திவருடைய கரணத்ரயவ்யாபாரத்தையும் போக்யமாகக்கொள்ள, அந்தப்ரணயித்வத்திலே தோற்று விரகதசையில்ஸத்ருஶபதார்த்தங்களையும் ஸம்பந்தி பதார்த்தங்களையுமவனுக்கருதும்படிபித்தேறிதேஶவிஶேஷத்தில் அநுபவத்தையாசைப்பட்டுக் கூப்பிட? அவ்விழவும் தீரும்படி (ச) "వైకుణ్ఠేతు పరేలోకే" "வைகுண்டேதுபரேலோகே" இத்யாதிப்படியே, தேஶவிஶேஷத்திலே பெரியபிராட்டியாரும் தானுமே போக்தாக்களாயிருக்கிற விருப்பைக்கிட்டி யநுபவித்தாப்போலே ப்ரத்யக்ஷமாம்படி யநுபவிப்பிக்கயநுபவித்து, இப்படி முக்தபோகத்தை மாநஸமாக ப்ராபித்து அதுக்கு பலமான தேவதாந்தராதிகளில் வைராக்யத்தையுடையரானவிவர், ஐஶ்வர்ய கைவல்யங்களின் அல்பாஸ்திரத்வ ஸாவதிகத்வாதி தோஷங்களையும், நிந்த்யபதார்த்தங்களாலே க்ஷுத்ரதேவதாபஜநம்பண்ணுமதின் நிஹீனதையையும், ப்ரஶம்ஸாபரவாக்யங்களாலே சொல்லப்பட்டு பகவத்விபூதிபூதராயிருக்கசெய்தே அவனோடேவிகல்பிக்கலாம்படி அவன்கொடுத்த ஐஶ்வர்யத்தையுடையராயிருக்கிற ப்ரும்ஹருத்ராதிகளுடைய அஜ்ஞாநாதிகளையும் பாஹ்யகுத்ருஷ்டிமதங்களின் தமோநிக்ருஷ்டதைகளையும் வெளியிட்டு தேவதாந்தரங்களையாஶ்ரயித்து தத்பலமும் கைகண்டீர்கள். ஜகந்நிகரணதி திவ்யசேஷ்டிதங்களாலே, ஸர்வேஶ்வரனேரக்ஷகன் அல்லாதாரடைய தத்ரக்ஷ்யபூதரென்னு மர்த்தத்தை ஶாஸ்த்ரமுகத்தாலே கண்டு வைத்தும் தேறமாட்டுகிறிலிகோள். இப்படி நீங்கள் தேறுமைக்கடி அவனிட்டவழக்கான ப்ரக்ருதிஸம்பந்தம், தத்விமோசனோபாயமு மவன் திருவடிகளிலாஶ்ரயண மென்றறிந்து ததாஶ்ரயணத்தைத்பண்ணி இத்தைத்தப்பப் பாருங்கோள், அவன்திருவடிகளிலே கைங்கர்யமே யுங்களு

(க) (உ) (௩) (ச) ஸ்ரீபாஞ்சராத்ரம்.

மூ. ஈசன்பாலென்ன ஏர்கொள் வானத்துமாயே யென்கிற வ்யாப்திநிறம்பெறத் தனிக்கோல்செலுத்தும் ஸர்வநியந்தா ஒழிவில்காலத்துக்குச்சேர பூர்வபோகங்களை யோது மாலெய்தினசாபலத்துக்குச் சேர ஸமகாலமாக்கி

ஈசன்பால் - ஈசன்பாலோ ரவம்பறைதல், என்ன - இப்படி நியந்த்ருவாசகசப்தங்களாலே சொல்லும்படி, ஏர்கொள் - ஏர்கொளேழுலகமும், வானத்தும்-வானத்துள்ளும்பரும், ஆயே-ஆயேயிவ்வுலகத்து, என்கிற - என்கிறபாட்டுக்களில் ப்ரதிபாத்யமான, வ்யாப்தி - அந்தர்பஹிஶ்சவ்யாபித்திருக்கை, நிறம்பெற - மிகப்ரகாசிக்கும்படி, தனி - அத்விதீயமான, கோல் - தன்னுடைய திவ்யாஜ்ஞையை, செலுத்தும் - செல்லும்படிபண்ணும், ஸர்வநியந்தா - ஸர்வநியந்தாவான ஸர்வேஶ்வரன், ஒழிவில்காலத்துக்கு - ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் கைங்கர்யம் பண்ணவேணுமென் றாசைப்பட்டதற்கு, சேர - அநுரூபமாம்படி, பூர்வபோகங்களை - பூர்வகாலத்திலுண்டான வநுபவங்களை, ஓதும்- வாய்புலத்தும்படியான, மாலெய்தின - ப்ராந்தியை அடைந்த, சாபலத்துக்கு - அபிநிவேஶாதிஶயத்திற்கு, சேர-அநுரூபமாக, ஸமகாலமாக்கி- (காலத்தினுடைய பேதவ்யவஹார ஹேதுவான உபாதிகளைக்கழித்து) ஏககாலமாக்கி,

க்குசீரிய புருஷார்த்தமென்று ப்ரயோஜநாந்தர தேவதாந்தர விரக்திமுன்னாக பரதேவதையும் பரமப்ரயோஜநமுமவனே, அவன்விஷயத்தில் கைங்கர்யமுமேயென்றுபதேசித்து பகவதாஶ்ரயணத்தை ருசிப்பிக்கிறாரென்கிறார் (ஈஶனேயீஶனீஶன்பாலென்ன வேர்கொள்வானத்துமாயே என்கிற வ்யாப்திநிறம்பெறத்தனிக்கோல் செலுத்தும் ஸர்வநியந்தா) (க) "மறுகலிலீசனை" "ஈசன்ஞாலமுண்டுமிழ்ந்த" (௩) ஈசன்பாலோரவம்பறைதல்" என்று, நியந்த்ருவாசகசப்தத்தாலே சொல்லும்படி, (ச) "ஏர்கொளேழுலகமும் துன்னிமுற்றுமாகிநின்ற சோதிஞானமூர்த்தியாய்" "வானத்தும் வானத்துள்ளும்பரும் மண்ணுள்ளும் மண்ணின்கீழ்தானத்துமெண்டிசையும்தவிராதுநின்றான்"(ரு)"ஆயேயிவ்வுலகத்து நிற்பனவுந் திரிவனவும்நீயே" என்கிற, கீழில்பத்தில், ஸர்வவிஷயமாகச் சொன்ன வ்யாப்தி ஆகாஶவ்யாப்திபோலாகாமே நிறம்பெறும்படியாக (எ) "வீற்றிருந்தேழுலகம் தனிக்கோல் செல்ல" என்கிறபடியே, உபயவிபூதியும் தந்நியமநத்திலேயாம்படி தன்னாஜ்ஞையை நடத்துகிற ஸர்வநியந்தாவான ஸர்வேஶ்வரன் (ஒழிவில்காலத்துக்குச்சேர பூர்வபோகங்களை யோது மாலெய்தின சாபலத்துக்குச்சேர ஸமகாலமாக்கி) (அ) "ஒழிவில்காலமெல்லாமுடனாய் மன்னி" என்று, அடிமைசெய்யப்பாரிக்கிறவளவில் ஸர்வதேஶ ஸர்வாவஸ்தைகளோபாதி ஸர்வகாலத்திலும் வேணுமென்று

திவா-ச-ப. (க-மு ௩-ல்) க-க0 + ௩ - உ + க0 - ச + (ச-மு-ரு-ல்) ௩ - அ + ரு-ரு + ரு-எ + (எ) ரு - க. (அ) ௩-௩-க.

ஞூ. போதால் வணங்காமை தீர்த்தப்ரண யித்வத்திலே காதல் மையலேறிய பித்தாய்

போதால்வணங்காமை - பூவைவீயாநீர்தூவி பேதால்வணங்கேனேலு மித்யாதிப்படியே , அவ்வோ காலங்களில் புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு அடிமைசெய்யப் பெறாத விழவை, தீர்த்த - போம்படிபண்ணின; ப்ரணயித்வத்திலே - அவனுடைய வபிமானவிசேஷத்திலே, காதல் - ப்ரணயித்வத்தாலே, மையல் - அறிவுகேட்டாலே, ஏறிய - அபிவ்ருத்தமாகா நின்றுள்ள, பித்தாய்-அதஸ்மிந்தத்புத்திபண்ணும்படி ப்ராந்தியுண்டாய்,

கீழ்க்கழிந்தகாலத்தி லடிமையையு மாசைப்பட்டதுக்குச் சேரும்படி (௧) "பாலனுயேழுலகுண்டு" என்றுதுடங்கி,தேசகாலவிப்ரக்ருஷ்டங்களானவவனுடைய அபதாநங்களை தத்தத்தேசகால விசிஷ்டமாக அநுபவிக்கையிலபிநிவேசத்தாலே, (௨) "ஆதியங்காலத்தகலிடங்கீண்டவர் பாதங்கள் மேலணிபைம்பொற்றுழாயென்றேயோதுமாலெய்தினள்" என்று, பூர்வகாலீநபோகங்களையே வாய்புலற்றும்படி, ப்ராந்தியையடைந்த சாபலத்துக்கநுரூபமாக காலத்தினுடைய பேதவ்யவஹாரத்துக்குடலான உபாதியைக் கழித்தொருபோகியாக்குகையாலே ஸமகாலமாக்கியநுபவிப்பித்து (போதால் வணங்காமைதீர்த்த ப்ரணயித்வத்திலே காதல்மையலேறியபித்தாய்) (௩) "பூவைவீயாநீர்தூவிப்போதால் வணங்கேனேலு நின்பூவைவீயாமேனிக்குப் பூசும்சாந்தென் நெஞ்சமே" என்றுதுடங்கி, (௪) "ஏகமூர்த்திக்கே பூத்தண்மாலை கொண்டுன்னைப் போதால்வணங்கேனேலும்நின்பூத்தண்மாலைநெடுமுடிக்குப்புனையும்கண்ணியெனதுயிரே" என்று, விரோதிநிரஸநம்பண்ணுகிற அவ்வவகாலங்களிலேயுதவி புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு சிசிரோபசாரம் பண்ணப்பெற்றிலேனாகிலும், விலக்ஷணவிக்ரஹயுக்தனாய் ஸர்வேச்வரனாயிருக்கிறவனென்னுடைய கரணத்ரயவ்யாபாராதிகளையே தனக்கு போக்யவஸ்துக்களெல்லாமாகக்கொள்வதே! என்றிவர்தாமே யீடுபடும்படிபண்ணி அவ்வோகாலங்களில்தனக்குதவி அடிமைசெய்யப்பெறாத விழவையவன்தீர்த்த ப்ரணயித்வகுணத்திலே (௫) "காதல்மையலேறினேன்" என்கிறபடியே, ப்ரேமம்மேலிட்டறிவு கலங்கினவாறே வெள்ளக்கேடாகவொண்ணாதென்று அவனல்பம் பேரநிற்க, அவனோடு ஸத்ருசபதார்த்தங்களையும் ஸம்பந்திபதார்த்தங்களையுமவனாகவேகருதி பேசும்படியாக "பேய்ச்சிமுலைசுவைத்தார்க் கென்பெண்கொடியேறிய

தி-வா-௪-ப. (௧) ௨-௧. (௨) ௨-௬. (௩) ௩-௧. (௪) ௩-௪. (௫) ௩-௬.

மூ. தேஶதூரத்துக்குக் கூவியுங் கொள்ளாயென்றது தீரக்க
ண்ட சதிரையுமொரு நிலமாகக்காட்ட வீவிலின்பங்கூட்
டினையென்று முக்தபோகமானஸப்ராப்திபலமான தேவ
தாந்தராத்மாத்மீய லோகயாத்ரைஶ்வர்யாக்ஷரங்களில்

தேசதூரத்துக்கு - தமக்கு ப்ராப்யமானதேசம்தூரமாய் யிருக்கையைப்
பற்ற, கூவியுங்கொள்ளாயென்றது - என்னையும் அருளப்பாடிடாய்
என்று கூப்பிட்டவிழவு, தீர - போம்படி, கண்டசதிரையும் - அவ்விபூ
தியிலவனும் அவளுமானசேர்த்தியைக்காட்டகண்ட சதிரையும், ஒரு
நிலமாக - காலோபாதிகளைக் கழித்தாப்போலே தேசோபாதியையும்
கழித்து இவ்விடத்தையே பரமபதமாக்கி, காட்ட-இவரைக்காணும்படி
பண்ண, வீவில் - விச்சேதமில்லாத, இன்பம் - ஆனந்தத்தை, கூட்டி
னையென்று - சேர்த்துக்கொண்டா யென்று, முக்த - முக்தருடைய
போக - போகத்தினுடைய, மானஸ - மனதிலுண்டான, ப்ராப்தி -
உண்டானதற்கு, பலமான - பலமாயிருந்துள்ள, தேவதாந்தர-வேறுதே
வதை, ஆத்ம - தம்முடையவாத்மா, ஆத்மீய - தம்முடையது, லோக -
லோகங்களின், யாத்ரா - நடத்தை, ஐஶ்வர்ய - ஐஹலௌகிக பாரலௌ
கிகங்களான ஐஶ்வர்யங்கள் - அக்ஷரங்களில்-கைவல்யம் (இவைகளில்),

பித்தே” என்னும்படிபித்தேறி, (தேஶதூரத்துக்குக் கூவியுங்கொள்
ளாயே யென்றது தீரக்கண்ட சதிரையுமொரு நிலமாகக்காட்ட) தேஶ
விஶேஷத்தி லநுபவத்தையாசைபட்டு தேஶதூரத்தைப்பற்ற (௧)
“கோலமேனிகாணவாராய் கூவியுங்கொள்ளாயே” என்று, உன்வடிவ
ழகை நீவந்தநுபவித்தருளுதல் என்னையங்கேயருளப்பாடிடுதல் செய்
கிறிலையென்று,கூப்பிட்டவிழவும்தீற(௨) “ஒண்டொடியாள் திருமகளும்
நீயுமே நிலாநிற்பக்கண்ட சதிர்கண்டு” என்று, நித்யவிபூதியிலே,
பெரியபிராட்டியாரும் நீயுமே போக்தாக்களாய் அவ்விபூதியிலுள்ளார
டைய போகோபகரண கோடியாம்படி கண்டுவைத்த நேர்பாட்டை
நான் கண்டேனென்னும்படி கீழ்காலோபாதியைக்கழித்து ஸமகாலமா
க்கினாப்போலே, அவ்விபூதியிலநுபவத்தையும் இங்கேயிருந்தே யநுப
விக்கலாம்படி யொருபோகியாக ப்ரகாசிப்பிக்க, (வீவிலின்பம் கூட்டி
னையென்றுமுக்தபோக மாநஸ ப்ராப்திபலமான) (௩) “வீவிலின்
பம் மிகவெல்லைநிகழ்ந்தனன்மேவியே” “கூட்டரிய திருவடிக்கள் கூட்
டினைநான்கண்டேனே” என்று, அவனைக்கிட்டி நிரதிஶயாநந்தியாகப்
பெற்றேன் யாவர்சிலர்க்கும் தந்தாமால் சேர்த்துக்கொள்ளவரிய திரு
வடிகளை நான்சேரும்படி என்னைச்சேர்த்துக்கொண்டாய், நானநுப
விக்கப்பெற்றேனென்றவது மாநஸாநுபவமாகையாலே இப்படிமுக்த
ருடைய போகமான அவ்வநுபவத்தில் மாநஸமாகவுண்டான ப்ராப்
திக்குப்பலமான (தேவதாந்தராத்மாத்மீய லோகயாத்ரைஶ்வர்யாக்ஷ

தி-வா-௬-ப. (௧) ௭-௧. (௨) ௯-௧௦. (௩) ௫-௩.

மூ. வைராக்யம் உன்னித்துயிருடம்பினுல் கொடுவுலகம் வேட்கையெல்லாமொழிந்தேனென்ன வுடையரானவர் ஒருநாயகமென்று ராஜ்யஸ்வர்க்காத் மாநுபவ அல்பாஸ்திரத்வ ஸாவதிகத்வாதிகளையும்

வைராக்யம் - ஆசையின்மையை, உன்னித்து - தேவதாந்தரத்தை தந்நெஞ்சாலே மதித்துத் தொழாள் என்றும், உயிர் - ஆத்மாவாலே அபேக்ஷை யுடையோமல்லோ மென்றும், உடம்பினுல் - உடம்பினுலோ ரபேக்ஷையுடையோ மல்லோமென்றும், கொடுவுலகம் - கொமையான உலகத்தைக்கண்டால் காணவஸமர்த்தனுகிறே னென்றும், வேட்கையெல்லாம் - இதர புருஷார்த்தங்களில் அபிநிவேசத்தையெல்லாம்போக்கி என்றும், ஒழிந்தேன்-பஞ்சேந்த்ரியங்களால் அநுபாவ்யமான இன்பத்தை ஒழிந்தேன்என்றும், என்ன-என்றுதாமே பேசும்படி, உடையரானவர் - உடையரானவாழ்வார், ஒருநாயகமென்று - ஒழுநாயகமாஎன்று துடங்கி, ராஜ்ய - ராஜ்யைச்வர்யம், ஸ்வர்க்க-ஸ்வர்க்காநுபவம், ஆத்மாநுபவ-ஆத்மாநுபவமென்கிற கைவல்யாநுபவம் இவைகளுடைய, அல்ப- அற்பமாயிருக்கை, அஸ்திரத்வ - அஸ்திரமாயிருக்கை, ஸாவதிகத்வ - முடியோடேகூடினமை,ஆதிகளையும்-இவைமுதலானவைகளையும்,

---

ரங்களில் வைராக்யம் உன்னித்துயிரிடம்பினுல்கொடுவுலகம் வெட்கையெல்லாமொழிந்தேனென்னவுடையரானவர்) (க) "உன்னித்து மற்றொருதெய்வம் தொழாள்" என்று, தந்நெஞ்சாலே மதித்து, வேறொருதெய்வத்தைத் தொழுதறியாளென்னும்படி தேவதாந்தரங்களில் வைராக்யத்தையும் "உயிரினுல் குறைவிலமே" (உ)"உடம்பினுல் குறைவிலமே" என்னும்படி ஆத்மாத்மீயங்களில் வைராக்யத்தையும்" கொடுவுலகம் காட்டேலே" என்னும்படி, லோகயாத்ரையில் வைராக்யத்தையும், (௩) "வேட்கையெல்லாம் விடுத்து" என்று, ஸமுதாயேனவும், "ஐங்கருவிகண்டவின்ப மொழிந்தேன் சிற்றின்பமொழிந்தேன்" என்று, ப்ருதக்த்வேநவுஞ்சொல்லும்படி ஐச்வர்யத்திலுமக்ஷரப்தவாச்யமான ஆத்மாநுபவரூபகைவல்யத்திலுமுண்டான வைராக்யத்தையுமுடையரானவிவர் (ஒருநாயகமென்று ராஜ்யஸ்வர்காத்மாநுபவால்பாஸ்திரத்வ ஸாவதிகத்வாதிகளையும்) (௪) "ஒருநாயகமாயோட உலகுடனுண்டவர்" பெருநாடுகாண விம்மையிலே பிச்சைதான்கொள்வர்" என்றுதுடங்கி, (௫) '[illegible]" "ராஜ்யம் நாமமஹாவ்யாதி ரசிகித்ஸோவிநாசந: | ப்ராதரம்வாஸுதம்வாபித்யஜந்திகலுபூமிபா:" என்கிற ராஜ்யைச்வர்யத்தின் அல்பத்வத்தையும், "குடிமன்னுமின்சுவர்க்க மெய்தியும் மீள்வர்கள்" என்று, (௬) "[illegible]

திரு - வா - ௪ - ப. (க) ௬ - ௧௦. + (உ) அ - ௯. (௩) ௯ - ௯. (௪) ௧-௧. (௫) (௬) ஸ்ரீ-ஹே. ௯. உ௧.

மூ. ஆடுங்கள்ளிறைச்சிகளும் செஞ்சோறுகிற நிந்த்யங்களாலே இளந்தெய்வத்துக்கு இழைத்தாடும் நிஹீனதையையும் பேசநின்ற தேவதாஜ்ஞாநாஶக்தி ஸாபேக்ஷத்வாதிகளையும்

ஆடும் - ஆட்டுமாம்ஸம், கள்ளிறைச்சி-கள்ளு, மற்றமாம்ஸங்கள், கறும்-கறுத்ததாயும், செம் - சிவந்ததாயுமிருக்கிற, சோறுகிற - சோறுயிருக்கிற, நிந்த்யங்களாலே - தூஷிக்கத்தக்க த்ரவ்யங்களாலே, இளந்தெய்வத்துக்கு - தேவதாந்தரத்துக்கு, இழைத்து - பலியிட்டு, ஆடும்நிஹீனதையையும் - ஆடுகிறது மிகக் குறைவென்கிறத்தையும், பேசநின்ற- வேதாந்தங்களிலே பரத்வேநபேசப்பட்ட, தேவதா - ப்ரும்ஹா முதலிய அந்யதேவதைகளுடைய, அஜ்ஞாந - தனக்கும் பிறர்க்கும் உண்டான கேடை அறிகைக்குடலான ஜ்ஞானமின்மை, அசக்தி - தனக்கும் பிறர்க்குமுண்டான தீங்கை யொழிப்பதற்கிடான சக்தியில்லாமை, ஸாபேக்ஷத்வாதிகளையும் - ஆபத்காலம்வந்தவாறே அவனைப்பார்த்திருக்கை (இவைமுதலானவைகளையும்)

[illegible]" "தேதம்புக்தவாஸ்வர்க்கலோகம் விஶாலம்க்ஷீணேபுண்யே மர்த்யலோகம்விஶந்தி" என்கிற, ஸ்வர்க்காநுபவத்தினுடைய அஸ்திரத்வத்தையும், "இறுகலிறப்பு" என்று, அத்மாநுபவத்தினுடைய ஸாவதிகத்வத்தையும் ஆதிஶப்தத்தாலே துக்கமிஶ்ரத்வ துஸ்ஸாதத்வ நிஸ்ஸாரத்வங்களைச் சொல்லுகிறது (ஆடுங்கள்ளிறைச்சி கறுஞ்செஞ்சோறுகிற நிந்த்யங்களாலே இளந்தெய்வத்துக் கிழைத்தாடும் நிஹீநதையையும்) (௧) "[illegible]" "த்ரவ்யம் நிந்த்யஸுராதிதைவதமதிக்ஷுத்ரஞ்சபாஹ்யாகமோத்ருஷ்டிர்தேவலகாஶ்சதே சிகஜநாதிக்திக்திகேஷாம் க்ரமம்" என்கிறபடியே, (௨) "அங்கோராடுங்கள்ளும்" (௩) "கருஞ்சோறும் மற்றைச்செஞ்சோறும்" என்கிற ஸுரா மாம்ஸாதி நிந்த்யபதார்த்தங்களைக்கொண்டு (௪) "நீரணங்காடுமிளந்தெய்வம்" என்கிற, க்ஷுத்ரதேவதைகளுக்கு (௫) "களனிழைத்து" என்றவ்வோ தேவதைகள்ஸந்நிதிபண்ணும் ஸ்தலங்களிலே பலியிட்டு, (௬) "நீரணங்காடுதல் கீழ்மை" என்று, தைவாவிஷ்டராயாடுமதின்தண்மையையும் (பேசநின்ற தேவதாஜ்ஞாநாஶக்திஸாபேக்ஷத்வாதிகளையும்) (௭) "[illegible]" "ததஃ க்ரோதபரீதேநஸம்ரக்தநயநேநச । வாமாங்குஷ்ட நகாக்ரேண சிந்நம் தஸ்யசிரோமயா" என்றும், (௮) "[illegible]" "யஸ்மாதநபராதஸ்ய சிரஶ்சிந்நம்த்வயாமம। தஸ்மாச்சாபஸமாயுக்த: கபாலீத்வம்பவிஷ்யஸி" என்றும், (௯) "[illegible]" "[illegible]

திவா-௪-ப. (௧) (௨) ௬-௭. (௩) ௬-௪. (௪) ௬-௨. (௫) ௬ - ௪. (௬) ௬ - ௮. (௭) மதாத்யே (௮) (௯)

௬. இலிங்கத்து விளம்பும் பாஹ்யகுத்ருஷ்டி மததமோ நிஷ்டதையயுஞ்சொல்லி

இலிங்கத்து - இலிங்கித்திட்ட புராணத்திரும் என்கிற பாட்டு, விளம்பும் - விளம்புமாறுசமயமும் என்கிறபாட்டு இவைகளிலே சொல்லப்பட்ட, பாஹ்ய - வேதபாஹ்யமாயும் உக்திமாத்ரஸாரமாயும், குத்ருஷ்டி - நிந்திக்கத்தக்க ஜ்ஞாநமுடையவர்தாயுமிருக்கிற, மத - மதங்களின், தமோநிஷ்டதையையும் - தமோநிஷ்டரானவராலே ப்ரவர்த்திப்பிக்கப்பட்ட மயையும், சொல்லி - ப்ரதிபாதித்து,

దాత్సుశ్రోణీ కపాలంతత్సహస్రధా । స్ఫుటితంబహుధాయాతం స్వప్నలబ్ధధనంయథా" "தத்ரநாராயண ஸ்ரீமாந்மயாபிக்ஷாம்ப்ரயாசித:। விஷ்ணுப்ரஸாதாத்ஸு-ச்ரோணிகபாலம் தத்ஸஹஸ்ரதா । ஸ்புடிதம்பஹு-தாயாதம்ஸ்வப்நலப்ததநம்யதா" என்றுஞ்சொல்லுகிறபடியே, ப்ரம்ஹா ருத்ரனாலே தலையறுப்புண்டு சோச்யனாய் ருத்ரனை சபிக்க, ருத்ரன் குருசிரச்சேதநத்தாலே பாதகியாய் பரும்ஹசாபம் தன்னால் போக்கக்கொள்ளப் போகாமையாலே, ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரனையர்த்திக்க, அவனந்தசாபத்தைப் போக்கினனகையாலே, (க) "பேசநின்ற சிவனுக்கும் பிரமந்தனக்கும் பிறர்க்கும் நாயகனவனே கபாலநன்மோக்கத்துக்கண்டு கொள்மின்" என்று, வேதத்தில் ப்ரசம்ஸாபரமான வாக்யங்களாலும் ராஜஸதாமஸ புராணங்களாலும் பரத்வேநபேசலாம்படி, முட்டுப்பொறுத்துநின்ற ப்ரும்ஹருத்ராதிகளாகிற தேவதைகளுடைய வங்யோக்யம் தங்களுக்குவருகிற க்லேசமறியாமையும் வந்தக்லேசம் தாங்கள்தவிர்த்துக் கொள்ளமாட்டாமையும் அத்தைத் தவிர்த்துக் கொடுக்கைக்கு வீச்வரன் வேண்டுகையுமாகிற அஜ்ஞாநாசக்திஸாபேக்ஷத்வங்களையும் ஆதிசப்தத்தாலே கர்மவச்யதையையும், (இலிங்கத்துவிளம்பும் பாஹ்யகுத்ருஷ்டிமததமோ நிஷ்டதையயுஞ்சொல்லி) (உ) "இலிங்கித்திட்ட" (ந) "விளம்புமாறு சமயமும்" என்கிறபாட்டுக்களில் சொல்லுகிற பாஹ்யகுத்ருஷ்டிமதங்களான (ச) "యన్మయంచజగత్సర్వం" "யந்மயஞ்சஜகத்ஸர்வம்" என்று, பொதுவிலே ப்ரஸ்நம்பண்ண (ரு) ""విష్ణోస్సకాశాదుద్భూతం" "விஷ்ணோஸ்ஸகாசாதுத்பூதம்" என்றுசொல்லி விழுக்காட்டாலே உத்தரமாகையன்றிக்கே, எருமையை யானையாகக்கவிபாடித்தரவேணுமென்பாரைப்போலே, லிங்கமென்ருரு வ்யக்தியைநிர்த்தேசித்து இதுக்குத்கர்ஷம் சொல்லித்தரவேணுமென்று கேட்கிறவனும், தமோபிபூதனைய் கேழ்க்கச்சொல்லுகிறவனும் தமோபிபுதனைய்ச்சொல்ல, இப்படி ப்ரவ்ருத்தமான லைங்கபுராணாதிகளான குத்ருஷ்டிஸ்ம்ருதிகளும் சிலவற்றைச்சொல்லாநின்ருல், தாங்களும் சில தர்க்கங்களைச் சொல்லாநிற்கு மத்தனைபோக்கி ப்ரமா

(க) தி - வா. ச. கO. ச. (உ) கO. ரு. (ந) கO. சு. (ச) வி - பு - க. க. ச. ஷ - க. கநO.

மூ. ஓடிக்கண்டீர்கண்டுந்தெளியகில்லீர் அறிந்தோடுமினாட்செய்வதே யுறுவதாவதென்று

ஓடி - ஓடிஓடி பலபிறப்பும்பிறந்து, கண்டீர்-பல்படி கால்வழி ஏறிக்கண்டீர், கண்டுந் தெளியகில்லீர் - கரந்துமிழ்ந்து கடந்திடந்தது கண்டுந்தெளியகில்லீர், அறிந்தோடுமின்-அதறிந்தறிந்தோடுமின், ஆட்செய்வதே-அவனுக்கடிமைப்படுவதே, உறுவதாவது - இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபாநுரூபமானது, என்று - ஏவம் ப்ரகாரேண,

ஞாநுகூல தர்க்கமல்லாமையாலே கேவல முக்திஸாரமேயாயிருக்கிற பாஹ்யஸமயங்கள் ஆறுமென்ற க்ஷபணக பௌத்தாதிகளுடைய ஸ்ம்ருதிகளுமாகையாலே (௧) "𑌯𑌾𑌵𑍇𑌦𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌸𑍍𑌮𑍃𑌤𑌯𑍋𑌯𑌾𑌶𑍍𑌚𑌕𑌾𑌶𑍍𑌚𑌕𑍁𑌦𑍃𑌷𑍍𑌟𑌯𑌃 𑌤𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌾𑌃𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯𑌤𑌮𑍋𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌹𑌿𑌤𑌾𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃" "யாவேதபாஹ்யாஸ்ம்ருதயோ யாஶ்சகாஶ்சகுத்ருஷ்டய:। தாஸ்ஸர்வா நிஷ்பலா: ப்ரேத்யதமோநிஷ்டாஹிதாஸ்ம்ருதா:" என்கிறபடியே, அவற்றினுடைய தமோநிஷ்டதைகளையுஞ்சொல்லி (ஓடிக்கண்டீர்) (௨) "ஓடியோடி" என்று, துடங்கி (௩) "வழியேறிக்கண்டீர்" என்று, (௪) '𑌗𑌤𑌾𑌗𑌤𑌂 𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑌾𑌲𑌭𑌨𑍍𑌤𑍇' "கதாகதம் காமகாமாலபந்தே" என்கிறபடியே ஸ்வர்க்க நரகங்களிலேபோவது கர்ப்பத்தேறவருவதாய்க் கொண்டு அநேகஜந்மங்களில் பிறந்து தேவதாந்தரங்களை த்ருவிதகரணங்களாலும் பலபர்யாயம்ததாஶ்ரயணத்தைச்சொல்லுகிற ஶாஸ்த்ரமார்க்கத்தாலே ஆஶ்ரயித்து அவ்வாஶ்ரயணபலமும்கண்டு கோளீ (கண்டும் தெளியகில்லீர்) இவனுடைய ஜகந்நிகரணாதி திவ்யசேஷ்டிதங்களை ஶாஸ்த்ரத்வாராப்ரத்யக்ஷித்தும், இவனே ஆஶ்ரயணீயனென்று தெளியமாட்டுகிறிலிகோள் (அறிந்தோடுமின்) உங்களை யிங்ஙனேவைத்தது ஸதஸத்கர்மகாரிகளானஜந்துக்கள் அவ்வோ கர்மாநுகுணபலங்களை அநுபவிக்கக்கடவதான ஶாஸ்த்ரமர்யாதையழியுமென்று அதுதான் (௫) "𑌮𑌮𑌮𑌾𑌯𑌾𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾" "மமமாயாதுரத்யயா" என்கிற ப்ரக்ருதியையிட்டு அவன்மயக்கிவைத்தபடிகாணுங்கோள். ஆனபின்பதவன்மாயையென்றறிந்து (௬) "𑌮𑌾𑌮𑍇𑌵𑌯𑍇𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌮𑌾𑌯𑌾𑌮𑍇𑌤𑌾𑌂𑌤𑌰𑌨𑍍𑌤𑌿𑌤𑍇" "மாமேவயேப்ரபத்யந்தே மாயாமேதாந்தரந்திதே" என்கையாலே, மாயாதரணோபாயமும், அவன் திருவடிகளைப்பற்றுகையென்றறிந்து அவனையாஶ்ரயித்து இம்மாயையைத் தப்பப்பாருங்கோள் (ஆட்செய்வதே யுறுவதாவதென்று) "நீள்குடக்கூத்தனுக்காட் செய்வதே உறுவதாவது" என்கையாலே, நிரதிஶயபோக்யமான சேஷ்டிதத்தை யுடையவனுக்கடிமைசெய்கையே இவ்வாத்மாவுக்குச் சீரியதும்ஸூசகமுமென்றிப்படி

(௧) ஸ்ரீரம் - ௨. (௨) தி - வா. ௪. ௧௦, ௭. (௩) ஷை. (௪) ஸ்ரீ. கீ. ௯, ௨௧. (௫) ஸ்ரீ - க. (௬) ஷை.

௱. விரக்தி பூர்வகமாக வாஶ்ரயணத்தை ருசிப்பிக்கிறார் நாலாம்பத்தில்.

௱—(ரு) ஆவாவென்றுதானே தன்னடியார்க்குச்செய்யும் தொல்லருளென்று பரத்வாதிகளையுடையவ னெவ்விடத்தானென்னும் பாவியர்க்கு மிருகரையும்

விரக்திபூர்வகமாக - ப்ரயோஜனாந்தரம் தேவதாந்தரம் பாஹ்யகுத்ருஷ்டி மதங்கள் (இவைகளில்) வைராக்யத்தை முன்னிட்டு, ஆஶ்ரயணத்தை - பகவதாஶ்ரயணத்தை, ருசிப்பிக்கிறார் - சேதநர்க்கு ருசிவிஷயமாம்படி பண்ணுகிறார், நாலாம் பத்தில் - நாலாவது சதகத்தில்.

(அ) ஆவாவென்று - ஐயோ! ஐயோ! என்றிரங்கி, தானே - (நிரங்குஶஸ்வதந்த்ரனான) தானே, தன்னடியார்க்கு - தனக்கநந்யார்ஹஶேஷபூதரானார்க்கு, செய்யும் - பண்ணுமதான, தொல்லருளென்று - ஸ்வாபாவிகக்ருபையென்று, பரத்வாதிகளையுடையவன் - பரத்வாதிகல்யாணகுணங்களையுடையவன், எவ்விடத்தானென்னும் - அவனெவ்விடத்தான் யாரென்று கூப்பிடும்படியான, பாவியர்க்கும் - எத்தனையேனும்பாபிஷ்டரானவர்க்கும், இருகரையும் - இரண்டுகரைகளையும்,

உபதேசித்து (விரக்தி பூர்வகமாக ஆஶ்ரயணத்தை ருசிப்பிக்கிறார் நாலாம்பத்தில்) அதாவது:— ப்ரயோஜநாந்தர தேவதாந்தரபாஹ்யகுத்ருஷ்டிமதங்களில்விரக்திபூர்வகமாக ஜகத்காரணத்வாதிகளான ப்ரமாணோபபத்திகளாலே பகவத்ஸமாஶ்ரயணத்தை ஸம்ஸாரிகளுக்கு ருசிப்பிக்கிறாரென்கை. *

வ்யா. (ரு) அஞ்சாம்பத்தால் கீழ்ச்சொன்ன பரத்வாதிகளால் வந்ததன்னுடைய உத்கர்ஷத்தையும் தந்தாமுடைய நிகர்ஷத்தையுமநுஸந்தித்து அகல்வானளவிலும் மேல்விழுந்து விஷயீகரிக்கும்படி பரமகாருணிகனான ஸர்வேஶ்வரன், கீழிவர்க்குப்பிறப்பித்த விரக்திக்குபலமான ஸ்வவிஷய ப்க்தியையும் பரம்பரையா அபிவ்ருத்தமாக்க, அந்தபக்தியையும் பாகவதஸமாகமத்தையுமுடையரானவிவர், தாம் திருத்தத்திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களையும் திருத்தினதம்மையும் காண்கைக்குவந்த நித்யஸூரிகளையும் ஶ்வேதத்வீப வாஸிகளான ஸித்தரையுங்கண்டு மங்களாஶாஸநம்பண்ணி, திருந்தாதவஸுர ராக்ஷஸப்ராக்ருதிகளையும் பகவத்பாகவதவைபவத்தையுமுபதேசித்துத்திருத்தி பாகவத ஸமாஜதர்ஶநமினிதாம்படியான ஜ்ஞாநம்பிறந்தார்க்குப்ராப்யத்வரைக்கடியான பக்தியையுமுபதேசித்துத் தலைக்கட்டுகிறாரென்கிறார் (ஆவாவென்று தானேதன்னடியார்க்குச்செய்யும் தொல்லருளென்று பரத்வாதிகளையுடையவ னெவ்விடத்தானென்னும் பாவியர்க்குமிருகரையும்

மூ. அழிக்கும் க்ருபாப்ரவாஹ முடையவன் பொய்க்கூத்து வஞ்ஜக்களவு தவிர

அழிக்கும் - அதிக்ரமித்துச்செல்லுகிற, க்ருபா - க்ருபையுடைய, ப்ரவாஹமுடையவன் - ப்ரவாஹத்தையுடையஸர்வேச்வரன், பொய் - பொய்யேகைமைசொல்லியென்னும் பொய்யும், கூத்து - (என்றென்றேசிலகூத்துச்செல்ல என்கிற) கூத்தும், வஞ்சம் - (உன்னையும் வஞ்சிக்குமென்கிற) வஞ்சநமும், களவு - (கள்ளமனந்தவிர்ந்தேயென்கிற) களவும், தவிர - எல்லாம்விட்டுப்போம்படி,

அழிக்கும் க்ருபாப்ரவாஹமுடையவன்) (க) "ஆவாவென்றருள்செய்து" என்று, ஐயோ ஐயோவென்று இவன்பக்கலிலே க்ருபையைப்பண்ணியென்றும் (உ) "தானேயின்னருள் செய்து" என்று, நானர்த்தியா திருக்கதானேதன்பேறாகக்ருபையைப் பண்ணியென்றும், (௩) "கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கருள்செய்யும்" என்று, தன்பக்கலிலே நயஸ்தபரரானவர்களுக்கு கலிதோஷங்களொன்றும் வாராதபடியாக க்ருபைபண்ணுமென்றும், (௪) "பெருமானது தொல்லருளே" என்று, ஸர்வேச்வரனுடைய ஸ்வாபாவிக க்ருபையென்றுஞ் சொல்லுகிறபடியே (௫) அம்மானாழிப்பிரானவனெவ்விடத்தான் யானாரெம்மாபாவியர்க்கும்விதிவாய்க்கின்றுவாய்க்கும்கண்டீர்" என்று, கையும் திருவாழியுமான வழகை நித்யஸூரிகளுக்குக் காக்ஷிகொடுத்துக்கொண்டு, அங்குள்ளாருடனே பரிமாறியிருக்கிற ஸர்வேச்வரனானவ னெவ்வளவிலே, நித்ய ஸம்ஸாரிகளுக்குமிவ்வருகான நானெவ்வளவிலே, என்று, கீழ்ச்சொன்ன தன்னுடையபரத்வ காரணத்வ வ்யாபகத்வ நியந்த்ருத்வாதிகளால்வந்த வுத்கர்ஷத்தையும், தங்களுடைய நிகர்ஷத்தையும் அநுஸந்தித்தகலும்படி எத்தனையேனும் மஹாபாபிகளளவிலும் கர்மாநுகுண நிர்வாஹத்துக்குடலான தந்நிரங்குஶஸ்வாதந்த்ரயமாகிற கரையும், தன்னநுக்ரஹம் தங்கள்பக்கலிலே வராதபடி அபராதங்களையே பண்ணுமிவர்கள் ஔபாதிகஸ்வாதந்த்ரயமுமாகிற கரையு மழியப்பெருகாநிற்குமதான க்ருபாப்ரவாஹத்தையுடையஸர்வேச்வரன் (பொய்க்கூத்து வஞ்சக்களவு தவிர) (௬) "பொய்யே கைம்மைசொல்லி" (எ) "என்றென்றே சிலகூத்துச்சொல்ல" (அ) "உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனந்தவிர்ந்தே" என்று, மெய்கலவாதவெறும்பொய்யைச்சொல்லி ப்ரேமபரவசரைப்போலே பாவித்து ஹ்ருதயம் ப்ராக்ருத விஷயப்ரவணமாயிருக்க, அநந்யப்ரயோஜநரைப்போலே, அவனெள தார்யத்தையும் வடிவழகையும் ஸஹ்ருதயமாகச்சொல்லுகிறுரென்று தோன்றும்படி பலகாலும் சொல்லாநின்றுகொண்டு ஸர்வஜ்ஞனை

(க) தி-வா. ௫. க. க. (உ) ஷி. ௪0. (௩) ஷி. ௫. உ. கக. (௪) ஷி. ௫. கூ. க. (௫) ஷி. ௫. க. எ. (௬) ஷி. ௫. க. க. (எ) ஷி. ௫. க. உ. (அ) ஷி. ௫. க. ௩.

௫. முற்றவும் தானுயுன்னைவிட் டென்னப்பண்ணின விரக்தி
பல பரமாத்மராகம் பேரமர்பின்னின்று கழியமிக்கு யா
னேயென்ன வாய்ந்தாற்றகில்லாது நீராய்மெலியவூடுபுக்கு
வளர

முற்றவும் - எல்லாப்பதார்த்தங்களும், தானுய் - தானேயாய், உன்னை விட்டு - (நான்விட்டவன்றும் விடாத) உன்னையொழிய (எத்தைக்கொள்ளுவன்) என்னப்புண்ணின - என்றிவர்தம்வாயாலே பேசும்படி) பண்ணின, விரக்தி - வைராக்யத்துக்கு, பல - பலமான, பரமாத்ம - பகவத்விஷயத்தில், ராகம் - ராகம், பேரமர் - அபரிச்சேத்யமாய்ப்பொருந்தின, பின்னின்று - பிடரிபிடித்து நின்று (நெஞ்சைமுடிக்கும்படியான காதல்) கழியமிக்கு-மிகவும்கைகழிந்து, யானேயென்ன - (கடல்ஞாலம் செய்தேனும்) யானேயென்னும்படி, வாய்ந்து - அநுகாரமுகத்தாலே கிட்டி, ஆற்றகில்லாது - (உன்னைவிட்டொன்றும்) ஆற்றகிற்கின்றிலேனென்றொருக்ஷணமும்பிரிந்து தரிக்கக்ஷமரன்றிக்கே, நீராய்மெலிய - (நீராயுருகுமென்னுவியென்கிறபடியே) ஜலம்போலே த்ரவத்ரவ்யமாய் (நோவுபட) ஊடுபுக்கு - ஊடுபுக்கெனதாவியை யென்கிறபடியே பகவத்குணங்கள் மர்மத்திலே புகுந்து ஆத்மாவைத்ரவத்ரவ்யமாக்கும்படி, வளர - அபிவ்ருத்தமாக,

வுன்னையும் பகட்டும் க்ருத்ரிமயுக்தமான மனஸ்ஸையுடையரானவிவர், அவற்றைத்தவரும்படி (முற்றவும்தானு யுன்னைவிட் டென்னப்பண்ணிணவிரக்திபலபரமாத்மராகம்) (௧) "என்னை முற்றவும்தானுனன்" என்றிவர்க்கு ஸர்வவிதபோக்யமும், தானுய் (௨) "இனியுன்னைவிட்டென்கொள்வனே" என்று, நான் விட்டவன்றும் விடமாட்டாத உன்னையொழியதுராராதரூபமாய் வருந்தியாராதித்தாலும் கிடைப்பதொன்றில்லாத விஷயங்களைப்பற்றவோவென்றிவர் தாமேபேசும்படி பண்ணின (௩) "கண்டசதிர் கண்டொழிந்தேன்" என்கிறபடியே, அவன் போக்யதையாலே, அந்யவிஷயங்களையடைய உபேக்ஷிக்கும்படி கீழில்பத்தில் பிறந்தவிரக்திக்குபலமான (௪) "[illegible]" "பரமாத்மநியோரக்தஃ" என்கிற பரமாத்மவிஷயத்தில் ராகமானது (பேரமர்பின்னின்று கழியமிக்குயானே யென்னவாய்ந்தாத்தகில்லாது நீராய்மெலிய ஊடுபுக்குவளர) (௫) "பேரமர்காதல்" என்று, அபரிச்சேத்யமாய்ப் பொருந்தி (௬) "பின்நின்றகாதல்நோய் நெஞ்சம்பெரிதடும்" என்று, பிடரி பிடித்துநின்று நெஞ்சை முடிக்கும்படியாய் (௭) "கழியமிக்கதோர்காதல்" என்று, பார்ஶ்வஸ்தரும்பேசும்படி மிகவும் கைகழிந்து (௮) "கடல்ஞாலம்செய்தேனும்யானே" என்றுதுடங்கி, (௯) "வாய்ந்தவழுதிவளநாடன்"

(௧) தி-வா. ௫. ௧. ௧௦. (௨) ஷை-௩. (௩) ஷை ௪. ௯. ௧௦. (௪) (௫) ஷை-௫. ௩. ௪. (௬) ஷை. ௫. ௪. ௬. (௭) ஷை. ௫. ௫. ௧௦. (௮) ஷை. ௫. ௬. ௧. (௯) ஷை. ௧௧.

மூ. விஷவ்ருக்ஷபலங்கள் கைகூடினவரடிமைபுக்காரையுமாட்செய்வாரையுங்காண லோகத்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர்குழாங்களைக்கண்டு கூப்பிட்டு.

விஷவ்ருக்ஷ - (ஸம்ஸாரமாகிற) விஷவ்ருக்ஷத்தின், புலங்கள் - கேஶவ பக்திபாகவதஸமாகமம் (இவை,) கைகூடினவர்-கைபுகுந்தவர், அடிமை புக்காரையும் - அடிமையிலே புகுந்தவரையும், ஆட்செய்வாரையும் - ஆட்செய்தாழிப்பிரானைச் சேர்ந்தவரையும், காண - காண்கைக்கு, லோகாந்தர - (வைகுந்தன்பூதங்களென்கிறபடியே) லோகாந்தரமான ஸ்ரீவைகுண்டம், த்வீபாந்தரங்களில் நின்றும் - (தடங்கடல்பள்ளிப்பெருமானென்று) த்வீபாந்தரமான ஶ்வேதத்வீபம் (இவைகளினின்றும்) போந்த - வந்திருக்கிற, தேவர்குழாங்களை - நித்யஸூரிகளின் ஸமுஹங்களை, கண்டு - ஸாக்ஷாத்கரித்து, காப்பிட்டு-மங்களாஶாஸநம்பண்ணி,

என்று, அவனுடைய ஜகத்காரணத்வாத்யத்புதகர்மங்களை நானேசெய்தேனென்று அநுகாரமுகத்தாலே விஷயத்தைக்கிட்டிப்பேசும்படியாய் (க) "உன்னைவிட்டொன்று மாற்றகிற்கின்றிலேன்" என்று, அவனையொழிய ஒருக்ஷணமும் தரித்திருக்கமாட்டாதபடியாய் (உ) "ஆராவமுதே அடியேனுடலம் நின்பாலன்பாயே நீராய்" என்று, விஷயபோக்யதாதிஶயத்தால் வந்த ப்ராவண்யத்தாலே ஞ்ஜாநாஶ்ரயமான வாத்மாவாதல், ஜ்ஞாநப்ரஸரணத்வாரமான மநஸ்ஸாத லன்றிக்கே ஆத்மாவுக்காயதநமான ஶரீரமும் சிதிலமாம்படியாய் (௩) "வைகலும் வினையேன்மெலிய" என்று, அந்தஶைதில்யந்தான் காதாசித்கமன்றிக்கே ஸர்வகாலமும் மெலியும்படியாய் (௪) "நிறந்தநூடுபுக்கெனதாவியை நின்று நின்றுருக்கியுண்கின்ற" என்று, பகவத்குணங்கள் மர்மத்திலேபுகுந்து ஆத்மாவை இடைவிடாமல் த்ரவத்ரவ்யமாக்கும்படி அபிவ்ருத்தமாக (விஷவ்ருக்ஷபலங்கள் கைகூடினவர்) இப்படி பகவத்ப்ரேமம் வளருகையாலும் பாகவதர்களோடேகூடப் பெறுகையாலும் (௫) "సంసారవిషవృక్షస్య ద్వేఫలేహ్యమృతోపమే । కదాచిత్కేశవే భక్తిః తద్భక్తైర్వా* సమాగమః" "ஸம்ஸாரவிஷவ்ருக்ஷஸ்யத்வேபலேஹ்யம்ருதோபமே। கதாசித்கேஶவே பக்தி ஸ்தத்பக்தைர்வாஸமாகமஃ" என்று, ஸம்ஸாரமாகிற விஷவ்ருக்ஷத்தில் அம்ருதோபம பலங்களாகச் சொல்லப்பட்ட பகவத்பக்தியும் பாகவதஸமாகமுமாகிறபலத்வயமும்கைபுகுந்தவிவர் (அடிமைபுக்காரையுமாட்செய்வாரையுங்காண லோகத்வீபாந்தரங்களினின்றும் போந்த தேவர்குழாங்களைக்கண்டுகாப்பிட்டு)

* "தத்பக்தைர்வாஸமாகம:" என்கிறவிடத்தில், வா, என்றத்தை, அவதாரணத்திலேயாக்கி; தத்பக்தைரேவஸமாகம:, என்றாய், ததீயரான பாகவதர்களை உத்தேஶ்யரென்று எம்பெருமானார். ஆனால், ஸர்வேஶ்வரன் உத்தேஶ்ய னல்லனோவெனில்? ப்ராப்யத்தில் ப்ரதமாவதி பகவத்ஶேஷத்வத்தளவிலேநிற்கை. சரமாவதி பாகவதரளவிலே வருகை.

(க) தி-வா. ௫. ௭. க. (உ) ஷை. அ. க. (௩) ஷை. கூ. க. (௪) ஷை. க0. க. (௫)

மூ. ப்ரஹ்லாதவிபீஷணர் சொற்கேளாதவரக்கரசுரர்போல்வா ரைத்தடவிப்பிடித்து

